மங்கையர் மலர்

அக்டோபர் '86 விலை ரூ 3/-



நவராத்திரி சிறப்பிதழ்



புதுப் புடவை சாஸ்திரம்!

புது உடைகள் அணிவதற்கு நம் சாஸ்திரத்தில் விதிமுறைகள் இருக்கின்றன. ஒவ்வொரு வண்ணத்திற்கும் உகந்த நாட்களும் உண்டு.

புதன்கிழமை புதிது உடுத்தினால் செல்வம் பெருகும். வியாழக்கிழமை புத்தியை வளர்க்கும். வெள்ளிக்கிழமை புதுப் புடவை உடுத்தினால் பயணம் செய்ய நேரும்.

ஞாயிறு, புதன், வியாழன், வெள்ளிக் கிழமைகளில் வெள்ளைத் துணிகள் உடுத்தினால் சுபீட்சம் பெருகும். கறுப்புத் துணி உடுக்க சனிக்கிழமையே சிறந்தது. சிவப்புக்குச் செவ்வாய்.

கல்யாணமாகாத பெண்கள் ஞாயிறு, செவ்வாய், வியாழன், வெள்ளிக்கிழமைகளில் சிவப்புப் புடைவை வளையல் அணிந்தால் நல்ல அதிர்ஷ்டமாக இருப்பார்கள்.

தங்க ஜரிகைப் புடைவைகளுக்கு ஞாயிறும், செவ்வாயும், வெள்ளி ஜரிகைப் புடைவைக்குத் திங்களும் வெள்ளியும் உகந்த நாட்கள்.

எல்லாப் பெண்களுககுமே புதன், வியாழன், வெள்ளி புதுத் துணி உடுகக சிறந்தது. திருமணமானவர்கள் புது சிவப்புப் புடைவை, வளையல்களை சனிக்கிழமை அணியக் கூடாது.

ஞாயிறு, புதன், வியாழன், வெள்ளிக் கிழமைகளில் கேசப் பராமரிப்பு செய்து நல்ல அலங்காரம் செய்து கொள்ளும் பெண்கள் மதிக்கப்படுவார்கள். சகல சம்பத்துடன் சௌக்கியமாக சந்தோஷமாக இருப்பார்கள்.

புதுத் துணி தைக்க ஞாயிறும் புடைவைக்குச் சாயம் தோய்க்க செவ்வாயும் குறிப்பிடப்பட்டுள்ளது.

— ஜெயா. வி. ராமன்

இலவசச் சிறப்பிதழைக் கேட்டு வாங்குங்கள்!

∴பாரெக்ஸ்® முதலான விருப்பம்!



பாப்பா வளர்ச்சிக்கான திட உணவுகளில் பாசத்தாய் அளிக்கும் முதலிடம் ∴பாரெக்ஸ்®

தாய், தன் குழந்தைக்கு தேர்ந்தெடுக்கும் முதலான திட உணவு புதிய செழுமையான ∴பாரெக்ஸ். காரணம்:

பாப்பாவின் உடல் நலத்திற்கான புரதமும், ஜீரணத்திற்கு உகந்த கொழுப்புச் சத்தும் சரியான அளவில் கொண்டது.

பாப்பாவுக்கு ஆரோக்கியமான ரத்தத்தை தரவல்ல இரும்புச் சத்துள்ளது.

எலும்பும் பற்களும் வலுவோடு வளர்ந்திட கால்சியமும் ∴பாஸ்∴பரஸும் 2:1 என்ற அளவில் சேர்க்கப்பட்டது.

தின்னத் தெவிட்டாதது; கலப்பதும் கொடுப்பதும் எளிது.



பால் சேர்க்கத் தேவையில்லை! நீருடன் கலந்து கொடுத்தாலே போதும்.

தாயன்பைக் கூறிடும் தரமிக்க திட உணவு ∴பாரெக்ஸ்®

CLARION/B/GX/15/203



டி.வி. டைரக்டருடன்..

நன்மையோ, தீமையோ டி. வி. நம் அன்றாட வாழ்வில் ஒன்றாகக் கலந்துவிட்ட ஒரு விஷயம். டி. வி. இல்லாத வீடே இல்லை என்றாகிவிட்டது. நிகழ்ச்சிகள் பெருகப் பெருக நம் ரசனைகளும் மாறுபடுகின்றன. விமர்சனங்களும் வளர்கின்றன. கடிதங்கள் ஒலித்தாலும் நேரடியாக நிகழ்ச்சிகளை விமர்சித்தால் தொலைக்காட்சி நிலைய டைரக்டர் திருமதி அகிலா சிவராமன் எப்படி எடுத்துக் கொள்வார்?

பங்கு கொண்டவர்கள்:

திரு. கிருத்தி வாஸன்'— ஓய்வு பெற்ற பத்திரிகை ஆசிரியர்
திருமதி பத்மாவதி — வயதான மாது,
திரு. சந்திரமௌலி — நாடக நடிகர்,
குமாரி செல்லம் — பள்ளி ஆசிரியை,
திருமதி ரமா ஸ்ரீனிவாசன் — குடும்பத் தலைவி.

நினைத்ததற்கு மாறாக, ரொம்ப சாதாரணமாக இன்முகத்துடன் வரவேற்கிறார். சொல்லும் பதிலில் அனுபவம் தெரிகிறது.

பத்மாவதி: கதா காலட்சேபமென்று பதினைந்து நிமிஷமோ அல்லது அரை மணியோ வைக்கறீங்க. அதுவும் எப்பவோ ஒரு தடவை தான். அந்த நேரத்தைக் கொஞ்சம் அதிகப் படுத்தணும்.

அகிலா சிவராமன்: எந்த நிகழ்ச்சியுமே அரைமணி நேரத்தைத் தாண்டினால் சுவாரசியம் குறைந்து விடும். தவிரவும் டி. வி. ங்கறது விஷுவல் மீடியம். ஒருத்தர் முகத்தையே வெகு நேரம் பார்க்கறது சலிப்பைத்தான் தரும். கோவிலில் ஆற்றங்கரையில் மரத்தடியில் மணிக் கணக்கில் கேட்கலாமே தவிர அரை மணிக்கு மேல் கதாகாலட்சேபங்கற நிகழ்ச்சியை டி. வி. யில் பார்த்தால் அலுப்புத் தட்டிவிடும். அதனாலதான் அதிகமா நேரம் ஒதுக்கறதில்லை.

சந்திரமௌலி: விநாயக சதுர்த்தி போன்ற பல பண்டிகை நாட்களில் மத சார்புள்ள சொற்பொழிவுகளை வைத்து அந்தந்தப் பண்டிகைகள் எதற்காக என்று விளக்கலாமே!

னைக்கும், மற்றும் முக்கியமான நாட்களிலும் பாட்டோ, நடனமோ, நாடகமோ, உரையாடலோ, பேட்டியோ அந்தந்த நாளுக்குத் தொடர்பான நிகழ்ச்சிகளை அமைத்துக் கொடுக்கிறோம். சொற்பொழிவுதான் சிறந்த நிகழ்ச்சியென்று நினைக்க வேண்டியதில்லையே! (சிரிக்கிறார்).

ரமா ஸ்ரீனிவாசன்: சரித்திர சம்பந்தப்பட்ட இடங்களைப்பற்றித்தொடராக அந்தந்த இடங்களில் சென்று படம் பிடித்துக் காண்பிக்கலாம்.

அ. சிவராமன்: டாகுமெண்டரி அல்லது வரலாற்றுச் சித்திரம் என்ற இந்த வடிவமைப்பில் நிகழ்ச்சிகள் அவ்வப்போது ஒளிபரப்புகிறோம். தொடராக இருக்கலாம் என்பது நல்ல கருத்து. சிந்திக்கிறோம்.

கிரிஜா ராகவன்: குழந்தைகளை டீ. வி. கவர்கிறது என்பது ஒப்புக்கொள்ள வேண்டிய விஷயம். பல நீதிக் கதைகளையும் மனத்தில் பதிய வேண்டிய நல்ல பல விஷயங்களையும் தொடராக ஒளிபரப்ப வேண்டும். இப்ப, தேசிய நிகழ்ச்சிகள்ல விளம்பரதாரர்கள் நிகழ்ச்சிகளில பல குழந்தைகள் நிகழ்ச்சி இருக்கு. இங்க அந்த மாதிரி ஏன் இல்லே?

அ. சி.: இங்கேயும் அதைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கோம். சனிக்கிழமைகளில் குழந்தைகள் தொடர் ஒன்று விரைவில் வரப் போகிறது.

செல்லம்: கல்வி நிகழ்ச்சிகள் மத்தியானத்துல ஒளிபரப்புறீங்க. எல்லாக் குழந்தைகளும் இதைப் பார்க்க முடியுதா?

அ. சி.: இன்னின்ன நிகழ்ச்சிகள் இன்னின்ன வகுப்புக் குழந்தைகளுக்காக ஒளிபரப்பப்படுகின்றன என்பதைப் பற்றிப் பள்ளிகளுக்குச் சுற்றறிக்கை அனுப்புகிறோம். எந்த வகுப்புக்கு அது தேவையோ அதற்கேற்றவாறு ''டீ. வி. பீரியட்'' என்று வைத்துக் கொள்ள வேண்டியதுதான். இதற்குக் கல்வி நிலையங்கள்தான் ஏற்பாடு செய்ய வேண்டும்.

பப்பாளிப் பழத்திலிருக்கும் சத்து: நீங்கள் அதிக விலை கொடுத்து வாங்கிச் சாப்பிடும் ஆப்பிளில் இல்லை! பப்பாளிப் பழம் சாப்பிட்டால் மலம் இளசுவாக இறங்கும். பல்லீறுகள் பலம் பெறும்: தினசரி சாப்பிட்டால் இரத்தம் விருத்தியடையும். தவிர மாதவிலக்கு தடைப்பட்டால் இப்பழத்தைச் சாப்பிடலாம். பயனுண்டு.

— கே. பட்டாபிராமன்

கணேஷ்: ஹிந்தி, சமஸ்கிருதம் எல்லாம் கூட டீ. வி. யின் மூலம் சொல்லித் தரலாமே!

அ. சி.: பொதுவாக எந்த மொழிப் பாடமோ பயிற்சியோ டீ. வி. யை விட ரேடியோவிலதான் சிறப்பாகச் செய்ய முடியும்.

கிரிஜா ராகவன்: முக்கியமான சில நிகழ்ச்சிகளைப் பற்றி இப்போது பேசலாம். குறிப்பாக, நாடகங்களைப் பற்றி... (முடிக்கு முன் எல்லோரும் ஏக காலத்தில் பேச ஆரம்பிக்கின்றனர்).

ரமா ஸ்ரீனிவாசன்: டீ. வி. டிராமாக்களில் யதார்த்தமே இருப்பதில்லே மேடம். வீட்டிற்குள் சமையலறையிலிருந்து வரும் பெண்ணே பட்டுப் புடைவை, நகை, தலே நிறையப் பூ— இப்படித்தான் வராங்க.

பத்மாவதி: பல நாடகங்கள் வெறும் போர்தான்.

கிருத்திவாஸ்: டிராமாவில உணர்ச்சி பூர்வமா ஒன்றின நடிப்பே இல்லே.

சந்திரமௌலி: நானும் நாடக நடிகன்தான். எத்தனையோ மேடை நாடகங்கள்ல நடிச்சிருக்கேன். டீ. வி. நாடகங்கள்ல இருக்கிற குறைகளை எடுத்துச் சொன்னாக்கூட எதிரொலியில, 'பார்க்கலாம்' அப்படீங்கிறாங்க. திரும்ப அதே குறைகள்தான் வர்றது.

அ. சி.: டீ. வி. நாடகங்களைப் பத்திப் பலவிதமான விமர்சனங்கள் வந்துக்கிட்டுத்தான் இருக்கு. பார்த்துப் பார்த்துத்தான் ஒவ்வொண்ணையும் செய்யறாங்க. இன்னும் சிறப்பாச் செய்ய முயற்சிகள் செய்ய வேண்டியதுதான்.

கிரிஜா ராகவன்: எதிரொலியில விமர்சனக் கடிதங்கள் படிக்கிறீங்க. அந்தப் பதினைஞ்சு நிமிஷத்துல வரப் போகும் நிகழ்ச்சிகள் பற்றியும் சொல்ல வேண்டியிருக்கு. அந்த நேரம் ரொம்பக் கம்மிதாங்கறது என் அபிப்பிராயம். அதற்குப் பதிலாக ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் — தொழிலாளர் நிகழ்ச்சி, மனேமாட்சி, இளந்தென்றல் — மாதிரி சில குறிப்பிட்ட நிகழ்ச்சிகளுக்கு ஒரு மாசத்துக்கு ஒரு தடவை அந்த நிகழ்ச்சிகளிலேயே பத்து நிமிடம் நேயர் கடிதத்திற்கு ஒதுக்கலாம். இதனால் நிறையப் பேர் கடிதங்களும் படிக்க முடியும் இல்லையா?

அ. சி.: செய்யலாம்மா! நல்ல கருத்து. யோசிக்கிறேன்.

சந்திரமௌலி: மலரும் நினைவுகள்ல ஏன் சினிமாக்காரனையே வைக்கறீங்க. பல துறைகள்ல இருக்கிறவங்களோட நினைவுகளை வைக்கலாமே!



வளரும் வயதில்
குழந்தைகளுக்குத் தேவை காம்ப்ளான்
காம்ப்ளான் ஒன்றில்தான் அவர்களுக்கு அன்றுடம் தேவைப்படும் 23 ஊட்டச் சத்துக்கள் அடங்கியுள்ளன.
சாதாரணமாக 15 அல்லது 16 வயதிற்குள் குழந்தைகளின் வளர்ச்சி பெரும்பாலும் முழுமையடைந்து விடுகிறது.
அவர்களுடைய வளர்ச்சிக்கு நேரடியாக உதவுவது புரதம் என்ற சத்துதான். ஆகவே உங்கள் குழந்தைகளுக்கு தேவை காம்ப்ளான்—இப்போது. காம்ப்ளான் சிறந்த புரதம் கொண்டுள்ளது—பால் புரதம் (20%) அது 22 மூலதார சத்துணவுகளும் கொண்டதாகும்.
காம்ப்ளான் கிடைக்கிறது இனிய சுவைகளில்.
Glaxo
Complan
COMPLETE PLANNED FOOD
23
மூலதார சத்துணவுகள் திட்டமிட்ட விகிதங்களில்
பால் சேர்த்திடத் தேவையில்லை.
காம்ப்ளான் — திட்டமிட்ட பரிபூர்ண உணவு
B84. GLC. 120 Tm

உண்மையிலேயே பாதுகாப்பை விரும்புவோர்க்கு

பாலாஜி மோட்டார் & ஜெனரல் பைனான்ஸ்

(Hire Purchase Financiers for Motor Vehicles)

டெபாசிட் தாரர்களுக்கு கூடுதல் வட்டி

கீழ்க்கண்ட வட்டி விகிதங்களில் டெபாசிட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன

காலம்	வட்டி	மொத்தம்
1-வருடம்	17+2	19%
2-வருடங்கள்	18+2	20%
3-வருடங்கள்	19+2	21%
5-வருடங்கள்	22+2	24%

+2% வழக்கமான விகிதத்துடன் வழங்கப்படுகிறது

ரூபாய் 20,000/க்கு மேல் டிபாசிட் செய்யும் ஒவ்வொரு டிபாசிட்டுக்கும் ஊக்க போனசும், மிக மதிப்புள்ள அன்பளிப்பும் வழங்கப்படும்.

உங்கள் டெபாசிட்டுகளை அனுப்பும் முகவரி

சென்னை : 91, உஸ்மான் ரோடு,
(சிவா-விஷ்ணு கோயில் அருகில்)
தி.நகர், சென்னை-600 017.
போன் : 447186/442218/445480

பெங்களூர் : 24/1-A, மார்கோஸா ரோடு (10வது கிராஸ்)
மல்லேஸ்வரம், பெங்களூர்-560 003.
போன் : 366971

திருச்சி : 22, மதுரை ரோடு (முதல் மாடி)
ராஜா தியேட்டர் அருகில்
திருச்சி-620 008. போன் : 31376/29772

பாண்டிச்சேரி : 11, நேரு தெரு (கனரா வங்கி எதிரில்) 2வது மாடி,
பாண்டிச்சேரி-605 001. போன் : 6493

தஞ்சாவூர் : எண் : 2 & 3 முதல் மாடி, தி.எ.கனல் ரோடு,
தஞ்சாவூர்-613 001. போன் : 1626

திருவண்ணாமலை : 14/A, ஆனைக்கட்டி தெரு,
திருவண்ணாமலை-606 601. போன் : 2483

பட்டுக்கோட்டை : 121, தலையாரி தெரு, (முதல் மாடி)
பட்டுக்கோட்டை-614 601. போன் : 453

கோயமுத்தூர் : 666, ராஜா வீதி (முதல் மாடி)
கோயமுத்தூர்-641 001. போன் : 34369

மதுரை : 41, வடக்கு வெளி வீதி (முதல் மாடி)
மாடர்ன் லாட்ஜ் ஸ்டாப்பிங், மதுரை-625 001.


JAY ADTS



"அடே பாவி! பாக்கு உரலுக்குள்ள
எவன்டா கண்டலைப் போட்டவன்?"



"லட்சுமணர் வேஷம் போட்ட பையன்
எங்க காணோம்?"
"எவ்வளவு சொன்னாலும் கேக்கா
கண்டல் வாங்கிண்டு வந்துடறேன்னு ஓம
டான்!"



"என்னடி கொலுவ எக்ஸிபிஷன் மாதிரி
வச்சிருக்காங்க?"



"மாடில என்ன சத்தம்?
கீழ வந்த எங்க
டான்ஸ பாருங்க!"



அ. சி: தற்சமயம் சினிமாத் துறையில இருக்கறவங்க மட்டுமே பங்கேற்கும்போது அதோட சினிமாப் படங்களையும் காண்பிக்க முடியறது. மற்றவர்களையும் கூப்பிடறதுக்குத் தடையேதுமில்லே.

கிருத்திவாஸ்: அஸெம்பிளி ஆரம்பிக்கறப்ப எதிர்க்கட்சித் தலைவர்களைக் கூப்பிட்டு ஓர் உரையாடல் வைக்கலாம். டெல்லியில் செய்யறாங்க. மேலும் தமிழ்நாட்டுல அரசியல் விழிப்புணர்ச்சி கம்மிதான். அதை வளர்க்கிறாற்போல நிகழ்ச்சிகள் இருக்கணும்.

அ. சி.: செய்தி விமர்சனங்கறது இப்படிப்பட்ட நிகழ்ச்சிதானே!

கிரிஜா ராகவன்: இலக்கிய நிகழ்ச்சிகள்ல பட்டிமன்றங்கிறது அடிக்கடி வர்றதில்லையே, ஏன்?

அ. சி.: வைக்கலாம். பட்டி மன்றங்கள் அடிக்கடி ஏற்பாடு செய்யறது கடினம். சலிப்புத் தட்டாமல் வேறு வேறு பொருட்களைப் பற்றித் தலைப்புக் கொடுத்து ஏற்பாடு செய்ய முயற்சிக்கலாம்.

சந்திரமௌலி: டெல்லியில போலீஸ் டிபார்ட்மெண்ட் பற்றி எப்படிக் கண்டுபிடிக்கிறாங்க, என்னல்லாம் செய்யறாங்க, அப்படின்னு ஒரு தொடர் போடறாங்க. அந்த மாதிரி தமிழிலும் செய்யலாமே!

அ. சி.: இப்ப ரஜனி முடிஞ்சவுடனே விஜி ஆரம்பிச்சப்ப உடனே எல்லோரும், அதப் பார்த்துப் போடறாங்க — அப்படின்றாங்க. அதனாலே இந்த மாதிரி நிகழ்ச்சியைக் கொஞ்ச நாள் கழிச்சுப் பார்க்கலாம்.

பத்மாவதி: காணாமல் போனவங்க பத்திச் சொல்றீங்க. ஆனா கிடைச்சவுடனே சொல்றதேயில்லையே.

அ. சி.: காணாமல் போன உடனே இருக்கிற பரபரப்புல எங்ககிட்டே சொன்னவங்க எல்லாரும் கிடைச்சவுடனே தெரிவிக்கறதில்லே. தெரிவிச்சாலும் அதை மீண்டும் டி. வி. யில அறிவிக்கறதுல அர்த்தமே இல்லேயே!

ரமா ஸ்ரீனிவாசன்: இதுல காண்பிக்கற போட்டோவும் அவ்வளவு தெளிவா இல்லே.

அ. சி.: எல்லோர் கைவசமும் நல்ல போட்டோ இருக்கும்னு சொல்ல முடியாது. சில சமயங்கள்ல குரூப் போட்டோவுலயிருந்து கூட எடுக்க வேண்டியிருக்கும். அது தான் காரணம்.

ரமா ஸ்ரீனிவாசன்: குழந்தைகள் நிகழ்ச்சி ரொம்ப நல்லா இருக்கு. சின்னச் சின்ன குழந்தைகளுக்குள் எவ்வளவு திறமைகள்!

அ. சி.: ஆமாம். பல போட்டிகளில் பரிசு பெற்ற குழந்தைகளைப் பற்றித் தனியாகவே ஒரு சிறந்த நிகழ்ச்சி அமைக்கணும்னு நினைக்கிறோம். அது அவங்களுக்கும் பார்க்கற மத்த குழந்தைகளுக்கும் உற்சாகமூட்டுவதாக இருக்கும்.

கணேஷ்: புத்தக விமர்சனம், வேலை வாய்ப்புச் செய்திகள் இதெல்லாம் கூடச் செய்யணும்.

அ. சி.: இதெல்லாம் ரொம்ப டி. வி. யில எடுபடாதுங்க.

கிரிஜா ராகவன்: டி. வி. பார்க்கறவங்க கருத்தைத் தெரிஞ்சுக்க மாசம் ஒரு தடவை. சில பேரோட நீங்க இப்படி மீட் பண்ணிப் பேசலாமே!

அ. சி.: இருக்கும்மா! பாடகர்கள், நடிகர்கள், செய்தியாளர்கள் என்று அப்பப்போ சந்திச்சிக்கிட்டுத்தான் இருக்கேன். தவிர வெளியில கூட்டங்களில பங்கெடுத்துக்கும் போதும் பலரோடும் பழகறேன். நிறையவே பேசறேன். அவங்க கருத்துக்களை எங்க மீட்டிங்குல இங்க இருக்கற நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களோட பரிமாறிக்கறேன். திரும்பத் திரும்ப எப்படி நல்ல நிகழ்ச்சிகளைக் கொடுக்கலாங்கறதுதாம்மா எங்க தினசரி சிந்தனையே!

கிளம்புகிறோம் என்று நாம் சொல்லும் வரை பேசுகிறார். பல நாட்களாக ரேடியோவிலும் டி. வி. யிலும் மாற்றி மாற்றிப் பல பிரிவுகளிலும் பணியாற்றி இருப்பதால் ஒவ்வொரு விஷயத்தையும் பூரணமாக உணர்ந்திருக்கிறார்.

சென்னை டி. வி. யின் முதல் பெண் டைரக்டரான இவரது வருகை சுவாரசியமான நல்ல புது நிகழ்ச்சிகளைக் கொடுக்கும் என்ற மகிழ்ச்சியுடன் விடைபெறுகிறோம்.

ஏற்பாடு & தொகுப்பு: கிரிஜா ராகவன்

அவரைக்காய், கொத்தவரங்காய் சுண்டைக்காய் வற்றல்களைக் குழம்பில் போடுவதற்கு முன் பதினைந்து நிமிடங்கள் வெந்நீரில் ஊற வைத்துவிட்டுப் போட்டால் சுலபமாக வெந்துவிடும்.

— ரம்யா

அப்பளம் பொரிக்க எண்ணெய் குறைவாயிருந்தால் அப்பளத்தை டைமன் அல்லது முக்கோண வடிவத்தில் கத்தரித்துப் பொரித்தெடுக்கலாம். பார்ப்பதற்கும் அழகாயிருக்கும்.

— ரம்யா



''எங்க வேஷம் எவ்வளவு பொருத்தம் பார்த்தீங்களா?''



''ம்... மீரா வேஷம் சரி. பாட்டு எப்படி பாடறது?''

நவராத்திரி வேஷங்கள்




''என்ன ஔவையும், திருவள்ளுவரும் ஒண்ணா வந்திருக்காங்க? ஓ, கொலுவுக்கா?

புகைப்படங்கள்: திவாகர்

நவராத்திரி பொம்மைகள்



* கங்கை மண்ணால் செய்யப்பட்ட கண்ணன், விநாயகர்.



* (காகிதக் கூழால் செய்யப்பட்ட) மீனாட்சி.





சைதன்யப் பிரபு.





• (காகிதக் கூழால் செய்யப்பட்ட) லக்ஷ்மி, சரஸ்வதி

• யார் வரவிற்கு இந்த ஒயில்?



"ஒரு சின்ன அளவில் ஆரம்பித்த இந்த விற்பனைக்கு இவ்வளவு அமோக வரவேற்பு இருக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கவேயில்லை" என்கிறார் காதி கிராமோத்யோக் பவன் மேனேஜர் ராகவலு.

கொலு பொம்மைகளின் விற்பனைக் கண்காட்சியில் முதல் நாளே பத்தாயிரம் ரூபாய்க்கு விற்பனையானதாம். "இந்த வருடம் எல்லா மாநிலங்களிலிருந்தும் பொம்மைகளை வரவழைத்து வைத்திருக்கிறோம்" என்கிறார் செயலாளர் மல்லையா.

அந்தந்த மாநிலங்களின் சிறப்பை, கலாசாரத்தைக் கூறுவதாக பொம்மைகள் அமைந்துள்ளன. சுமதி என்ற பத்தினிப் பெண் இறந்த தன் கணவனை உயிருடன் மீட்டிருக்கிறாள். வங்காள பொம்மையான இது நம் சாவித்திரி கதையைப் போலிருக்கிறதே! மகாராஷ்டிராவின் கணபதி, லக்னோவின் சுடப்படாத மண்ணால் செய்யப்பட்ட சின்னச் சின்னப் பறவைகள்; கங்கை மண்ணால் செய்யப்பட்ட பொம்மைகள்; கைவினைக் கலைஞர்களால் செய்யப்பட்டதால் விலை அதிகமாக இருந்தாலும் நுண்ணிய வேலைப்பாடுகள் அமைந்த பொம்மைகள்; தமிழகத்தின் சிறப்பைக் கூறும் காகிதக் கூழ் பொம்மைகள் என அமர்க்களப்படுத்தியிருக்கிறார்கள்.

புகைப்படங்கள்: திவாகர்





* ஜெயந்தி



* கோகிலாராமன்

முதல் பரிசு:

கூல் பேக்

அகில ப்ரியா

தேவையான பொருட்கள்:

காரட் துருவல் — 1½ கப்.
தேங்காய்த் துருவல் — 1½ கப்.
முந்திரிப் பருப்பு + பொட்டுக்கடலை

இம்மாத இல்லத்தரசி

(பொடி செய்தது) — 1 கப்.
வெல்லம் பொடித்தது — 4 கப்.
வெள்ளை உளுந்து அல்லது வெள்ளை உளுத்தம்பருப்பு — 3 கப்.
ஏலக்காய் — 2.
பொரித்தெடுக்கும்எண்ணெய்—½லிட்டர்

செய்முறை:

½ கப் தண்ணீரில் நாலு கப் வெல்லத்தைப் போட்டு வெல்லம் கரைந்தவுடன் காரட் துருவல், தேங்காய்த்துருவல், முந்திரி, பொட்டுக் கடலைப் பொடி எல்லாவற்றையும் கலந்து போட்டுக்கிளறவும். பாத்திரத்தில்ஒட்டாமல் சுருண்டு வரும்பொழுது இரண்டு ஸ்பூன் நெய்யும், ஏலப் பொடியையும் போட்டு இறக்கி வைக்கவும். சிறு எலுமிச்சை அளவு உருண்டைகளாக உருட்டி வைக்கவும்.

வெள்ளை உளுத்து அல்லது உளுத்தம் பருப்பை சுமார் ½ மணி நேரம் ஊற வைக்கவும். நன்றாகக் களைந்து கல் அரித்து கிரைண்டரிலோ, கல் உரலிலோ அதிகம் தண்ணீர் விடாமல் (உளுந்து வடைக்கு அரைப்பது போல) கொட கொடவென்று அரைக்கவும். அரை ஸ்பூன் உப்புக் கலந்து அரைக்கவும்.

அடுப்பில் எண்ணெய் காய்ந்ததும் உருண்டைகளை ஒரே சீராக உளுந்து மாவிலே முக்கி மூன்று மூன்றாகச் சேர்த்து (ஃ) பொன்னிறமாகப் பொரித்து எடுத்து வைக்கவும். அடுப்பு நிதானமாக எரிதல் அவசியம்.

— அகிலா, சென்னை —'26.

இரண்டாம் பரிசு:

அடுக்குத் தொட்டி

பலாக்கொட்டை பால் அல்வா

தேவையான பொருட்கள்:

பெரிய பலாக் கொட்டைகள் — 25.
பால் (திக்கானது) — 1 லி.
நெய் — 200 கிராம்.
சர்க்கரை — 300 கிராம்.
முந்திரிப் பருப்பு — 12.
ஏலக்காய் — 8.
கேஸரி பௌடர் — சிறிதளவு.
செர்ரி புரூட் (துண்டங்களாக நறுக்கியது) — 1 கரண்டி.

செய்முறை:

பலாக் கொட்டைகளை வெள்ளைத் தோல் நீக்கி, சுத்தமாகக் கழுவி, அம்மிக் குழவியாலோ, இரும்பு உலக்கையாலோ லேசாக ஒரு தட்டுத் தட்டி இட்லி வேக விடுவது போல் ஆவியில் வேக விடவும். நன்றாக வெந்ததும் எடுத்து சிகப்புத்தோல்களைச் சுத்தமாக நீக்கவும்.

இப்போது வெந்த பலாக் கொட்டைகள் வெள்ளை வெளேர் என்று உரித்த பாதாம் பருப்பு போல இருக்கும்.

அதனுடன் கொஞ்சம் பால், உரித்த ஏலக்காய், 6 முந்திரி இவைகள் சேர்த்து நன்றாக வெண்ணெய் போல் அரைக்கவும்.

ஒரு வாயகன்ற பாத்திரத்தில் அரைத்த விழுதில் பால் சேர்த்து, சீனியைப் போட்டு அடுப்பில் வைக்கவும். கிளறவும். கலவை நன்றாகச் சூடானதும் நெய்யை முழுவதும் விட்டுக் கிளறிக் கொண்டே இருக்கவும். கேஸரி பௌடர் சேர்க்கவும். கேக் பதத்தில் வரும்போது நெய் தடவிய தாம்பாளத்தில் கொட்டவும். சமப்படுத்தவும்.

முந்திரியை நன்றாகச் சீவி அதன் மேல் தூவிச் சமப்படுத்தவும். நறுக்கிய செர்ரி பழத்தை ஆங்காங்கே பதிக்கவும். சிறிது ஆரியபின் துண்டு போடவும்.

பார்க்க அழகாய் இருக்கும் இந்தப் பால் கேக், ருசியில் பாதாம் அல்வா, முந்திரி அல்வாவைத் தோற்கடித்துவிடும்.

கமலா ஜானகிராமன், சேலம் — 2.

மூன்றாம் பரிசு:

ஸ்டேண்ட்

வெங்காய பண்ணியம்

தேவையான பொருட்கள்:

வறுத்த அரிசி மாவு — ½ படி.
முற்றிய சுமாரான தேங்காய் — 2.

கோழி முட்டை — 6.
ஏலக்காய் — 6.
சீனி — 1 ஆழாக்கு.
நெய் அல்லது டால்டா அல்லது ஏதாவது ரீபைண்டு எண்ணெய் — ½ கிலோ.

செய்முறை:


முதலில் தேங்காயைத் துருவி மிக்ஸியில் நன்கு அரைத்து அதில் திக்காகப் பாலே எடுத்துக் கொள்ளவும். அந்தப் பாலோடு 6 முட்டைகளையும் உடைத்துக் கலந்து நன்றாக அடிக்கவும். பிறகு பால், முட்டைக் கலவையை வடிகட்டிக் கொள்ளவும். வடிகட்டிய பாலில் அரிசி மாவைப் போட்டு நன்கு பிசைந்து

நடுவர்கள்:

மேற்கு அண்ணாநகர் நலச் சங்கம், திருச்சி — 17.

* சாந்தா சுப்ரமணியன், சாவித்ரி சங்கரன், வஸந்தா கோபாலன், ரங்கநாயகி ராஜகோபாலன், சித்ரா ரவீந்திரன், சித்ரா ராஜா சிதம்பரம், பானுமதி மோகன், ஜெயா குருமூர்த்தி.





கொள்ளவும். மாவு இட்லி மாவை விடக் கொஞ்சம் திக்காக இருக்க வேண்டும். பிறகு ஒரு ஆழாக்கு சீனியில் அரை ஆழாக்கு தண்ணீர் விட்டு, ஏலக்காய் விதையை நன்கு பொடி செய்து அதோடு போட்டு அதை அடுப்பில் வைத்து, கம்பிப் பதம் வந்ததும் இறக்கி வைத்துக் கொள்ளவும். பிறகு வாண லியை அடுப்பில் வைத்து நெய் அல்லது டால்டாவை விட்டு அடுப்பை நிதானமாக எரிய விடவும். எண்ணெய் (அ) நெய் (அ) டால்டா சூடானதும், மாவைக் கையில் சுமாராக எடுத்து எண்ணெயில் விடவும். அது சின்ன வெங்காயம் அளவில் இருக்க வேண்டும். இதே மாதிரி 10, 15 முறை மாவைவிடவும். அது பொன்னிறமாகவெந்த வுடன் அதை எடுத்துப் பாகில் போட்டு, நன்கு பாகில் மூழ்கும்படி வைக்கவும். இப் படியே எல்லா மாவையும் பொரித்து எடுக்க வும். இது பார்ப்பதற்கு சின்ன வெங்காயம் போன்று இருக்கும். இது மிகவும் சுவையாக இருக்கும்.

— ஷரீபா பஸல்,
சென்னை — 36.

ஆறுதல் பரிசு:

வாட்டர் பாட்டில்

ராகி முறுக்கு

தேவையான பொருட்கள்:

ராகி (கேழ்வரகு) தானியம் — 1 கிலோ.
வெள்ளை உளுத்தம் பருப்பு — 200 கிராம்.
மிளகாய்த் தூள் — 25 கிராம்.
தூள் பெருங்காயம் — 2 சிறிய டீஸ்பூன்.
சீரகம் — 1 டீஸ்பூன்.
டால்டா — 50 கிராம்.
எண்ணெய் — முக்கால் கிலோ.
தூள் உப்பு — தேவைக்கேற்றது.

செய்முறை:

முதலில் கேழ்வரகு தானியத்தைச் சுத்தம் செய்து எடுத்து வைத்துக் கொள்ளவும். பிறகு வாணலியை அடுப்பில் வைத்து நன்கு காய்ந்தவுடன், எண்ணெய் விடாமல் உளுத் தம் பருப்பைப் பொன்னிறமாக வறுத்து எடுக்கவும். சுத்தம் செய்த கேழ்வரகு, வறுத்த உளுத்தம் பருப்பு இரண்டையும் ஒன்றாகக் கலந்து உலர் மாவு அரைக்கும் மெஷினில் நைசாகப் பொடித்துக் கொண்டு வரவும்.

ஒரு பாத்திரத்தில் பொடித்த மாவு, மிளகாய்த் தூள், சீரகம், பெருங்காயம், தேவையான அளவு உப்பு, டால்டா, ஆகிய வற்றைஒன்றாகக்கொட்டி தண்ணீர் விடாமல் கலந்து வைத்துக் கொள்ளவும். பிறகு அந்த உலர் கலவையை தேவையான போது தண் ணீர் விட்டு முறுக்கு மாவு பதத்தில் பிசைய வும்.

வாணலியில்எண்ணெய்ஊற்றி அடுப்பில் வைக்கவும். எண்ணெய் நன்கு காய்ந்தவுடன், மகிழம்பூ முறுக்கு மாவு அச்சில், பிசைந்த மாவை அச்சு கொள்ளும் அளவிற்குப் போட்டு, காய்ந்த எண்ணெயில் பிழியவும். இந்த முறுக்கு பிரௌன் கலந்த கருமை நிறத் தில் இருக்கும். ஆகையால் முறுக்கு எண் ணெயில் வேகும் ஓசை அடங்கியவுடன் எடுக்கவும். செய்து முடித்தவுடன் காற்றுப் புகா வண்ணம் டப்பாவில் அடைத்து வைத் துக் கொண்டால் மொறு மொறுப்பு நீண்ட நாள் குறையாமல் இருக்கும்.

— ஜெயந்தி, ஜெயங்கொண்டம்.

ஆறுதல் பரிசு:

வாட்டர் பாட்டில்

பட்டாணி கேக்

தேவையான பொருட்கள்:

பச்சைப் பட்டாணி — 250 கிராம்.
முந்திரிப் பருப்பு — 100 கிராம்.
பால் — 250 மில்லி லிட்டர்.
சர்க்கரை — 500 கிராம்.
செர்ரி பழம் — 10.
நெய் அல்லது டால்டா — 100 மில்லி.

செய்முறை:

பச்சைப் பட்டாணியை நன்கு அலம்பி சுத்தம் செய்து கொள்ளவும் (காய்ந்த பட்டாணியாக இருந்தால் முதல் நாளே ஊற வைத்து களைந்து தோல் நீக்கிக் கொள்ளவும்) பின்னர் 150 மில்லி பாலை வாயகன்ற பாத்திரத்தில் வைத்து அடுப்பிலேறிச் சூடான பின், முந்திரிப் பருப்பு, பட்டாணி ஆகியவற்றைப் போட்டு வேக வைக்கவும். வெந்த பின் எடுத்து ஆற வைத்து மிக்ஸியில் நைசாக அரைத்து விழுதாக்கிக் கொள்ளவும். பின்னர் மீதமுள்ள பாலைச் சிறிது தண்ணீர் சேர்த்து அடுப்பிலேற்றிக் காய்ந்ததும் சர்க்கரையைப் போட்டுப் பாகு வைக்கவும். நல்ல கம்பிப் பதம் வந்தவுடன் அரைத்த விழுதைப் போட்டுக் கைவிடாமல் கிளறவும். ஒன்று சேர்ந்த பின் அடுப்பை மிதமாக எரிய விட்டு நெய் அல்லது டால்டாவை ஊற்றிக் கிளறவும். கேக் பதம் வந்ததும் நெய் தடவிய தாம்பாளத்தில் கொட்டி அதன் மீது செர்ரி பழங்களை இரண்டிரண்டாக நறுக்கிப் பதிக்கவும். பார்த்தவுடனே சாப்பிடத் தூண்டும் கேக் இது.

— கோகிலா ராமன், மதுரை — 3.

மைசூர்

சாமுண்டீஸ்வரி!

நவராத்திரி என்றதுமே ஊர் களை கட்டி விடுகிறது. ஊர் முழுக்க உற்சாக மக்கள் வெள்ளம்தான். எல்லோர் வீட்டிலும் அநேகமாக உறவினர்கள் வந்து குவிந்து விடுகிறார்கள்.

அன்னை சாமுண்டீஸ்வரி அனைவர் முகத்திலும் புன்னகை பூக்கச் செய்துவிடுகிறாள். ஒன்பது நாளும் விசேஷ அலங்காரங்களுடன் அசுரனை வெல்லும் வெற்றிப் பாங்குடன் மிடுக்காகக் காட்சி அளிக்கிறாள்.

மைசூர் அரண்மனையில் ராஜாக்கள் முன்னின்று நடத்திய 'புகழ் பெற்ற நவராத்திரி உற்சவம்' ஒரு மாளிகைச் சுவர் முழுவதும் தத்ரூபமாகத் தீட்டப்பட்டிருக்கின்றன. குதிரைப் படை, யானைப் படை என்று பிரமிக்க வைக்கும் மெருகு குலையாத சித்திரங்கள். கடைசியில் மகாராஜா யானை மீது வரும் காட்சி.

இப்பொழுதும் நவராத்திரியின் இறுதி நாளில் இந்த ஊர்வலம் நடைபெறுகிறது. ஊரெல்லாம் இந்த ஊர்வலத்தில் கலந்து கொள்கிறார்கள். அசுரனை வென்ற வெற்றிக் கோலத்தில் அன்னை சாமுண்டீஸ்வரி ஊர்வலத்தின் இறுதியில் யானை மீது பவனி வருகிறாள்.

சென்ற வருடம் இந்த ஊர்வலத்திற்குச் சிறப்பு விருந்தினராக ஜனாதிபதி ஜைல்சிங் வந்திருந்தார். கர்நாடக முதலமைச்சர் ஹெக்டே முன்னின்று நடத்தினார்.

ஒன்பது நாளும் மாலையில் மைசூர் அரண்மனை ஜகஜ்ஜோதியாக ஜொலிக்கும். அரண்மனை முழுவதும் விளக்குகளின் ஒளி வெள்ளம்தான். இரவு ஏறியவுடன் அந்தக் காட்சியைப் பார்க்கும் போது ஏதோ கனவுலகம் போல இருக்கும். வருடத்தில் நவராத்திரி ஒன்பது நாட்கள் மட்டுமே இந்தவிளக்கொளிரும் அரண்மனையைக் காணலாம்.



சிறப்பு அட்டையில்:

மைசூர் அரண்மனையின் இரவுத் தோற்றம், நந்திமலையில் நிற்கும் அசுரன்.

அட்டையில்:

பெங்களூரில் பெண்களின் அழகு அணிவகுப்பு.

வண்ணப்படங்கள்: **யோகா**



ஒன்றரை மாதத்தில் பதினேழு மாடிக் கட்டிடம்!



எங்கள் குடும்பத்தில் பெண்கள் யாரும் ஆந்திராவுக்கு அந்தப் பக்கம் போன இல்லை. ஆனால், நான் கூட உறவினர் இல்லாமல் சுற்றுலா கோஷ்டியுடன் சேர்ந்து சிங்கப்பூர், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், ஹாங்காங் போக முடிவு செய்த போது என் பிள்ளைகள் என்னை உற்சாகமூட்டினர். வெளியே ரொம்பத் தைரியமாகக் கர்ட்டிக் கொண்டாலும் உள்ளூற கொஞ்சம் கலக்கம்தான். எல்லாம் விமானம் ஏறும் வரைதான். அப்புறம்தான் எத்தனை விந்தைகள் இந்த உலகில்!

* ஹாங்காங்கில் என் சிநேகிதி வீட்டிற்குப் போயிருந்தேன். அன்றைக்கு மறுநாள் ஆடி வெள்ளிக் கிழமை. தன் தோழிகளையெல்லாம் தொலைபேசியில் வெற்றிலை பாக்கு வாங்கிக் கொள்ள கூப்பிட்டார். சூபர் பஜாரில் வெற்றிலை, வாழை எல்லாம் கிடைக்கிறது என்ற தகவலும் சொன்னாராம்! 'அவ்வளவுதான் எல்லோரும் 'ஸ்டாக்' பண்ணிக் கொள்ள பறந்து விட்டிருப்பார்கள்' என்றான் என்னிடம்!

* இங்கு மனிதர்கள் டிரெயினிலாகட்டும், பஸ்ஸிலாகட்டும் அனாவசியமாகப் பேசிக் கொள்வதே இல்லை. பேசினாலும் 'கிசுகிசு' தான். அத்தனைக்கும் உழைப்பாளிகள். பதினாலு மாடிக் கட்டிடத்தை ஒன்றரை மாதத்தில் முடித்திருக்கிறார்கள். கடலுக்கடியில் ரயில் பாதையை ஒன்றரை வருடங்களில் முடித்திருக்கிறார்கள். கீழே ரயிலும், கார், பஸ்களும் போகின்றன. மேலே கடல்!

* தாய்லாந்தில் நம் தமிழ்நாடு போல பல ஒற்றுமைகளை நினைத்து ஆச்சரியப்படாமல் இருக்க முடியவில்லை. தங்கத் தகடுகளால் அடிக்கப்பட்ட பிரும்மாண்டமான புத்தர்கள், நின்றும், இருந்தும், கிடந்த நிலையில்! கிடந்தநிலையைப்பார்த்தால்பத்மநாபசுவாமி தான் நினைவுக்கு வருகிறார். அதே போல அறுபத்து மூன்று நாயன்மார்களைப் போல அறுபத்துமூன்று சிறியபுத்தர்களை கோயிலில் வைத்திருக்கிறார்கள். கருமாரி அம்மனைப் போல தலையில் பாம்புடன் ஒரு புத்தர்!

* இப்படி விழுந்து விழுந்து புத்தரைக் கும்பிடுகிறார்களே என வியந்து கொண்டே கடை வீதிக்கு வந்தால் 'ஷோ கேஸில்' பலவித ஜந்துக்கள் தொங்கிக் கொண்டிருக்கின்றன. பாம்பு, பல்லி, ஓணான், பன்றி, குரங்கு, தவளை, நண்டு... நாம் வேண்டியது கேட்டால் அங்கேயே தோலை உரித்து 'ரோஸ்ட்' செய்து தருகிறார்கள்!

* தோட்டங்களில் ஊஞ்சல் கட்டி ஆட நைலான் கயிறுகளை நூற்றைம்பது 'பட்ஸ்' என்று சொல்லி விற்றார்கள். எங்களில் சாமர்த்திய சாலிகள் 20 பட்ஸுக்குக் கூட வாங்கினார்கள். ஏமாந்தவர்கள் தலையில் நூறு பட்ஸுக்குக் கட்டினார்கள்!

* பெரும்பாலும் போட் சர்வீஸ்தான் அங்கு. படகிலேயே மார்க்கெட் கூட இருக்கிறது. நம்மூர்க் குழந்தைகள் போல இங்கு மாணவர்கள் 'போட்'டில் ஸீஸன் டிக்கெட் வாங்கி வைத்துக் கொண்டு பள்ளிக்குப் போகிறார்கள். நம்மூர் கூவம் இப்படி ஆக்கப்பட்டால் 'தொங்கும் பஸ்' களைத் தவிர்க்கலாமே எனத் தோன்றியது!

* 'இதுவும் ஒரு அனுபவமாக உங்களுக்கு இருக்கட்டுமே' என்றது மணிலாவுக்குப் போன விமானம். புறப்பட்ட சிறிது நேரத்தில் விமானத்தில் கோளாறு. விமானப் பணிப் பெண்களும், பணியாளர்களும் குறுக்கும் நெடுக்கும் ஓடினர். எங்களுக்கு லைஃப் ஜாக்கெட் போட்டுக் கொண்டு விமானத்திலிருந்து எப்படிக் குதிப்பது என்று சொல்லிக் கொடுத்தனர். விமானமோ ஒரேயடியாக ஆட ஆரம்பித்து விட்டது. ஒரே கூச்சல் குழப்பம். நான் ஆர்வத்தோடு எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

கடல் மட்டத்திற்கு மிக நெருக்கமாக விமானம் போக ஆரம்பித்தது. சக்கரங்கள் கீழே இறங்கி விட்டன. ஒருவழியாக விமானம் இறங்க வேண்டிய இடத்திற்கு இரண்டு கி. மீ.க்கு முன்பே நின்றது பாருங்கள்! எல்லோரும் 'உன்னைப் பிடி, என்னைப் பிடி' என்று குதித்தார்கள்!

* பிலிப்பைன்ஸிலிருந்து பாங்சங்கம் நீர் வீழ்ச்சிக்குப் போனோம். 'சோ' வென்று அசுர வேகத்தில் கொட்டும் அந்த நீர்வீழ்ச்சியில் தைரியமாக வெறும் கட்டுமரத்தில் நுழைந்து திரும்பியவர்கள் நானும் என் தோழி சீதாவும்தான்! மலைகளுக்கிடையே தூக்கித்தூக்கிப்போட்டபடி அருவிவேகத்தில் போன அந்த அனுபவம் மறக்க முடியாதது!

* டூரிஸ்டுகளின் சொர்க்கமான சிங்கப்பூரில் நகைத் தொழிற்சாலை எங்களை மிகவும் கவர்ந்தது. (இயற்கைதானே என்கிறீர்களா?) வைரங்களை அறுத்து, சிதறும் பொடிகளை வைத்து அவர்கள் அலங்கரித்த படங்கள், பொம்மைகள் அற்புதமானவை. கண்ணைப் பறிக்கும் நகைகள் மிக மலிவு!

* இன்னும்கண்ணைமூடினாலும்,பிலிப்பைன்ஸின் சர்க்கஸ், நடன நீரூற்று, மெழுகுச் சிலைகளின் மியூசியம்தான்...

* இன்னும் கொஞ்ச நாளைக்கு யாரைப் பார்த்தாலும், "சிங்கப்பூரில் அவ்வளவு சுத்தம், இங்கேயும் இருக்காங்களே..." தான்!

— சாந்தா ராமானுஜம்

கசகசா பாயசம்

தேவையான பொருட்கள்:


கசகசா — 2 டீஸ்பூன்.
தேங்காய் — 1 மூடி.
வெல்லம் — 200 கிராம்.
ஏலக்காய் — தேவையான அளவு.
முந்திரிப் பருப்பு — விருப்பப்படி.

செய்முறை:

கசகசாவை காலையிலேயே நீரில் ஊற வைத்து விட வேண்டும். பாயஸம் தயாரிக்கும் பொழுது ஊற வைத்த கசகசாவை அம்மியில் நன்கு வெண்ணெய் போல் அரைத்துக் கொள்ள வேண்டும். தேங்காயை அரைத்துப் பால் எடுத்துக் கொள்ள வேண்டும். உருளியில் சிறிதளவு தண்ணீர் விட்டு அரைத்து வைத்த கசகசா விழுதையும் போட்டு அடுப்பில் வைத்து நன்கு வெந்தவுடன் வெல்லத்தைப் போட்டு அது கரைந்ததும் தேங்காய்ப் பாலை விட்டுக் கொதித்தபின் இறக்கி, ஏலக்காய், வறுத்த முந்திரிப் பருப்பு ஆகியவற்றைத் தூவ வேண்டும். இதற்கு வெல்லம் போட்டுச் செய்தால் தான் ருசியாக இருக்கும்.

— சாந்தி சங்கரன்

இப்போது சந்தனமும் மஞ்சளும் உங்கள் அழகைப் பராமரிக்கட்டும்... நாள்தோறும்!



ஸந்தூர்

சந்தனம்+மஞ்சள் சோப்.




மிருதுவான நறுமணம் வீசும்
சந்தனம். அழகையும்
தூய்மையையும் அளிக்கும் மஞ்சள்.
இப்பாரம்பரிய அழகு சாதனங்களைக்
கொண்டு தயாரிக்கப்பட்ட
மிருதுவான ஒரு புதிய சோப்...
அதுவே ஸந்தூர்.

அந்தக்கால அழகு ரகசியம் இந்தக்-
கால பெண்மணிக்கு.

WIPRO
Limited
Closer to the consumer.

உங்கள் இயற்கையான அழகுப் பராமரிப்பிற்கு.

everest/86/WIL/309 tm



கொலு – ஒரு புதிய பார்வை

நவராத்திரி என்றதுமே நமக்கு எல்லாம் ஞாபகத்துக்கு வருவது கொலு தான். வெறும் பொம்மைகளை மட்டும் உள்ளடக்கியதல்ல கொலு. அந்தக் கொலுவில் அர்த்தம் இருக்கிறது. சில செய்திகள் அடங்கி இருக்கின்றன. கொலுவை ஏன் வைக்கிறீர்கள்? கொலு உங்கள் பார்வையில் எப்படி விமரிசிக்கப்படுகிறது? என்று சிலரைக் கேட்டோம் —

ராஜம் அனந்தகிருஷ்ணன் (குடும்பத் தலைவி)

ஒன்பது படி வைத்தோம்; அந்த ஒன்பது படிகளிலும் பொம்மையை வைத்தோம் என்று கொலுவை நாங்கள் கொண்டாடுவதில்லை. ஒவ்வொர் ஆண்டும் எங்கள் வீட்டுக்குக் கொலு பார்க்க வருகிறவர்கள் ஏதாவது செய்தியைத் தெரிந்து கொள்ள வேண்டும். புதிய விஷயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற ரீதியில்தான் நாங்கள் எங்கள் வீட்டில் கொலு வைக்கிறோம்.

ஓர் ஆண்டு இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியையும், விவசாய வளர்ச்சியையும் காட்டுவதற்காக நாங்களே கொலுவைச் செட் செய்தோம். இன்னொரு ஆண்டு பாரதி கண்ட பாரதத்தை அவனது பாட்டிற்கு ஏற்ப வைத்தோம். காவேரி வெற்றிலை, கங்கை நதிப்புறத்து கோதுமைப் பண்டம் இவைகளை எல்லாம் கொலுவாக்கிக் கங்கை காவேரியை இணைத்து அந்தந்த மாநிலங்களில் பிரசித்தி பெற்ற தேசத் தலைவர்களையும் கோவில்களையும் கொலுவில் கொண்டு வந்தோம்.

காடு, மலை இவைகளை ஒலிஒளி அமைப்பில் ஒருமுறை அமைத்து இருந்தோம். இது சின்னக் குழந்தைகளை ரொம்பவும் கவர்ந்தது.

நானும் என் கணவரும் சேர்ந்துதான் கொலுவை எப்படி அமைக்கலாம் என்று தீர்மானிப்போம். ஒரு யோசனை தோன்றிய பிறகு எங்கள் குழந்தைகளையும் பக்கத்து வீட்டுக் குழந்தைகளையும் கொலு பொம்மைகள், வரைபடங்கள் தயாரிப்பில் ஈடுபடுத்துவோம். நாங்களே பொம்மைகளை தயாரித்து விடுவோம்.

இதிலே இன்னொரு லாபம் — குழந்தைகளுக்கு நமது நாகரிகம், பழைய புராணக் கதைகள், தேசத் தலைவர்களின் வாழ்க்கை வரலாறுகள் எல்லாம் தெரிகிறது. படிக்கச் செய்து கொலுவே பாடமாகிறது.

செல்வி எம். பத்மாவதி (முதுகலை அறிவியல் மாணவி)

எதைப் பார்த்தாலும் ஒரு அறிவியல் கண்ணோட்டத்துடன் பார்ப்பதால்தான் இன்று மேலை நாடுகள் முன்னேறி இருக்கின்றன. கொலுவையும் அறிவியல் கண்ணோட்டத்துடன்தான் நான் பார்க்க ஆசைப்படுகிறேன். எங்கள் வீட்டில் அப்படி அறிவியல்

ரீதியாகக் கொலுவை வைக்கத்தான் ஆசைப் படுகிறேன்.

அன்றாடம் நாம் மின்சாரத்தை உபயோகிக்கிறோம். ஆனால் அது எப்படித் தயார் செய்யப்படுகிறது என்பது கூட பலருக்குத் தெரியாது. மின்சார உற்பத்தியைக் கூட கொலுவில் வைக்கலாம். உயரமான இடத்திலிருந்து தண்ணீரை அருவி போல விழ வைத்து சின்ன மோட்டார்களின் உதவியால் கீழே ரொட்டேஷனை ஏற்படுத்தி மின்விசை தயார் செய்வதை கொலுவாக்க வேண்டும் என்று இருக்கிறேன். ஏவு கணைகள் என்று பேசுகிறோம் தவிர பலருக்கு எத்தனை வகையான ஏவுகணைகள் இருக்கின்றன? நட்சத்திர மண்டலத்தில் கூட மனிதன் போர் செய்ய முடியுமா? என்பதெல்லாம் தெரிவதில்லை. பேப்பரில் அறிவியல் சம்பந்தமாக வந்துள்ள உண்மை செய்திகளைச் சேகரித்து ஏவு கணை மாடல்களைச் செய்து விளக்கக் குறிப்புக்கள் எழுதி கொலுவில் வைக்கலாமே!

சிதம்பரம் சுவாமிநாதன் (உபன்யாசகர்)

ஒன்பது ராத்திரிகளைத்தான் நவராத்திரி என்று சொல்கிறார்கள். நவம் என்றால் ஒன்பது என்று மட்டும் அர்த்தமல்ல. நவம் என்றால் புதுமை என்றும் அர்த்தமாகும். புதுப் புது விஷயங்களை நமக்குச் சொல்லக் கூடிய ராத்திரி. புதுப் புது மனிதர்களை நமக்கு அறிமுகப்படுத்தக் கூடிய ராத்திரிதான் நவராத்திரி.

நாம், ஒருவர் கொலு பார்க்க அழைத்தாரே என்பதற்காக முன்பின் தெரியாதவர்கள் வீட்டுக்குக் கூடப் போகிறோம். அந்த முன்பின் தெரியாதவர் அப்புறம் நமக்கு நெருங்கிய சிநேகிதர்களாக ஆகி விடுவதுமுண்டு.

சிவனுக்கு ஒரு ராத்திரி. ஆனால் சக்திக்கோ ஒன்பது ராத்திரி. ஒன்றுதான் ஆரம்ப எண். ஒன்பது முடிவான எண்.

வயல், புல்வெளி என்று முதல் படியில் ஆரம்பித்து அப்புறம் படிப்படியாக மனித பரிணாம வளர்ச்சியைக் காட்டுகிறது கொலு. கடைசி ஒன்பதாவது படியில் இறை உருவங்கள் இருந்து கொண்டு ஓரறிவுப்புல்லிலிருந்து வளர்ந்த மனிதன், பண்பட்டால் இறைவனாகக் கூட மாறலாம் என்பதையே கொலுவின் மூலம் சொல்லாமல் சொல்கின்றன.

இறை பொம்மைகள் இருக்கின்ற கொலுவில்தான் செட்டியார் பொம்மைகளும் இருக்கின்றன. இந்த பொம்மை வேடிக்கைக்காக வைக்கப்படுவதில்லை. செட்டியார் பொம்மைகள் வியாபாரத்தைக் குறிப்பவை. வாழ்க்கைக்கு வியாபாரமும் தேவை. வியாபாரத்தில் லாபமும் நஷ்டமும் வரும். மனித வாழ்க்கையில் எல்லாம் சகஜம் என்று எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் செட்டியார் பொம்மையை வைப்பது. வாழ்வின் தத்துவத்தையே கூறுவது நவராத்திரி.

ரம்யா கிருஷ்ணன் (சினிமா நடிகை)

கொலுன்னுபுதுசாபுதுசா பொம்மைகளை வைப்போம். மாலை வேளையில் பட்டுப் புடைவை கட்டிக்கிட்டு பக்கத்திலே இருக்கிற ஃபிரண்ட்ஸ் எல்லோரையும் கூப்பிடப் போவேன்.

இந்தப் பண்டிகைகளாலே ஏற்றத் தாழ்வு வித்தியாசம் எல்லாம் மறைஞ்சு போகிறது என்று நான் நினைக்கிறேன். சின்னதா கொலுவைத்து இருந்தாலும்சரி, ஆடம்பரமா கொலு வைத்து இருந்தாலும் சரி, எல்லோர் வீட்டுக்கும் மஞ்சள் குங்குமம் வாங்கிக் கொள்ளப் பெண்கள் போவதுண்டு. இவங்க ஏழை, இவங்க பணக்காரங்க எனவே இவங்க வீட்டுக்கெல்லாம் போகக் கூடாதுன்னு யாரும் நினைப்பதில்லை. பண்டிகையைப் பயன்படுத்தி உறவை வளர்த்துக் கொண்டு நல்ல நண்பர்களாக எப்போதும் இருக்கணும்.

— சீழாம்பூர் சங்கரசுப்பிரமணியன்



● செல்வி எம். பத்மாவதி



● சிதம்பரம் சுவாமிநாதன்



● ரம்யா கிருஷ்ணன்

பிரச்னைகளும் தீர்வுகளும்

எஸ். கனகவல்லி சாரங்கபாணி

"ராஞ்சியிலிருந்து ரமாவும், மாப்பிள்ளையும் வந்திருக்கும்போதே, கிராமத்திற்குப் போய் — நம் குலதெய்வத்திற்கு அபிஷேகம் செய்து, புதுப்புடைவை சார்த்தி,



பொங்கலிட்டு வருவோமா? நம்மைப் பிடிச்சிருக்கிற பீடை விட்டொழியும். தெய்வ குத்தம்தான் இப்படி நஷ்டம் மேலே நஷ்டமாய் சாய்க்கிறது..." என்றாள் அம்மா.

"சரி... என்னிக்குக் கிளம்பணும்... ஏற்பாடு செய்...?" என்றார் அப்பா. அவருக்குத் தொழிலில் ஏற்பட்ட அடுக்கடுக்கான நஷ்டம், பொருளாதார ரீதியில் மட்டுமின்றி, மன நிம்மதியையும் பாதித்திருந்தது.

'போய்ட்டு வரலாம்மா... எனக்குக் காலேஜ் லீவ்...' பப்பிள் கம்மை மென்று, வராக அவதாரம் போல் பெரிய பப்பிள் வாயில் படைத்துக் கொண்டான் மூத்த பிள்ளை ரமேஷ். அவனுடைய அழுக்கு ஜீன்ஸும், 'லவ் மீ' எழுதிய டி ஷர்ட்டும் பேன்களின் குடியிருப்பாய் விளங்கும் எண்ணெய் காணாத அழுக்குப் பரட்டைத் தலை முடியும் பார்க்க அவனுடைய தாய்க்கு வயிற்றைப் பிடுங்கியது. தலைக்கு ஒசந்த பிள்ளை... படிப்பைக் கவனித்து, முடித்திருந்தால் தகப்பனுக்கு ஒத்தாசையாய்த் தொழிற்சாலையில் உதவியிருக்கலாம். தறுதலைப் பிள்ளை... மில்லி பழக்கம் கூட உண்டோ என்று அம்மாவிற்குச் சந்தேகம்தான்... "ஹையா... கிராமத்துக்குப் போறோம் பொங்கல் படைக்கறோமே... நெறய்ய... பொங்கல் வேணும்...!" பதின்மூன்று வயது உடல் வளர்ச்சியும், நாலு வயது மன வளர்ச்சியும் உள்ள புத்து வயது கோமு, ஒரு பீப்பாய் குதிப்பது போல் குதிக்கிறாள். வாயில் சதா ஜொள் ஒழுக, அறுபது நாழியும் வாய் அரைவை மிஷினாய் எதைப் பார்த்தாலும் தின்று கொண்டு. மன வளர்ச்சியின்றி இவள் பிறந்திருப்பது கூட, குலதெய்வத்திற்குக் குறை வைத்ததால் என்பது அம்மாவின் எண்ணம்.

இப்போது கூட அரிசி புடைத்துக் கொண்டிருக்கும் வேலைக்காரியிடம் போய் ஒரு கை அரிசியை அள்ளி வாயில் போட்டுக் கொண்டு, வெல்ல ஜாடியைத் தேடிப் போகிறாள் கோமு. "ப்ளீஸ்... எங்கே சிக்கவேட்டனு கரெக்டாய் சொல்லுங்கோ... தஞ்சாவூர் போய் போகலாமா? கும்பகோணத்திலிருந்தே போகலாமான்னு பார்த்துச் சொல்



கிறேன்... அமெரிக்கையான தோற்றமுடன், மாப்பிள்ளை பந்தாவுடன் மாதவன் வாய் திறக்கிறான். படித்த பெரிய வேலையிலிருக்கும் அவனிடம் எல்லோருக்கும் ஒருவித மரியாதை...

''எல்லாரும் ட்ரெயினில் போவதை விட, ஒரு டூரிஸ்ட் கார் புக் பண்ணிண்டு போயிடலாம்... எக்ஸ்பென்ஸும் அதிகம் ஆகாது. இரண்டு நாளில், குலதெய்வத்துக்குப் பிரார்த்தனை முடிச்சுண்ட கையோடு, ஸ்வாமிமலை, எண்கண், கோயில்கள் எல்லாம் போய்ப் பார்க்கலாம்.'' என்றார் யோசித்துவிட்டு அப்பா.

''அம்மா, உன் மாப்பிள்ளைக்கு ஆப்பிள் ஜூஸுக்கு இரண்டு ஆப்பிள் 'வைத்திருந்தேனே காணோமே...?'' ரமா கேட்டுக்கொண்டே வரும்போதே, அம்மாவிற்குப் புரிந்து விடுகிறது.

''ஏய், கோமு, சனியனே... ஆப்பிளை எடுத்தாயா.....?கொண்டுவா இங்கே...!தீனிப் பிசாசு... வண்ணான் சால் மாதிரி வயிறு இருக்கு... எப்பப் பார்த்தாலும் எதையாவது.

தின்னுண்டு... உன்னைப் பெத்ததுக்குக் கூடை சாணி சுமந்திருந்தால் வரட்டியாவது கிடைக்கும். பெரு வயிறு பிசாசு... செத்து ஒழிஞ்சாலும் முழுகிட்டு நிம்மதியாய் இருப்பேன்.''

அம்மா வசை மாரியாய்ப் பொழிய, இதனால் துளிக்கூட பாதிக்கப்படாமல் 'ஹி' என்று இளித்துக் கொண்டு வரும் கோமுவின் கையில் ஒரு சிறு துண்டு ஆப்பிளே மிச்சம் இருக்கிறது.

''பாவி... இரண்டு ஆப்பிளையும் முழுங்கிட்டயா... சின்ன துண்டுதான் பாக்கியா... அதையும் நீயே தின்னு... வயசு ஏற ஏற மூளை வளரலை.. உடம்பு வளர்ந்துடுத்து. இப்பவே திரள்ற பக்குவத்துல உடம்பு இருக்கு- இந்த அரைக் கிறுக்கை அப்புறம் எப்படிக் காப்பாத்துவேனோ... நாளைக்கு ஒரு வகையா கஷ்டம் குடுக்கப் போறது சனியன்... செத்து ஒழி... பெத்ததே ஒரு பொண்... பிள்ளைதான்னு நெனச்சுக்கிறேன்...'' தாய்மையின் ஆற்றாமை சபிக்கையில்...

''ஷ்... ஷ... இட்ஸ் டூ மச்... நீ வா கோம்தி... இங்கே... கடவுள் படைப்புல எந்த உசிரும் அநாவசியம் இல்லை... செத்து ஒழி... ன்னெல்லாம் திட்டறது டூ பேட்...

மாப்பிள்ளை ஆதரவுடன் கூப்பிட, கோமு பாக்கி ஆப்பிளை வாயில் போட்டு, அம்மா, அக்காவிற்கு அழகு ,காட்டிவிட்டு மாதவனிடம் போகிறாள். 'சாயங்காலம் கோன் ஐஸ் க்ரீம் வாங்கித் தர்றியா...?' என்று கெஞ்சல் வேறு.

'கர்மம்...' என்று தலையில் அடித்துக் கொண்ட ரமா, ''சரிப்பா, கிராமத்துல பூதம் காக்கறது போல ஒண்டியா வீட்டில இருக்கிற பாட்டிக்கு லெட்டர் போடு. இந்த வாரக் கடைசியில வரோம்னு...'' என்றாள்.

''ஆமாம்... அது ஒரு கிரகசாரம்... கடைசி காலத்துல நம்மைச் சந்தி சிரிக்க வச்சிண்டு... ஆம்படையான் மூச்சு பிரிஞ்ச வீட்டுலதான் தானும் மண்டையைப் போடணும்னு... கிராமத்தில தனியாப் பொங்கித் தின்னுண்டு ஒக்காந்துண்டு இருக்கு.... இங்கேயானால் சோற்றோடு சோறாய்ப் போயிடும். மாசம் கிராமத்துக்கு கிழத்துக்குச் சொளையா நூறு ரூபாய் அனுப்ப வேண்டியிருக்கு... எல்லாம் ப்ராரப்த கர்மா... பார்ப்போம். இந்தத் தடவை வேண்டுதலை முடிச்சிண்ட கையோடு எங்களோடு வந்துடணும்னு கண்டிப்பாய்ச் சொல்லிடுவோம்... தொடர்ந்து வருஷாவருஷம் மழைக்காலம் வந்தால் பெரும் படுக்கையாய் விழுந்து, ஆயிரக்கணக்கில்தண்டம்வைக்கிறதுகிழம்... வயசாறதே... பூமிக்குப் பாரமா... எதுக்கு... இருக்கணும்...?'' அம்மா சலித்துக் கொண்டாள்.

''இதையேதான் உன் மாட்டுப் பொண் உனக்குச் சொல்லப் போறு...'' என்றுஎரிந்து விழுந்துவிட்டு அப்பா கிளம்பினார்., ஏற்பாடுகளைக் கவனிக்க... 'எல்லாப் பிரச்னைகளையும் தீர்த்து வை...' என்று குல தெய்வத்திடம் வேண்டியபடி.

2

தஞ்சாவூர் ஜில்லாவில் அமைந்த சின்னஞ்சிறு குக்கிராமத்தில் பாட்டி, வெள்ளெழுத்துக் கண்ணாடியைமாட்டிக்கொண்டு, தன் பிள்ளையிடம் இருந்து வந்த கடிதத்தைப் படித்து மகிழ்ந்து கொண்டிருந்தாள்.

குல தெய்வத்துக்கு, பொங்கல் படைச்சு, அபிஷேகம் பண்ணி எத்தனை நாளாச்சு? மாட்டுப் பொண் கறுப்பு இழை கலக்காம, மஞ்சள், அரக்கு நிறமாய்ப் பார்த்து சாத்துவதற்குப் புடைவை வாங்கணும். நெடு நெடுன்னு வளர்ந்து, வடக்கே, கல்யாணம் பண்ணிட்டுப் போயிட்ட பேத்தி ரமா, புருஷனுடன் வருகிறாளாமே... பேரனுக்கு அம்மன் புத்தி திருத்தி நல்ல வழி காட்டணும். கோமு... எப்படி இருக்கோ...? வெகுளி... சூது வாது இல்லாத குழந்தை...'

வீட்டை மளமளவென்று ஒழித்துச் சுத்தம் செய்தான். பெரிய சமையல்கட்டை ஆள் வைத்து அலம்பினாள். 'என் ஒண்டிக்காரிக்கு ரேழி உள்ளில் கும்முட்டி அடுப்பில் வெங்கலப் பானையில் ஆழாக்கு அரிசி பொங்கிண்டுடறேன். எல்லாரும் வந்தால் விறகு அடுப்பு மூட்டி, விஸ்தாரமாய் விருந்து பண்ண சமையல் கட்டு வேண்டாமா... நன்றாய் அலம்பி விடு...'' என்றாள்.

விடியலுக்காக ஒரு முடிவு

காசையும் வாரிக்கொடுத்துவிட்டு —
காலில் வேறு
விழுந்து வணங்கினால்தான் —
அந்த
'கணவன் எனும் பொருள்'
கழுத்துக்கு வருமென்றால்.....
— அம்மா!
நான்
'வியாபாரத்துக்கே வராதவளாய்....'
வீட்டிலேயே இருந்தாலும் சரி —
'கல்யாணச் சந்தை'க்கு
வரவில்லை — போ!


— கோவை கிருபாகரன்

பல்வலி வந்தால் நாம் நினைப்பது கடவுளை, இல்லாவிடில் கிராம்புத் தைலத்தை.

ஆம். பல் வலிக்கு தொன்றுதொட்டே இல்லந்தோறும் முக்கியமான ஒன்றாக இருந்து வருகிறது கிராம்புத் தைலம். மூலிகை வம்சத்திலேயே கிராம்பு, தனித்தன்மை வாய்ந்தது. இது மருந்துத் தன்மை உடையது. அதோடு குளுகுளு புத்துணர்ச்சியும். ஆகவேதான் இதற்கு பெருமைமிகு இடம் உண்டு —தினசரி உணவுகளிலே, மருத்துவ அறிவியலிலே, ஏன்...ப்ராமிஸ் டூத்பேஸ்ட்டிலும்.

ப்ராமிஸ் டூத்பேஸ்ட் மூலம் கிராம்புத் தைலத்தின் மருந்துத் தன்மை உங்கள் பற்களின் இடுக்குகளில் புகுந்து, பற்களின் வேர்வரை சென்று பலவீனப்படுத்தும் கிருமிகளை அழிக்கிறது. இதனால் உங்கள் பற்கள் எப்போதும் ஆரோக்கியமாயும் உறுதியாயும் திகழ்கின்றன. ப்ராமிஸிலுள்ள இதர மூலப்பொருட்கள் பற்களை முத்துபோல பளிச்சிடச் செய்கின்றன. ப்ராமிஸ் கொண்டு பிரஷ் செய்தபின், நீங்கள் பேசும்போது வாசனை வீசுகிறது. ஏனெனில் கிராம்புத் தைலம் சுவாசத்தில் துர்நாற்றம் ஏற்படுத்தும் கிருமிகளை வீழ்த்துகிறது. உங்கள் சுவாசம் புத்துணர்ச்சி பெறுகிறது.

ப்ராமிஸ் டூத்பேஸ்ட் மற்றும் கிராம்புத் தைலம், இரண்டும், டூத்பேஸ்ட் உலகிலேயே ஓர் இணைபிரியா ஜோடி எனலாம். ஆம், நீங்களும் இதை முறையாக உபயோகித்தால், கிராம்புத் தைலத்தை நினைக்க வேண்டாம், உங்களுக்குத் தேவையும் இராது. பற்கள் பளிச்சிடும். சுவாசத்தில் மணம் வீசும்.



Promise

கிராம்புத் தைலத்தின் அருமையான படைப்பு — ப்ராமிஸ் டூத்பேஸ்ட்.

பல்ஸாரா—
டூத்பேஸ்ட் நிபுணர்கள்.

CHAITRA - B BLS 820 TAM

விறகு கொஞ்சம் உடைக்கச் சொன்னாள். மார்கழி மாதக் குளிரிலும் அதிகாலையில் காவிரிக்குக் குளிக்கப் போய்விடுவாள் பாட்டி. அதனால் உபயோகிக்கப்படாமல் பரணில் கிடந்த வெந்நீர் தவலையைக் கீழே இறக்கி, உப்பும் புளியும் கொடுத்துப் பளிச் சென்று தேய்த்து வைக்கச் சொன்னாள். பூசாரிக்குச் சொல்லி அனுப்பினாள். கோனாரிடம், இரண்டு வேளையும் நல்ல பால் கொண்டு தரச் சொன்னாள். முத்தாயியைப் பசுபசுவென்று கறிகாய் கொண்டு தரச் சொன்னாள். பல வருடங்கள் கழித்து வரப் போகும் மகன் குடும்பத்தை வரவேற்க ஆவலுடன் தயாரானாள் பாட்டி.

3

''கொண்டு வந்த இட்லி, தோசை, முறுக்கு, மிக்ஸர், பழம் எல்லாவற்றிலும் பாதிக்கு மேல் இந்தக் கோமுவே தின்னு தீர்த்தாச்சு... வழியிலே பிச்சுக்கப் போறது. குடலை உருவிண்டு பேதி... சனியன்... என்ன தீனி... கையில இருக்கிறதைப் பிடுங்கித் திங்கறது...'' ரமா அலுத்துக் கொண்டாள்.

''வைத்தியம் பண்ணுவதற்கென்ன? இது கூட ஒரு வகை வியாதிதான்... யாராவது சைக்யாட்ரிஸ்ட்டிடம் அழைத்துப் போகலாமே...'' என்றான் மாதவன்.

''பிறந்ததில் இருந்தே அசுரப் பசிதான். ராக்ஷஸ தீனிதான். ஒரு கிலோ க்ளாக்ஸோ டின் இரண்டு நாளைக்குக் கூட காணாது. ஆறு மாதத்திலேயே சோறு திங்க ஆரம்பித்து விட்டாள். சாப்பிட யார் உட்கார்ந்தாலும் தானும் தட்டு போட்டுக் கொண்டு சாப்பிட உட்கார்ந்து விடுவாள். தீனி... தீனி... பெருந்தீனி...'' என்றாள் ரமா.

''நீ இதுபற்றி என்னிடம் சொன்னதே இல்லையே... பத்து வருஷமாய் வைத்தியம் செய்யாமல் இருக்கிறீர்களே... மதராஸில் வைத்திய வசதி அனைத்தும் இருக்கும் போது...'' என்றான் மாதவன். கல்யாணமாகி முதல் முறையாக அவன் இப்போதுதான் வருகிறான்.

''என் தங்கை ஒரு பெருந்தீனி... செமி...ன்னு சொல்லிக்கணுமாக்கும்... என்னவோ தெய்வ குத்தம்... அது இதுன்னு பேசாமலே இருக்கா... பள்ளிக்கூடம் அனுப்பினால் எல்லா மாணவர்களின் டிஃபன் பாக்ஸையும் காலி பண்ணினாளே தவிர, அ..ஆ..ஆவன்னா கூட வரலே... என்னவோ... பொங்கல் படைக்கிற வேளை... கோமு.. சாதாரணப் பொண்கள் போல ஆனால் சரி. நீங்க சொல்ற மாதிரி டாக்டர்கிட்டேயும் அழைச்சிண்டு போவோம்...'' என்றாள் ரமா.

நடுவில் மாதவன் இறங்கிப் போய் வாங்கி வந்த தின்பண்டங்களை ருசித்துக் கொண்டிருந்தாள் கோமு.

ரங்கோலி போடுவீர்களா?

டீ வடிகட்டி உபயோகித்து கலர்ப் பொடி தூவினால் ஒரே மாதிரி சீராகக் கோலம் அழகாக வரும். கோலப் பொடியும் அதிகமாகச் செலவாகாது.

— லக்ஷ்மி துரைஸ்வாமி.

கிராமத்து குண்டுங்குழியுமான பாதையில் வண்டி போகும்போது அப்பா தன் இளமை நாட்களில் லயிக்கலானார். அம்மாவோ, ஏதோ தன் பரம வைரியைச் சந்திக்கப் போவது போல் சிடுசிடுப்பாய் முகம் மாறினாள்.

கார் வீட்டு வாசலில் நின்றது.

''வாங்கோ... எல்லோரும்... ரமா... மாப்பிள்ளையோட கிழக்குப் பார்த்து நில்லடியம்மா... ஆரத்தி கரைச்சு வெச்சிருக்கேன்... உன் அம்மாவே எடுக்கட்டும்...'' பாட்டி பூரிப்புடன் வரவேற்றாள்.

''நமஸ்காரம் பாட்டி...'' என்று வாசலிலேயே தன் காலைத் தொட்டு வணக்கம் தெரிவித்த பேத்தியின் கணவனை, மனதார ஆசீர்வதித்தாள் பாட்டி.

''கிழத்தைப் பார்... எப்படி தெம்பும் திடமுமாய் அழிச்சால் ஆறு ஆள் பண்ணலாம் போல இருக்கு... உன் அப்பா இப்பவே ப்ரெஷர்... கொலஸ்டிரால்னு அடிக்கறார்...'' என்றாள் அம்மா, ரமாவிடம்.

''சீ... என்னம்மா நீ. பாட்டி உன்னை மாமியார்த்தனமாய் கொடுமைப்படுத்தி கஷ்டப் படுத்தாத போது நீ ஏன் அவளைக் கண்டாலே ஆகாமல் கரிச்சுக் கொட்டறே... நீயும் மாமியாராகப் போறே... நினைவில் இருக்கட்டும்... இப்போ நமக்குச் சாப்பாட்டுக்கு நெல், உளுந்து, மிளகாய் எல்லாம் பாட்டியால்தான் வரது... நன்றியுடன் நெனச்சுக்கோ...'' என்றான் ரமேஷ் காட்டமாக.

''பாட்டி... காப்பி பாட்டி...'' என்றாள் கோமு.

மணக்க மணக்க புது பசும்பாலில், காப்பி கொண்டு வந்தாள் பாட்டி.

''ரியலி... வெரி டேஸ்டி... ரமா...'' என்றான் மாதவன்.

''எல்லாம்எங்கபாட்டியோடகைமணம்... வெறுமே பழையதைப் பிழிந்து, உப்பும், தயிரும்விட்டுப்பிசைந்து,மாவடுதொட்டுக்க வைத்துக் கொடுப்பாள் பாருங்கோ. பத்து வருஷம் முந்தி சாப்பிட்டது... இப்ப நினைச்சாலும் வாய் ருசியில் நொட்டை விடும்...'' என்றாள் ரமா.

அம்மா நிஷ்டூரமாய், கோயில் சாமான்


பின்னியின் இணைப்புகள் ரம்மியமானவை!
பின்னி
(பக்கிங்காம் கர்நாடிக் மில்ஸ், சென்னை)
மின்னிவரும் புதிய படைப்புகள்
மாலினி • அனுமிகா
100% பாலியெஸ்டர் புடவைகள்
மேகனு • வரோனிகா
100% பாலியெஸ்டர் ஷிப்பான் புடவைகள்
பிரின்ஸ்
100% பாலியெஸ்டர் வேஷ்டிகள்
2 X 2 ரீகோருபியா
பிளவுஸ் மெட்டிரியல்ஸ்
உங்கள் அபிமானம் பெற்ற
எல்லா ஜவுளி கடைகளிலும்
கிடைக்கும்
மொத்த விற்பனையாளர்
எம்.சி.டிரேடர்ஸ்
63, கிடங்கு தெரு, சென்னை-600 001.
போன்: 22652/28441


நறுக்கலாம்•சீவலாம்•உரிக்கலாம்•
செதுக்கலாம்.
இப்போது, ஒஜஸ் உங்களுக்கு பலவகை ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் கத்திகளை வழங்குகிறது
ப்ரெட் கத்தி.
காய்கறிக் கத்தி.
பழக்கத்தி மற்றும் சமையலறைக் கத்தி.
தேர்ந்தெடுக்கப் பல்வேறு அளவுகள் மற்றும் கைப்பிடிகள்.
ஒஜஸ்®
கூரான முனைகொண்ட சீரான கத்திகள்.
விற்பனைக்கு விடுவோர் : ஒஜஸ் என்டர்பிரைஸஸ், ஒஜஸ் எஸ்டேட், மாவ்டி ப்ளாட், ராஜ்கோட் 360 004. தொலைபேசி : 88730.
டிஸ்ட்ரிப்யூட்டர்: நாயக் பிரதர்ஸ், 56, புரசைவாக்கம் ஹை ரோட், முதல் மாடி, சென்னை 600 007. தொலைபேசி : 661034.
everest/86/OP/6/TM

களை எடுத்து வைத்தாள்.

''இத்தனை பேருக்கும் பாட்டி ஒண்டியாய் சமைப்பாளோ... நீயும் உன் அம்மாவும் ஹெல்ப் பண்ணுங்களேன்...!'' என்றான் மாதவன்.

''எங்களுக்கு விறகுப் புகை சரிப்படாது. விறகு அடுப்பில் சமைக்கத் தெரியாது...!'' என்றாள் அம்மா.

''என்ன பிரமாதம்... நீங்க எல்லாரும் சித்த ரெஸ்ட் எடுத்துண்டு, பொடி நடையா ஊரைச் சுத்திப் பார்த்தபடி, கிழக்கே காவிரி ஓடறது... முங்கி குளிச்சுட்டு வாங்கோ... சமையல் ஆயிடும்... ஏன் ரமா... மாப்பிள்ளைக்குக் காலையில் பலகாரமா... சாப்பாடா... வெந்நீர் போடட்டுமா? குளிக்க... நம்ம ஊரில் காவேரி, சாதுவாய், வாய்க்கால் மாதிரி அடக்கமாய் ஓடறாள். ஒரு சுழி... ஒரு வேகம் கிடையாது... மகா சாந்தம்... தைரியமாய்க் குளிக்கலாம்... அம்மனுக்குப் பொங்கல் வைக்கவும் மடி ஸ்நாநம் ஆகும்...!'' என்றாள் பாட்டி.

> ஜலதோஷம் பிடித்துக் கொண்டு மூக் கடைப்பு இருந்தால் (4 (அ) 5) மிளகை எடுத்துக் கொண்டு ஊசி முனையில் குத்திக் கொள்ளவும். (ஒன்று, ஒன்றாக) அதை சுவாமி விளக்கில் காட்டினால் மிளகு பற்றிக் கொண்டு எரியும். அப்போது மிளகை வாயால் ஊதி, அணைத்துவிட்டால் அதிலிருந்து 'குப்' பென்று புகை வரும். அதை நன்றாக உறிஞ்சிக் கொள்ளுங்கள். கோத்துக் கொண்டிருக்கிற நீர் ஒரே நாளில் சரியாகிவிடும்.
>
> — இந்திரா ஸ்ரீனிவாசன்

''ஆத்திலேயே குளிச்சுட்டு வந்துடறோம் பாட்டி. சாப்பாடே சாப்பிட்டுடலாம். இன்னொரு டோஸ் காப்பி மட்டும் கொடுங்கோ போதும்...!'' என்றான் மாதவன்.

''பூசாரி வந்தால் சாமான் எடுத்துக் கொடுங்கோ. அபிஷேகத்திற்கு, பால், தயிர், இளநீர், புளி, எலுமிச்சம்பழம் எல்லாம் கொடுத்தனுப்பியாச்சா...!'' என்றான் அம்மா.

''ஆச்சுடியம்மா... ரெண்டு நாள் இருக்கப் போறீங்களே... நாளைக்கு நெல்லைக் குத்தி அரிசியாக்கி, மாவிடிச்சு, மாவிளக்குப் போட்டுடலாம். அம்மன் சந்நிதியிலே...'' என்றாள், பாட்டி.

''ஹாய் பாட்டி. எவ்வளவு பச்சசுனு இருக்கு. வெண்டைக்காய்...'' காயை எடுத்து முறித்து வாயில் போட்டு மென்றாள் கோமு.

அம்மா அவளை அடிக்க வர, மாதவனிடம் ஒண்டிக் கொண்டாள்.

குளித்து, மறுபடி காப்பி குடித்து, எல்லோரும் அபிஷேகம் பார்க்கக் கோயிலுக்குக் கிளம்பிவிட்டனர். அகலக் கரை போட்டு, குங்கும நிறப் புடைவை வாங்கி வந்ததில் பாட்டிக்கு அசாத்திய மகிழ்ச்சி...

''பாட்டி, நீங்களும் வாங்க...'' என்றான், மாதவன். ''இல்லேப்பா. நான் சமையலைப் பார்க்கிறேன். அர்ச்சனைக்கு வந்துடுவேன்...!'' என்றாள் பாட்டி.

பாட்டி வெளிக்கு ரொம்ப திடகாத்திரமாய் இருப்பது போல் பேசினாளே தவிர, மூன்று மாதமாய் நெஞ்சு வலி, 'திடுக்' கென்று வந்துவிடுகிறது. டாக்டர் 'லோ பிரஷர்' என்று கூறியிருந்தார். பக்கத்து வீட்டு, மங்களா, கறிகாய்களை நறுக்கி வைத்திருந்தாள். பாட்டி, 'நெருப்பை அலம்பும் ஆசாரம்' அதனால் சமையலில் உதவியோ, சமைக்கவோ கூடாது மங்களாவோ, மற்றவர்களோ.

பாட்டி, சிரமப்பட்டு, தண்ணீர் நிரப்பிக் கொண்டாள். பேத்தி கணவனின் வாத்ஸல்யம் வேறு நெஞ்சில் தேனைச் சுரக்க, வரவழைத்துக் கொண்ட, பலத்துடன், தெம்பாய் சமையலைத் துவக்கினாள். நிறைய பருப்புப் போட்டு, அரைத்துவிட்டு, ஊரே மணக்க பருப்புக் குழம்பு, கூட்டு, கறி, அவியல், பச்சடி, பாயாசம், தாமரை இலை அளவு பெரிய பொரித்த அப்பளம்... பால் பாயசம்... என்று தீர்மானித்திருந்தாள், சமையல் வகைகளை. பகல் டிபனுக்கு, போண்டா போட்டு, கேசரி கிளறி விடலாம். இப்போது வடை வேண்டாம் என்று நினைத்தபடி 'பூசாரிக்கு, தெரிந்தவர்கள் இரண்டு பேருக்குச் சாப்பாடு போட வேண்டும் என்பதால் குறுணி :வெண்கலப் பானை வைத்து வெள்ளை வெளேரென்று மலர மலர சாதம் வடித்தாள். வெண்கலப் பானையை இறக்குவதற்குச் சற்றுச் சிரமப்பட்டாள்.

''பாட்டி...'' கோமு கொல்லைக் கட்டில் குரல் கொடுத்தாள். 'ஆச்சு, குழம்பு இறக்கி விட்டால், அப்பளம் பொரித்தால் ஆயிற்று. கீழ் அடுப்பில் அவியலும், பால் பாயசமும், முக்கால் பதத்தில் இருக்கு... குழம்புக்குக் கொல்லையில் போய் கறிவேப்பிலைக் கொண்டு வந்து கிள்ளிப் போட்டு இறக்கணும்...'' என்று தீர்மானித்தபடி, கொல்லைப் புறம் சென்ற பாட்டி, ''என்ன கோமு... வந்துட்ட... அபிஷேகம் பார்க்கலையா...?'' என்று கறிவேப்பிலையைக் கிள்ளிக் கொண்டாள்.

''போ... பாட்டி... பசிக்குது... உன் குழம்பு வாசனை கொல்லை முழுக்க மணக்குது...'' என்றாள் கோமு.

அந்தச் சமையற்கட்டு பல நாட்களாய் உபயோகிக்கப்படாததால்... மூங்கில் சிம்பால் புகைபோக்கி அடைக்கப்பட்டு, ஒரு குத்து ஓடு உயரமாக்கி இருந்த இடத்தில், உடலை வளைத்துப் படுத்திருந்த அந்த நல்ல பாம்பு... இத்தனை வருடங்களாய் இல்லாமல்

புதிதாய்க் கிளம்பிய புகையால் தொந்தரவு செய்யப்பட்டது. சாதம், கூட்டு, கறி, என்று வகை வகையாய் சமையல்கள் தொடர, அடுப்பின் உஷ்ணம், ஓட்டை அடைந்து அதன் உடலையும் தகிக்க... கூரையின் மேலோடு கொல்லைப்புறத்து மல்லிகைப் புதருக்குப் போக வேண்டிய அந்தப் பாம்பு... சற்றே உடலை நெளித்து, மூங்கில் சிம்பின் இடைவெளியால் உள்புறம் நழுவியது. நழுவிய வேகத்தில், பெரிய வெண்கல உருளியில் கொதித்துக் கொண்டிருந்த குழம்பில் விழுந்தது... துடித்தது... மரித்தது...

கறிவேப்பிலையுடன் பேத்தி பின் தொடர உள்ளே நுழைந்த பாட்டி, கறிவேப்பிலையைக் குழம்பில் கிள்ளிப் போட்டாள். "இது என்ன... அடுப்பு மேடையிலும், சுவரிலும் குழம்பு தெறிச்சிருக்கு...!" என்று திகைத்தாள். அவளை யோசிக்க விடாமல், "அவங்க வர்றதுக்குள்ளே சோறு போடு பாட்டி..." என்றாள் கோமு.

"சோறுன்னு சொல்லப்படாது. சாதம்னு சொல்லு... இரு பாயசமும், அவியலும் ஆகி அப்பளம் பொரிச்சுடறேன். அஞ்சே நிமிஷத்துலே..." என்றபடி, குழம்பை இறக்கி வைத்து, எண்ணெய்ச் சட்டியை ஏற்றினாள் பாட்டி.

"ரொம்ப ரொம்பப் பசிக்குது பாட்டி... அவா வந்தவுடன் எல்லாம் சேர்ந்து சாப்பிடறேன்... இப்போ கொஞ்சம் குழம்பு சாதம்..." என்று கெஞ்சினாள் கோமு. பாட்டி, பெரிய தேக்கு இலையைப் பேத்தி முன் வைத்து, சாதம் போட்டு, நெய் ஊற்றினாள்.

"குழம்பில் என்னதான் பாட்டி...?" என்றாள் கோமு.

"கத்தரிக்காய்...!" என்று பதில் பகர்ந்தாள் பாட்டி.

"ஐய்ய... எனக்குப் பிடிக்காது... மேல் குழம்பாய் காய் இல்லாமல் விடு...!" என்றாள் கோமு.

மேல் குழம்பாய் பெரிய கரண்டியால் இரண்டு தரம் ஊற்றிவிட்டு, காய்ந்திருந்த எண்ணெயில், அப்பளத்தைப் பொரித்துப் போட்டாள்.

பெரிய பெரிய உருண்டைகளாய், உண்டு முடித்த கோமு, தேக்கு இலையைச் சுருட்டிக் கொண்டு, கொல்லைக்கட்டில் எறியப் போனாள்.

4

அவர்கள் உள்ளே வந்தார்கள். "ஏன் பாட்டி... நீங்க அர்ச்சனைக்குக் கூட வரலே.... எவ்வளவு அற்புதமாய் இருந்தது. அம்மன் சேவை. கருணையைக் கொட்டற பார்வை...!" என்றான், மாதவன்.

"என்னவோப்பா... உடம்பு தள்ளாமை.. சமைச்சு முடிக்க நாழியாயிடுத்து... நீங்கள் சாப்பிட வாங்கோ..."

"இதோ ஒரு நிமிஷம்... கொல்லைப் பக்கம் போய்ட்டு வரேன்..." என்றாள் ரமா.

"அம்மா இங்கே வாங்களேன்... இந்த கோமு வாந்தியெடுத்துண்டு, மயங்கி நிக்கறதே...." என்று கூவினாள், ரமா.

எல்லாரும் கொல்லைப்புறம் ஓடினர்.

"வழி முழுக்க, தின்னுண்டே வந்தாள். மாப்பிள்ளை வேறு ஹோட்டல் இருக்கிற இடமெல்லாம் தீனி வாங்கித் திணிச்சார்... என்ன எண்ணெயோ? டைஜஷன் இல்லாம... வாந்தியெடுக்கறது..." என்றாள் அம்மா.

மாதவனின் இரு கரங்களிலும் துவண்டு, வாய் ஓரம், வாந்தியும், நுரையுமாய் செருகிய கண்களுடன், பிரக்ஞையிழந்து துவண்டு கிடந்தாள் கோமு. கூடத்தில் கோமுவைக் கிடத்திய மாதவன், கையைப் பிடித்துப் பார்த்து, "என்ன ரமா இது... பல்ஸ் ஃபீபிள் ஆக இருக்கு. டிரைவரை காரை எடுக்கச் சொல்லு... உடனே டாக்டர் கிட்டே போகணும். நுரை தள்றதைப் பார்த்தா ஏதாவது விஷமோன்னு சந்தேகமா இருக்கு..." என்றான்.

"பாய்சனா...?" பதறினாள் அம்மா. டிரைவர் அவசரமாய்க் காரை எடுக்க துவண்ட கோமுவுடன், மாதவனும், அம்மாவும், அப்பாவும் காரில் ஏறிக் கொண்டனர்.

"சித்த முன்னாடி, சாதம் கேட்டுதே குழந்தை... ஆசையாய் அள்ளி சாப்டுதே. கொல்லையிலே ஏதாவது தீண்டி இருக்குமோ...? என் குல தெய்வமே, குழந்தைக்கு ஒண்ணுமில்லாம இருக்கணும்...

பாட்டி அடுப்புக்குப் பக்கத்துப் பூஜைப் பிறையில் காசு வைத்து நேர்ந்து கொண்டாள்.

"வரும் வழியெல்லாம் கண்டதையும் தின்னா. அதான் வாந்தி, கவலைப்படாதீங்க பாட்டி." என்ற ரமா, "ஏன் பாட்டி, குழம்பைத் திறந்து வெச்சிருக்கீங்க...?" என்று வினவினாள்.

"அட... வெங்கல உருளியோடேயா இருக்கு... கச்சிப் போயிடுமே... வேறு அடுக்கில் ஊற்றி மூடி வைக்கிறேன்..." என்று உருளியில் இருந்த குழம்பை அடுக்கில் ஊற்றிய பாட்டி, அடுக்கில் பாதியும், தொங்கியபடி பாதியுமாக உருளியுடன்

பொட்டுக் கடலை மாவு 4 கப், அரிசி மாவு 1 கப் சேர்த்து, உப்பு, எள் போட்டுப் பிசைந்து மகிழம்பூ முறுக்கு செய்தால் மிகவும் சுவையாகவும் கரகரப்பாகவும் இருக்கும். வாயில் போட்டால் தண்ணீர் போல் கரையும்.

— பாலா

பாலம் அமைத்த வெந்த பாம்பைப் பார்த்து.. பதறி வெங்கல உருளியைக் கைநழுவ விட்டாள். உருளி விழுந்து தெறித்த சப்தம்.. பாட்டியின் அலறல்... 'என்னாச்சு பாட்டி?' பதறிய ரமாவிடம், கையால் குழம்பில் இருந்து வெளியே பாதி தொங்கியதைக் காட்டி, "குழம்பில் பாம்பு விழுந்து செத்துருக்கு... அதான் குழந்தை வாந்தி எ..." அதற்குமேல், பாட்டியின் பலகீனமான இதயம் இயக்கத்தை நிறுத்திக் கொண்டதால் பேச்சு நின்றது.

"பாட்டி...!" என்றதீனமான அலறலுடன் அழத் துவங்கினாள் ரமா.

5

"கோமு... கோமு..." என்று மெத்து வாய் அவளைப் பிரக்ஞைக்கு வரவழைக்க மாதவன் முயல்கையில், நியூரோ பாரலிடிக் காய் அவள் கைகால்கள் அசைவைத் துறந்தன. மிக மிகச் சிரமப்பட்டு கண்களைத் திறக்க முயற்சித்தாள்.

"ஓ... காட்... இது சாதாரண அஜீரண வாந்தி மயக்கம் இல்லை... ஸம்திங் க்ரிடிகல்..." டாக்டர் வீடு சீக்கிரம் வராதா என்று பதறினான் மாதவன்.

கோயில் அருகில் காருக்குள் எட்டிப் பார்த்து, 'விஷத் தீண்டல் போல் இருக்குதுங்களே' என்று பதறி, பூசாரி அடுத்த ஊரில் இருக்கும் டாக்டர் வீட்டு அடையாளம் கூறி இருந்தார். மண் சாலையில் கார் ஓடி, டாக்டர் வீட்டின் முன் நின்றது. டாக்டர், காருக்கு வந்து கோமுவைப் பரிசோதித்தார்.

"விஷப்பாம்பின் விஷம் உடலில் கலந்திருக்கிறது. நிலைமை ரொம்ப மோசமா இருக்கே... உடனடியாய் 'ஆன்டிவெனின் கொடுக்கணும்... ஸலைன் கொடுக்கணும்..." எங்கிட்ட வசதியில்லையே... தஞ்சாவூர் மெடிகல்லுக்குத்தான் கொண்டு போகணும். பக்கத்து டவுன் ஹாஸ்பிடலிலும் 'ஆன்டிவெனின்' கிடையாது... ஆக்ஸிஜன் சிலிண்டர் கிடையாது..."

"தேங்க் யூ டாக்டர்... தஞ்சாவூர் போகிறோம்..." என்றான் மாதவன்.

தோளைக் குலுக்கி, உதட்டைப் பிதுக்கி, 'நோ ஹோப்' என்பது போல் தலையசைத்த டாக்டர் வீட்டினுள் சென்று, ஏகநாதர் படத்தின் முன் சிலுவைக் குறியிட்டார். சீறிப் பறந்த கார், மண் சாலையிலிருந்து பிரதான சாலையை அடையு முன்னே —

தோமுவின் உடல் ஒரு வெட்டு வெட்டி, வாய் பெரிதாய்த் திறந்தது கடைசி முறையாய் ஏதாவது சாப்பிடத் தா என்பது போல், அப்படியே அடங்கியது. "வீட்டுக்கே வண்டியை ஓட்டுங்க டிரைவர்..." என்றான் மாதவன் கம்மிய குரலில்...

6

வாசலில் வந்து நின்ற காரில் இருந்து முதலில் இறங்கிய அம்மா, கோமுவின் உடலை அப்பாவும், மாதவனும் கூடத்தில் கிடத்த, தலை மாட்டில் அமர்ந்து, மார்பில் அறைந்து கொண்டு கதறலானாள். "என் கண்ணம்மா... போயிட்டியே... என் ராஜாத்தி... அம்மா சாதம்னு காலைக் காலை சுத்துவியே... என் பெண்ணே... சின்ன ராணி..." அம்மா திடும்மென்று ஆவேசமானாள்.

வாய் ஓயாமல் செத்து ஒழி... என்று சபித்த அம்மாவின் அழுகையில் பிரமித்துத் தங்கள் கள்ளங்கபடறியா சகோதரியின் மரணத்திற்கு அழக்கூட முடியாமல் திகைத்தார்கள் ரமாவும், ரமேஷும்.

"எங்கேடி உன் பாட்டி... குழந்தைக்குக் கடைசி சோறு போட்டாளா... விஷம் சோத்தில் இருந்ததா...? போட்டவள் நெஞ்சிலும் கையிலும் இருந்ததா? பூ மாதிரி... முளைச்சு மூணு இலை விடாத இந்தக் குழந்தை 'போட்'டுனு போயிடுத்து... கூனியாட்டம் அந்தக் கிழக்கோட்டான் உசிரோட இருக்கு...என்னையும், உங்கப்பாவையும், உங்களையும் சாவுக்கு வாரிக் கொடுத்து முழுங்கிட்டுத்தான் அது கட்டையைப் போடும்..."

வேள்விக்காக ஒரு கேள்வி



"கொசுக்கள்
பெண்களையே அதிகம் கடிக்கிறதாம்!"
— கேவலம்
கொசுக்களுமா?

— அதுசரி.....
இவர்களின்
உடம்பு மட்டுமல்லாது.....
உதிரம் கூட இனிக்கிறதோ?

— கோவை கிருபாகரன்

''என்னம்மா கண்டபடி கத்தாதே...'' என்று ரமேஷ் அடக்குகையில்... ''அவங்களை அழ விடுங்க ரமேஷ்... இல்லாவிட்டால் ஷீவில் ஆல்ஸோ கொலாப்ஸ்... அசட்டு மூளை வளராத பெண் என்றாலும் பத்து மாதம் வயிற்றில்இடம்கொடுத்தவள் குறையத்தான் செய்வாள்'' என்றான் மாதவன். அவன் கண்கள் கண்ணீரில் நனைந்திருந்தன.

''அப்பா... நீங்கள் காரில் கிளம்பிப் போன கையோடு, பாட்டி உள்ளே வந்து, ஸ்வாமி சந்நிதியில் காக நேர்ந்து வைத்தாள். குழம்பை அடுக்கில் ஊற்றினாள். அதில் நல்ல பாம்பு வெந்து கிடந்தது. பாட்டி, பதறிப் போய் அப்படியே சாய்ஞ்சா... உயிர் போயிடுத்து... ஒண்ணும் புரியாமல் தவிச்சுண்டு நிக்கறேன்...'' ரமா கதறி அழ ஆரம்பித்தாள்.


''என்ன... பாட்டியும் போய்ட்டாளா... என் தெய்வமே... சோதனை மேல் சோதனையா... வீட்டுக்குப் பெரியவளாய், எங்களுக்கு ஆபத் சகாயமாய் இருந்தீங்களே... அம்மா... எப்படி உங்களுக்குச் சாவு வந்தது. அசைக்க முடியாத உறுதியான சரீரமாச்சே... பேரன் கல்யாணத்தைப் பார்க்காம... பேத்தி வயித்துக் கொள்ளுப் பேரனைக் கொஞ்சாம எமலோகம் போயிட்டீங்களா...!'' அம்மா பெருங்குரலெடுத்துக் கதறி அழலானாள்.

ரமேஷும், மாதவனுமாக சமையல்கட்டில் இருந்த பாட்டியின் சடலத்தையும், கொண்டு வந்து, தெற்கு வடக்காகக் கிடத்தினார்கள். பாட்டியின் சடலத்தின் கீழ் மார்பில் அறைந்து கொண்டு அழும் தாயைப் பார்க்கையில், சற்றுமுன் அவள் பாட்டியை ஏசியதும், எப்போது பார்த்தாலும் மாமியாரைக் கரித்துக் கொட்டுவதும் ரமாவின் கண்ணில் தவிர்க்க முடியாமல் தோன்றியன.

'செத்து ஒழி சனியனே...' என்று கோமுவிடம் அம்மா கத்துவது போல் செவிப்பறையில் ஒலி அலைகள் மோத, அம்மாவிற்கு எத்தனை முகங்கள் என்று ரமா வியந்து, அந்த வேஷங்களின் பின்னணியில், தன் தாயிடம் மனிதத் தன்மை இறந்திருப்பதை எண்ணிப் பெரிதாக அழ ஆரம்பித்தாள்.

அம்மா அழுது ஓய்ந்து, ஊர் கூடி, கோயில் இருக்கும் ஊர், என்பதால் உடனே சடலங்களைச் சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்ல ஏற்பாடாகி, ஆடம்பரப் பூப்பல்லக்குகளில் அதிர் வேட்டு மரியாதையுடன், அம்மா தன் மகளுக்கும், மா மியாருக்கும் இறுதிச் சடங்குக்கு ஏற்பாடு செ ்த போது, இறுகிப் போய் நின் ிருந்த அ. பாவின் கையை ஆதரவாய்ப் பிடைத்துக் கொண்டான், ரமேஷ்.

அவர்கள் குல தெய்வம், பிரச்னைக்கு முடிவைக் கொடுத்துவிட்ட பெருமிதத்தில், கம்பீரமாய் காட்சி கொடுத்துக் கொண்டிருந்தது.



-ஆர்.பத்மாவதி



குடும்பம் தான் முதலில்!

சென்னை உயர்நீதிமன்றத்தில் முதன் முதலாக பெண் நீதிபதியாகத் திருமதி பத்மினி ஜேசுதுரை பதவியேற்றிருக்கிறார். வழக்கறிஞர், டாக்டர் போன்றவர்களுக்கு முழு நேரமும் அவர்கள் தொழிலைக் கவனித்தாலே நேரம் போதாது. பெண்மணியாக இருந்து விட்டாலோ அவள் குடும்பமா, தொழிலா எனக் குழம்பி நிற்கிறாள். இதைப் பற்றி நீதிபதியிடம் பேசிக் கொண்டிருந்தேன் —

''என்னைப் பொறுத்தவரை பெண்களுக்குக் குடும்பம்தான் முதலில். அப்புறம் தான் அவருடைய வேலை என்று சொல்வேன். குடும்பத்தில் அவருடைய கடமைகளைச் செய்து மனநிறைவு அடையும் போது தான் நிம்மதியாக வேலையைக் கவனிக்க முடியும்...''

என்னால் கேட்காமல் இருக்க முடியவில்லை. ''நீங்க சொல்றபடி குடும்பத்துக்குத்தான் முன்னுரிமை தரணும்னா, ஒரு பெண் தன் குழந்தைகளை வளர்த்து நிமிரும்போது நாற்பது வயசாயிடும் இல்லையா? இருபத்திரண்டு வயதில் ஓர் ஆணால் தன் திறமையைக் காட்ட முடிகிறது. ஆனால் ஒரு பெண் குடும்பத்தில் கைக்குழந்தையோடு நிற்கிறாளே?''

''அதையேம்மா நீங்க வருத்தப்படக் கூடிய அம்சமா எடுத்துக்கறீங்க? என்ன திறமையுள்ள பெண்ணானாலும் அவள் குடும்பத்துல நிம்மதி இருந்தாத்தான் வேலையிலும் திறமையைக் காட்ட முடியும். என்னிடம் வந்த ஒரு வழக்கைச் சொல்றேன் —

ஒரு மிகத் திறமையான டாக்டர் அவள். அல்லும் பகலும் நோயாளிகள் வந்து குவிஞ்சுக்கிட்டே இருந்தாங்க. அவளுடைய கணவர் என்கரேஜ் பண்ணினார். சாயங்காலம் தனியா 'வாக்' போவார்! எத்தனை நாளைக்கு அந்த வெறுமையான வாழ்க்கை? கடைசியா விவாகரத்தில் முடிந்தது வழக்கு.

அப்புறம் அந்தப் பெண்ணுக்கு மனசு நிம்மதி இல்லாம போயிட்டுது. கடைசியா கோர்ட்ல, ''பத்மினி, அவர் எப்படிப்போயிட்டார் பார்த்தியா? துரும்பா இளைச்சுக் கன்னமெல்லாம் மேடிட்டுப் போச்சே'' என்றாள், கண்ணைத் துடைச்சுக்கிட்டே. பிற்காலத்திலே என்ன நிம்மதியோடு தொழிலைச் செய்திருக்க முடியும்?

நானும் என் குழந்தைங்க பெரியவங்க ஆகிற வரைக்கும் அதிகமா வழக்கறிஞர் தொழிலை வச்சுக்கலை. அப்படியும் இப்படியுமாத்தான் இருந்தேன். என் குழந்தைங்களை நான் வளர்த்துட்டு, இப்ப இந்த நிலைமைக்கு வர்றப்ப அவங்க எனக்கு 'ஹெல்ப்' பண்றாங்க. இந்த வெற்றிகரமான குறிக்கோளுக்காக, நான் மனசுல எந்தக் கஷ்டமும் இல்லாம என் ஆரம்ப நாட்களைத் தியாகம் செஞ்சேன்...''

''உங்களுக்குச் சரிம்மா. சுதந்திரமான வழக்கறிஞர் தொழில் எப்ப வேணா பார்த்துக்கலாம். ஆனா பேங்க்கிலேயோ, அரசாங்க உத்தியோகத்துலேயோ இருக்கறவங்களுக்கு பரீட்சைகள் நிறைய இருக்கே...

''பரீட்சைகளையும் தள்ளிப் போடலாம். ஆபீஸ் பரீட்சையில பெயிலானா திரும்பிப் படிச்சுப் பாஸ் பண்ணிக்கலாம்மா. அப்ப என் பிள்ளை கைக்குழந்தைன்னு பெருமையா சொல்லிக்கலாம். ஆனா வாழ்க்கையில பெயிலாயிட்டா அவளுக்கு ஏது நிம்மதி? அது தான் முதலிலேயே சொன்னேன், சந்தோஷமா ஒரு பெண் தன் வேலையப் பாக்கணுமின்னா, வீட்டிலேயும் நிம்மதி இருக்கணும்னு.

இன்னொண்ணும் இங்க சொல்லிடறேன். ஆரம்ப நாட்கள்லேயே கூட நம் திறமையைக் காட்ட முடியும். நல்லா ஒரு வேலையை முழு மனத்தோட கவனிப்போட செய்தா அதற்கு நிறைய நேரம் தேவையில்லை. ஆண்களுக்குப் பொழுது போக்குகள் அதிகம். அவர்கள் அதற்குச் செலவு செய்யும் நேரத்தில் நாம் முழு மனத்தோட ஒன்றிப் படித்தா நம்முடைய வெற்றி நிச்சயம். எனவே நீங்க சொல்ற பரீட்சையெல்லாம் கூட, நல்லபடியா திட்டம் போட்டு வேலைகளைச் செய்தா பாஸ் பண்ணிடலாம்...''

என்கிறார் சிரித்துக் கொண்டே பத்மினி ஜேசுதுரை.

வாழ்க்கையில் தெளிவான பாதையை வகுத்துக் கொண்டுவிட்டால் எத்தனை பெரிய சாதனைகளையும் சாதிக்கலாம் என்பதற்கு இவர் ஓர் எடுத்துக்காட்டு.



கவலையின்றி விளையாடு பாப்பா.
வளரும் குழந்தைகளுக்கு கீழே விழுவதோ சின்னச்சின்ன வெட்டுக்களோ, காயமோ மிக மிக சகஜம்.
இலாஸ்டோப்ளாஸ்ட். இதன் உபயோகத்திற்காகவே. குழந்தைகள் தொற்று நோய் பரவாமல் பாதுகாக்கவும் செய்யும்.
இலாஸ்டோப்ளாஸ்ட் காயத்தை பாதுகாக்கிறது. அதிலுள்ள விசேஷ மருந்து காயத்தை குணப்படுத்துகிறது.
இலாஸ்டோப்ளாஸ்ட். உங்கள் குழந்தை சுதந்திரமாக ஓடி விளையாடட்டும். கவலையின்றி விளையாடட்டும்.
ஜே.எல். மாரிசன் சன் & ஜோன்ஸ் (இ) லிட்.
கிரிஸ்டல், 79,
டா. அன்னி பெசன்ட் ரோடு, வொர்லி,
பம்பாய்-400 018.
Elastoplast
மருந்து கலந்த பிரதம சிகிச்சை பிளாஸ்திரி
MEDICATED FIRST AID DRESSING
Elastoplast
MEDICATED FIRST AID DRESSING
Elastoplast
Sista's-JLM-225/86 TAM A

அயல் நாட்டிலிருந்து 'உயிர் காக்கும் மருந்து'களை வாங்கிச் சேமித்துத் தேவையானவர்களுக்குத் தரும் ஒரு சேவையை ஆரம்பித்திருக்கிறார் வைஜயந்தி மாலா. 'டாக்டர் பாலி பார்மா பவுண்டேஷன்' என இந்தியாவிலேயே முதன் முறையாகத் தொடங்கப்பட்டிருக்கும் இந்தச் சேவையைப் பற்றிக் கேட்ட போது —

''என் கணவருக்குத் தலையில சிறிய அடி. வீட்ல எங்கேயோதான் பட்டுது. அது இவ்வளவு பெரிய இழப்பா மாறும்னு யாருமே நினைக்கலை. மூளையில எங்கேயோ பாதிக்கப்பட்டு மருத்துவமனையில சேர்த்தப்ப உடனடியா மருந்துகள் தேவை. அதுவும் சிங்கப்பூர்லேந்து வரவழைக்கணும்னு சொன்னாங்க. நான் வரவழைக்கறதுக்குள்ள, நான் இழந்தது விலை மதிக்க முடியாத என் கணவரை...



*. 'டாக்டர் பாலி பார்மா பவுண்டேஷன்' தொடக்க விழாவில்...

எனக்கே இந்த நிலைமை என்றால்...

அப்போதான் நான் யோசிச்சேன், நமக்கே இப்படின்னா, ஏழைகள் வாழ்க்கை எந்த மாதிரியெல்லாம் பாதிக்கப்படும்னு.... அந்தச் சமயத்திலேதான் அவர் பேர்லேயே இப்படி முக்கியமான அயல்நாட்டு மருந்துகளை வாங்கி, சேமித்து, தேவையானவர்களுக்குத் தரும் ஒரு சேவையை ஆரம்பிக்கணும்னு தீர்மானிச்சேன்.

இதுக்காக நிறைய 'ஸ்டடி' செய்தேன். அமெரிக்காவுக்குப் போயிருந்தப்ப என்னுடைய நண்பர்கள்கிட்ட இதைச் சொன்னேன். ரொம்ப ஆர்வமா இதுக்கு உற்சாகப்படுத்தினாங்க. தேவையான உதவிகளையும் செய்யறதாச் சொன்னாங்க.

அங்கேயே பல மருத்துவ ஆராய்ச்சி நிலையங்களுக்குப் போனேன். என்ன மாதிரி மருந்துகள் பொதுவா தேவைப்படும், அதை எத்தனை மாதங்களுக்கு வைத்திருக்கலாம் இப்படிப் பல விஷயங்களைத் தெரிஞ்சுக்கிட்டேன்...''

இவர் இந்தச் சேவை நிறுவனத்தை ஆரம்பிப்பதற்குப் பல மருத்துவர்களின் யோசனைகளையும் கேட்டிருக்கிறார். டாக்டர் ராமமூர்த்தி, டாக்டர் சுலோசனா, டாக்டர் ரங்கபாஷ்யம் போன்ற் பல பிரபல மருத்துவர்களை வைத்து ஓர் ஆலோசனைக்குழுவையும் அமைத்திருக்கிறார். இவருக்கு வருகின்ற வேண்டுகோள் முதலியவற்றை இந்தக் குழுவிற்கு அனுப்பி, அவர்களின் பரிந்துரைப்படி செய்கிறாராம்.

''சென்னையில், அடிக்கு அடி டாக்டர் இருக்கும் இடத்திலேயே இப்படிப் பிரச்னைகள் என்கிறீர்கள். கிராமங்களில், எந்த வசதியுமே இல்லாத நாட்டுப்புறங்களில் ஓர் அவசரத்திற்கு எந்த வசதியுமே இல்லையே... பிரசவச் சிக்கல்களில் இறந்தவர்கள் எத்தனை பேர்? அங்கே உங்கள் சேவையை விரிவு படுத்தக் கூடாதா?'' என்று கேட்டேன்.

''சென்னையோடு இது நின்று விடவில்லை. பல கிளைகளை ஆங்காங்கே ஏற்படுத்தி செய்யத் திட்டமிட்டு இருக்கிறோம். அதற்கு முதற்படியாக 'மருத்துவ முகாம்'களை நடத்தி வருகிறோம். கூடிய விரைவில் பல சேவைகளைச் செய்வோம்.''

என்கிறார்.

முப்பது ஆண்டு உறவு



கடந்த முப்பது ஆண்டுகளாக எல்.ஐ.ஸி. உங்கள் திட்டமிட்ட மகிழ்வான குடும்பத்தின் ஒரு அங்கமாக இருந்து வந்திருக்கிறது.
எல்.ஐ.ஸி. உங்கள் மகிழ்விலும் துயரத்திலும், ஏற்றத்திலும் தாழ்விலும், பங்குபெற்று வந்துள்ளது.

நீங்கள் முன் யோசனை உடையவர். உரிய வயதில் ஆயுள் காப்பு பெற்றதோடு பெருகி வரும் குடும்பச் செலவுகளை ஈடு செய்ய அவ்வப்போது உங்கள் ஆயுள் காப்புத் தொகையையும் பெருக்கி வந்துள்ளீர்கள்.

உரிய நேரங்களில் திட்டமிட்டு நீங்கள் பெற்றுக் கொண்ட ஆயுள் காப்பு பாலிஸிகள் உங்கள் மக்களின் கல்வி, வாழ்வு தொடக்க செலவு, முதலியவற்றை ஈடுகட்ட உதவியதோடு, அவ்வப்போது எதிர்பாராத பண நெருக்கடிகளையும் சமாளிக்க உதவியுள்ளது.

எல்.ஐ.ஸி. நீங்கள் ஒரு வீடு கட்டிக் கொள்வதிலும் கை கொடுத்துள்ளது. பணி ஓய்வு பெற்றபின், இங்கிருந்துதான் நீங்களும், உங்கள் வாழ்க்கை துணைவியும் உங்கள் பேரன்களும், பேத்திகளும், துள்ளியாடுவதையும் பொங்கிச்சிரிப்பதையும், வானவில் கனவுகளைத் தூத்துவதையும் காணப்போகிறீர்கள்.

குடும்ப மகிழ்வை காப்பதோடன்றி நாட்டு நலனை பேணுவதிலும் எல்.ஐ.ஸி. யின் பங்கு மகத்தானது.

மாநில அரசுகள் மற்றும் அரசு வாரியங்களுக்கு பெருந் தொகைகளைக்கடனாக அளிப்பதன் மூலம் மின்சார உற்பத்தி, வீட்டு வசதி, குடிநீர்த்திட்டம், போக்குவரத்து, என பல சமூக நலத்துறைகளின் வளர்ச்சிக்கு எல்.ஐ.ஸி. உதவுகிறது.

உங்களுக்கு உங்கள் குடும்பத்தின் மீதும், நீங்கள் வாழும் சமூகத்தின் மீதும் உள்ள அன்பை குறிக்கும் பொருள்பொதிந்த சின்னம்— ஆயுள் காப்பு.

இந்த முப்பதாவது ஆண்டில் எல்.ஐ.ஸி. தன்னை மீண்டும் உங்கள் சேவைக்கே அர்ப்பணித்துக் கொள்கிறது.

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

30 ஆண்டுகள் மக்கள் சேவையில் 1956-1986

Efficient/Bom/LIC-Tam



பாராட்டு—3

அக்னி வளர்ப்போம்!

தேசிய ஒருமைப்பாடு, தனிமனித விழிப்புணர்ச்சி இவற்றை குறிக்கோளாகக் கொண்டு 'அக்னி' என்ற அமைப்பை ஆரம்பித்திருக்கிறார் சிவசங்கரி. எழுத்தில் மட்டுமில்லாமல், நேரடியாகச் செயலிலும் இறங்கியிருக்கும் இவரைச் சந்தித்த போது —

''விழுப்புரத்தில எழுபத்தி மூணுலேர்ந்து என் கணவரோட நான் இருந்தப்ப எனக்கு நிறைய ஓய்வுநேரம் கிடைச்சுது. அப்பதான் நான் நிறைய சிந்திச்சுக்கிறேன். அதுக்குக் காரணம் என்னுடைய தோழமையான கணவர்தான்.

அவர் யாரையுமே 'சீ'ன்னு சொன்னது கிடையாது. 'எல்லோரையும் அவரவர் கோணத்துல நின்னு' பாக்கணும்; அப்ப யாரையும் குத்தச் சொல்லத் தோணாது'ன்னு சொல்வாரு.

இதெல்லாம்தான் என்னை ரொம்ப யோசிக்கவச்சுது. வீட்டுக்குள்ளேயேஇத்தனை பிரச்னைகள். அதைத் தாண்டி சமூகம்னு ஒருத்தருக்கொருத்தர் வேஷம் போடறது. ஏமாத்தறது. சமூகப் பிரக்ஞையே இல்லாம இருக்கறது. இதெல்லாம் என்னை ரொம்ப வருத்தப்பட வச்சுது.

மொதல்ல இந்த மாதிரி மக்கள் பொறுப்பில்லாம இருக்கறதுக்கு அரசாங்கம்தான் காரணம்னு நினைச்சேன். அப்புறம்தான் அவங்கவங்க தப்பை அவங்கவங்க உணர்ந்தா மத்தவங்களைக் குற்றமே சொல்ல மாட்டாங்கன்னு உணர்ந்தேன். ஒவ்வொருத்தருக்கும் இங்கு தேவை 'சுய அலசல்' தான்.

எனக்கு எது பிடிக்கும், எது பிடிக்காது. எப்படி இருந்தா சந்தோஷமா இருக்கலாம் இதெல்லாமே இங்க தெரிய மாட்டேங்குது.

ஒருத்தர் மேல ஒருத்தர் குத்தம் சாட்டிக்கிட்டு வாழ்க்கையை ஒரே பிரச்னையாக்கிக்கிட்டு சந்தோஷமே இல்லாம வாழ்க்கைய நடத்தறாங்க. இதுக்கெல்லாம் என்ன பண்றதுன்னு யோசிச்சேன்...''

மூச்சு விடாமல் பேசிக் கொண்டே போகிறார் சிவசங்கரி.

இப்படி இவர் மனித உறவுகளைப் பற்றியே சிந்தித்ததால்தான், அதை அடிப்படையாக வைத்தே நிறைய கதைகள் எழுத ஆரம்பித்தாராம். குடும்ப உறவுகள், மனிதனுக்கு மனிதன் இருக்க வேண்டிய தொடர்புகள் பற்றிய நிறைய நாவல்கள் எழுத ஆரம்பித்திருக்கிறார். அந்த ரீதியாகவே சிந்திக்க ஆரம்பித்திருக்கிறார்.

''அந்த அடிப்படையில எழுத்தோட நின்னு போதாது. ஏதாவது செயல்முறையில செய்யணும்னு ஆரம்பிச்சதுதான் அக்னி.

என்னுடைய சிந்தனைப் போக்கை மாலன் புரிஞ்சுக்கிட்டு எனக்கு உதவியா இருக்கார். அக்னியின் செயலாளரும் அவர்தான்!''

''ஆறு நீங்க பாபுலாரிட்டிக்காக இந்த அக்னிய ஆரம்பிச்சிருக்கிங்க, அப்புறம் காங்கிரஸ்குள்ள நுழைய இது வாயில்னு சொல்றாங்களே...''

சிவசங்கரி சிரிக்கிறார். ''என்னைப் பற்றி நிறைய வதந்திகள் உண்டு. அதுல இதுவும் ஒண்ணு. அவ்வளவுதான். என்னைப் பற்றிய எந்த வதந்திக்கும் நான் மறுப்பு தெரிவித்ததில்லை. ஏன்னு என் கணவர் சொல்வார், 'உன்னை ஆத்திரப்படுத்தணும்னு அவங்க அப்படிப் பேசுவாங்க. நீ ஆத்திரப்பட்டா அது அவங்களுக்கு வெற்றி நீ நினைச்சதை மௌனமா செயல்ல சாதிச்சா அது உன் வெற்றி'ம்பார்.

அக்னிய ஆரம்பிச்சதே நாடு ரொம்பக் குறுகிய வட்டத்துல போயிண்டு இருக்கு. இது என் தேசம், என் நாடுங்கற ஒற்றுமை உணர்வை வளர்க்கணும். தேசிய ஒருமைப்பாடு, கலாசாரம் பற்றிப் பெருமைப்படணும், நம்மை நாமே உயர்த்திக்கணுங்கற நோக்கத்திலதான். இது உடனே நடந்துடற காரியமில்லை. ரொம்ப நாளாகும். கொஞ்சம் கொஞ்சமா அதைச் சாதிப்போம்ங்கற நம்பிக்கை எனக்கு இருக்கு.''

தங்களைத் தாங்களே ஆராய்ந்து உயர்த்திக் கொள்ளும் 'சுய அலசல்' பற்றி நிறைய பேசுகிறார். பொதுக் கூட்டங்களிலும் பேசுகிறாராம். தேச ஒருமைப்பாடு பற்றிப் பள்ளிகளில் சென்று பேசியிருக்கிறார். தமிழ்நாட்டில் பல இடங்களில் அக்னிக்குக் கிளைகள் தோன்றியுள்ளன. மெதுவாக ஆனால் திடமாகத் தாங்கள் முன்னேறப் போவதாகக்கூறுகிறார்.

தேசியக் கண்ணோட்டத்தோடு ஒரு பெரும் குறிக்கோளுக்காக ஒரு போராட்டத்தை ஆரம்பித்திருக்கும் சிவசங்கரி வெற்றி பெற வாழ்த்துவோம்.

தொகுப்பு: **மஞ்சுளா ரமேஷ்**





எழுதும்போது கைதடுமாறி, எழுத முடியாமல், ஒரு பொருளைத் தூக்க முடியாமல், கையைச் சேர்ந்துப் பிடிக்க முடியாமல்... திடீரென இப்படிப் பலருக்கு நேர்ந்து விடுகிறது...

இது ஏதோ நரம்புக் கோளாறு என நரம்பியல் நிபுணர்களிடம் போகிறார்கள். மருந்துகள் சாப்பிடுகிறார்கள், களிம்பு தேய்க்கிறார்கள். சுத்தமாகக் கை எதற்கும் பயனில்லாமல் போய்விடும் நிலைமை ஏற்பட்டு விடுகிறது.

இந்தக் 'கைநடுக்க'த்திற்கும், மருந்திற்கும் சம்பந்தமில்லை என்கிறார்கள் மனவியல் நிபுணர்கள். "ஏதோ ஒரு மனக்கோளாறினால் இந்த மாதிரி ஏற்படுகிறது. சிலருக்குத் தன் மாமியாரைக் கண்டால் நடுக்கம். பரீட்சையில் சூபர்வைசர் பக்கத்தில் வந்து நின்றால் உதறல். பிடிக்காத மேலாளர் வேலையைச் சொன்னால் பதறல். இப்படி ஆரம்பித்து படிப்படியாகக் கைவலி, நரம்பு இழுத்தல், எழுத முடியாமல் போய்விடுதல் என்றாகி விடுகிறது.

இதை முழுமையாக மனோதத்துவ முறையில் குணப்படுத்தி விடலாம். மருந்துகள் தேவையில்லை. ஆறு மாதம் தொடர்ந்து பயிற்சியும், விடாமுயற்சியும் இருந்தால் முழுமையாகக் குணப்படுத்தி விடலாம்."

என்கிறார்கள் இந்த எழுத்து நடுக்கத்தைப் பற்றியே ஆராய்ச்சி செய்து வரும் கே. வி. காழியப்பனும், ஆராய்ச்சி மாணவர்களான கருணாகரனும், லதாவும். சென்னைப் பல்கலைக்கழகத்தில் மனோவியல் பிரிவில் இதற்கான சிகிச்சையைச் செய்கிறார்கள். ஆரம்ப நிலையாக இருக்குமானால் இதை முழுமையாகக் குணப்படுத்தி விடலாமாம்.


'வைர இளவரசி' போட்டி சென்னையில் நடந்தது. இந்தியா முழுவதிற்குமாக நடத்தப்பட இருக்கும் 'வைர அரசி' போட்டிக்குச் சென்னையிலிருந்து 'வைர இளவரசி'யாக குமாரி ஸ்விட்டி அலி தேர்ந்தெடுக்கப்பட்டார். வைரங்களை ஏற்றுமதி செய்யும் கவுன்சில் இதை நடத்துகிறது. உம்மிடி ஸ்ரீ ஹரி பரிசுகளை வழங்கினார்.

செயற்கைக் கால்களைத் தயாரிக்கும் நிறுவனமான 'முக்தி' ஆகஸ்டில் சுதந்திர நாளைக் கொண்டாடியது. அதன் சேர்மன் மீனு தாதா ஒரு நல்ல தகவலைக் கூறினார் — "விபத்தில் காலிழந்தவர்கள் அரசாங்க மருத்துவமனைகளில் செயற்கைக் கால்களைப் பொருத்திக் கொள்ள நீண்ட நாட்கள் காத்திருக்க வேண்டியதாக இருக்கிறது. தனியார் நிறுவனங்களில் நிறையப் பணம் செலவாகிறது. நாங்கள் ஒரு சேவையாக ஐம்பது ரூபாய்க்குக் கொடுக்கிறோம்..."

4, லாயிட்ஸ் லேன், சென்னை — 14 இல் இவர்களுடைய நிறுவனம் இயங்குகிறது.

பிரபல குச்சுப்புடி நடன ஆசிரியர் வேம்பட்டி சின்ன சத்யத்தின் மாணவி குமாரி கல்பலதிகாவின் நடனம் அண்மையில் நடந்தது. நடனத்திற்கேற்ற உடல் வாகும், சிறந்த நாட்டியத் திறமையும் கொண்ட இவரது நடனம் சிறப்பாக நடைபெற்றது.

செய்திச் சுருக்கம்





ஸ்ரீ தேவியின் பேரருளைப் பெற நவராத்திரியில்

நாள்	ஒன்பது பொருள்களைக் கொண்டு	ஒன்பது வித மா கோலங்கள் போட வேண்டும்.	சுமங்கலிகளுக்கும் கன்னி பெண்களுக்கும் நீராடக் கொடுக்க வேண்டும்.		சக்தியுள்ளவர்கள் பெண்களை வீட்டுக்கு அழைத்து நவரத்தினம் கொடுக்கலாம்.	வசதியற்றவர்கள் இவைகளைக் கொடுக்கலாம்.
1	அரிசிமா	பொட்டு	பச்சிலை	எண்ணெய்	பொன்	சோழி
2	கோதுமைமா	கட்டம்	பூலாங்கிழங்கு	மஞ்சள்	வெள்ளி	குன்றிமணி
3	முத்து	மலர்	சண்பக மொட்டு	குங்குமம்	முத்து	தட்டைப் பவளம்
4	அட்சதை	படிக்கட்டு	கஸ்தூரி மஞ்சள்	பன்னீர்	பவளம்	கிளிஞ்சல்
5	கடலை	பறவையினம்	திரவியப்பட்டை	சந்தனம்	வைடூரியம்	செப்பு
6	பருப்பு	தேவிநாமம்	காசுக்கட்டி	வாசனைத் தைலம்	கோமேதகம்	பதுமை
7	மலர்	திட்டாணி	லாசுஷராஸம்	நலங்கு மஞ்சள்	புஷ்பராகம்	அம்மானை
8	காசு	பத்மம்	கஸ்தூரிகா பத்ரம்	மருதோன்றி	மரகதம்	பந்து
9	கற்பூரம்	ஆயுதம்	கோரோஜனம்	புஷ்பநீர்	வைரம்	கழற்சிக்காய்

இவைகளை செய்ய முடியாதவர்கள் கீழ்க்கண்ட எமது இனிப்பு கார

இனிப்பு: பாதாம் அல்வா, கோதுமை அல்வா, பால் அல்வா, முந்திரி பப்டி, பாதுஷா, குலாப்ஜாமூன், ரஸமலாய், கர்ஜிக்காய் பேடா, பருப்புப்

காரம்: தட்டை, தேன்குழல், கைமுறுக்கு, மிக்ஸர், சமோசா, சீடை

திருமண வைபவங்களுக்கு: சீர் அதிரசம், சீர் முறுக்கு, பருப்புத்

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2வது மெயின் ரோடு, காந்தி நகர், அடையாறு, சென்னை-600 020

செய்ய வேண்டிய சில அனுஷ்டானங்கள்

வீடு தேடி வரும் குமரிகளுக்கும், சுமங்கலிகளுக்கும், பக்தியுடன் தன் கையால் பொட்டு இடலாம்.	தினசரி காலை, மாலை மேற்கண்ட ராகங்களில் ஸ்ரீ தேவி சம்பந்தமாக பாடலாம்.	மேற்கண்ட வாத்தியம் பின்னணிகளுடன் பாடலாம்.	மேற்கண்ட மலர்களைக் கொண்டு மாலை அணிவிக்கலாம்.	மேற்கண்ட தழைகளைக் கட்டு மாலைகளாகக் கட்டி சாத்தலாம்.	பெண் குழந்தைகளுக்கு ஒவ்வொரு நாளும் நிவேதமாகக் கொடுக்கலாம்.	பாலா என்னும் பருவத் திருமேனியின் [illegible]	மேற்கண்ட பிரசாதங்களை விநியோகிக்கலாம்.
புனுகு	தோடி	மிருதங்கம்	மல்லிகை	வில்வம்	வாழை	சுண்டல்	வெண்பொங்கல்
ஜவ்வாது	கல்யாணி	புல்லாங்குழல்	முல்லை	துளசி	மா	வறுவல்	புளியோதரை
கஸ்தூரி	காம்போதி	வீணை	சம்பங்கி	மரு	பலா	துவையல்	சர்க்கரைப் பொங்கல்
அரகஜா	பைரவி	கோட்டு வாத்தியம்	ஜாதி	கதிர்ப்பச்சை	கொய்யா	பொரியல்	கதம்பம்
சந்தனம்	பந்துவராளி	ஜல்லரி	பாரிஜாதம்	விபூதிப்பச்சை	மாதுளை	அப்பளம்	ததியோதனம்
குங்குமம்	நீலாம்பரி	பேரி	செம்பருத்தி	சந்தனஇலை	நாரத்தை	வடகம்	தேங்காய்சாதம்
சாந்து	பிலஹரி	படகம்	தாழம்பூ	தும்பைஇலை	பேரிச்சை	சூரணம்	எலுமிச்சம் பழம் சாதம்
ஸ்ரீசூர்ணம்	புன்னாக வராளி	கும்மி	ரோஜா	பன்னீர் இலை	திராட்சை	முறுக்கு	பாயசான்னம்
மை	வஸந்தா	கோலாட்டம்	தாமரை	மருக் கொழுந்து	நாவல்	திரட்டுப்பால்	அக்காரஅடிசில்

வகைகளை வாங்கி விநியோகிக்கவும்.

கதலி, பாதம் கத்தரி, ஜாங்கிரி, லட்டு, மைசூர்பாகு, சாக்லட் கேக், சோன் போளி, தேங்காய் போளி, சம்சம் சம்பாக்களி, கோவா சேன்டிவிச் முதலியன.

முதலியன.

தேங்காய், கட்டிப்பருப்பு, திரட்டுப் பால், முள்ளு தேன்குழல் முதலியன.


போன் : 412557

பள்ளிக் குழந்தைகளை வெறும் மனப்பாடம் செய்யும் இயந்திரமாக்கி விட்டோம் என்கிறார் மனவியல் நிபுணர் காழியப்பன்.

குழந்தைகளை

பாராட்ட வேண்டியவர்களைப் பாராட்டாததும், பாராட்ட வேண்டாதவர்களைப் பாராட்டுவதும், நமது நாடு போதிய முன்னேற்றம் அடையாததற்குக் காரணங்கள். நடைமுறை வாழ்க்கையில், அதுவும் குறிப்பாகக் குழந்தைகளை வளர்ப்பதில்





ஒவ்வொரு நாளும் நாம் இத்தகைய தவறுகளைச் செய்கிறோம்.

ஆக்கத் திறனுக்கு அளிக்க வேண்டிய சிறப்பை நாம் நினைவு ஆற்றலுக்கும், நுண்ணறிவுக்கும் அளிக்கிறோம். ஆக்கத் திறன் நிறைந்த ஒரு குழந்தையை நாம் பாராட்டுவதில்லை. ஆனால் நினைவு ஆற்றல் மிகுந்த அவனது இளைய சகோதரனை, "ஆ! எப்படி, நர்சரிப் பாட்டெல்லாம் அப்படியே மனப்பாடமாக ஒப்புவிக்கிறான்" என்று மூக்கின் மேல் விரல் வைத்து ஆச்சரியப்படுகிறோம்; பாராட்டுகிறோம். வீட்டிற்கு எப்பொழுதெல்லாம் விருந்தினர் வருகிறார்களோ, அப்பொழுதெல்லாம், நினைவு ஆற்றல் மிகுந்த இளைய சகோதரனே பாடுகிறான், 'பாராட்டுப் பெறுகிறான்' பொருள் தெரியாமல்-மனனம் செய்து ஒப்புவிக்கும் சிறுவனைப் பாராட்டுங்கள். ஆனால் அவனை விடச் சிறந்த ஆக்கத் திறன் நிறைந்த அவனது மூத்த சகோதரனை ஏன் மறந்தீர்கள்?

இது போன்று பாராட்ட மறப்பது, பல்கிப் பெருகி நற்கனி தரும் பழமரத்தை அதனது முளையிலேயே நலியச் செய்வதாகும். வாய்த்துடுக்காக இருக்கும் ஒரு குழந்தைக்கு எப்பொழுதுமே பாராட்டு. தொட்டால் சுருங்கியாக, எண்ணிச் சில வார்த்தைகள் பேசும் குழந்தை வாய்த் துடுக்கான குழந்தையை விட மிகவும் ஆக்கத் திறன் படைத்ததாக இருக்கலாம். ஆனால் இக்குழந்தை பாராட்டு எனும் மழைத்துளிக்காக ஏங்கும் இளஞ்செடியாகி வாடி நிற்க வேண்டியதுதான். பாராட்டாவிட்டாலும் பரவாயில்லை, ஒரு சில பெற்றோர்கள் இருக்கிறார்களே, அவர்களுக்கு ஒப்பிட்டுப் பேசித் திட்டாவிட்டால் தூக்கமே வராது.

"உனது தங்கை எப்படிப் பளிச்சென்று பேசுகிறாள், பார், நீயும் இருக்கிறாயே, மண்டு! என்று ஒப்பிடுவது சிலருக்குக் கைவந்த கலை. 'அன்புப் பெற்றோர்களே, கனவிலும் இது போன்று, ஒப்பிட்டுத் திட்டாதீர்கள்! உங்கள் -சுடுசொற்கள் குழந்தைகளது ஆளுமையை உருக்குலைந்து விடும்.

நமது பாடத் திட்டமும்; நினைவாற்றலுக்கும், நுண்ணறிவுக்கும்தான் முதலிடம் கொடுக்கின்றது. மூன்று அல்லது நாலாம் வகுப்புப் படிக்கும் மாணவர் எதற்காக ஆங்கிலப், பாடல்களையும், ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன் போன்றவற்றையும் மனப்பாடம் செய்ய வேண்டும்? பொருள் தெரியாது நெட்டுருச் செய்து, பின்னர் அதை மறப்பதில் என்ன பயன்? நினைவுத் திறன் அதிகம் கொண்ட 20% குழந்தைகள் நெட்டுருச் செய்து, அழகாக ஒப்புவித்துப் பாராட்டுப் பெறுகின்றனர். மற்ற 80% குழந்தைகள் மீது நெட்டுருச் செய்யும் துன்பச் சுமையை ஏற்றி அவர்களது ஆளுமையைக் குலைக்கிறோம். வாய்ப்பாட்டை மனனம் செய்வது துன்பச்சுமைக்கு மேலும் சுமை சேர்ப்பதாகும்.

"என்று தணியும் இந்த சுதந்திர தாகம்" என்று மகாகவி பாடினான். என்று தொலையும் இந்தத் துன்பச் சுமை என்று கோடானு கோடி இளம் உள்ளங்கள் கூக்குரலிடுகின்றன. புதிய கல்விக் கொள்கையிலாவது இதற்கு விடிவு வருமா?

இன்றைய தேர்வு முறையும் மாணவரது நினைவாற்றலையே சோதிப்பதாக அமைந்துள்

ஒப்பிட்டுப் பேசாதீர்கள்!

ளது. நினைவாற்றல் உள்ள மாணவன் 'ஈ அடித்தான் காப்பி' என்ற வகையில் 100க்கு 100 மதிப்பெண்கள் பெற்றுவிடுகிறான். தேர்வு முடிந்தவுடன் இத்தகைய படிப்பு மறந்து விடுகிறது. தேர்வில் இரண்டாவது வரி எழுதும்போது முதல் வரி மறந்து விடுகிறது; மூன்றாவது வரி எழுதும்போது இரண்டாவது வரி மறந்துவிடுகிறது. இத்தகைய படிப்பால் என்ன பயன்?

நினைவாற்றல் மூலம் முதல் மதிப்பெண்கள் பெறும் மாணவருக்கு எல்லாப் பாராட்டுக்களும் கிடைக்கின்றன. ஆக்கத் திறன் படைத்த மாணவரோ ஆழ் கடலில் கிடக்கும் முத்தென வீணே கிடக்கின்றனர். நினைவைச் சோதிக்கும் வினாடி, வினாவுக்கு இத்தகைய ஆரவாரமும் பாராட்டும் தேவை தானா?

ஐ.ஏ.எஸ்., மருத்துவம், பொறியியல், இன்ன பிற துறைகளில் சிறந்த முன்னேற்றம் ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய் விட்டது. இத்தகையத் துறைகளில் தலைமை ஏற்பவர் மிகுந்த ஆக்கத் திறன் கொண்டவராக இருந்தால், அவர் தத்தம் துறையில் நாட்டுக்குத் தரும் முன்னேற்றம் மிகச் சிறந்ததாக இருக்கும். இத்தகையோர் தரும் வளர்ச்சி பல பரிமாணங்களில் அமைகிறது. இதனை முழுமையாக மற்றவர் புரிந்து கொள்வது கூடக் கடினம்.

விஸ்வேசுவரய்யா போன்ற ஆக்கத் திறன் படைத்தோர் கர்நாடக மாநிலத்திற்கு ஆற்றிய அறிவியல் அரும் பணிகளை நாம் அறிவோம்.

அறிவியல் துறையில் மட்டுமின்றி, அரசியல் துறையிலும் ஆக்கத் திறன் படைத்தோர் சேவை நாட்டுக்கு மிக மிகத் தேவை. பல ஆண்டுகளுக்கு முன் மிகுந்த ஆக்கத் திறன் படைத்த, எதிர்காலவியலில் மிகுந்த புலமை பெற்ற ஒருவர் இந்த நாட்டுக்குத் தலைமை ஏற்று இருந்தால், இன்று இந்த நாடு, ஒரு வளமைமிகுந்த நாடாகமலர்ந்திருந்திருக்கும். நாட்டின் முன்னேற்றத்திற்கு முழுமுதற் காரணமான ஓரிரு செயல்கள் இந்தியாவில் நடைபெறவில்லை. இதனை ஆக்கத் திறன் படைத்த ஓரிரு சமுதாயக் கவிஞர்கள் குறிப்பாகச் சுட்டிக் காட்டினர். கற்பனை உலகில் உலவும் கவிஞர்களில்கூட, ஆக்கத் திறன் படைத்த கவிஞர்கள் தமிழகத்தில் தோன்றியிருக்கிறார்கள்.

'காதலுக்கு வழி வைத்துக் கருப் பாதை சாத்தக் கதவொன்று கண்டறிவோம்!' என்று பாடிய கவிஞன் எத்தகைய தீர்க்கத் தரிசனம் படைத்தவன்! மக்கள் தொகை 30 கோடியோடு நின்றிருந்தால், கங்கை, காவிரி இணைக்கப்பட்டு இருந்தால் — நினைக்கவே இனிக்கிறது;

எந்த நோக்கத்திற்காக ஒரு பணி தொடங்கப்பட்டதோ, அந்த நோக்கத்தை நாளடைவில் மறந்துவிடுவது மனித இயல்பு. புனித கங்கையில் நீராடுவது புண்ணியம் என்ற நிலை பல ஆண்டுகளுக்கு முன் இருந்தது. ஆனால் இன்று, கங்கையைப் புனிதப்படுத்தி அதனால் புண்ணியத்தைத் தேடிக் கொள்ள வேண்டிய நிலையில் இன்று நாம் இருக்கின்றோம்.

கல்விக் கூடங்களில் சில நோக்கங்களுக்காகத் தொடங்கப்பட்ட சில பணிகளை இங்கு எண்ணிப் பார்ப்போம். பேச்சு, கட்டுரை, நாடகம், கவிதை போன்ற பலப் பல போட்டிகள்; விளையாட்டுப் போட்டிகள், முத்தமிழ் விழா, ஆண்டு விழா, குடியரசு நாள் விழா போன்ற எத்தனையோ நிகழ்ச்சிகள் கல்விக் கூடங்களில் நடத்தப்படுகின்றன. இவற்றின் நோக்கம் மாணவரிடை இருக்கும் திறமைகளைக் கண்டு பிடித்து அவற்றை வளர்ப்பது, இத்தகைய வளர்ச்சி உறுதியாக ஆளுமை வளர்ச்சிக்கு வழி கோலும்.

ஆனால் கல்விக் கூடங்களில் நடப்பது என்ன?

ஆண்டு விழாவா? அது ஒரு சடங்காக, உரிய பாராட்டும், திறமை வளர்ச்சியும் கிட்டுவதில்லை. அவசர, அவசரமாக சினிமா நடிகர் ஒருவர் வரவழைக்கப்பட்டு ஆரவாரமாக ஆண்டு விழா நடைபெற்று முடிகிறது. இதே போன்றுதான் தலைமைப் பண்புகளை வளர்க்கும் பாசறையாக அமைய வேண்டிய மாணவர் சங்க அமைப்புகள், தலைமைப் பண்புகளை வளர்த்து நல்ல குடி மக்களை உருவாக்குவதை விடுத்து, எதை எதையோ வளர்க்கின்றன.

நல்ல பண்பும், ஆக்கத் திறனும் கொண்ட பெரும்பாலான மாணவர்கள் பின்தள்ளப்பட்டு, ஆக்ரமிப்பும் அதிகாரச் செருக்கும் கொண்ட சிலமாணவர்கள் ஆதிக்கம்செலுத்தத் தொடங்கிவிடுகின்றனர். பள்ளிகளில் மாணவர் சுமக்கும் புத்தகச் சுமையும், குறிப்பிட்ட பாடங்களை குறிப்பிட்ட காலத்தில் முடிக்க வேண்டும் என்ற ஆசிரியரது கட்டுப்பாடும், நினைவுத் திறனுக்கும் கொடுக்கப்படும் அளவுக்கதிகமான பாராட்டும், ஆக்கத் திறன் படைத்த மாணவரைப் புறக்கணிப்பதும், ஆளுமை வளர்வதற்குத்தான் கல்வி என்பதும் மறந்துவிட்ட நிலையும் இன்றைய மாணவர் சமுதாயத்தை அடிமைகளாக்கியுள்ளன.

ஆங்கில ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட இந்தியா, உண்மையான விடுதலை பெறப் போவது இந்த அடிமை நிலை ஒழியும் நாளில் தான். நல்ல ஆளுமை நல்ல சுத்தமாக சுதந்திர மண்ணிலும் காற்றிலும்தான் முகிழ்க்கும்.

9

வித்யா சுப்ரமண்யம்

வீட்டுக்கு வந்ததும் வராததுமாக பாத்ரூமிற்குப் போய் தலைக்குக் குளித்துவிட்டு வந்து நின்ற அம்மாவை அதிசயமாகப் பார்த்தாள் சித்ரா.

"என்னம்மா ஆச்சு?'' வந்ததும் வராததுமா. துக்கத்துக்குப் போய்ட்டு வந்தா மாதிரி தலைக்குக் குளிச்சுட்டு வந்திருக்கே?'' என்றாள்.

''துக்கத்துக்குத்தாண்டி சித்ரா போய்ட்டு வரேன். நம்ப சம்பா மாமியோட பிள்ளை மோகன் இல்லே? அவனை ஆபீஸ் விஷயமா போன இடத்துல யாரோ அடிச்சுப் போட்டுட்டுப் போய்ட்டாளாம். பாவம். அந்தப் பிள்ளை செத்துப் போயிடுத்தாம். மலை மாதிரி பிள்ளைய, பாவி பறி கொடுத்துட்டு நிக்கறா. ஈ, எறும்புக்குக் கூடத் துரோகம் பண்ணாதவன் மோகன். அவனுக்கு இப்படி ஒரு சாவான்னு வயறெல்லாம் எரியறது'' சொல்லும்போதே ஈஸ்வரி அழுது விட்டாள்.

சித்ராவுக்கும் அதிர்ச்சியாகத்தான் இருந்தது. சாவு இப்படியா எதிர்பாராமல் வரும்! நேற்றைக்கு இருந்தவர்கள் இன்றைக்கு இல்லை என்றால் அதிர்ச்சியாகத்தான் இருக்கிறது. "பாவம்மா" என்றாள்.

''இப்போதான் சமீபத்துல கல்யாணம் கூட நிச்சயம் ஆச்சு. நாலஞ்சு வருஷமா யாரோ பொண்ணை விருப்பப்பட்டானும். அவளைத்தான் பண்ணிப்பேன்னு ஒத்தைக் கால்ல நின்னு நிச்சயம் பண்ணிண்டான். சம்பா மாமி கூட இஷ்டமில்லாமதான் ஒத்துண்டா.''

முரளி இடிந்து போயிருப்பான். அண்ணனிடம் ரொம்ப அன்பும் மதிப்பும் வைத்திருந்தான்.

ஆனால் ஒரு மாதம் வரை அவன் அவள் கண்ணில் படவே இல்லை. வீட்டுக்கு வரவும் இல்லை. அவர்கள் வீட்டிலிருந்து எந்த ஆர்டரும் கூட வரவில்லை. யாரிடமும் வாய் விட்டுக் கேட்கவும் முடியவில்லை. சித்ரா ரொம்பவும் கவலைப்பட்டாள்.

சரியாக மோகன் இறந்து முப்பத்து இரண்டாம் நாள் ஒரு மணி வாக்கில் திடுதிப்பென்று வந்து நின்றான் முரளி. ஷேவ் செய்யாத முகம். சலூனுக்குப் போகாத தலை. பிரமை பிடித்த முகம் சித்ரா பதறிப்போய் அவனையே பார்த்தாள்.

மோகன் இறந்து சரியாக இருபது நாட்களுக்குள் அவனுக்குச் சேர வேண்டிய பி. எஃப். நஷ்ட ஈடு, கிராஜுவிட்டி என்று கிட்டத்தட்ட ஒரு லட்சம் ரூபாய் வரை மேலிடத்திலிருந்து உடனடியாக வந்து சேர ஏற்பாடு செய்தாள் உமா.

மோகனின் தாய் சம்பாவையும் தம்பி முரளியையும் ஆபீஸுக்கு வரவழைத்து கடைசியாக மோகன் கூறியதையெல்லாம் கூறி முரளியிடம் அந்த கேஸட்டையும் கொடுத்து போட்டுக் கேட்கச் சொன்னாள். பிள்ளையின் குரலைக் கேட்டதும் சம்பா அழுது விட்டாள். முரளி கண் கலங்கினான்.

''மோகன் தன்னுடைய பி. எஃப். மற்றும் எல்லா ஃபாரத்திலும் உங்களுக்குத்தான் நாமினேஷன் கொடுத்திருக்கிறார். சாதாரணமாகத் திருமணம் ஆகாதவர்கள் எல்லாரும் பெற்றோர் பெயரையோ, அவர்கள் இல்லாவிட்டால் உடன் பிறந்தவர்கள் பெயரையோ நாமினியாகக் குறிப்பிடுவது வழக்கம்.


ஆனால் மோகன் இரண்டுங்கெட்டான் நிலைமையில் இறந்து விட்டார். திருமணம் ஆகவில்லை. ஆனால் நிச்சயமும் செய்யப்பட்டு விட்டது. அந்த நிலையில் தான் இறக்கப் போகிறோம் என்பது தெரிந்து ஒரு பெண்ணின் எதிர்காலம் எந்த வகையிலும் பாதிக்கப்படக் கூடாது என்ற நல்லெண்ணத்தில் தான் தனக்குச் சேர வேண்டிய பணத்தில் பாதியை அவளிடம் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டிருக்கிறார்.

சட்டப்படி நாமினியின் கையெழுத்துக்குத்தான் மதிப்பு அதிகம். உடனே பணம் கிடைத்து விடும். நாமினியல்லாத ஒரு நபருக்குப் பணத்தை நாங்கள் கொடுக்க முடியாது. ஆனால் நீங்களாகவே இஷ்டப்பட்டு 'திருமணம் நிச்சயமான நிலையில் மரணம் ஏற்பட்டு விட்டதாலும், அந்தப் பெண்ணின் எதிர்காலம் பாதிக்கப்படக் கூடாது என்பதாலும் என் மகனுக்குச் சேர வேண்டிய பணத்தில் பாதியை அந்தப் பெண்ணுக்குத் தர நான் முழு மனத்துடன் சம்மதிக்கிறேன்'' என்று ஒரு கடிதம் எழுதி கையெழுத்திட்டுக் கொடுத்தால் உங்கள் மகனின் ஆத்மா சாந்தியடையும்.''

அவர்களிடமிருந்து என்ன பதில் வரப் போகிறது என்று ஆவலுடன் இருவருடைய முகத்தையும் ஏறிட்டுப் பார்த்தாள் உமா.

சம்பா மாமியின் முகத்தில் ஒரு நிமிடம் எந்தச் சலனமும் இல்லை. பிறகு சிறிது சிறிதாகச் சினம் உதயமாகியது.

துன்பம் நேர்கையில்...



"அது எப்படி? நிச்சயமான உடனேயே எம் பிள்ளைய முழுங்கி வாய்ல போட்டுண்ட துக்கிரி ஜென்மத்துக்கு. அதுக்குப் பரிசு மாதிரி அவனோட பணத்தையும் கொடுக்க நான் என்ன முட்டாளா? அவன் பைத்தியமாட்டம் ஆசைப்படுவான். தான் பெரிய தியாகின்னு நெனப்பு அவனுக்கு.

மலையாட்டம் பிள்ளையையும் வாரி நெருப்புக்குக் கொடுத்துட்டு, பணத்தையும் தூக்கி அந்த மூதேவிக்குக் கொடுக்க நா ஒரு நாளும் சம்மதிக்க மாட்டேன்"

பெரிதாகக் கத்தியவளைப் பார்த்து, அம்மா!' என்று அடக்கினான் முரளி. அம்மா! இவளா இப்படிப் பேசுகிறாள்? பிள்ளை போன துக்கத்தில் இப்படிப் பேசுகிறாளா? இல்லை நிஜமாகவே இவளுக்குள் ஓர் அரக்கத்தனம் ஒளிந்து கொண்டிருக்கிறதா?" என்றெல்லாம் சிந்தித்தான்.

இறுதியில் அம்மாவிடம் அவன் பேசுவது தவறு என்றும், உமா சொல்வது போலவே செய்வதுதான் நியாயம் என்றும் கூறிப் பார்த்தான்.

ஆனால் சம்பா எதற்கும் மசியவில்லை. மேற்கொண்டு அது விஷயமாய்ப் பேசத் தான் தயாராக இல்லை என்று கூறிவிட்டு எழுந்து வெளியே போய் விட்டாள்.

முரளி உமாவிடம் அம்மாவின் மனத்தைத் தான் எப்படியாவது மாற்ற முயற்சிப்பதாகவும் அப்படி முடியாவிட்டால் வழக்கின் மூலமாகவே சட்டப்படி அவளிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் என்றும் உறுதி கூறி

விட்டு வெளியே வந்தான்.

மறுநாள் முழுக்க அம்மாவிடம் எப்படி எப்படி எல்லாமோ சொல்லிப் பார்த்தான். ஆனால் அந்தப் பேச்சை எடுத்தாலே எரிந்து விழுந்தாள் சம்பா.

கடைசியாக வேறு ஒரு வழியில் முயற்சி பண்ணிவிடத் தீர்மானித்தான் முரளி.

ஒரு சின்ன சூட்கேஸில் தன் துணிமணிகளை எடுத்து வைத்துக்கொண்டான். குளித்து விட்டு உடையணிந்து தலை வாரிக் கொண்டு கிளம்பியவனைப் பார்த்து, "எங்கடா புறப்படற?" என்றாள் சம்பா. அவன் அவளை சிறிதும் சட்டை செய்யாமல் செருப்பில் காலை நுழைத்துக் கொண்டான்.

"உன்னைத்தாண்டா கேக்கறேன். எங்க கிளம்பற?" என்றாள் மறுபடியும்.

"எனக்கு இங்க இருக்கப் பிடிக்கலேம்மா., நான் போறேன்., கொஞ்சநாள் எங்கேயாவது இருந்துட்டு வர்றேன்" என்றான் விரக்தியாக.

துணுக்குற்ற சம்பா, "ஏண்டா பிடிக்கலே? அண்ணா போயிட்டான்னு இருக்கப் பிடிக்கலேயா? இல்லே அம்மாவைப் பிடிக்கலேன்னு போறியா?"

"அம்மாவைப் பிடிச்சிருக்கு. ஆனால் இப்போ அவகிட்ட திமர்னு பொறந்திருக்கற பணத்தாசைதான் பிடிக்கவில்லை" வெடுக்கென்று கூறியவனைப் பார்த்து ஸ்தம்பித்து நின்றாள் சம்பா மாமி.

"இப்போ நீ என்னதான் சொல்றே?"

"உமா சொன்ன மாதிரி அண்ணாவோட பணத்துல பாதியை விமலாக்குக் கொடுக்கிறதா எழுதிக்கொடுத்தா நா இந்த வீட்டுல தொடர்ந்து இருக்கேன். இல்லே, உனக்குப் பணம்தான் முக்கியம்னு நினைச்சா அதையே வெச்சுண்டு சந்தோஷமா, சௌக்கியமா இரு. நா எதுக்கு உனக்கு? நானும் எங்கயாவது ஓர் ஊருக்கு டிரான்ஸ்ஃபர் வாங்கிண்டு மாசா மாசம் என்னோட பணத்தையும் அனுப்பறேன். சேர்த்து வெச்சுக்கோ."

குத்தலாக அவன் கூறியதும் பொறுக்க



மிளகு கஷாயம் போட்டுச் சாப்பிட முடியவில்லையானால், ஓர் எளிய முறை: ஒரு டம்ளர் தண்ணீரை நன்கு கொதிக்க விட்டு, அதில் ஒரு ஸ்பூன் மிளகுப்பொடி போட்டு இறக்கி, ஐந்து நிமிடம் மூடி வைக்கவும். இதைக் குடித்தால் சிறிது நேரத்தில் வியர்த்து ஜுரம், தலைவலி குணமாகும்.

— பி. ஜெயலக்ஷ்மி.

முடியவில்லை சம்பாவுக்கு. அழுகை வெடித்துக் கொண்டு வந்தது.

இருக்கும்ஒரு பிள்ளையும்பணம்கொடுக்கா விட்டால் எங்கேயாவது போய் விடுவதாக மிரட்டுகிறான். அவளுக்கு எந்தப் பக்கம் சாய்வது என்று புரியவில்லை. இரண்டு நாட்களில் பதில் சொல்வதாக முரளியிடம் கெஞ்சவே அவனும், அரை மனத்துடன் சம்மதித்தான்.

ஆனால் இரண்டு நாள் முழுதாக முடியுமுன்பே, "சரி, கால் பாகம் வேணும்னா தர்றேன்" என்றாள்.

முரளிக்குக் கோபம் வந்தது.

"அம்மா கொஞ்சம் யோசிச்சுப் பாரு. இப்படி உங்கிட்ட கெஞ்ச வேண்டிய அவசியமே உமாவுக்கு இல்லே. அந்தக் கேஸட்டை வைத்துக் கொண்டு சட்டப்படி வழக்குத் தொடர்ந்து உங்கிட்டேர்ந்து உன் சம்மதம் இல்லாமலேயே பணத்தை வாங்கி விமலாவிடம் கொடுக்க அவளால் முடியும். ஆனால் கோர்ட்டு, கேஸ்னு கும்மா உன்னை அலைய வைக்காமல் உன்மேல் மதிப்பு வைத்து நியாயமாகக் கெஞ்சினாள். விமலா துக்கிரியோ அதிர்ஷ்டசாலியோ அதைப் பற்றி நினைக்காமல் உன் பிள்ளையின் இறுதி ஆசையை நிறைவேற்றப் பார்.

நா, என்ன நினைக்கறேன்னா, விமலா துரதிர்ஷ்டசாலியாக இருந்ததால்தான் உனக்கு இவ்வளவு பணம் வருகிறது. விமலா மட்டும் அதிர்ஷ்டசாலியா இருந்திருந்தால் உனக்குப் பைசா கூட வராது தெரியுமா?" அதட்டலாகப் பிள்ளை கூறியதும் அவளுக்குத் தாங்கவில்லை.

"போறுண்டா நிறுத்து. எனக்கு ஒரு பைசா வேண்டாம். கொண்டா எழுதித் தர்றேன். எல்லாத்தையும் அந்தத் தரித்திர பீடைக்கே அபிஷேகம் பண்ணட்டும்" என்று சிடுசிடுத்தாள்.

"கோவிச்சுக்காதம்மா. நல்ல மனசோட கொடு" என்று முரளி தயாராக வாங்கி வைத்திருந்த ஸ்டாம்ப் பேப்பரில் அவளை உமா கூறியது போல் எழுதச் சொல்லி கையெழுத்தும் வாங்கிக் கொண்டான்.

பிள்ளையும் போய் அவளால் வர வேண்டிய பணத்தில் பாதியும் போய் விட்ட ஆத்திரத்தில் அவளுக்கே தெரியாத ஒரு வக்கிர புத்தி அவளுக்குள் அப்போது புகுந்து கொண்டது.


பலவந்தமாகக் குழந்தையின் கையிலிருந்த பொம்மையைப் பறித்துக் கொள்ளும்போது அதற்கு ஒரு வெறியும் ஆத்திரமும் வருமே அதுபோல்தான் அவளுக்குள்ளும் ஒரு ஆங்காரம் புகுந்து கொண்டது.

அதன் விபரீதங்களைச் சிறிதும் அறியாமல் அவள் எழுதிக் கொடுத்தவற்றை பத்திரமாக பீரோவில் வைத்துப் பூட்டிவிட்டு அவளைத் தான் வென்று விட்ட பெருமையில் லேசாகச் சிரித்துக் கொண்டான் முரளி.

(தொடரும்)



அறிமுகப் படுத்துகிறோம்.
freshol
HEAVY DUTY DISINFECTANT
Content 300 ml
நறுமணத்துடன் கூடிய கிருமிநாசினி, உங்கள் இல்லங்கள், உணவுக் கூடங்கள், மருத்துவமனைகள், தொழிற் சாலைகளுக்கு ஏற்றது.
• இந்தியாவிலேயே முதன் முறையாக தார் கலப்பு இல்லாத சுத்தமான கிருமிநாசினி.
• வேறெந்த கிருமிநாசினியும் தராத புத்துணர்ச்சியூட்டும் நறுமணம் இதற்கே உரியது.
• நீங்கள் செலவழிக்கும் பணத்துக்கு மிகவும் சிக்கனமானது. ஏனெனில், அது அதிக நீர் கலப்புக்கு ஏற்ற வகையில் தயாரிக்கப்பட்டது.
• கிருமிகளை விரைந்து கொல்லும் அதிகப்படியான மருத்துவத்தன்மை உள்ளடங்கியது.
• நச்சுத் தன்மையற்றது அதனால் முழுப் பாதுகாப்பை அளிக்கிறது.
• உங்கள் இல்லத்தில் கரப்பான் பூச்சி, மற்றும் அனைத்து வகை பூச்சிகளையும் அண்ட விடாமல் அறவே தவிர்க்கிறது.
• பளபளப்பான, மிருதுவான மின்னும் பொலிவை அளிக்கவல்லது.
உபயோகிக்கும் வழி முறைகள் :
தரைகள், டைல்ஸ் மற்றும் மேசைகளுக்கு உகந்தது.
வாஷ் பேசின்கள், சமையலறைக் கழிவுத் தொட்டி, குளியலறை, கழிவறை இவற்றுக்கும் உபயோகிக்கலாம்.
துணிகளையும், மருத்துவ உபகரணங்களையும் தூய்மைப் படுத்த உகந்தது.
freshol®
THE WAY TO CLEANLINESS
பாலிமர் சி பாலிமர்
283, கலீல் ஷிராஜி எஸ்டேட்,
3வது மாடி, பாந்தியன் சாலை,
சென்னை-600 008
தொலைபேசி-810812.
Space Ad
அருகிலுள்ள எல்லா கடைகளிலும் மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்



கூட்டுக் குயில்; பாட்டுக் குயில்; புலமை சுமந்த புயல்

உணர்ச்சிகரமான கவிதைத் தொகுப்புக்கள். பிந்தையது தேவநேயப் பாவாணர் பற்றியது. ஆசிரியர்: ம. மணிகண்டன்.

(மாணவன் பதிப்பகம், கோவிலூர், முத்துப்பேட்டை — 614 704, தஞ்சை மாவட்டம்)

விலை ரூ. 3.50/— விலை ரூ. 3/—

ஸ்ரீ ஸேது — ப்ரயாகை — காசீ — கயை — பத்ரி — கேதார யாத்ரா விளக்கம்

ஆசிரியர்: ஸ்ரீவத்ஸ. வெ. ஸோமதேவ சர்மா.

ஸர்வ குடும்ப நித்ய க்ஷேமகர நித்ய மங்கள ஸ்தோத்திரம்

பல தெய்வங்களைப் பற்றிய ஸ்தோத்திரங்கள். ஆசிரியர் ச்ருங்கார ஸுப்ரமண்ய சாஸ்திரிகள்.

விலை ரூ. 6/—

(பவானி புக் ஸெண்டர், 19, ஸ்டேஷன் ரோடு, மேற்கு மாம்பலம், சென்னை — 33, விலை ரூ. 5/—

யோகமும் போகமும்

யோகப் பயிற்சியையும் மனப்பயிற்சியையும் பற்றியது. ஆசிரியர்: குருஜி தவயோகி சி. கே. எஸ்.

விலை ரூ. 16/—

அனுபவத் தமிழ் மருந்துகள்

ஆசிரியர்: அ. இராசேந்திரன். விலை ரூ 5/—

ஆவிகள் தொடர்பும் அடையும் நன்மைகளும்

ஆவிகளினால் நன்மை அடைந்த பலரின் கதைகள். ஆசிரியர்: வி. ரவிச்சந்திரன். விலை ரூ. 12/—

மனோசக்தி

மனத்தை அடக்கிச் சரியாக நடத்தினால் எத்தகைய உயர்நிலையையும் அடையலாம் என்கிறார்கள் ஆசிரியர்கள் ஏ. எஸ். மூர்த்தி & கே. வெங்கடராவ்.

விலை ரூ. 25/—

அளவோடு பெற்று ஆனந்தமாக வாழ அருமையான யோசனைகள்

குடும்ப உறவு, கட்டுப்பாட்டு முறை பற்றி விவரிக்கிறார் கே. வெங்கடராவ். விலை ரூ. 12/—

(ஐந்து புத்தகங்களின் பதிப்பாளர் — மாருதி பதிப்பகம், 173, பீட்டர்ஸ் ரோடு, இராயப்பேட்டை, சென்னை — 14.

ரகசியம்

ரகசியம்; கண்மணி கதவைத் திற எனும் இரண்டு நாவல்கள் அடங்கியது. ஆசிரியர்: கலாதர். விலை ரூ 12/—

நர்த்தன நாயகி

சந்திரிகா எனும் நடனமணியைச் சுற்றிப் பின்னப்பட்ட நாவல். ஆசிரியர்: லட்சுமி ராஜரத்தினம்.

விலை ரூ. 17/—

ஆகாச வீடுகள்

ஒரு கிராமத்தில் நடக்கின்ற மனப்போராட்டங்களைச் சித்திரிக்கிறார் வாஸந்தி. விலை ரூ. 22/—

சொர்க்கத் தீவு

ஒரு வி(ஞ்ஞான)மான)த்தியாசமான தீவில் மாட்டிக் கொண்ட இளைஞனின் கதை. ஆசிரியர்: சுஜாதா.

விலை ரூ. 11/—

மூன்றாவது ஆசை

மூன்றாவது ஆசை, ஆள்காட்டி விரல் எனும் இரண்டுமர்மநாவல்கள் அடங்கியது. ஆசிரியர்கலாதர்.

விலை ரூ. 13.50/—

(ஐந்து புத்தகங்களின் பதிப்பாளர் — குமரி (இமயம்) பதிப்பகம் 20, பெருமாள் தெற்கு வீதி, நாகப்பட்டினம் — 611 001).

புதிர்க் கதைகள்; புகழ்பெற்றபுதிர்க்கதைகள்

சிறுவர்களும், பெரியவர்களும் படித்து மகிழலாம். இரண்டு புத்தகங்களின் ஆசிரியர்: எ. சோதி.

ஒவ்வொன்றும் விலை ரூ. 7.50/—

புதிர்க் கணக்குகள்

ஆசிரியர்: எ. சோதி. விலை ரூ. 7.50/—

சிரிக்க, சிந்திக்க சிலேடைகள்

ஆசிரியர்: எ. சோதி. விலை ரூ. 3.50/—

(நன்மொழிப் பதிப்பகம், 53, அரவிந்தர் வீதி, புதுச்சேரி — 1.

வாழ்வியல் சிந்தனைகள்

சிறந்த வாழ்விற்கு இலக்கிய மேற்கோள்களோடு வழிகாட்டுகிறார் ஆசிரியர் துறைவன். விலை ரூ. 18/—

தண்ணீர் தண்ணீர்

புகழ்பெற்ற நாடகம். ஆசிரியர்: கோமல் சுவாமிநாதன். விலை ரூ. 7.50/—

பிணி தீர்க்கும் கீரைகள்

கீரைகளின் பயன்கள். ஆசிரியர்: இராம. கண்ணப்பன். விலை ரூ. 4/—

நரம்புத் தளர்ச்சி ஏன் வருகிறது? எப்படிப் போக்குவது?

ஆசிரியர்: ஆர். சண்முகம் விலை ரூ. 5/—

உழைப்புத் தரும் முன்னேற்றம்

உழைப்பின் பயன், இன்பம் கூறப்படுகின்றது. ஆசிரியர்: பி. எஸ். ராவ்.

(ஐந்து புத்தகங்களின் பதிப்பாளர் வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை — 17.)

புக் ஷெல்ஃப்

பத்திரிகையில் பெண்களின் ஆதிக்கம்



நாட்டின் தலைநகரம் என்ற காரணத்தால் தில்லியில் சுமார் 240 இந்தியப் பத்திரிகையாளர்கள் வெளி மாநிலங்களில் பிரசுரமாகும் செய்தித்தாள்களுக்கு நிருபர்களாகப் பணிபுரிகிறார்கள். அயல்நாட்டுப் பத்திரிகைகளுக்கு, செய்தி நிறுவனங்களுக்கு, டெலிவிஷன் ரேடியோ ஆகிய அனைத்தையும் சேர்த்து சுமார் 300 செய்தியாளர்கள். இவைகளைத் தவிர டில்லியிலேயே பிரசுரமாகும் 14 தினசரி ஆங்கில — ஹிந்தி பத்திரிகைகளுக்கு மற்றும் இரண்டு மாபெரும் ஆங்கில செய்தி நிறுவனங்கள் பிரஸ் டிரஸ்ட் ஆப் இந்தியா, யுனைடெட் நியூஸ் ஆப் இந்தியா, என்று மொத்தமாக 250 நிருபர்கள். அரசு அதிகாரத்தில் இருக்கும் தூர்தர்ஷன், ஆகாஷ்வாணியில் மட்டும் மேலும் 28 விசேஷ நிருபர்கள். சரி, மொத்தமாக தலைநகர் டில்லியில் மட்டும் சுமார் 800 நிருபர்கள் அரசு அங்கீகாரம் பெற்றவர்கள் என்று கூறலாமல்லவா?

இன்னும் சுமார் 40, 40 கட்டுரையாளர்கள், அரசியல் விமர்சகர்கள். செய்தி ஒலி பரப்புத் துறையிலிருந்து ஓய்வு பெற்றவுடன் ''காலமிஸ்ட்'' டாகவல்லவா மாறி விடுகின்றனர்.

இவைகளைத் தொகுத்து கூறிடும் காரணம், சென்ற மூன்று நான்கு வருடங்களில் குறிப்பாக ராஜீவ் காந்தி பதவி ஏற்ற பிறகும் என்று கூடக் கூறலாம். இளம் பெண்களின் ஆதிக்கம் அதிகமாகிவிட்டது ''டெல்லி மீடியாவில்.''

ஏன் இதுபோன்ற திமர்த் திருப்பம். இளம் பெண்கள் ஏன் பேனாவை, குட்டி நோட்டுப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு, ஜீன்ஸ் அல்லது சூடிதார் டிரஸ் அணிந்து கையில் சிகரெட்டுடன் செய்தி சேகரிக்கத் துணிந்து விட்டனரோ? இதைக் கண்டு இளைஞர்கள் செய்தி சேகரிக்கத் தயங்குகிறார்கள். வெளியே செல்லும் பழக்கமுடைய பழங்கால செய்தியாளர்கள் ஓய்வு எடுக்க ஆரம்பித்து விட்டனர். இந்த மாறுதல்களை அரசாங்கமும் ஆராய்ச்சி செய்து வருகிறது. 1984 — 85ல் இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் மாஸ் கம்யூனிகேஷனில் படித்த இளம் பெண்கள் அனைவரும் 1985 — 86ல் சுமார் 28 பத்திரிகைகளில் சேர்ந்துவிட்டனர்.

டில்லியில், ரவி மார்க் எனும் பிரபலமான தெருவில் **IENS** கட்டிடம் இருக்கிறது. இதில் தான் பெரும்பாலான மாநிலச் செய்திப் பத்திரிகைகளின் அலுவலகங்கள் இருக்கின்றன. கல்கத்தாவிலிருந்து வெளிவரும் டெலிகிராப் எனும் ஆங்கிலச் செய்திப் பத்திரிகை அலுவலகத்தில் நுழைந்தால் போதும்; இளம் பெண்கள் புகை மண்டலத்தில் மாலை நேர ''மது'' மேகங்களிலும் உல்லாச ''சவாரி.'' ஆண்

களுக்கு நிகராக ஐந்தாறு பக்க சூடான ஸ்கூப் செய்திகளை "பைல்" செய்துவிட்டு இரண்டு "பெக்" குடன் "சுதம் சுருங்கி," ஏனோதோ முஷ்கில் ஹை என்று கூறியவாறே இரவு 8 மணி ஆனதும் வீடு நோக்கிப் புறப்பட . பார்க்கிங் ஏரியாவிலிருக்கும் கார் அருகே வரை கும்பலாகப் பேசிக் கொண்டே வருகிறார்கள்.

யூ. என். ஐ. செய்தி நிறுவனத்தின் "டெஸ்கில்" மூன்று ஷிப்டிலும் ஐந்து இளம் பெண்கள்தான் பரபரப்புடன் வரும் செய்திகளை "வடிகட்டி" பழுது பார்த்து அகில உலகிற்கும் அனுப்புகிறார்கள். இந்திராகாந்தி சுடப்பட்ட செய்தியை யு. என். ஐ. நிறுவனம் 31 அக்டோபர் 84 ல் காலை 9.50 க்கு அனுப்பும் முன் ஒரு இளம் பெண்தான் படபடப்புடன் இருந்தாலும் துயரச் செய்தியை நிதானத்துடன் சரிபார்த்து ஒரே ஒரு லைன் தந்த பிறகு **MORE** அதிகம் அடுத்த "டேக்கில்", என்று குறிப்பிட்டாள்.

தலைநகரில் பிரசுரமாகும் பொருளாதார சம்பந்தப்பட்ட தினசரிகளான எகனமிக் டைம்ஸ், பைனான்ஷியல் எக்ஸ்பிரஸில் 50 சதவிகிதம் திருமணமாகாத இளம் பெண்கள். பேட்டி காண பொருளாதார வல்லுநர்களுடன் மோதுகிறார்கள். லக்ஷ்மிகாந்த் ஜா எனும் வயதானவர், ரிசர்வ் பாங்கு கவர்னர், அமெரிக்க தூதுவர், காஷ்மீர் ஆளுநர் பதவிகளை வகித்தவர். தற்போது பிரதமர் ராஜீவ்காந்தியின் ஆலோசகர். இவரைப் பேட்டி காண 24 வயது பெண் சென்றவுடன் ஜா திருப்பிக் கேட்டார். எனக்கோ உன் வயதின் மூன்று பங்கு. புது இளைய தலைமுறை என்ன கேள்வி கேட்கப் போகிறாய் என்றவுடன், இந்த இளம் பெண் நிருபர் கூறினாள், தலைமுறைக்குத் தலைமுறை பெரும் பொருளாதார இடைவெளியையே விவாதிக்கலாமே என்று.

"சண்டே மெயில்" எனும் ஆங்கில வார பத்திரிகை தினசரி செய்தித் தாள்களின் சைசில் பிரசுரிக்கப்படுகிறது. இதற்கு ஆசிரியர் கூமி கபூர் எனும் நடுத்தர வயது பெண்மணி.

பிரமிளா காலஹன் எனும் பெண் ஹிந்துஸ்தான் டைம்ஸின் விசேஷ நிருபர். இவளோ பிரதமரின் மாளிகையில் நடைபெறுவதை வாராவாரம் வர்ணனை செய்கிறாள் தனது "காலத்தில்" **(Column).**

உஷா ராய் என்ற 34 வயது பெண் நிருபர், டில்லி டைம்ஸ் ஆப் இந்தியாவின் துணை ஆசிரியர். இவரின் தனிச் சிறப்புக் கட்டுரைகள் கொத்தடிமைகளைப் பற்றியது. ஆதிவாசிகளைப் பேட்டி காண்பது போன்ற கட்டுரைகள். சுற்றுப் பிரயாணத்திலேயே இருப்பவள்.

சஞ்சய்காந்தியின் மனைவி சமீப காலமாக ஆன்லுக்கர் என்ற ஆங்கில வாரப் பத்திரிகையில் "விருந்தினர் பக்கம்" **Guest Page** என்று அரசியல் விமர்சனம் செய்கிறாள்.

விஜயலட்சுமி பண்டிட் மகளும் கட்டுரையாளர்.

பெண்களின் வரதட்சிணை மற்றும் இல்லற பிரச்னைகளை விமர்சிக்கவே கனித் வீர் சிங் எனும் குடும்பப் பெண்மணி சுமார் 8 பத்திரிகைகளுக்குக் கட்டுரைகளை எழுதி அனுப்புகிறார்.

ராஜலட்சுமி சுந்தரம் எனும் லையன்ஸ் கிளப் தலைவி அயல்நாட்டுச் செய்திப் பத்திரிகைகளுக்கு இந்திய கலாசாரப்படி வைதீகத் திருமணங்கள் எப்படி நடத்தப்படுகின்றன என்று தொடர்கட்டுரையாக எழுதுகிறார். கலர் புகைப்படத்துடன் ஒரு பெண்மணி எழுதுவதைரசித்துப்படிக்காமலா இருப்பார்கள்.

பெண்கள் பெயரில் தமிழ்ப் பத்திரிகைகளில் தொடர்கதை எழுதும் ஆண் எழுத்தாளர்களுக்கு இனி எதிர்காலம் உண்டா என்ற அச்சம் தலைநகரில் இருப்பதால் எழுகிறது.

தமிழகத்திலும் ஜர்னலிச டிப்ளமா செய்த இளம் பெண்களுக்கு தலைநகரில் பத்திரிகைச் 'சுதந்திரம்' அல்ல 'கோல்டன் மைன்' **(Golden Mine)** தங்கச் சுரங்கம்.

பிரேமா.

வாசலில் ஒரு பெரிய அட்டைப் பெட்டியோடு வந்தவர், குருவி சோப் வாங்குங்கள் என்று மிகவும் கெஞ்சினார். விளம்பரப்படுத்துகிறார்களே அந்தக் குருவிதான் என நினைத்து, பரிதாபமான அவர் நிலை கண்டு, ஒரு டஜன் சோப் வாங்கினேன்.



பயன்படுத்த ஆரம்பித்தபோதுதான் தெரிந்தது, அது சோப்பே அல்ல, நீல நிற ஏதோ ஒரு மட்டப் பொருள். கம்பெனிக்குக் கடிதம் எழுதலாம் என்று சோப் உறையை கவனித்தேன். அட்ரஸே இல்லை.

வாசலில் வரும் பொருள்களை வாங்குவதில் தவறில்லை. ஆனால் நன்றாக கவனித்துப் பின் வாங்கவும். இது அனுபவித்த பின்தானே தெரிகிறது!

— கமலா, சேலம்.

புதிய
மேம்படுத்தப்பட்ட

கேர்:ப்ரீ எக்ஸ்ட்ரா லார்ஜ்

சில பெண்களுக்கு இது தேவை.



இது மிக நீளமான நேப்கின்



இது மிக அகலமான நேப்கின்



இது மிக தடிப்பான நேப்கின்

கூடுதலான பெரிய சைஸிலே தரமுள்ள நேப்கினின் சுகமும் பாதுகாப்பும் தேவைப்படும் பெண்களுக்கு—இதோ! புதிய கேர்:ப்ரீ எக்ஸ்ட்ரா லார்ஜ்.


நீளத்தினையும், அகலத்தினையும், தடிப்புத் தன்மையினையும் கூடுதலாகவே பெற்றிருக்கும் இந்த நேப்கினின் நூலிழைகள் உறிஞ்சும் திறன் அதிகமாகப் பெற்று மிகுந்த நம்பிக்கையைத் தருகிறது.

ஒண்டர்ரசப் உறைகள் ஈரத்தை உள் அடுக்கிற்குள் செலுத்துவதால் ஈரம் சீராக உறிஞ்சப்பட்டு உலர்வினையும் சுகத்தினையும் உங்களுக்குத் தருகிறது. நாப்கினின் இந்த சிறப்பான டாப்-நுனிகள் சரியாகப் பொருந்த உதவுவதோடு கச்சிதமாகவும் இருக்கிறது.

இப்போது கேர்:ப்ரீ எக்ஸ்ட்ரா லார்ஜில் ஒரு சிறப்பான (ஈரம் கசியாத) 3 வழி நீலநிற பிளாஸ்டிக்-ஷீல்டு—அடிப்புறம் அணைப்புக்கொடுத்து பக்கங்களோடு மேற்புறம் வரை பரவியமைகிறது. படத்தில் நீங்கள் காண்பதுபோல. இவ்வகையில் உங்களுக்கு அதிகப் பாதுகாப்பு, அதிக பத்திரத் தன்மை.

புதிய கேர்:ப்ரீ எக்ஸ்ட்ரா லார்ஜ்—முழுமையான சுகம், முழுமையான பாதுகாப்பு.
கூடுதலான பெரிய சைஸில்.

தேர்ந்தெடுத்த நகரங்களில் மட்டுமே கிடைக்கிறது.





OBM/6784/TM

தவிரவும் கிடைப்பவை: கேர்:ப்ரீ ரெகுலர் 10'கள், 20'கள், 30'கள் அடங்கிய பேக்குகள்.

ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன்

கன்னியாகுமரியில் நவராத்திரி



• 'கன்னி' குமரி

சக்தி தேவியை நம் நாட்டில் கன்னி உருவத்தில் வழிபடும் புனிதத் தலங்கள் யாவற்றினும் கன்னியாகுமரி தனக்கென ஒரு தனிப்புகழ் கொண்டு விளங்குகிறது.

தமிழகத்தின் தென் எல்லையாகத் திகழும் இத்தலம் கன்னியாகுமரி மாவட்டத்தில், நாகர்கோவிலிலிருந்து சுமார் பன்னிரண்டு மைல் தொலைவில் அமைந்துள்ளது. மூன்று பக்கங்களிலும் கடல் அன்னை புகழ் பாடி நிற்கின்றது.

இக்கன்னியாகுமரி சரித்திர காலத்திற்கும் முற்பட்ட தொன்மையுடையது. வால்மீகி இராமாயணத்தாலும் வியாச மகாபாரதத்தாலும் மகிமை பொருந்திய தீர்த்தக் கட்டமாக இத்தலம் சிறப்பிக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரி தலைச் சேதுவாகவும், சமீபத்தில் கடல் விழுங்கிய "தனுஷ்கோடி" இடைச் சேதுவாகவும், "கோடிக்கரை" கடைச் சேதுவாகவும் வர்ணிக்கப்பட்டுள்ளன.



• மூகாசுரன், பாணாசுரன் வதம்

ஆலய மகிமை

புராண வரலாறுகளின்படி முற்காலத்தில் மூகாசுரன், பாணாசுரன் என்ற இரு கொடிய அசுரர்கள் கடுந்தவமியற்றிப் பிரம்மதேவனிடம் இருந்து அரிய வரங்கள் பல பெற்றனர்கள். தேவர்கள், முனிவர்கள் முதலிய பலவித சக்திகளினால் அழிக்க முடியாத வரத்தைப் பெற்ற அவர்கள், இவ்வகைச் சக்திகளில் கன்னிகையைச் சேர்த்து வரம் பெறவில்லை. காரணம் — 'ஒரு பெண்ணால் என்ன செய்ய முடியும்?' என்ற ஏளனம். ஒருவகை இறுமாப்பு! அவர்களிடம் குடி கொண்டது.

ஆகவே, விதி அவர்களது முடிவை ஒரு கன்னியின் கரத்திலே அளித்துவிட்டது. அவர்களது கொடுமைகளினால் அல்லலுற்ற தேவர்கள் பிரும்மா, விஷ்ணு முதலியவர்களிடம் தங்கள் குறைகளைக் கூறியும் பயன் இல்லாததால், அவர்கள் காசி விஸ்வநாதரை அடைக்கலமாக அடைந்தனர்.

அவர், இவர்களுடைய இன்னல்களைப் போக்கி, இன்பம் அடைவிக்கத் தனது சக்தியை இரு பிரிவாக்கி, ஒன்றை மிகப் பயங்கரத் தோற்றமுடைய காளி தேவியாக, கல்கத்தா என்று கூறும் காளி கட்டத்திலும், அவள் அம்சமாகிய பகவதியைச் சுந்தர ரூபமுள்ள கன்னிகை உருவாக, தெக்கணமாகிய, இக்கன்னியாகுமரியிலும் அனுப்பி அசுர சக்திகளையும் அதர்மத்தையும் மாய்க்கும்படி பணித்தார்.

அதன்படி பகவதி அம்மனாகிய குமரி அன்னை தென்கடலின் ஓரத்தில் வந்து தவமியற்றினாள். அரனும் பிரம்மச்சாரியாக அருகிலுள்ள சுசீந்திரத்தில் தாணுமாலயனாக வீற்றிருந்தார். பின்னர் அன்னையை மணம் செய்ய விரும்பி இச்சுசீந்திரத்திலிருந்து இக்கன்னியாக்குமரிக்கு வந்தாராம்.

"தேவிக்குத் திருமணம் நிகழ்ந்துவிட்டால் தேவியின் சக்தி குறைந்துவிடும்; பாணாசுர வதம் நடைபெறாமல் போய்விடும்" எனக் கருதிய நாரத பகவான், தேவியிடம் வந்து திருமணம் புரிய வேண்டுமானால், "கண்கள் இல்லா தேங்காயும், காம்பில்லா மாங்காயும், நரம்பில்லா வெற்றிலையும், கணுவில்லாக் கரும்பும், இதழ் இல்லாப் புஷ்பமும், வித்தில்லா அரிசியும்" கொண்டுவர வேண்டு

மென்று கூறினர். அவ்வாறே தேவியும் கேட்டாள்.

சிவபெருமானும் உடன்பட்டுச் சென்றார். தமது சக்தியின் வல்லமையினால், தேவி கூறிய ஆறுவகைப் பொருள்களையும் எடுத்து நள்ளிரவில் சுசீந்திரத்திலிருந்து ஒரு நாழிகை தூரம் சென்றதும், நாரதர் திடுக்கிட்டு சேவற் கோழியாக வந்து கூவினர். கோழியின் குரலைக் கேட்டுத் திடுக்கிட்ட சிவபெருமான், "பொழுது விடிந்துவிட்டது; இனிப் போனால் திருமணம் நடைபெறாது" என நினைத்து மிகவும் வேதனைப்பட்டுத் திரும்பி விட்டாராம்.

இங்ஙனம் அவர் திரும்பிய இடம் ஒரு பாறையில் வைத்து நடந்ததால், இப்பாறையை 'வழுக்காம் பாறை' என்பர். இப்பாறையில் கோழியின் கால் தடமும், சிவபெருமானது திருவடியும் தென்படுகின்றன. இன்றும் காணலாம். இது சுசீந்திரம் கோயிலிலிருந்து நேர்க் கிழக்கே சுமார் இரண்டு மைல் தூரத்தில் உள்ளது.

திருமணக் கோலம் அடைந்த தேவியானவள், வெகுநேரம் காத்திருந்தும், பரமேசுவரனைக் காணாமையால், கடுங்கோபமுற்று அரிசி, பருப்பு, சாதம் இவைகளை மணலாகவும், கல்லாகவும் மாறும்படி சபித்தாளாம். அதனால் அவைகள் வெண் மணலாகவும், சிவப்பு மணலாகவும், கற்களாகவும் காட்சி தருகின்றன. இங்கு வரும் பயணிகள் இத்தகைய மணலையும் கல்லையும் எடுத்துச் செல்லத் தவறுவதில்லை.

பின்னர் நவராத்திரியன்று அம்பாள் 'உச்சைச் சிரவம்' என்னும் அமராபதியினது அஸ்வத்தில் அமர்ந்து பாணாசுரனை வதம் செய்கிறாள். இதனை 'அம்பு சாத்தல்' என்று அழைத்து ஒரு விழாவை நடத்துவதுண்டு. இவ்விழா இங்கு மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. திரளான பக்தர்கள் இந்நாட்களில் வந்து விரதமிருக்கின்றனர். இது போன்று இவ்விழா மைசூரிலும் தசராவன்று நடைபெற்று வருகிறது.

கோயிலிலுள்ள ஊஞ்சல் மண்டபத்தில் நவராத்திரியின் ஒவ்வொரு நாளும் அன்னை கொலு இருப்பாள். வெகு அற்புதமான புராணச் சித்திரங்களை இங்கே காணலாம்.

புரட்டாசி மாத நவராத்திரியில் அம்மனின் அலங்காரத்தைப் பார்க்க நாலாபக்கங்களில் இருந்தும் பக்தர்கள் வந்து போனபடியே இருப்பார்கள்.

டால் அடிக்கும் மூக்குத்தி

அன்னையின் திருமுகத் தாமரையை அலங்கரிக்கும் ஒளி மிகுந்த மூக்குத்தி (புல்லாக்கு) நாகரத்தினத்தால் ஆனது. இது கி.பி. 18ம் நூற்றாண்டில் திருவாங்கூர் மன்னர் மார்த்தாண்ட வர்மனால் காணிக்கையாகச் செய்து போடப்பட்டது என்பர்.

கப்பற் கொள்ளைக்காரர்கள் கோயிலிலுள்ள அம்மனின் டால் அடிக்கும் மூக்குத்தியைத் திருடிச் செல்ல வந்தனர் என்றும்,



• கல்கத்தா காளி

அம்மனின் சக்தியினால் கப்பல் உடைந்துவிட்டதாகவும், எஞ்சியிருந்தவர்கள் கோயிலுக்குள் சென்று மூக்குத்தியை எடுக்கச் சென்றபோது கண் தெரியாமல் — வழி தெரியாமல் விழித்தனர் என்றும், அதற்குள் பொழுது நன்கு விடிந்துவிடவே கோயில் சிப்பந்திகள் பார்த்து மன்னரிடம் சொன்னதாகவும், அதுமுதல் மன்னனின் கட்டளைப்படி கோயிலின் கீழ் பக்கத்துச் சந்நிதிக் கதவைத் திறக்கும் வழக்கமில்லையாம். ஆனால் அக்கதவில் சிறிய துவாரம் மட்டும் போட்டிருப்பதை இன்றும் காணலாம். வருஷத்திற்கு இரண்டொருமுறைதான் அக்கதவு திறக்கும் வழக்கம் இருந்து வருகிறது.

விழாக்கள்


இங்கு வைகாசி மாத பிரம்மோத்சவம் பத்து நாட்கள் நடைபெறுகிறது. புரட்டாசி மாத நவராத்திரி காலங்களில் ஒன்பது ரூபங்களில் அன்னை அருள்பாலிக்கிறாள். ஒவ்வொரு துறையினரும் அறக்கட்டளை மூலம் அபிஷேக அலங்காரங்கள் செய்து மகிழ்கின்றனர். அம்பாளுக்குத் தங்கத்தினால் செய்யப்பட்ட 'தங்கக் கிரீடம்' உள்ளது. அதைச் சூடிப் பார்க்குங்கால் 'அம்மை தானே நேரில் வந்து எதிர் நின்று அருள் பாலிக்கும் காட்சி மெய்சிலிர்க்க வைக்கும். 'சந்தன களப' அலங்காரமும் அப்படியே! அம்பாள் முன்பு 'வாடா விளக்கு' நெய்யினால் ஏற்றப்பட்டது, அருள் ஜோதியாய் சுடர்விட்டு எரிகின்றது.

— சன்மிஷ்டை




• 'புகழ்பெற்ற' சூரியோதயம்

சொல்லுங்கள் பார்க்கலாம்



1

2



5



1 மாணவ மாணவியர்கள் நடத்திய சமயக் கண்காட்சி ஒன்று சென்னை சேத்துப்பட்டு சின்மயா வித்யாலயா வில் நடந்தது. எல்லா மதங்களின் வடிவமைப்பும் இதில் இடம் பெற்று இருந்தன. அதில் இடம்பெற்ற ஒருவரைப்பட மாடல் இது. இதை என்னவென்று சொல்ல முடியுமா? எந்த மதத்தைச் சேர்ந்தது இது?

2 குத்துச் சண்டை வீரர் ஒருவரின் கல்லறை இது. உலகப் புகழ்பெற்ற குத்துச் சண்டை வீரரின் நினைவு நாளில் முதல் வரிசையில் உட்கார்ந்து கொண்டு இருக்கும் குத்துச் சண்டை வீரர்களை அடையாளம் காண முடிகிறதா?

3 மலேசிய பிரதம மந்திரி இவர். இவரை ஏன் இப்படி சந்தோஷமாகத் தூக்குகிறார்கள் என்று சொல்ல முடியுமா?


4 பறக்கும் இந்தக் கோவில் எந்த நாட்டைச் சேர்ந்தது? இது என்ன கோவில்?

5 சிறு குழந்தைகளின் நாட்டியத்தைக் காண்கிறீர்கள். இது என்ன நாட்டியம்?

6 இந்த மருத்துவ இயந்திரத்திற்கும் சிறு நீரகத்திற்கும் தொடர்புண்டு. இது என்ன இயந்திரம்?

7 கண் தெரியாத இந்தப் பச்சிளம் குழந்தைகள் பிரதமரின் கையை ஏன் பற்றி இருக்கிறார்கள்?













8 காமன்வெல்த்தில் செஸ்ஸில் முதலாவதாக வந்த பெண்மணி இவர்தான். நான்கு முறை செஸ்ஸில் இந்திய சேம்பியன் பட்டத்தை வாங்கியிருக்கிறார் இவர். யார் இவர்?

9 பாரதிதாசன் விருது இவருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தப் புதுக் கவிதைக் கவிஞரை யாரென்று தெரிகிறதா?

பதில்கள்:

1 சீக்கிய மதம் — பொற்கோவில்.

2 குத்துச் சண்டை சாம்பியன் ஜோ லூயிஸ் பர்ரோவின் கல்லறை (1914—1981). இதில் கலந்துகொண்ட குத்துச் சண்டை வீரர்கள் (இடமிருந்து வலம்) முகமது அலி, சுகர் ரேலியோ னர்டு, மைக்கேல் ஸ்பிங்ஸ், ஜோ பிரேஸியர்.

3 177 பாராளுமன்ற தொகுதிகளைக் கொண்ட மலேசியாவில் 148 இடங்களைக் கைப்பற்றிப் பிரதமராகப் பதவியேற்று இருக்கும் (மலேசிய தேசிய முன்னணித் தலைவர்) முகமது அவர்கள்.

4 ஜப்பான் நாட்டுக் கோவில் கின்கஜ்ஜி என்ற ஜப்பான் நாட்டு தங்கக் கோயில் போன்று பலூனில் செய்து பறக்க விட்டு இருக்கிறார்கள்.

5 கதகளி.

6 சிறுநீரகத்தில் இருக்கும் கல்லைக் கரைக்கக் கூடியது. ஆபரேஷன் பண்ணாமலே இதன் மூலம் கல்லைக் கரைக்கலாம்.

7 ரக்ஷாபந்தன் தினத்தன்று பிரதமரின் கையில் ராக்கி கட்டுகிறார்கள்.

8 ஜெயஸ்ரீ.

9 மு. மேத்தா.

தொகுப்பு:

தாம்பிரவருணி





நவராத்திரியும் நைவேத்தியமும்!

கொலுவிற்குப் பண்ண வேண்டிய நைவேத்தியங்கள் :

ஞாயிற்றுக்கிழமை — கோதுமை விசேஷமாகும்

வெல்லத்தைத் தூள் செய்து கொண்டு கோதுமை மாவை சலித்துக் கொள்ளவும். சிறிது தண்ணீரை ஒரு பாத்திரத்தில் ஊற்றி வெல்லத்தை கரைத்துக் கொண்டு, கோதுமை மாவு, சிறிது ரவை, மைதா கொஞ்சம் கலந்து கொள்ளவும். ஏலப் பொடி, தேங்காய் துருவிப் போட்டு கரைத்துக் கொண்டு-சின்னச் சின்ன அப்பம் பண்ணி நைவேத்தியம் செய்ய வேண்டும். எல்லாருக்கும் கொடுக்கலாம்.

திங்கட்கிழமை — பாசிப்பயிறு

பாசிப்பயறை கல் நீக்கி கொஞ்சம் தண்ணீர் விட்டு, வேகவைக்க வேண்டும். நன்ருக வெந்ததும் வடிகட்ட வேண்டும். வாணலியில் 2 ஸ்பூன் எண்ணெய் ஊற்றி சிறிது கடுகு, உளுத்தம்பருப்பு, கடலைப் பருப்பு, இரண்டு காய்ந்த மிளகாய் எல்லாம் போட்டு வறுத்துக் கொண்டு, இந்த வேக வைத்த பயறையும் போட்டு, தூள் உப்பு தூவி நன்ருகக் கிளற வேண்டும். கடைசியில் தேங்காய்த் துருவல், இஞ்சி, பச்சை கொத்துமல்லி, கறிவேப்பிலை தூவி இறக்க வேண்டும்.

செவ்வாய்க்கிழமை — துவரை (துவரம் பருப்பு)

துவரையும், கொஞ்சம் கடலைப் பருப்பு, சிறிது உளுத்தம் பருப்பு, ஒரு கைப்பிடி புழுங்கல் அரிசி, ஆறு மிளகாய் இவற்றை இரண்டு மணி நேரம் ஊற வைக்கவும். பிறகு உப்பு, சிறிது பெருங்காயம் போட்டு ஒன்று இரண்டாக அரைத்து இத்துடன் கறிவேப்பிலை, கொத்துமல்லியைப் பொடிப் பொடியாக நறுக்கிப் போட்டு நன்ருகக் கலந்து வாணலியில் எண்ணெய் ஊற்றி நன்கு காய்ந்ததும் சின்னச் சின்ன உருண்டையாக உருட்டிப் போடவும்.

புதன்கிழமை — தட்டாம் பயிறு (காராமணி)

இதை முதல்நாள் இரவு ஊற வைத்து பாசிப் பயிறு சுண்டல் போல் இதைச் செய்ய வேண்டும். புளிப்புக் காரம் வேண்டுவோர் சேர்த்துக் கொள்ளலாம்.

வியாழக்கிழமை — கொத்துக்கடலை

இதையும் மேற்சொன்னபடி செய்ய வேண்டும்.

வெள்ளிக்கிழமை — 1. மொச்சைப் பயறு; 2. புட்டு

மொச்சைப் பயறு சுண்டல் மேற்சொன்னபடி செய்ய வேண்டும். இதற்கும் புளி வேண்டுமானுல் சேர்க்கலாம்.

புட்டு: பச்சரிசியை கல் நீக்கிவிட்டு (வரட்டு மாவாக) மிஷினில் நைசான மாவாக அரைத்துக் கொள்ள வேண்டும். அடுப்பை நிதானமாக எரிய விட்டு இருப்புச் சட்டியை வைத்து. கொஞ்சம் கொஞ்சமாக இந்த மாவை வறுத்துக் கொள்ள வேண்டும். இலப்பாக (பச்சை வாசனை போக) வறுக்க வேண்டும். பிறகு, இதை ஆற வைத்து சலிக்க வேண்டும். (கருப்புத் தூள், சின்ன உருண்டைகள் எல்லாம் எடுத்துவிட வேண்டும்)

சலித்த எல்லா மாவையும் ஒரு பெரிய தாம்பாளத்தில் கொட்டி மிதமான வெந்நீர் விட்டு பிசைய வேண்டும். வெந்நீர் அதிகம் விடக் கூடாது. அதாவது பிசைந்த மாவு பிடித்தால் பிடிபடணும். உதிர்த்தால் உதிராகவும் இருக்கும்படி பிசைய வேண்டும். மிகவும் ஜாக்கிரதையாக செய்ய வேண்டும்.

இந்த மாவை இட்லி வார்ப்பது போல் ஆவியில் வேக வைக்க வேண்டும். பத்து அல்லது பதினைந்து நிமிடங்கள் கழித்து அதைத் தொட்டுப் பார்த்தால் மாவு ஒட்டாமல் உதிராக இருக்கும். அதை எடுத்துத் தாம்பாளத்தில் கொட்டி கையில் நெய் தடவிக் கொண்டு உதிர்க்க வேண்டும். இதை ஒரு தடவை சல்லடையில் சலித்துக் கொள்ள வேண்டும்.

ஒரு உருளியில் சிறிது தண்ணீர் விட்டு, மாவுக்கேற்ப வெல்லம் போட்டு, ஒரு சிட்டிகை கேசரி பவுடர் கலர் போட்டு அடுப்பில் வைத்து நன்றாக பாகு காய்ச்ச வேண்டும். உருண்டைப் பாகு வந்தவுடன் அதில் சலித்து வைத்துள்ள இட்லி உதிரியைப் போட்டுக் கிளறவும். தேங்காயைச் சின்னச் சின்ன பற்களாக வெட்டிக் கொள்ளவும். முந்திரிப் பருப்பையும் சின்னதாக உடைத்துக் கொள்ளவும்.

வாணலியில் ½ கப் நெய்விட்டு காய்ந்ததும் அதில் முந்திரிப் பருப்பு, தேங்காய்ப் பால் போட்டு வறுத்துக் கொண்டு, இத்துடன் பாகில் போட்டுக் கிளறிய இட்லி உதிரியையும் கலந்து (நிதானமாக அடுப்பை எரிய விடவும்) ஏலப் பொடி, பச்சைக் கற்பூரம் தூவி எல்லாவற்றையும் நன்றாக அடிப்பிடிக்காமல் கிளற வேண்டும்.

சனி — என்

"என்னை நீர் விட்டு நன்றாகக் களைந்துவிட்டு, வடிகட்டி வெறும் வாணலியில் போட்டு, அடுப்பை லேசாக எரிய விட்டுக் கொண்டு வறுக்க வேண்டும். பச்சை வாசனை போக நன்கு வறுக்க வேண்டும். உரலில் என்னைப் போட்டு இடித்து, பாதி மசிந்ததும் தேவையான வெல்லத்தைப் போட்டு இடித்து நன்றாக மசிந்ததும் நல்லெண்ணெய் சிறிதுவிட்டு சின்ன உருண்டையாக உருட்டிக் கொடுக்கலாம்.

— சீதா

இம்மாத இல்லத்தரசி போட்டி


பொருள்: தீபாவளி பட்சணங்கள் கடைசி தேதி: 15-10-86

சமையல் கூப்பன்

.... என்ற தலைப்பில் சமையல் குறிப்பை இத்துடன் அனுப்பியுள்ளேன். இச் சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும், எந்தப் புத்தகத்திலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்

"எவ்வளவு ஓய்வு நேரம் பாருங்க! மிகோ-மிக்ஸிக்கு நன்றி"



''சுறுசுறுப்பான ஒவ்வொரு இல்லத்தரசிக்கும் ஒரு மிகோ-மிக்ஸ் தேவை''

அது ட்ரைக்ரைண்டிங், வெட்க்ரைண்டிங், மின்ஸிங், மற்றும் விப்பிங் செய்கிறது! அது மட்டுமா, வாழ்நாள் முழுவதும் கிடைக்கும் ''விற்பனைக்கு பிறகு இலவச சேவை'' உள்ளதால், மிகோ-மிக்ஸ் உங்கள் வீட்டு உபயோகத்துக்காக வாங்கச் சிறந்தது.



விருப்ப இணைப்புகள்:

- 1 லிட்டர் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ஜாடி.
- 1.5 கி.கி மாவைப் பிசையக்கூடிய ஒரு மாவு பிசைக்கலன்.
- 250 மி.லி. கொள்ளளவு கொண்ட ஒரு அரவைக்கலன்.

புதிய

மிகோ-மிக்ஸ்

மிகுந்த திறன் கொண்டது. மிகவும் நம்பகமானது.

மெக்கோ-டிரானிக்ஸ் பிரைவேட் லிமிடெட்

47, அண்ணா சாலை, சென்னை-600 002 போன்: 849284, 849084

பிராந்திய அலுவலகங்கள்: ஹைதராபாத், எர்ணாகுளம், பெங்களூர் மற்றும் அனைத்து விற்பனையாளர்களிடமும் கிடைக்கும்.

ACIL/0965/86-Tam

சமையல் அறையில்
கிடைக்கும்
எளிய பொருட்களை
வைத்துக் கொண்டே
அழகியாகலாமே!





சமையலறையிலேயே மேக்-அப்!

வாழைப் பழத்தில் வைட்டமின் 'A' நிறைய உள்ளது இதை ஃபேஸ் மாஸ்க்கில் உபயோகப் படுத்தலாம்.

உலர்ந்த சருமத்திற்கு

1. வாழைப்பழம்

a. வாழைப்பழ மாஸ்க்:

ஒரு சிறிய பழுத்த வாழைப்பழம்,
2 டீஸ்பூன் ஆலிவ் ஆயில்

வாழைப்பழத்தை நன்ருகப் பிசைந்து அதில் ஆலிவ் எண்ணெயை ஊற்றி நன்ருகக் கலக்கவும். இதை முகத்தில் தேய்க்கவும். (கண்களைச் சுற்றி பேஸ் மாஸ்க் போடக் கூடாது). அரை மணி நேரம் கழித்துக் கழுவி விடவும்.

b. நார்மல் அல்லது உலர்ந்த சருமத்திற்கு:

ஒரு சிறிய பழுத்த வாழைப்பழம்,
ஒரு ஸ்பூன் தேன்,
2 ஸ்பூன் பாலாடை

இவை எல்லாவற்றையும் கலந்து முகத்தில் தேய்க்கவும்.

c. எண்ணெய்க் கசிவான சருமத்திற்கு

மேலே கூறிய (b) பொருட்களுடன் ஒரு ஸ்பூன் ஆரஞ்சு ஜூஸ் கலக்கவும். ஏனென்ருல் இதில் அஸ்ட்ரின் ஜெண்ட் உள்ளது.

ஆரஞ்சுப் பழத்தின் மணத்திற்காகவே, அதை நிறைய அழகு சாதனங்களில் பயன் படுத்தலாம். தோலை மிருதுவாக்கும் தன்மை இதில் உள்ளது.

2. ஆரஞ்சுப் பழம்

a. எண்ணெய்க் கசிவான, சோர்வடைந்த தோலுக்கு மாஸ்க்:

ஒருஸ்பூன்காய்ந்தஆரஞ்சுத்தோல்பொடி,
ஒரு ஸ்பூன் ஓட்மீல்
ஒரு ஸ்பூன் பாதாம் பருப்பு (அரைத்தது)

இவற்றை முகத்தில் தேய்த்து அலம்பினால் உயிரற்ற அணுக்கள் நாம் கழுவும் போது வெளியேற்றப்படுகிறது. சருமத்திற்கு வேண்டிய சத்து கிடைக்கிறது.

b. ஆரஞ்ச் டோனிங் மாஸ்க்:

இது புத்துணர்வு தரும். கண், மூக்கு, வாய் இவற்றில் உள்ள சுருக்கங்களுக்கு இதைத் தடவலாம்.

½ ஆரஞ்சுப் பழம்,
ஒரு சிறிய மஸ்லின் துணி.

மஸ்லின் துணியை ஆரஞ்சு ஜூஸில் நனைத்து முகத்தில் கண்களை மூடிக் கொண்டு போடவும். 10 நிமிடம் ஊற விடவும்.

c. எல்லா வகையான சருமத்திற்கும் டானிக்

½ ஆரஞ்சு.



½ எலுமிச்சை பழம்,
ஒரு ஸ்பூன் நாட்டுச் சர்க்கரை,
ஒரு கப் பால்.

எல்லாவற்றையும் கலந்து கொதிக்க வைத்து ஆற வைக்கவும். வடிகட்டலாம். 2,3 நாள் ஃப்ரிட்ஜில்வைத்துக்கொள்ளலாம்.

3. அன்னாசிப் பழம்

அன்னாசிப் பழத்தில் உள்ள என்சைம்கள் தோலைப் பளபளப்பாக்கும்.

a. அன்னாசிப்பழ மாஸ்க்

அன்னாசிப் பழ ரஸத்தை கண்களைத் தவிர்த்து முகத்தில் தேய்த்து, 10 நிமிடம் கழித்து லேசான துணியை உபயோகித்து முகத்தை மேல் நோக்கித் துடைக்கவும். அழுக்கு எல்லாம் வெளியேறிவிடும். பிறகு சுத்தமான தண்ணீர் விட்டுக் கழுவலாம்.

b. அன்னாசி க்யூடிகல் கிரீம்:

2 ஸ்பூன் அன்னாசி ஜூஸ்,
2 ஸ்பூன் முட்டையின் மஞ்சள் கரு,
½ ஸ்பூன் வினிகர்

இவை மூன்றையும் கலந்து ஒரு கப்பில் ஊற்றி நகங்களை அரை மணி நேரம் ஊற வைக்க வேண்டும்.

இது நகங்களைச் சுத்தம் செய்து மிருதுவாக்கும்.

4. தேங்காய்

தேங்காய்ப் பால், தோலை ஆரோக்கியமானதாக்கி மிருதுவாக்கும்.

a. கரும்புள்ளி உள்ள சருமத்திற்கு

தேங்காய்ப் பாலை வெதுவெதுப்பாக்கி பஞ்சினால் முகத்தில் ஒத்தி எடுக்கவும்.

b. தோலை மிருதுவாக்க

½ கப் தேங்காய்ப் பால்,
ஒரு ஸ்பூன் ஓட்மீல்,

தேங்காய்ப் பாலைச் சூடாக்கி, ஓட்மீலைக் கலக்கவும். முகம், கை, கால்களில் தேய்க்கவும்.

5. தர்பூசணிப் பழம்

தர்பூசணிப் பழம் மிக நல்ல மாய்ஸ்ச்சரைஸர். மிகவும் வறண்ட சருமத்திற்கு அல்லது வெயிலில் உலர்ந்த சருமத்திற்கு:

1 ஸ்லைஸ் தர்பூசணி,
1 ஸ்பூன் தேன்,

இவற்றைக் கலக்கி முகத்தில் தேய்க்கவும். 20 நிமிடம் கழித்து முகம் கழுவவும்.

6. பேரிக்காய்

a. பேரிக்காய் நல்ல அஸ்ட்ரின்ஜென்ட்டாக உபயோகப்படுகிறது.

எண்ணெய்க்கசிவான சருமத்திற்கு பேரிக்காய் மாஸ்க் நல்லது. அரை பழுத்த பேரிக்காயை அரைத்து பதினைந்து நிமிடம் முகத்தில் ஊற வைக்கவும்.

b. புள்ளிப் புள்ளியான சருமத்திற்கு

பேரிக்காயையும், பாலையும் சேர்த்து அரைத்து புள்ளி உள்ள இடத்தில் தேய்த்

தால் கலர்ந்து விடும்.

7. பப்பாளிப் பழம்

பப்பாளிப் பழத்தை வெயில் காலத்தில் உபயோகித்தால் சருமம் பளிச்சென்று புத்துணர்வுடன் இருக்கும்.

a. எல்லா வகையான சருமத்திற்கும் மாஸ்க்

¼ பப்பாளிப் பழம்
ஒரு ஸ்பூன் தேன்.

இவற்றைக் கலந்து முகத்தில் தேய்க்கவும். 15 நிமிடம் ஊறித்துத் துணியில் துடைத்து விட வேண்டும்.

b. மிகவும் எண்ணெய்ப் பசையான தோலுக்கு பப்பாளிப்பழத்தோலை முகத்திற்கு தேய்க்க வேண்டும்.

8. எலுமிச்சைப் பழம்

எலுமிச்சை பழத்தை முகத்திற்கு ப்ளீச் (வெளுமையாக்க) செய்யப் பயன்படுத்தலாம்.

a. எண்ணெய்க் கசிவான சருமத்திற்கு

முட்டையின் மஞ்சள் கருவும், 2 ஸ்பூன் லெமன் ஜூஸையும் கலந்து, முகத்தில் தடவிக் கொண்டு பதினைந்து நிமிடம் ஊற வைக்கவும்.

b. முகத்தை வெள்ளையாக்க

2 ஸ்பூன் எலுமிச்சை ஜூஸ்,
ஒரு ஸ்பூன் முல்தானி மட்டி,
ஒரு ஸ்பூன் வெள்ளரி ஜூஸ்,
ஒரு ஸ்பூன் தயிர்.

இவற்றை நன்றாகக் கலக்கி முகத்தில் இருபது நிமிடம் காய வைக்க வேண்டும். இதைத் தவறாமல் 10 நாட்கள் செய்தால் கறுப்பு நிறம் மாறும்.

9. ஆப்பிள்

ஆப்பிளை எல்லாரும் சருமத்திற்கு உபயோகிக்கலாம்.

4 ஸ்பூன் ஆப்பிள் ஜூஸ்,
ஒரு ஸ்பூன் தேன்,

இவற்றைக் கலக்கி, சூடாக்கி முகத்தில் தேய்க்கவும். பதினைந்து நிமிடம் ஊறித்துக் கழுவி விடவும்.

மேலே கூறிய எல்லா பேஸ் மாஸ்க்கையும், முகத்தைச் சுத்தம் செய்த பிறகு, கண்களைத் தவிர்த்துப் போடலாம். எல்லாப் பழச்சாறுகளையும் தாராளமாகக் குடிக்கலாம். நிச்சயம் மேனி அழகு பெறும்.

— ஸ்ரீ பாமா



எங்க ஊர் உற்சவம்

ஐப்பசியில் ஆராட்டு!

கேரளாவின் தலைநகரான திருவனந்த புரத்தில் — நடைபெறும் விழாக்களிலே, வருடம் இருமுறை ஐப்பசி மற்றும் பங்குனி மாதங்களில் நடைபெறும் 'ஆராட்டு' என்ற உற்சவம்தான் மிகச் சிறப்பு வாய்ந்தது. இந்த விழா, நாட்டு மக்களின் நன்மை கருதியும், கால நிலைகளின் மாற்றத்தை உறுதி செய்ய வும் கொண்டாடப்படுகிறது.

இவ்வூர்க்கோயில் இன்றளவும் திருவிதாங் கூர் நாட்டை ஆண்ட சுவாதித் திருநாள் மன்னர் பரம்பரைக்கு உரிய சொத்தாகும். ஆகையால், மன்னர் பரம்பரையில், பட்டம் பெற்ற மன்னரின் தலைமையில் இவ்விழா எடுக்கப்படுகிறது.

இப்போதுள்ள பட்டத்தரசர் மகாராஜா சித்திரைத் திருநாள் ஆவார்.

ஆராட்டுத்திருவிழாவின் முதல்நாள் கொடி யேற்றப்படுகிறது. பத்து நாட்கள் திருவிழா நடைபெறுகிறது. இந்தப் பத்து நாட்களிலும் 'ஸ்ரீபெலி' என்ற நிகழ்ச்சி நடைபெறும். தினமும் மூன்று வேளையும் பூஜைகள் நடைபெறுகின்றன. இப்பூஜைகளில் மூன்று நேரமும் மகாராஜா தவறாது கலந்து கொள்கிறார். இதைத் தவிர, சிறப்புப் பூஜை களும் உண்டு.

இறுதிநாள் அதாவது இவ்விழாவின் பத்தா வது நாள்தான் 'ஆராட்டு' என்ற சிறப்பு நிகழ்ச்சி நடக்கிறது காத்தல் கடவுளான பத்மநாபசாமியின் உற்சவ மூர்த்தியை — உற்சவ மூர்த்தி தங்கத்தாலானது. வைரம் மற்றும் மரகதக் கற்களாலான நகைகளால் அலங்கரிக்கப்பட்டது — யானை மீதேற்றி, அரச மரியாதையுடன் சங்குமுகத் துறை என்றழைக்கப்படும் கடற்துறைக்கு நீராட்ட எடுத்துச் செல்வார்கள்.

சங்குமுகத் துறை கோவிலில் இருந்து இரண்டு கி. மீ. தொலைவில் உள்ளது. இந்த நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிச் செல்பவர், பட்டத்து மன்னர் மகாராஜா சித்திரைத் திருநாளாவார். மகாராஜா இறந்தமார்புடன், கையில் வாளேந்தி, முன் நடந்து சென்று, சங்குமுகத் துறையில் இறைவனுடன் நீராடி விட்டு மீண்டும் கோயிலுக்கு இறைவனை அழைத்து வருவார்.

பெரிய தங்க உருளியை இருபுறமும், இரு வேதியர்கள் பிடித்துக் கொள்ள, அந்த உருளி யின் மையத்தில் இறைவனது மூர்த்தியை வைத்து, கடல் நீரில் அமுக்கி எடுப்பார்கள். இந்த நிகழ்ச்சிதான் 'ஆராட்டு' என்றழைக் கப்படுகிறது.

முதல் நாள் கொடியேற்றியவுடன், மரத்தா லான பெரிய உருவ பஞ்ச பாண்டவர்க ளுடன், கிருஷ்ணன், விநாயகர். சிலைகளை கிழக்கே கோட்டையின் வெளிப்புறம் வைத்துவிட்டு, இறுதிநாள் ஆராட்டு ஊர் வலத்தில் எடுத்துச் செல்லப்படுகின்றன.

மகாராஜா குடும்பச் சொத்தான திரு அனந்த பத்மநாபசாமி கோவிலில் நடை பெறும் இந்த ஆராட்டு உற்சவம், பாரம்பரி யம்மாறாது இன்றளவும் முறையாகக் கொண் டாடப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

— பாகீரதி இராமநாதன்

புகைப்பட உதவி: 'மாத்ருபூமி'



பெண்களை அதிகம் தாக்கும் நோய்!

யூரினரி இன்ஃபெக்ஷன் என்பது சிறுநீர்த் தாரையில் கிருமிகள் பரவி உண்டாகும் நோய் ஆகும். இது ஆண்களை விட பெண்களுக்குத்தான் அதிகம் வரும். அதிலும் இளம் வயது பெண்கள், பிரசவிக்கும் தாய்மார்களுக்கும் அதிகம் வரலாம். ஆண்களுக்குச் சிறு வயது முதல் முதிய வயது வரை எல்லா வயதிலும் வரும். நோயும் ஆண்களைவிட பெண்களுக்குக் கடுமையாக வரும். இந்த நோய் மிக லேசாக வந்தும் மறையலாம். அல்லது கவனிக்காமல் விடப்பட்டு முழுவதும் பரவி, 'கிட்னி ஃபெயிலியர்' வரையும் போகக் கூடும்.

Urinary Infection பற்றித் தெரிந்து கொள்ளுங்கள்

நீர்த் தாரை (யூரினரி ட்ராக்) என்பது சிறுநீரகம், சிறுநீர்ப் பை இவ்விரண்டையும் இணைக்கும் குழாய் ஆகியவை கொண்டது.

இதில் எந்தப் பகுதியில் கிருமிகள் அதிகமாகித் தொற்று ஏற்பட்டாலும் அதற்கு சிறுநீர்த் தொற்றுநோய் என்பது பெயர். பொதுவாக சிறுநீர் அசுத்தமானதுதானே? அதில் கிருமிகள் கிடையாதா? பொதுவாக சிறுநீர்ப் பையில் கிருமிகள் எப்போதும் இருக்கும். இவை அளவில் மிகக்குறைவாகவும், உடலுக்குத் தீங்கு விளைவிக்காதவையாகவும் இருக்கும். 'அவை சிறுநீர் வழியாக வெளியே சென்றுவிடும். வெளியே சென்ற அளவு மீண்டும் தோன்றியிருக்கும். இந்தத் தொடர் நிகழ்ச்சியில் ஏதாவது சிக்கல் ஏற்பட்டு சிறுநீர் வெளியே செல்லாமல் தேங்கி விட்டதென்றால் (கல், கட்டி போன்ற கோளாறுகளால்) தொற்று நோய் வருகிறது.

இந்த நோய் எப்படி வருகிறது?

பொதுவாக உடலுக்குள் கிருமிகள் மூச்சுக் குழாய், வாய், தண்ணீர், உணவு மூலம் பரவும். மலக்குடல், பெண் உறுப்பு மற்றும் ரத்தத்தில் கலந்து கிருமிகள் சிறுநீர்க் குழாயில் நோய் உண்டாக்கலாம். இந்த நோய் பெண்களுக்கு அதிகமாக வரக் காரணம் அவர்களுடைய சிறுநீர்க் குழாய், பெண் உறுப்பு, மலக்குடல் அமைப்புகள் — அருகருகே அமைந்திருப்பதால் நோய் பரவ எளிதாக இருக்கிறது.


கருவுற்றிருக்கும் போதும், பிரசவத்தின் போதும், மற்றும் சோதனை முறைகளின் போதும் இந்நோய் உண்டாகிறது. சிறுநீர்த் தாரையில் கல், கட்டி போன்றவற்றிலும் வரலாம்.

நீர்ச் சுருக்கு என்பது என்ன?

பொதுவாக சிறுநீரில் எரிச்சல் தோன்றினால், வீட்டில் பெரியவர்கள் இதை நீர்ச் சுருக்கு, நீர்க் கடுப்பு என்று பெயரிட்டு இதை சூடு, உஷ்ணம், என்று சொல்லி, 'பேசாமல்

எண்ணெய் தேய்த்துக் குளி' என்று சொல்லி விடுவார்கள்.

அப்படியும் சரியாகாமல் போனால் குளிர்ச்சியான பொருள் இளநீர், தயிர் என்று வைத்தியம் செய்து காலம் தள்ளு வார்கள். இது மிகமிகத் தவறு. அதற்குள் நோய் அதிகமாகப் பரவி, முற்றிய நிலைக்குச் சென்று விட்டால் சிறுநீரகம் வேலை செய்யாமல் கூட நின்று விடலாம்.



இந்நோயின் அறிகுறிகள்

I. நீர் போகும் போது எரிச்சல்.
II. சொட்டுச் சொட்டாகச் சிறுநீர் போதல்
III. இரத்தம் கலந்து போதல்.
IV. குளிர் சுரம்.
V. பின் முதுகில், இடுப்பில் கடுமையான வலி.

நோயைக் கண்டுபிடித்தல் எப்படி?

இந்த அறிகுறிகள் தோன்றியவுடன் நீங்கள் டாக்டரிடம் சென்று விட வேண்டும். அவர் தனது சோதனைகளின் மூலம் நோய் எந்த இடத்தில் உள்ளது? முழுவதும் பரவி விட்டதா? என்பதை சோதனை செய்வார்.

இந்தச் சோதனைக்குப் பிறகு இரண்டு அல்லது நான்கு வாரங்களுக்கு வைத்தியம் செய்ய வேண்டி வரும்.

நோய் கடுமையாக இருந்து மருந்துகளுக்குக் கட்டுப்படவில்லை என்றால் சிறுநீர்த் தாரையில் கல், கட்டி போன்றவையாகவும் இருக்கலாம். அதற்கு மேலும் பரிசோதனைகள் தேவைப்படலாம்.

சிறுநீர்த் தொற்று நோய் என்பது மிகவும் கடுமையான வியாதியா?

பொதுவாக சிறுநீரகம் மிகவும் முக்கியமான பாகம். அதைப் பாதுகாப்பது நமது கடமை. வீட்டிலும், வெளியிலும், சிறுநீர் அறைகளைச் சுத்தமாக வைத்தல், நமது உடல் உறுப்புகளைச் சுத்தமாக வைத்தல், முக்கியமாக பிரசவத்திற்கு என்று நீங்கள் செல்லும் மருத்துவமனைகளில் டெலிவரி அறை மற்றும் வைத்திய அறைகள் சுத்தமாக இருக்கின்றனவா என்று முன்னெச்சரிக்கையாய் பார்த்தல் முதலியவை அவசியம்.

இந்த நோய் லேசாக வந்தும் போகலாம். அதே நேரத்தில் கவனக் குறைவால் முழுவதும் பரவி சிறுநீரகம் பாழடைந்து உயிரையும் இழக்கலாம். தகுந்த நேரத்தில் தக்க வைத்தியம் செய்து குணப்படுத்தினால் நலம்.

— மைதிலி கிருஷ்ணமூர்த்தி

தயிர் பிரெட்

புளிக்காத தயிரில், சிறிது தேங்காய், பச்சை மிளகாய், இஞ்சி, கொத்து மல்லி, உப்பு சேர்த்து அரைத்துத் தயிரில் கலக்கி, அதில் பிரெட்டை ஊற வைக்கவும். 2 அல்லது 3 நிமிடங்கள் கழித்துச் சாப்பிட மிகவும் சுவையாக இருக்கும். இந்தத் தயிர் பிரெட் செய்வதும் எளிது. இதைச் சாப்பிடும் உங்கள் விருந்தினர் உங்களைப் பாராட்டத் தவற மாட்டார்கள்.

— பாலா

தன் பிரக்ஞை இழந்து விட்ட நபர், எங்கு இருந்தாலும், உடனடியாகக் கைக் கொள்ள வேண்டிய முதலுதவி: ஒரு வெங்காயத்தை எடுத்து நன்கு கசக்கி, அதைப் பாதிக்கப்பட்ட நபரின் மூக்கின் அருகே கொண்டு போய், சில நிமிடங்கள் பிடிக்க வேண்டும். தூக்கத்திலிருந்து எழுந்தவர் போல், நினைவிழந்த நபர் எழுந்து விடுவார்.

— திருமதி தேவனுதன்


பிளேக் பவர்ஹவுஸ் பேட்டரி
NIPPO
SUPER
HEAVY DUTY
INDO NATIONAL
MADE IN INDIA
everest/86/INL/240 A/TAM
உங்கள் விலைமிகுந்த ஆடியோ சாதனங்கள் மற்றும் டார்ச்சுகள்
நீடித்து உழைக்க இந்த பேட்டரியை நீங்கள் நம்பலாம்
நிப்போ சூப்பர். ஜப்பானின் நேஷனல்
கம்பெனியின் தொழில் நுணுக்க கூட்டுறவுடன்
தயாரிக்கப்படுபவை டூ-இன்-ஒன், டேப்ரிக்கார்டர்கள்
மற்றும் மோட்டாரினால் இயங்கும் விளையாட்டுச்
சாதனங்கள் ஆகியவற்றுக்காகவே விசேஷமாகத்
தயாரிக்கப்படுபவை. ஹெவி-டியூடி
உபயோகங்களுக்காக இந்த பேட்டரி ஒன்றே ISI யின் 9128
முத்திரையைப் பெற்றுள்ளது என்பதில் ஆச்சரியமில்லை.
National
நிப்போ
IS: 9128
ISI
சூப்பர்


புதிய மேம்படுத்தப்பட்ட கேர்ஃப்ரீ
கூடுதலான பாதுகாப்பு உணர்வுக்கு
இப்போது ஒப்பற்ற நீல நிற பிளாஸ்டி-ஷீல்டு அதிகரிக்கப்பட்டுள்ளது
அடுக்கின் அடியிலும் பக்கங்களிலும் சுற்றியுள்ள நீல நிற பிளாஸ்டி-ஷீல்டு இப்போது அதிகரிக்கப்பட்டுள்ளது. கறை ஏற்படாமல் தடுத்து கசிவு ஏற்படாத முழுமையான பாதுகாப்பு தருகிறது.
முழுமையான சுக உணர்வு, முழுமையான பாதுகாப்பு உணர்வு ஆகியவற்றைவிட வேறு ஒன்றும் அவ்வளவு முக்கியம் அல்ல.
கேர்ஃப்ரீ சானிடரி நாப்கின் ஒப்பற்ற மென்மையான ஒன்டர்ராப் கொண்டது; இது ஈரத்தை உள் அடுக்கிற்குள் உறிஞ்சிக் கொண்டு உலர்வான சுகமான உணர்வைத் தருகிறது உங்களுக்கு—எப்பொழுதுமே. சரிப்படுத்தக்கூடிய டேப் முனைகள், நாப்கினை கச்சிதமாகவும், பாதுகாப்பு வசதியோடும் உங்களுக்கு பொருந்த வைக்கிறது.
கேர்ஃப்ரீ சுகம் மற்றும் கேர்ஃப்ரீ பாதுகாப்பு உணர்வைப் பெற்றிடுங்கள் இன்றே. உணர்ந்திடுங்கள் வேறுபாட்டுச் சிறப்பை.
Carefree*
சானிடரி நாப்கின்
முழுமையான சுகம், முழுமையான பாதுகாப்பு
10 உள்ள பேக்கிலும் சிக்கனமான 20 மற்றும் 30 உள்ள பேக்கிலும் கூடக் கிடைக்கின்றன. கேர்ஃப்ரீ 10 உள்ள பேக்கில் கிடைக்கிறது.
Carefree
10 SANITARY NAPKINS
REGULAR
ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன்
OBM/8306/R-4/TAM

21

கோடுகள் கோலமாவதில்லை

கோபம் பிறிடவில்லை.

மாறாக சோகந்தான் மேலெழுகிறது. நித்யானந்தனை மறுபடி பார்க்கையில் நொந்தாற்போல்தான் பேசுகிறாள்.

"ஏன் இந்த மாதிரி மறுபடி மறுபடி.... நான் அப்பேர்ப்பட்ட அபராதம் என்ன பண்ணிட்டேன் உங்களுக்கு....."

"நானுந்தான் இன்னும் எத்தனை தரம் வந்து நிக்கிறது. இன்னும் எப்படிச் சொல்றது.... வேறே யாரா இருந்தாலும் அந்த மாதிரியொரு இடத்தை எப்படி மாத்தி, காமதேனுவாட்டம் கறந்திருப்பாங்க. ப்ளாட்டு ப்ளாட்டா வித்து, இடிச்சுட்டு அபார்ட்மெண்டா கட்டி, பெரிய கம்பெனியா, அட, ஹோட்டலா கூட மாத்தியிருக்கலாம். பணம் சும்மா கொட்டும். இந்த ரெண்டு வருஷத்திலே எல்லாம் எங்கே ஏறி நிக்கறது. நாம வெச்சதுதானே விலை....உனக்குஇதெல்லாம் இன்ட்ரெஸ்ட் இல்லே, எங்கிட்டே குடுங்கறேன். என் மூஞ்சிலே முழிக்க வேண்டாம். இந்தாடான்னு விசியெறிஞ்சிட வேண்டியதுதானே. சேர்த்து வெச்சு, தலையிலா தூக்கிண்டு போகப் போறே....."

கூசாமல் கேட்க முடிகிறதே இவனால்.... என்ன உரிமையென்று, இங்கே வந்து நிற்கிறான்.... இதுதான் நித்யா. தான், தனது என்று தனக்குத்தான் முக்கியம். கூச்சம், நயம், நாசூக்கு என்பதெல்லாம் அவன் அறியாத இயல்புகள்.

"என் சமாசாரத்தை நானே கவனிச்சுக்கறேன். என் வீடோ, வாசலோ, நானே நிர்வாகம் பண்ணிக்கிறேன். தயவு செஞ்சு.... நித்யா, ரொம்ப கெஞ்சிக் கேட்டுக்கறேன், தயவு செஞ்சு இனிமே என்னை....."

"கடைசிவரை பாக்காம விடறதில்லே. உனக்காச்சு, எனக்காச்சு...." முன்னைவிட ஆங்காரமாய் கதவை படாரென்று சாத்திக் கொண்டு வெளியே இறங்குகிறான்.

மனம் கொதிக்கிறது. இது வணங்காமுடி. மசியாது என்று தெரிந்தும் மூணு நாலு முறை வந்தது தப்புதான்.... தப்புதான்...

பல்லைக் கடித்துக் கொண்டு காரருகில் செல்கிறான். டிரைவரைக் காணவில்லை. கதவைப்பூட்டிச்சாவியைஎடுத்துக்கொண்டு எங்கோ போய்விட்டான். டீ, கீ சாப்பிடத் தொலைஞ்சுட்டானோ....?"

இரண்டு நிமிடம் காத்திருக்கப் பொறுமையில்லாமல் கடிகாரத்தைப் பார்க்கிறான், நகத்தைக் கடிக்கிறான்....

டீக்கடை எங்கேயிருக்கும்....

ஒருவேளை எங்கேயாவது அரட்டை அடிக்கப் போயிட்டானோ.....
தெருவில் எங்கும் தென்படவில்லை.

நாலு வீடு தள்ளி அங்கே, மெயின் ரோட் ஜங்க்ஷனண்டே வேடிக்கைப் பார்த்துக் கொண்டு உக்காந்திருக்கானோ.... ராஸ்கல்! விறுவிறுவென்று மெயின் ரோடை நோக்கி நடக்கையில், விமலா வீட்டிலிருந்து ஸைட் கேட்டு வழியாக பிரபு வெளியில் வர,

"ம்.... மிஸ்டர்.... இங்கே டீக்கடை ஏதானு இருக்கா...."

"டீக்கடையா...." பிரபு ஏறஇறங்கப் பார்க்கிறான் நித்யானந்தனை. வாட்டசாட்டமாய், கன கச்சிதமாய் உடையணிந்து....

"ம், எனக்கில்லே. என் டிரைவரை தேடறேன். டீ சாப்பிட போயிட்டானோன்னு, நான் அங்கே உள்ளே போயிட்டு வரதுக்குள்ளே, காரைப் பூட்டிச் சாவியையும் எடுத்துண்டு போயிட்டான்...."

பிரபு பார்க்கிறான். சரியாய் காதம்பரியின் வீட்டெதிரில் பளபளவென்று மின்னும் டூடோன் அம்பாஸடர்.

"ஓ, டாக்டரைப் பாக்க வந்தீங்களா...?"

"யெஸ்."

காதம்பரியை வீட்டில் வந்து பார்க்கிறானென்றால், உள்ளூர் போலத் தோன்றவில்லையே....

"என்ன, புரொபஷனலா.... எப்படித் தெரியும்?"

என்ன இவன், கேட்டதற்குப் பதில் சொல்லாமல் அனாவசியமாய் பேசிக் கொண்டு, நித்யாவுக்கு எரிச்சல் அதிகமாகிறது. "ஹஸ்பண்டுக்கு வொய்பை எப்படித் தெரியும்னா..." பட்டென்று பதிலில் காட்டுகையில் தெருமுனை திரும்புகிறான் டிரைவர்.

"ஏய்யா தம்புசாமி.... எங்கே தொலைஞ்சு போயிட்டே..... வா..... வா.....!" பிரபுவைத் திரும்பிப் பார்க்காமலேயே விரைகிறான் நித்யா.

பொட்டில் தெறித்தது போல் இருக்கிறது பிரபுவுக்கு.

மீண்டு, அவன் நிமிர்ந்து பார்க்கையில் பாதி தூரம் போய்விட்டிருக்கிறான் நித்யா. அந்தப் பின்தோற்றத்தில் தெரிந்த உயரமும், கிட்டத்தில் பார்த்த முக லட்சணமும்.... சலவைக் கல்லில் செதுக்கிய கிரேக்கச் சிலை போல்..... இவன்.... இவன்.... காதம்பரியின்

கணவரு.... காதில் சரியாகத்தான் கேட்டாரு. டாக்டரென்றால் அவளைத்தான் சொன்னாரு. வேறு டாக்டர் யாராவது அங்கே இருக்கிறார்களா, இல்லை வேறு யாரையும் இல்லை. அவளைத்தான்.... காதம்பரியைதத்தான் மனைவியென்றான். அப்படியானால்.... அந்த அதிர்ச்சியிலும் சட்டென்று அவர்கள் அழகுப் பொருத்தத்தை ஒரு கணம் நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை பிரபுவுக்கு.

மனத்தில் சொல்லத் தெரியாத அவஸ்தை. சாப்பிட்டதாய்ப் பேர் பண்ணி. நட்டை அலைகையில், தூக்கம் வராமல் படுக்கையில் புரண்டு ஏதேதோ யோசனைகளில் மனம் அலைபாய்கையில் எல்லாம் வேதனை

கோமளா வரதன்



தொடர்ந்து பாதிக்கிறது.

இப்போதல்லவா புரிகிறது. அவள் மோதிரத்தை ஏன் வாங்கிக் கொள்ளவில்லையென்று.... மேலே விழுந்து பழகினாலும் நழுவி நழுவி போனது ஏனென்று....

மிஸஸ் இன்னார் என்று கணவன் பெயரையும் சேர்த்துப் போட்டுக் கொள்ளாவிட்டாலும், கல்யாணமானவள் என்று தெரிவித்திருந்தாலாவது இந்தக் குழப்பங்கள் நேர்ந்திருக்காது. எவ்வளவோ. சங்கடங்களைத் தவிர்த்திருக்கலாம்.

ஆமாம். அவள் ஏன் தன்னை 'மிஸ்' என்று சொல்லிக் கொள்ள வேண்டும்....

என்ன சங்கடமோ.... ஏன் தனியாக இருக்கிறீர்கள், அவர் வரவில்லையா என்று கேட்பார்கள். குழந்தையில்லையாவென்று துருவுவார்கள். மலடியென்பார்கள். அவன் தள்ளி வைத்துவிட்டான் போலிருக்கிறது என்று அனுமார் வால் போல் கதை கட்டினாலும் கட்டிவிடுவார்கள்.... என்றெல்லாம் நினைத்து, அனாவசியப் பேச்சுக்களை வளரவிடுவானேன், தவிர்த்துவிடலாமே என்று எண்ணியிருக்கலாம்.


அவனே கவனித்திருக்கிறானே, அவசியமிருந்தால்தான், அப்போதுங்கூட அளந்து தான் பேசுபவள் காதம்பரியென்று. இருந்தாலும்..... இருந்தாலும்.... மைசூர்க்காரர்களுக்கு இங்கிதம் கிடையாதென்று நினைத்துவிட்டாள்.

என்ன நினைத்தாளோ, அவனும் அப்படியொரு சுவாதீனம் எடுத்துக் கொண்டிருக்கக் கூடாதுதான். சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் அவள் பட்ட சங்கடங்களை எவ்வளவு ரசித்தான்.... சே!...

எப்படியொரு அறிவிலியாய் நடந்து கொண்டு விட்டான். இன்னும் வாலிப வயதில் பெண்களை ஏறெடுத்தும் பார்க்காத மனசு.... ஏனோ..... சேச்சே....!

இனிமேல்.... இனிமேல் என்ன செய்ய முடியும். அவளிடம் விவரமாய் விஷயத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். போதுமா..... தன் அதிகப்பிரசங்கி நடத்தைக்கும் மன்னிப்புக் கேட்டுக் கொள்வதுதான் சரி.... மனத்தில் தீர்மானம் உருவாக, சிகரெட்டுகள் கணவேகத்தில் புகைந்து கருகுகின்றன.

"ஏன்னம்மா காதம்பரி, என்ன ஆச்சு? இப்படி எங்களையெல்லாம் ஒரேயடியா



ஒதுக்கி வெக்கும்படி நாங்க என்ன தப்புப் பண்ணிட்டோம். கூப்பிட்டனுப்பிச்சாதான் வரணுமா....''

கூடத்தில் நுழைந்ததுமே விமலாவின் மாமியார் பிடித்துக் கொள்வதில் நியாயம் இருக்கத்தான் செய்கிறது.

எத்தனையோ நாளாயிற்று அவள் இவர்கள் யாரையும் சந்தித்து. எங்கும் போகவில்லை, போகப் பிடிக்கவில்லை. பார்க்க, பேச, பிடிக்கவில்லை.

என்னத்தைப் பேசுவது.... பேசிப் பெருமையடித்துக் கொள்ளும்படி என்ன நடந்திருக்கிறது. சமீபத்தில் நடந்ததெல்லாம் நித்யாவின் வருகைகளும், குத்தல்களும் ஊரிலிருந்து வக்கீலின் கவலைதரும் கடிதங்களும் தானே.... இதையெல்லாம் யாரிடம் சொல்லிக் கொள்ள முடியும்.

சொல்லி யோசனை கேட்க, ஆறுதல் பெறவெல்லாந்தான் அவளுக்கென்று யாருமில்லையே. இங்கே விமலாவுக்குக் கல்யாணமாகி எத்தனையோ வருஷங்களாகியும் குழந்தையில்லை. அப்படி குழந்தையில்லாதது கூட ஒரு குறையாக மாறி வாழ்க்கையில் குறுக்கிடவில்லை. இப்படியொரு நிறைவோடு வாழ்பவர்களிடம் அவள் குறைகளையெல்லாம் பகிர்ந்து கொள்ள முடியுமா....

சுதாரித்துக் கொண்டு, அவரைப் பார்த்துப் புன்னகைக்கிறாள்.

''தப்பு என்னுதுதாம்மா. நீங்கதான் மன்னிக்கணும்....''

''ஐய்யோ, உள்ளே வா. விமலா ஏற்கெனவே பொம்மையெல்லாம் வெக்க ஆரம்பிச்சுட்டா.....''

ம், மைசூரிலே தசரா என்றால் சும்மாவா, இன்னும் பத்து நாள் ஊர் அமர்க்களப்படும். போன வருடந்தான் பார்த்திருக்கிறாளே யென்று.... நினைத்துக் கொண்டே அவரைத் தொடருகிறாள். விமலா வேலையை விட்டு வந்து கட்டிக் கொள்கிறாள்.

''அடேயப்பா....கிராண்டாகத்தான் வெக்கறீங்க. எவ்வளவு படி.... பதினொண்ணு.... அது, அது மேலே என்ன பொம்மை.''

''அதான் மைசூர் கொலுவிலே விசேஷம், நெட்டி பொம்மை. ராஜா ராணியாட்டம் அலங்காரம் பண்ணி மேல் தட்டில ஜதையா அதைத்தான் முதல்ல வைப்போம். ராஜா ராணி கொலுவிருக்க, பாக்கியெல்லாம் அவங்க பிரஜைங்கற மாதிரி.....''

''ஓ! அதான் கொலுவா.....''

அவள் ஒவ்வொன்றாய் விவரம் கேட்டு முடிக்கையில், ராஜப்பாவும் பிரபுவும் கையில் கொத்து கலர் பேப்பர்களுடன் நுழைகின்றனர். காதம்பரியைக் கண்டதும் முகத்தில் பளிச்சிட்ட புன்னகை தேய அவன் சாதாரணமாய் 'ஹலோ' சொல்லி விட்டு தோரணங்களைக் கட்ட உதவுகிறான். இவன் இங்கே வந்து போய்க் கொண்டுதான் இருக்கிறான். அவளைத்தான் எட்டிக் கூட..... அடிப் பைத்தியக்காரி! ஒருமுறைக்கு இரண்டு முறையாக மூஞ்சியிலடித்த மாதிரி நடந்து கொண்ட பிறகு....

அவளும் கொஞ்சம் ஒத்தாசை செய்ய விறுவிறுவென்று வேலைகள் நடக்கின்றன.

ஒருவழியாய் முடித்துவிட்டு, ராஜப்பா, பிரபு, காதம்பரி மூவரும் வெளியே வராந்தாவில் வந்து உட்காருகிறார்கள். சொல்லி வைத்தாற்போல் ஒரு போன் வந்து ராஜப்பா எழுந்து போக, புரட்டிக் கொண்டிருந்த பத்திரிகையைப் போட்டுவிட்டு பிரபு காதம்பரியைப் பார்க்கிறான். அவள் தலையைத் தாழ்த்திக் கொள்ளுகிறாள்.

"ஒரு விஷயம் கேக்கணும், கேக்கலாமா?"

புதிய கருத்தடைச் சாதனம்!

கருத்தடை மாத்திரைகளின் பின்விளைவால் உடல் பருத்துப் பல்வேறு உபாதைகளால் அவதியுறும் பெண்களுக்கும், 'லூப்' பொருத்திக் கொண்டு அதிகமான உதிரப் போக்கால் அல்லல்படும் பெண்களுக்கும் வரப்பிரசாதமாக இப்போது அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது நார்ப்ளான்ட் (Norplant) எனப்படும் புதிய கருத்தடைச் சாதனம். டாக்டர் ரமணி சிவராமனிடம் இதுபற்றிக் கேட்டபோது —

''தொடர்ந்து ஐந்து வருடங்களுக்குக் குழந்தை உண்டாவதைத் தடுக்கும் இச்சாதனம் பின்லாந்தில் உற்பத்திசெய்யப்படுகிறது. கருத்தடை மாத்திரைகளில் இருக்கும் 'லெவான்' அல்லது 'ஜெஸ்டெரால்' என்னும் மருந்து இங்கே 2.4 மி.மீ. அளவில் தீக்குச்சி வடிவத்தில் உள்ள இரண்டு சைலாஸ்டிக் குழாய்களில் (ஒவ்வொன்றிலும் முப்பத்தைந்து மில்லி கிராம்) நிரப்பப்படுகிறது. பிறகு இக்குழாய்களைக் கையின் மேற்புறத்தில் முட்டிக்குச் சற்று மேலாக உள்ளே செலுத்தி விடுகிறார்கள். உடலின் உட்சென்ற குழாயிலிருந்து மெதுவாக வெளிப்படும் கருத்தடை ஹார்மோன் கருத் தரிப்பைத் தடுக்கிறது. கருப்பையின் உட்புறத் திசுக்களைக் கடினமாக்கி, அவை கருவைக்காப்பாற்றுவதிருக்கச் செய்கின்றன. உயிரணுக்கள் கருப்பையின் உள்ளே செல்வதையும் கட்டுப்படுத்துகின்றன. மாத்திரைகள் அல்லது லூப் போல் உடலுக்கு எந்தப் பின் விளைவுகளையும் இது அளிக்காது என்று நம்பப்படுகிறது.

— நிர்மலா சக்ரவர்த்தி



ஒரு புது எவர்சில்வர் தட்டில் ஓரிரண்டு சொட்டுக்கள் நல்லெண்ணெய் விட்டுக் கொண்டு, தட்டு பூராவும் படும்படி விரலால் நன்றாகத் தடவவும். பிறகு மஞ்சள் பொடியை லேசாக எல்லா இடத்திலும் தூவவும். சமமாக எல்லா இடத்திலும் போட்டபின் தட்டைக் கவிழ்த்தால் அதிகப்படி உள்ள பொடி கீழே விழுந்து விடும். பிறகு ஒரு தீக்குச்சியினால் அந்தப் பொடி மேல் கோலமோ, டிஸைனோ வரைந்து கொஞ்சம் உயரமான இடத்தில் (லைட்டுக்கு அடியில்) வைத்துவிட்டால் பிரமாதமாக இருக்கும். மஞ்சள் கலருக்கு நடுவில் எவர்ஸில்வர் கலர் பளபளப்பாக மின்னும். எத்தனை நாளானாலும் கெடுவதில்லை. பார்த்துப் பார்த்து அலுத்து விட்டால் குளிக்கும் போது மஞ்சள் பொடியைத் தேய்த்துக் கொண்டு தட்டை அலம்பிவிட்டு வேறு டிசைன் போட்டு வைத்து விடலாம். செலவே இல்லை. உபயோகப்படுத்திய காப்பிப் பொடியை உலர வைத்து இதே மாதிரி செய்யலாம்.

பொடிக் கோலம் போடும் போது இழையைச் சிறிது தடிமனாக இருக்கும்படி போட்டுவிட்டு, தீக்குச்சியால் மாவு மேலேயே கோலத்தின் போக்கில் கோடு இழுத்துக் கொண்டே வந்தால், கோலம் பார்க்க அழகாய் இருக்கும்.

கோலம் போடும் அரிசி மாவுடன் கொஞ்சம் மைதா மாவைக் கலந்து கொண்டு ஈரத் தரையில் கோலம் போட்டால் கோலம் அழியாமல் தரையில் ஒட்டிக் கொண்டு இருக்கும்.

காலண்டரில் வரும் ஸ்வாமி படம் அல்லது இயற்கைக் காட்சிகள் இவைகளை (அதிகமாக அடைசலாக இல்லாததாய் தேர்ந்து எடுத்துக் கொண்டு) ஒரு தாம்பாளத்தில் ஒட்டிக் கொள்ளவும். தண்ணீரான கோந்துக் கரைசலை படத்தின் மேல் தடவி விட்டு கலர்ப் பொடியை டிஸைன் மாதிரி மேலேயே பேப்பர் தெரியாதபடி தூவி விட்டால் 'நீ எப்போது ரங்கோலி கோலம் கற்றுக் கொண்டாய்' எனக் கொலுவுக்கு வரும் சிநேகிதிகள் ஆச்சரியப்பட்டுப் போவார்கள்.

— பிரகதம் கிருஷ்ணமூர்த்தி

''ம்....''

''தப்பா நினைக்க....''

இதென்ன இப்படிக் கேட்கிறான். அவள் அவனை நிமிர்ந்து பார்க்கிறாள்.

பிறகும் அவன் தயங்கி —

''அவர்.....அவர் பேரென்ன......?''

அவனுக்குப் புரியவில்லை.... ''யாரு?''

''புரியல்லே.... ஒருத்தர்தானே இருக்க முடியும்?''

திடீரென்று அந்தச் சந்தேகம் எழுகிறது. இருந்தாலும் யோசனையோடு புருவத்தை நெறிக்கிறாள். ''யாரைக் கேக்கறீங்க?''

''உங்க..... உங்க......''

சட்டென்று அவள் அதிர்ந்து போனது வெளிப்படையாகத் தெரிகிறது.

''ஸாரி, ரொம்ப ஸாரி.... விஷயந் தெரியாம, இத்தனை நாள்..... நான்....''

அவள் பல்லைக் கடித்துக் கொள்கிறாள்.

சில நிமிஷங்களுக்குப் பின் எழுந்திருக்கிறாள்.

''ப்ளீஸ்.... நாம கொஞ்சம் பேசலாமா?''

அவன் சட்டென்று எழுந்திருக்கிறான். உள்ளே போய்ச் சொல்லிவிட்டு வருகிறான். வந்து, ''கம், லெட் அஸ் கோ'' என்கிறான்.

கேட்டருகில் வந்ததும், ''எங்கே போகலாம்.... உங்க வீட்டுக்கு....?''

அவன் யோசிக்கிறான்.

''இல்லே..... வேணாம். உங்க வீட்டுக்கு. இப்..... இப் யூ டோண்ட் மைண்ட்....''

தன்னுடையவளாக, தனக்குரிமையாக்கிக் கொண்டு, தன் வீட்டுக்கு அழைக்க விரும்பியவளை, மாற்றான் மனைவியாக அழைக்க நேர்ந்திருக்கிறதே..... யென்று நினைத்துக் கொண்டே காரைக் கிளப்புகிறான் பிரபு!

(தொடரும்)

கொசுக்கள் உங்கள் தூக்கத்தைக் கெடுக்கின்றனவா ?



உபயோகியுங்கள் ஓடோமாஸ்–
உறங்குங்கள் நிம்மதியாக

இப்போது
100 கிராம்
எக்கானமி
பேக்கிலும்
கிடைக்கிறது



ஓடோமாஸ்
கொசுக்களின் எதிரி

BALSARA

CHAITRA-B BLS 546 TAM

தபால் மூலம் சித்திரக்கலை !

SANTHANU'S CHITRA VIDYALAYAM
1957 25 1982
SILVER JUBILEE



படம் வரைய,
வர்ணம் தீட்ட வேண்டுமா?

28 வருடங்களுக்கும் மேலாக, தங்கள்
நம்பிக்கைக்கும், திறமைக்கும் பெயர் பெற்ற

சந்தனுவின்
சித்திர வித்யாலயத்தின் மூலம்

தபால் மூலம், தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு,
ஹிந்தி ஆகிய 5 மொழிகளில் வீட்டிலிருந்தபடியே
தங்களின் சித்திர ஈடுபாட்டையும், திறமையையும்
பயனுள்ள முறையில் முன்னேற்றிக் கொள்ளலாம்.

விவரங்களுக்கு 90 பைசா தபால் தலைகளுடன் விண்ணப்பிக்கவும்.

சந்தனுவின் சித்திர வித்யாலயம்
C/o. சித்திரக் குள்ளன் (G), 179 சிங்கண்ண தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-600 002.

சமையலறைக்

பதில்கள்: இன்ஸ்டிடியூட் ஆஃப் ஹோட்டல் மானேஜ்மெண்ட் கேடரிங் டெக்னலஜி & அப்ளையட்நியூட்ரிஷன் கல்லூரியின் நியூட்ரிஷியன் பிரிவின் தலைவர் — திருமதி மல்லன்.

கேள்வி: நான் வைத்திருக்கும் குக்கரின் அடியில் கறுப்பாக ஒரு படிவம் படிந்திருக்கிறது. இதை நீக்கவும், குக்கர் பராமரிப்பு பற்றியும் விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

— ஜி.எஸ். பத்மினி, தென்காசி.

பதில்: குக்கரில் சமையல் செய்யும்போது நாம் கவனிக்க வேண்டியவை இரண்டு. ஒன்று உபயோகிக்கும் நீரின் தன்மை. மற்றொன்று நீரின் அளவு. உப்பு நீரையோ, கடுக்கும் நீரையோ (Hard water) உபயோகிக்கும்போது, அதிலுள்ள உப்பு சத்துக்கள் குக்கரின் உலோகத்தோடு சேர்ந்து சூடாவதால், இரசாயன மாற்றம் ஏற்பட்டு, குக்கர் கறுத்து விடுகிறது. அதேபோல, குக்கரில் சமைக்கும் போது தண்ணீர் வற்றிவிட்டால், பாத்திரம் அடிபிடித்து கறுத்துவிடும். எனவே, சுத்தமான நீரை பயன்படுத்துவதாலும் சமையல் பாத்திரத்தை சமைக்கும் முன்பு, சிறிய குக்கர்



தட்டை வைத்துவிட்டு அதன் மேல் பாத்திரத்தை வைத்து, அப்பாத்திரத்தின் பாதிக்கு குக்கரில் தண்ணீர் ஊற்றியும், குக்கர் அடிபிடிக்காமல் கறுக்காமல் பாதுகாக்க முடியும்.

கறுத்த பாத்திரங்களை தேய்க்க, எலுமிச்சை சாறு கலந்த உப்பால் தேய்ப்பதாலும், கோலமாவும், சாம்பலும் கலந்து தேய்ப்பதாலும் (Abrasive action ஏற்படும்.) அல்லது பிரத்யேக கிளீனிங் பவுடர்களை உபயோகிப்பதாலும் குக்கரை பளபளப்பாக வைத்திருக்கலாம். அப்படித் தேய்க்கும்போது, 'ஸ்டீல் உல்', 'ஒயர் பிரஷ்', அல்லது தேங்காய் நார் பயன்படுத்துங்கள்.

கேள்வி: சோன்பப்டி செய்வது எப்படி? அதற்கான அளவுகளோடு விளக்கி எழுதவும்.

— திருமதி சாவித்திரி சுப்பிரமணியன், மேட்டூர் அணை — 1.

பதில்: 'சோன்பப்டி'க்குத் தேவையானவை:

மைதா — 100 கிராம்
சர்க்கரை — 300 கிராம்
டால்டா — 300 கிராம்
ஏலக்காய் — 2 (வாசனைக்காக)
முந்திரி — 10 கிராம் (அழகுபடுத்த)
எலுமிச்சம்பழம் — கால் மூடி

செய்யும் விதம்:

டால்டாவை உருக வைத்து, நன்கு சலித்த மைதா மாவை டால்டாவுடன் கலந்து இருபத்தைந்து முதல் முப்பது நிமிடம்வரை கிளறி விடவும். பின்னர், ஜீரா தயாரிக்க, 300 கிராம் சர்க்கரையில் 125 மில்லி லிட்டர் தண்ணீரை சேர்த்து அதில் எலுமிச்சம் பழத்தின் கால் மூடியைப் பிழிந்து, அடுப்பில் வைத்து ஜீரா தயாரிக்கவும். இந்த ஜீரா பாகின் தரம் உருட்டினால் சிறு உருண்டைகளாக, கெட்டியாக வரவேண்டும்.

பின்பு மைதாவின் மேல் கொழுப்பு இருக்குமானால் அதை நீக்கிவிட்டு, நன்றாக ஆறவிடவும். இந்த மைதாவின் சூடு முழுவதுமாக ஆறிய பின், ஜீராவை அதோடு கலக்கவும். ஜீராவை மைதாவோடு கலக்கும்போது இரண்டும் முழுவதுமாக ஆறி இருக்க வேண்டும். (Room temparature) இந்த இரண்டையும் ஊற்றி, இரண்டு சதுர கரண்டிகளைக் கொண்டு முன்னும் பின்னுமாக மாறிமாறி கிளறினால் கேக் போல கெட்டியாக வரும். இப்படிக் கிளறினால்தான் சோன்பப்டி திரிதிரியாக வரும்.

குறிப்பு: இதில், பொருட்களின் அளவு, ஜீராவையும் மைதாவையும் கலக்கும்போது ஆறிய நிலை, அடுப்பின் லேசான சூடு, மற்றும் ஜீரா, மைதாவை முன்னும் பின்னுமாக கிளறுவது — எல்லாமே மிகுந்த கவனத்தோடு செய்ய வேண்டும். எது தவறினாலும் 'சோன்பப்டி' சரியாக வராது.

கேள்வி: நாங்கள் கிரைண்டர் வாங்கி ஐந்து வருடமாக எந்தத் தொந்தரவும் இல்லை. ஆனால், தற்போது மாவு அரைக்கும்போது டிரம்மிற்கும், கல்லிற்கும் இடையே ஒழுக ஆரம்பிக்கவே, மெக்கானிக்கிடம் கொடுத்த போது, இடையில் 'ஒயிட்' சிமெண்ட் அடைத்துக் கொடுத்தார். ஆனால் மறுநாள் பழைய படி ஒழுக ஆரம்பித்துவிட்டது. இதற்கு என்ன செய்யலாம்?

— பாலா ருக்மணி, சிவகங்கை.

பதில்: இயந்திரத்தில் கோளாறு உள்ளதால் என்றால் யோசனை மட்டுமே கூற முடியும். இதற்குத் தாங்கள் வாங்கிய கிரைண்டர் நிறுவனத்தின் மெக்கானிக்கை அழைப்பதே சிறந்தது. அந்த டிரம்மை மாற்றும்படி கேட்டுக் கொள்ளலாம். அல்லது, அந்த டிரம்மை கல்லுடன் நெருக்கமாக இருக்குமாறு சுற்றி வர தட்டிவிட்டால் ஒழுகுவதைத் தவிர்க்க முடியும் என்று தோன்றுகிறது.

கேள்வி: குக்கர் பாத்திரத்தின் ஒரு தட்டு மட்டுமே கறை பிடித்துவிடுகிறதே. ஏன்? அதை நீக்க என்ன வழி?

— டி.என். லக்ஷ்மி, சென்னை—84.

பதில்: ஒரே பாத்திரத்தை குக்கரில் வைத்துச் சமைப்பதால் அப்படி ஆகிவிடும். எனவே, அந்தப் பாத்திரத்தை மாற்றி, குக்கரின் கீழே வேறு பாத்திரத்தை வைத்து இதை மேலே மாற்றிவிடவும். இப்படி மாற்றி வைப்பதால் பாத்திரம் கறை படியாமல் பாதுகாக்கலாம். மேலே வைக்கும் பாத்திரத்தில் நீர் ஊற்றாமல் சமைக்கும் பொருட்களை வைக்கலாம். உதாரணமாக உருளைக் கிழங்கை வேக வைப்பது, கீரை வகைகளை வேக வைப்பது. முன்னரே குறிப்பிட்டுள்ளபடி, எலுமிச்சை சாறு கலந்த உப்பு, கிளீனிங் பவுடர் அல்லது சாம்பல் கலந்த கோலமாவு ஏதாவது ஒன்றை தேங்காய் நார், 'ஸ்டீல் உல்' அல்லது 'ஒயர்' பிரஷ்ஷால் தேய்த்தால் பாத்திரங்களில் உள்ள கறைகளைப் போக்கலாம்.

சந்தேகங்கள்

கேள்வி: எனது எவர்சில்வர் தோசைக் கல்லின் அடியில் செப்பு உள்ளது. இதில் தோசைகளை சுடும்போது தீய்ந்தும் எடுக்க வராமலும் போய்விடுகின்றன. சரியான முறையில் இந்த தோசைக் கல்லில் எப்படி தோசை வார்ப்பது என்பதை தெளிவுபடுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

— திருமதி ஜி. பிலோமினா, திருச்சி—3.

பதில்: தாங்கள் வைத்திருக்கும் தோசைக் கல்லின் அடியில் செப்பு இருப்பதாக குறிப்பிட்டு இருக்கிறீர்கள். செப்பின் தன்மை, சீக்கிரம் சூட்டை கிரகிப்பதோடு, வெகு நேரம்வரை சூட்டை தக்க வைத்திருக்கும். எனவே தோசை வார்க்க, அடுப்பை குறைந்த சூட்டில் (Sim) வைக்கவும். தோசை வார்க்கும் முன்பு, எண்ணெய் தடவும்போது சிறிது தண்ணீரையும் சேர்த்து தடவுங்கள். தோசை வார்த்த பிறகு உப்புத் தாளை காய்ந்த துணி வைத்துத் தேய்ப்பதால் அதிலுள்ள ஒட்டும் தன்மை (Stickiness) நீக்கப்பட்டுவிடும். கூடுமானவரை தோசைக்குரிய கல்லை சப்பாத்தி போன்ற மற்ற உபயோகங்களுக்கு பயன்படுத்த வேண்டாம். வெளிநாடுகளில் இதுபோலஒவ்வொன்றிற்கும்தனித்தனியாக 'பான்'களை உபயோகிப்பது போல நாமும் பின்பற்றினால் நல்ல பலனைப் பெறலாம். இப்படிச் செய்வதால், அந்தந்த சமையலை சீராகவும் சரியாகவும் செய்ய முடியும்.

கேள்வி: 'கேக் ஓவ'னில் வெஜிடெபிள் பஃப் (காரம்) செய்யும் முறை விளக்கவும்.

— எஸ். ஜெயந்தி, கோயம்பத்தூர்—20.

வெஜிடபிள் பஃப் (காரம்)


பஃப் பேஸ்டிரி செய்யத் தேவையானவை:

மைதா — 450 கிராம்
உப்பு — 1 டீஸ்பூன்
எலுமிச்சம்பழச்சாறு — 2 டீஸ்பூன்
வெள்ளை வெண்ணெய் (Morgurine) — 450 கிராம்
குளிர்ந்த நீர்

செய்யும் விதம்: மாவில் உப்பைக் கலந்து சலிக்கவும். இதில் குளிர்ந்த நீரையும் எலுமிச்சைச் சாற்றையும் ஊற்றி மிருதுவாக ஆகும் வரை பிசைந்து, இதை ஈரத் துணியில் முப்பது முப்பத்தைந்து நிமிடம் மூடி வைக்கவும். வெண்ணெயை வெண்ணெய் பேப்பரில் வைத்து மேலே ஒரு டேபிள் ஸ்பூன் மைதாவை தூவி, பிரிட்ஜில் வைத்துவிடவும். பிறகு பிசைந்த மாவை சதுரமாக ஆக்கி சிறிது வெண்ணெயை அதன்மேல் வைத்து சதுர மாவின் நான்கு மூலைகளையும் சேர்த்துவிடவும். பிறகு இதைத் திருப்பிப் போட்டுக் கொண்டு, சப்பாத்திக் கல்லில் வைத்து நீள் சதுரமாக (Rectangular) இட்டுக் கொண்டு, அதைமூன்றாகமடிக்கவும். அப்படிச்செய்யும் போது வெண்ணெய் வெளியே வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த 'பேஸ்டரியை' பிரிட்ஜில் பதினைந்து நிமிடம் வைக்கவும்.பிறகு மீண்டும் எடுத்து வெண்ணெய் சிறிது வைத்து முன்னர் சொன்னது போல இட்டுப் பதினைந்து நிமிடம் பிரிட்ஜில் வைக்கவும். எல்லா வெண்ணெயும் இப்படி சிறிது சிறிதாக இட்டு பிரிஜ்ஜில் வைத்த பிறகு, கடைசியில் ஒரு மணி நேரம் அதை அப்படியே வைத்துவிடவும். ஒரு மணி நேரம் ஆனவுடன், மீண்டும் இட்டு, தேவையான அளவில் துண்டங்களாக்கி வெட்டி, வெஜிடெபிள் மசாலா, பட்டாணி மசாலா அல்லது உருளைக் கிழங்கு மசாலா ஏதாவது ஒன்றை மாவில் வைத்துப் பாதியாக மடித்து ஓரங்களைத் தண்ணீர் தொட்டு ஒட்ட வைக்கவும். மேலே சிறிது எண்ணெய் பூசி, 230 டிகிரி சென்டிகிரேட் (450° F)டில் முதலில் பேக் செய்து, பிறகு 140 டிகிரி சென்டிகிரேட் (300° F)டில் பேக் செய்யவும். இப்படி முறையாக செய்யப்படும் பஃப்கள் நன்றாக, சுவையாக இருக்கும்.

தொகுப்பு: எஸ். ஆர். சங்கர்

நூறு ஆண்டுகளுக்கு முன்பு தன் மைத்துனர்கள்
அளித்த வரவேற்பு விழாவில் கொள்ளுத்தாத்தாவின்
மாப்பிள்ளைக்கோல நினைவுகள் பசுமையாக இருக்கின்றன.



1885ல் எடுத்த படம் – ஹைதராபாத்தைச் சேர்ந்த லாலா தீன்தயாளின் போட்டோ ஆல்பத்திலிருந்து

இன்றும் அத்தோற்றத்தைப் பசுமையாக நினைவுகூர வைப்பது
பிளாக் & ஒயிட் படங்களே!

உங்கள் குடும்ப போட்டோ ஆல்பத்தைப்
புரட்டிப் பாருங்கள்!
பல்லாண்டுகளுக்கு முன் எடுத்த பிளாக் & ஒயிட்
படங்கள் இன்றும் கருக்கழியாமல்,
மங்காமல் இருப்பதைக் காண்பீர்கள்.
அதுவே பிளாக் & ஒயிட் படங்களின் சிறப்பு! அறுபது, எழுபது
ஏன் எண்பது வருடங்களானாலும் மங்காது.
சொல்லவும் வேண்டுமா?
காலத்தை வென்றிடும் பிளாக் & ஒயிட் படங்களே
உங்களது தேர்வாக இருக்க முடியும்.

அழியாத நினைவுகளுக்கு
காலத்தால் அழியாத பிளாக் & ஒயிட் படங்கள்!

INDU





இந்து
பிளாக் & ஒயிட்
ரோல் பிலிம்
மற்றும் ப்ரோமைடுகள்

Sista's - HPF.552.86 TM A



உங்களுக்கு முகப்பரு பிரச்னையா?

வெட்ட வெட்ட முளைக்கும் சூரன் தலை போல ஒரு இடத்தில் மறைந்தால் இன்னொரு இடத்தில் தோன்றி, தன் அடையாளத்தை கறுப்பாக விட்டுச் சென்று, முக அழகையே கெடுக்கும் பருக்களை எப்படி எதிர்ப்பது?

தோல் வைத்திய நிபுணர் டாக்டர் வை.சு. சுப்ரமண்யத்திடம் (விழுப்புரம்) கேட்டபோது —

பருவ வயது அடையும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் பொதுவாக ஏற்படக் கூடிய பரு, கரும்புள்ளிகள் பிரச்னையை வராமல், வரவிடாமல் தடுக்க முடியுமா?

பருவம் அடைவது என்பது, sex glands function செய்து உடலில் ஏற்படும் சில மாறுதல்கள். ஆடவருக்கும் பெண்டிருக்கும் பருவ ரோம வளர்ச்சி, பெண்கள் பூப்படைதல், ஆண்களுக்குக் கண்டம் உடைதல் போன்றவை ஏற்படுகின்றன. இம்மாறுதல்கள் நடக்கும்போது, நம் உடலில் உள்ள சில எண்ணெய் சுரப்பிகள் தூண்டப்பட்டு வேலை செய்வதனால் பரு வருகிறது. இதை ஒரு பிரச்னையாகவே எடுத்துக் கொள்ளக்

சொல்ல விரும்புகிறோம்...

* இம்மாத இல்லத்தரசிகள் வெளியிட்டிருக்கும் முருங்கை இட்லி, முருங்கைக் கீரை கட்லெட், முருங்கைக்காய் ஊறுகாய், முருங்கை புளிமசியல் செய்முறை குறிப்புகளைப் படித்த என் மனைவி முருங்கை மரத்தையே மொட்டையாக்கி விட்டாள்; போங்கள்.

எ. அனீஸ், கல்யாணபுரம்.

* குடும்ப வாழ்க்கையில் ஏற்றத் தாழ்வுகள், நிம்மதியற்ற டென்ஷன்கள் எப்படி ஏற்படுகிறது என்பதை ஸ்நேஹாவின் கட்டுரையில் தெளிவுபடுத்தியிருக்கிறார். நல்ல தோழமையுள்ள கட்டுரை.

திருமதி ஹபீப் மைதீன், வல்லம்.

* பேத்தி மேல் வைத்திருந்த பாசத்தால் பொருளையும் இழந்து கூடவே மகன், மருமகள் இருவரின் அவச் சொல்லுக்கும் ஆளாகி நின்ற தாத்தாவின் பரிதாப நிலையை (பழைய சைக்கிள்) கட்டிக் காட்டி கண்ணில் நீரை வரவழைத்துவிட்டார் கமலா நடராஜன்!

வஸந்தா பரமசிவம், மதுரை — 1.

* 'காயம் பட்டால் உடனே கவனியுங்கள்' கட்டுரையைப் படித்தவுடனே பத்திரப் படுத்தி விட்டேன். வீட்டில் வைத்திருக்க ஒரு டாக்டரைத் தந்த மங்கையர் மலருக்கு நன்றி!

ஜே. பாலசந்திரன், நீடாமங்கலம்.

* ஸ்நேஹா அவர்களின் 'ஹலோ உங்களுக்குத்தான் இந்தக் கட்டுரை!' — 'மங்கையர் மலர்' வாசகர்கள் அனைவரையும் கவரும் விதத்தில் தொடர்ந்து வெளிவருகிறது. மிக அருமையாக எழுதி வருகிறார் ஸ்நேஹா. வெல்டன்! கீப் இட் அப் மேடம்!

வித்யா, தர்மபுரி — 2.

* செப்டம்பர் இதழில் உள்ள "சொல்லுங்கள் பார்க்கலாம்" என்ற பகுதியில், காலம் சென்ற தளபதி ஏ. எஸ். வைத்யாவை அவருடைய பதவியில் இரண்டு படிகள் இறக்கி விட்டீர்.

மேஜர் தி. ஆதிராஜ், சென்னை.

* ரேவதி திருமணத்திற்குப் பிறகும் நடிப்பார். அதற்கு ஏதாவது நொண்டிச் சாக்கு சொல்வார். குடிகாரன் பேச்சும், நடிகை பேச்சும் ஒன்றுதான்.

சித்ராதேவி, ஈரோடு.

* ரேவதியின் பேட்டி ஒரு குடும்பத் தலைவியின் பேட்டியை விட மிக அருமை. ரேவதி திருமணத்திற்கு நல்வாழ்த்துக்கள்.

கே. ரத்தினகுமார், கோவை — 1.

* சின்னப்பையனின் சின்னக் காயம் தானே என்று சிறிது கவனக் குறைவாக இருந்துவிட்டால் அதுவே டெட்டனஸ் என்ற கடுமையான நோய்க்குக் காரணமாகிறது என்பதை எங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தது 'காயம் பட்டால் கவனியுங்கள்' கட்டுரை. கத்தரித்து வைத்துக் கொண்டோம் அந்தப் பயனுள்ள மருத்துவக் கட்டுரையை!

கண்ணன், வடுவூர்.

* மாணவர்கள் இல்லாத பெற்றோர்களுக்கான பட்டிமன்றம் மிகவும் பயனுள்ள ஒரு நிகழ்ச்சியாகும். மற்ற பள்ளிகளும் இவர்களைப் பின்பற்றலாமே!

ஆர். மைதீன் பாட்சா, வல்லம்.

* மனைவியைக் கணவன் அடிக்கலாமா? என்று பெண்களுக்குப் பரிந்து கொண்டு பேட்டி வெளியிட்டுள்ளீர்கள். ஏன் சார், பெண்களிடம் உதை வாங்கும் அப்பாவிக் கணவன்மார்கள் சிலரையும் பேட்டி கண்டு எழுதினால் குறைந்தா போய்விடுவீர்கள்!

ஆர். அரிகோபி, குடியாத்தம் (வ. ஆ.)

* கணவன் மனைவியை அடிக்கலாமா — பேட்டியில்விட்டுவேலைசெய்யும்லட்சுமியின் கதியைப் படித்துக் கலங்கினேன். அத்தனை அடி பட்டபோதும், தன் குழந்தைகள் தானே தலையெடுக்க வேண்டும் என்ற நம்பிக்கையின் ஒளியில், வாழ்வை ஓட்டிக் கொண்டிருக்கும் அந்தப் பொறுமையின் சின்னத்தின் வாழ்வில் நிச்சயம் ஒரு நல்லவித முன்னேற்றம் வரவேண்டும்; வரும்!!

ரேவதி ஸ்ரீனிவாசன், ஈரோடு — 9.

இதற்கு என்ன செய்வது?



ர. உமாசங்கர், குடியாத்தம்—2.

நகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் (புறம்போக்கு) நூல் நிலையம் வைக்கிறேன் என்று ஒரு கட்டடத்தை எழுப்பி அதில் வெறும் தினசரிகளை மட்டும் (5 தினசரிகள் மட்டும்) போட்டு வந்தார்கள். இந்த இடம் தொழில் துவக்கினால் நல்ல வருமானம் கிடைக்கக் கூடியது. ஆகையால் படிப்பகத்தின் பாதி இடத்தில் இரண்டு கடைகள் கட்டி, வாடகைக்கு விட்டுள்ளார்கள் படிப்பகத்தார்கள். இந்த வாடகைப் பணத்தை தனது சொந்தச் செலவுக்குப் பயன்படுத்துகிறார்கள். இது சம்பந்தமாக சட்டம் என்ன சொல்லுகிறது என்பதைத் தெரிவிப்பீங்களா?

புறம்போக்கு நிலங்கள் அரசாங்கத்துக்குச் சொந்தமானவை. கட்டிடத்தை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பது பற்றி நகராட்சிக்கும், நீங்கள் குறிப்பிட்டிருக்கும் நூலகத்திற்கும் எப்படி ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது எனத் தெரியவில்லை. அதை வைத்தே முடிவு செய்ய முடியும். அப்படி முறைகேடாகப் பயன்படுத்தப்படுமானால் நீங்கள் நகராட்சிக்கு எழுதலாம். நகராட்சி தான் நூலகத்தார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வி. துரைராஜ், சீர்காழி

1956க்குப் பின், ஒரு பெண் தன் பரம்பரைச் சொத்தைத் தனக்குப் பின் தன் இஷ்டம் போல் எழுத சட்டப்படி உரிமை உள்ளதா?

ஒரு பெண் பரம்பரைச் சொத்தில் தனக்கு வருகின்ற பாகத்தை 'செட்டில்மெண்ட்' செய்யலாம்.

...... பம்பாய்.

எனக்கு வயது நாற்பது. எனக்கு ஐந்து பிள்ளைகள். என் மாமியாருக்கு நான்கு பிள்ளைகள். நான் ஒரு விதவை. மாமனார் கிடையாது. வீடு மாமியார் பெயரில் இருக்கிறது. அந்த வீடு விற்றால் எனக்கும் ஒரு பங்கு உண்டா? அல்லது என் பிள்ளைகள் மேஜரானால்தானா? நான் அம்மா வீட்டில் கூட்டுக் குடும்பமாக இருக்கிறேன். எனக்கு என்று தனி வீடு வாசல் இல்லை. பிள்ளைகள், படிப்பதற்கு அசௌகரியமாக இருக்கிறது. நான் வீட்டின் பெயரில் வக்கீல் நோட்டீஸ் விடலாமா?

உங்கள் குழந்தைகள் மைனர்களாக இருப்பதால், இயற்கை கார்டியனாகிய நீங்கள், அந்த வகையில் நீதிமன்றத்தை அணுகலாம். உங்கள் பாகத்தைக் கேட்டு வக்கீல் நோட்டீஸ் அனுப்பலாம்.

பிரேமா, நாமக்கல்.

உம்மிடியார் ஷாப்பில் சென்டரில் மாதம் ரூ ஐம்பது வீதம் நகை சேமிப்பிற்கு அனுப்பினேன். அது இரண்டு வருடங்களுக்கு முன் முடிவடைந்தது. அவர்களிடமும் ஜூலை 14ல் நகை பெற்றுக் கொள்ளலாம் என்று கடிதம் வந்தது. எனக்கு விருப்பமான நகையை அனுப்புமாறு நானும் கடிதம் எழுதினேன். அது இல்லாவிட்டாலும், அவர்களால் அனுப்பக் கூடிய — ரூ 750 பெறுமானமுள்ள வேறு எந்தத் தங்க, வெள்ளியினால் ஆனதைக் கொடுத்தாலும் போதும் என்றும் குறிப்பிட்டேன். எங்கள் மாமனாரும் இரண்டு தடவை பஸ்ஸிற்கு செலவு செய்து கொண்டு நேரிலேயே கேட்டுவிட்டும் வந்தார். அவர்கள் ஏதாவது சொல்லி அனுப்பி விடுகிறார்கள்.

நானும் வருத்தப்பட்டும், கோபப்பட்டும் எத்தனையோ கடிதங்கள் எழுதிவிட்டேன். இரண்டு வருடங்களுக்கு மேலாகியும் நான் கட்டிய தொகை வந்து சேரவில்லை. இந்த வருடம் ஏப்ரல் 14ம் தேதி ரூ 100 அனுப்பி இனி கொஞ்சம் கொஞ்சமாக கொடுத்து விடுவதாக எழுதியிருந்தார்கள்.

இப்பொழுது மேலும் நான்கு மாதங்கள் சென்றும், எத்தனையோ கடிதங்கள் எழுதியும் மீதி ரூ 650க்கு எந்தவிதமான விவரமும் தெரியவில்லை.

எனக்கு நான்கு பெண் குழந்தைகள். வருங்காலத்தில் இவர்களது தேவைகளை ஒரேயடியாக சமாளிக்க முடியாது. எனவே சிறுகச் சிறுக சேமிக்கலாம் என்ற பேராசையினால் இவ்வாறு மோசம்போனேன். (நீங்கள், இந்த மாதிரி நிறுவனங்களிடம் எத்தனை தடவை பெண்கள் ஏமாறினாலும், புத்தி வருவதில்லை என முணுமுணுப்பது தெரிகிறது, என்ன செய்ய!?) நான்கு பெண் குழந்தைகளுக்குத் தாயான என் நிலையை யோசித்து உங்களால் எனக்கு ஏதாவது உதவ முடிந்தால் தயவு செய்து முயற்சித்துப் பாருங்களேன்!

நீங்களே உங்கள் தவறை ஒப்புக் கொள்கிறீர்கள். அப்புறம் நாங்கள் சொல்ல என்ன இருக்கிறது? உங்கள் கடிதத்தை உம்மிடியார் ஷாப்பிங் சென்டருக்கு அனுப்பியுள்ளோம். தகவல் வந்ததும் தெரிவிக்கிறோம்.

ருக்மணி அம்மாள், ஈரோடு.

என் கணவருக்கு ஒரு தம்பி உண்டு. சுமார் இருபது வருஷங்களுக்கு முன்பே என் கணவரின் தம்பி தனியாக வீடு வாங்கிக் கொண்டு வேறு இடத்துக்குக் குடிபோய் விட்டார். பூர்விக வீட்டில் நாங்கள் குடியிருந்து வந்தோம். மற்ற பங்காளிகளுடைய பங்கை என் புருஷன் விலைக்கு வாங்கி பத்திரங்கள் இருக்கின்றன.

என் புருஷனுடைய தம்பி பங்கை விலை பேசி பணம் கொடுத்துவிட்டோம். தம்பியும் மிக நல்லவர். எங்களுக்குக் கிரயம் செய்ய ஒப்புக் கொண்டார். ஆனால் திடீரென்று பதினேழு வருடங்களுக்கு முன்பு பணம் வாங்கிக் கொண்ட சில நாட்களில் காலமாகிவிட்டார். பணத்தைக் கொடுத்ததற்கு ஒரு சாட்சி இருந்தார். ஆனால் என் கணவரும், அந்த சாட்சியும் காலமாகிவிட்டார்கள்.

என் கணவர் இறந்த தேதியிலிருந்து வீடு என் பெயருக்கு மாற்றப்பட்டு வரி முதலியவற்றைச் செலுத்திய ரசீதும் என் பெயரில் உள்ளது. என் பெயரில் உள்ள வீட்டில் என் புருஷனின் தம்பிப் பையன் தனக்குப் பாதி பங்கு — 'தன் தகப்பனுருக்குள்ளது உண்டு என்று சொல்கிறான்.

சட்டம் எப்படிச் சொல்கிறது?

உங்கள் மைத்துனரிடம் கணவர் பணம் கொடுத்ததற்கான எந்தவித சாட்சியும் இல்லை என்கிறீர்கள். அப்படி இருக்கும்போது உங்கள் மைத்துனரின் மகன் சொத்தில் பங்கு கேட்பதற்கு உரிமை இருக்கிறது. ஆனால் பாதி பங்கு கிடைக்காது.

மற்ற பங்காளிகளிடமிருந்து நீங்கள் வாங்கிக் கொண்ட கிரயப் பத்திரங்கள், உங்கள் பெயரில் இருக்கின்ற வீட்டு வரி ரசீதுகள் ஆகியவை உங்களுக்குச் சாதகமாக இருக்கின்றன. அவற்றைக் கொண்டு உங்கள் மைத்துனரின் மகனுக்குச் சேர வேண்டிய பங்கை வழக்கறிஞர் அறிவுரைப்படி கொடுக்கலாம். உங்கள் ஊர் வழக்கறிஞரை அணுகவும்.

ஜார்ஜ், விழுப்புரம்.

நான் 1943ல் என் சுய சம்பாத்தியத்தில் ஒரு வீடும், மனையும் கிரையும் வாங்கினேன் என் பெயரில். 1950ல் என் அண்ணியார் தான் வாங்கும் அதே தேதியில் அவர்களே பணம் கொடுத்து ஒரு மனையை என் மனைவியின் பெயரில் பினாமியாக எனக்காகக் கிரையம் செய்து வைத்தார்கள். அதற்கான எந்த ரசீதும் கிடையாது. 1943ல் நான் சுயமாய் கிரையம் வாங்கிய சொத்தை 1951ல் விற்று மேற்படி 1950ல் என் அண்ணியார் வாங்கி என் மனைவியின் பெயரில் கிரையம் செய்து வைத்த மனைக்காக நானே அவர்களுக்குப் பணத்தைக் கொடுத்துவிட்டேன். அதற்கும் எந்த ரசீதும் கிடையாது. 1956ல் அதே மனையில் கல் ஓட்டு வீடும் என் சுய சம்பாத்தியத்தை கொண்டே கட்டி முடித்தேன். 1982ல் என் மனைவி இறந்துவிட்டார்கள். 1984ல் என் அண்ணியாரும் இறந்துவிட்டார்கள்.

எனக்கு 2 ஆண் 3 பெண் உண்டு. என் குழந்தைகளால் எனக்கு எவ்வித உதவியும் கிடையாது. நான் சுயமாய் சம்பாதித்து பினாமியாக என் மனைவியின் பெயரில் எழுதி வைத்த சொத்தை என் ஜீவனத்துக்காக விற்கப் போகிறேன். அதற்கான சட்ட ஆலோசனை கொடுக்கும்படியாய் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

உங்கள் மனைவி இறக்கும்போது மனைவியின் பெயரிலேதான் வீடு இருந்திருக்கிறது. எனவே அதற்குப் பின்புலத்திலுள்ள செய்திகள் சட்டப்படி ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. நீங்கள் வீட்டை விற்க நேரிட்டால் உங்கள் குழந்தைகளிடம் ஒப்புதல் வாங்கியே விற்க வேண்டும். சட்டப்படி அப்போதுதான் செல்லுபடியாகும். ஏனெனில்

பால் அப்பம்

மைதா மாவு — 1 கப்
சர்க்கரை — 1 கப்
பால் (நல்ல கெட்டிப் பால்) — 1 கப்
ரவை — 1 கப்

இவைகள் அனைத்தையும் கலந்து நான்கு மணி நேரம் ஊற வைக்க வேண்டும். பிறகு அடுப்பில் வாணலியோ, அப்பக்குழி என்ற பாத்திரமோ வைத்து நெய் அல்லது எண்ணெய் விட்டுக் காய்ந்ததும் அப்ப மாவைக் கரண்டியில் எடுத்து விடவும். பொன் நிறமாக மாறினதும் எடுக்கவும். இது சாப்பிடச் சுவையாக இருக்கும்.

— வசந்தா கோவிந்தன்

தாயாரின் சொத்தில் குழந்தைகளுக்கும், கணவருக்கும் உரிமையுண்டு.

.... குஜராத்.

எவ்வளவோ படித்திருந்தும், தான் ஏமாற வழியில்லை என்பது போன்ற நினைப்பில் என் கணவர் மெட்ராசில் இயங்கி வரும் ஒரு நிறுவனத்திடம் நன்றாக ஏமாந்துவிட்டார். The Management Professionals Association என்ற பெயரில் பத்திரிகையில் வெளிவந்த 'வெளிநாட்டு வேலை வாய்ப்பு' பற்றி படித்துவிட்டு ரூபாய் ஆறாயிரம் அனுப்பி உறுப்பினராகச் சேர்ந்தார். அவர்களின் வாக்குறுதிப்படி நூற்றியெண்பது நாட்களுக்குள் வேலை வாங்கித் தராவிட்டால், பணத்தைத் திருப்பித் தந்துவிடுவதாகவும், வேலை கிடைத்துவிட்டால் 10% கட்டணம் என்றும் இருந்தது. இந்த வரிகளுக்குப் பின்னால் உள்ள 'hidden rules' பற்றிய விவரம் தெரியாமல் ரூ 6000 சேமிப்பிலிருந்து போய்ச் சேர்ந்தது.

இரண்டு வருடங்கள் வரை இடையில் வந்த சில மனுக்களைத் தவிர வேறு பலன் இல்லை. இதற்கிடையில் என் உடல் நிலை வேறு சரியில்லை. கொடுத்த பணத்தைத் திருப்பி வாங்கும் முயற்சியும் தோல்வி கண்டு வருகிறது. என் கணவர் சென்ற மே மாதம் மெட்ராஸ் சென்று வந்தார். கிடைத்தது ரூ 200 மட்டுமே.

துபாய் பணத்திற்கு ஆசைப்பட்டு பட்ட கஷ்டம் போதும். ரூ 6000 வாங்கும்போது இல்லாத சட்டதிட்டங்கள் எல்லாம் இப்போது நிறைய சொல்லி TN Act 27 அது இது என்று ஏதாவது சாக்கு சொல்லி கொண்டே இருக்கிறார்கள். திரும்பி வராது என்று தெரிந்திருந்தால், பெரிய இடத்துப் பெயர்களைப் பார்த்து மயங்கிக் கொடுத்திருக்க மாட்டார். இப்போது சொல்லும் சட்டங்களை முதலில் எழுதியிருந்தால் திரும்பியும் பார்த்திருக்கப் போவதில்லை. தயவு செய்து ஏதாவதொரு உதவி செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.

உங்களுடைய கடிதத்தை நீங்கள் குறிப்பிட்ட கம்பெனிக்கு அனுப்பி அவர்களை உங்களுடன் தொடர்பு கொள்ள கோரியிருக்கிறோம்.

திருமண மலர்

* மழ நாட்டு பிரஹசரணம்
ஐயர் ஆத்ரேய கோத்திரம் திரு
வாதிரை நட்சத்திரம் வயது 28
ஹைதராபாத்தில் டெலிகிராப்
ஆபீசில் உத்தியோகம் சம்பளம்
ரூ 1000/— வாங்கும் பெண்
ணிற்கு மணமகன் தேவை. பெட்டி
எண்: 3937.

* தெலுங்கு ஆசாரி (விஸ்வ
கர்மா) 21 வயது, பி.எஸ்ஸி,
கெமிஸ்ட்ரி படித்த, டைப்பிங்,
ஷார்ட் ஹாண்ட், டைலரிங் படிக்
கும், தாய் தங்கை, வேலை பார்க்
கும் 2 சகோதரர்கள், தந்தை (மத்
திய அரசு 1600/—) குடும்பப்பாங்
கான பெண்ணிற்கு நல்ல வரன்
தேவை. விவரத்துடன் எழுதவும்.
பெட்டி எண்: 3938.

* வெள்ளாளர் வகுப்பைச்
சார்ந்த 27 வயதும் 160 செ.மீ.
உயரமும் உள்ள சித்திரை நட்சத்
திரமுள்ள எம்.ஏ. பட்டதாரி
பேங்க் வேலையில் உள்ள பைய
னுக்குத்தகுதியுள்ளபெண்தேவை.
வேலை பார்க்கும் அல்லது பார்க்
காத ஜாதகம் குடும்ப விவரத்துடன்
எழுதவும். ஜாதகம் மற்ற விவரங்
களுக்கு நேரில் தொடர்பு கொள்ள
வும். R. முருகேசன், No. 23—H
ரயில்வே போலீஸ் லேன், பழைய
வண்ணாரப்பேட்டை
சென்னை—21.

* டிரைவிங் ஸ்கூலில் 400
ரூபாய் சம்பளத்தில் கிளார்க்.
கௌண்டின்ய கோத்ரம், பூராடம்
32 வயது, கால்கட்டுப் போட்ட
பிறகு, சகல கலா இளவரசரும்
அஷ்டாவதானியுமான திரைப்பட
இயக்குநரின் தெய்வீக நல்லாசி
யுடன் உதவி இயக்குநர் பதவி
பெறப் போவது உறுதி. இதே
வகுப்பைச் சேர்ந்த பெண்,
ஜாதகம் மற்றும் விவரங்கள் தந்து
விண்ணப்பிக்கவும். பெட்டி எண்:
3939.

* சோழிய வெள்ளாளப்பிள்ளை
பி.எஸ்ஸி, 5' 2'', 25 வயது,
வெஜிடேரியன், செவ்வாய்
தோஷம் மத்திய அரசு வேலையுள்ள
பெண்ணுக்கு பாங்க்/மத்திய அரசு
வேலையுள்ள மணமகன் தேவை,
ஜாதகம், குடும்ப விவரங்களுடன்
எழுதவும். பெட்டி எண்: 3940.

* வாணிய செட்டியார் /கோவடி
மகாரிஷி கோத்திரம்/பி.யு.சி./
வயது 31. மாத வருமானம் ரூ
900/— சென்னையில் தனியார்
துறையில் பணியாற்றும் மண
மகனுக்கு இதே இனத்தில் அரசு
துறை/தனியார் துறையில் பணிபுரி
யும் அழகிய மணமகள் தேவை.
டௌரி தேவையில்லை. தென்
மாவட்டங்களாயிருப்பின் விரும்
பத்தக்கது. பெட்டி எண்: 3941.

* இந்து (பலிஜா) கவரா நாயுடு
சதயம் நட்சத்திரம் 25 வயது, 5
அடி உயரம், பிளஸ் 2, படித்துள்ள
நல்ல குடும்பப்பாங்கான பெண்
ணிற்கு தகுந்த வரன் தேவை. உட்
பிரிவு பாதகமில்லை. ஜாதக குடும்ப
விவரங்களுடன் எழுதவும். பெட்டி
எண்: 3942.

* வடகலை அய்யங்கார், பாரத்
வாஜ கோத்ரம், விசாகம், விருச்
சிக ராசி, எம்.ஏ. (எகனாமிக்ஸ்) 5
அடி உயரம் உள்ள, 26 வயது
பெண், இடது கால் போலியோ
வினால், பாதிக்கப்பட்டு, Caliper
அணிந்து, எல்லா வீட்டு வேலை
களும் நன்கு, தானே செய்யக்
கூடியவளும், வீணை, பாட்டு,
ஹிந்தி, நன்கு தெரிந்த வரனுக்கு.
அதே வகுப்பைச் சார்ந்த, உத்தி
யோகத்தில் உள்ள டாக்டர், அல்
லது இன்ஜினியர், அல்லது ஆபீஸர்
ஆக உள்ள மணமகன் வரவேற்கப்
படுகிறார்கள். ஜாதகத்துடன்,
மற்ற விவரங்களுடன் விண்ணப்
பிக்கவும்: Dr. V. Seshan, M.B.B.S
257 A/4. Cuddalore Main Road,
Panruti.

* பட்டதாரி தமிழ் பிராமண
அய்யர் 47 வயதுள்ள திருமண
மாகாத பெண்ணுக்கு, பிராமண
குலத்தில், படித்த நற்குணமுள்ள
தகுந்த வரன் தேவை. உயர் அந்
தஸ்தில் உள்ள படித்த தாரமிழந்த
வர்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.
ஜாதகம் கட்டாயமில்லை. பெட்டி
எண்: 3943.

* துளுவ வேளாளப் பிள்ளை,
ரோகிணி நட்சத்திரம், ரிஷப ராசி,
வயது 28, 159 செ.மீ. எம்.எஸ்ஸி
படித்து தனியார் கம்பெனியில்
மாதம் ரூ 2500 சம்பளம் வாங்கும்
மாநிறமுள்ள வரனுக்கு மணமகள்
தேவை. ஜாதகத்துடன் விண்ணப்
பிக்கவும். பெட்டி எண்: [illegible].

* எம்.எஸ்.எஸ்.சி. [illegible]
கோத்திரம், 30 வயது [illegible]
பெண், ஹிந்துஸ்தான் கம்ப்யூட்
டர்ஸ் லிமிடெட், டில்லியில்
வேலை. வரதட்சணை எதிர்பார்க்
காத பண்புள்ள வரன் தேவை.
மனப் பொருத்தம் முக்கியம். ஜாத
கம் தேவை இல்லை. தமிழ்நாட்டு
மாத்வ இனத்தவர் விண்ணப்பிக்க
வும். பெட்டி எண்: 3945.

* வடமாள், ஆத்ரேய கோத்ரம்,
மூலா நட்சத்திரம், மாத வருவாய்
ரூபாய் 3500/— சென்னையில்
சொந்த வீடு உடைய, வங்கியில்
மேனேஜராக பணிபுரியும் வர
னுக்கு, குடும்பப்பாங்கான இனி
யும், இதுவரையிலும் வேலைக்குச்
செல்லாத 28 வயதுக்குட்பட்ட
பட்டப்படிப்பு, படித்த சிறிய குடும்
பத்தைச் சேர்ந்த மணப் பெண்
தேவை. பெட்டி எண்: 3946.

* இந்து, கோட்டைப்பொத்
தோர் அகமுடைய வகுப்பு,
சென்னையில் அரசு உத்தியோகத்
தில் நிரந்திரப் பணியில் உள்ள,
மாதம் 900 சம்பளம் உள்ள, 29
வயது பையனுக்கு உயரம் 5' 9''
அதே இனம் அல்லது அகமுடைய
உட்பிரிவு மணமகள் தேவை. (எஸ்.
எஸ்.எல்.சி, க்குக் குறையாத படித்த
பெண்) கடிதத் தொடர்பு கொள்ள
வும். பெட்டி எண்: 3947.

* ஐயர், மழநாட்டு பிரஹ
சரணம், ஹரித கோத்திரம்,
கேட்டை நக்ஷத்திரம் 33 வயது,
மாநிறம், 5' 8'' உயரம், இன்
டர் காமர்ஸ் (Inter. Com) வரை
படித்துள்ள மற்றும் பம்பாயில்
தனியார் கப்பல் நிறுவனத்தில்
வேலை பார்க்கும் பையனுக்கு 24
வயது முதல் 29 வயதுக்குள் வேலை
பார்க்கும் அல்லது வேலைக்குத்
தகுதியுள்ள, நல்ல பண்புகள்
உள்ள பெண் தேவை. சுத்தமான
பெண் ஜாதகம் அவசியம். உட்
பிரிவுகள் சம்மதம். சுத்த ஜாதகத்
தார் விண்ணப்பிக்க வேண்டிய
பெட்டி எண்: 3948.



• விஸ்வ பிராமண வகுப்பைச் சார்ந்த காவல் துறையில் பணி யாற்றும் பெண்ணிற்கு (வயது 26, உயரம் 161, ஊதியம் 900/—) இதே வகுப்பைச் சேர்ந்த வரன் தேவை. காவல் பிரிவில் வேலை பார்ப்பவர்களுக்கு சிறப்புத் தகுதி. பெட்டி எண்: 3949.

• மத்திய அரசாங்க கெஜடட் அதிகாரியின் பி.எஸ்ஸி (கெமிஸ்ட்ரி) படித்த 20 வயதுடைய நல்ல சிவப்பு நிறம் கொண்ட அழகான பெண்ணுக்கு வெள்ளான இன வரன் தேவை. விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 3950.

• ஆயில்ய நட்சத்திரம் கௌண்டன்ய கோத்ரம் வடகலை அய்யங்கார் டி.வி.எஸ்.ல் பணிபுரியும் வரனுக்கு வேலையில் உள்ள பெண் தேவை. No. 30, Srinivasa Reddy St., T. Nagar, Madras-600 017.

• டெல்லியில் சிறந்த தனியார் நிறுவனத்தில்ஸ்டெனோவாகபணி புரியும் இலட்சணமுள்ள பலிஜா நாயுடு 22 வயது 158 செ.மீ. உயரம் 850 மாத சம்பளம் பெறும் பெண்ணிற்கு அதே வகுப்பைச் சார்ந்த டெல்லியில் வேலை பார்க்கும் செவ்வாய் தோஷமுள்ள கன்னியமான வரன் தேவை. முழு விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 3951

• பாரத்வாஜம் வடமாள் 39 வயது கேட்டை சென்னையில் ஆசிரியராக பணியாற்றும் பெண்ணுக்கு சென்னையிலேயே வேலையிலிருக்கும் மணமகன் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 3952.

• ஆத்ரேய கோத்திரம் வடமாள் திருவோண நட்சத்திரம் உயரம் 5' 5'' எஸ்.எஸ்.எல்.சி. மற்றும்டைப்ரைட்டிங்பாஸ்செய்த பெண்ணிற்கு வரன் தேவை. தொடர்பு கொள்க. G. கிருஷ்ணமூர்த்தி, 22, விவேகானந்தர் தெருவு, கவுண்டன்குளம், பழனி 624 601.

• நைத்ருவ காசிப கோத்ரம், வடமாள், 25, பூராடம் கனரா வங்கியில் வேலை, நல்ல குடும்பத்தைச் சேர்ந்த வரனுக்கு அதே பிரிவில் 20 வயதுக்குட்பட்ட படித்த, அழகுள்ள, சங்கீதம் தெரிந்த குடும்பப்பாங்கான மணமகள் தேவை. இளம்பிள்ளைவாதம் காரணமாக வலது காலில் பையனுக்குச் சிறு ஊனம் உண்டு. சம்மதமுள்ளவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய பெட்டி எண்: 3953.

• காது கேட்காத, பேசாத 22 வயதான பிளஸ் 2 வரை படித்த பிராமணப் பெண்ணுக்கு பிராமண ஜாதியைச் சேர்ந்த இதே போன்ற குறையுள்ள வேலை பார்க்கும் வரன் தேவை. பெற்றோர்கள் விவரத்துடன் எழுதவும். பெட்டி எண்: 3954.

• திருநெல்வேலி சைவவேளாளர் நெல்லை மாவட்டத்தில் புகழ் பெற்ற தனியார் நிறுவனத்தில் ஜூனியர் இன்ஜினியர்போட்டோகிராபி, வீடியோ சக தொழில் 29 வயது, சிவப்பு நிறம், 170 செ.மீ. உயரம், உத்திரட்டாதி, மாத வருமானம் 2500 ரூபாய். வசதியான அழகான படித்த பெண் தேவை. வேலை பார்க்கும் பெண்ணும் பரிசீலிக்கப்படும். பெட்டி எண்: 3955

• பரந்த மனப்பான்மையுடன், நற்பண்புகள் உடைய படித்து சென்னையில் வேலையிலுள்ள 35 வயதுக்குள் பிராமின்/சைவ உணவுப் பழக்கமுள்ள (தாரமிழந்த குழந்தைகள் இல்லாதவரும்) படித்து, வேலையிலுள்ள 29 வயது பிராமின் விவாகரத்தான பெண்ணிற்கு மணமகன் பிறந்த தேதி/ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். வரதட்சணை கிடையாது. எளிய திருமணம். பெட்டி எண்: 3956.

• சிதம்பரத்தை அடுத்த புவனகிரியை சேர்ந்தவர். கடலூரில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் (முதுநிலை மண்டலம்) நிரந்தர அரசு வேலையில் டைப்பிஸ்டாக மாதம் 850 ரூ சம்பளம், வயது 29, பூராடம் நட்சத்திரம். தேவாங்கர் தெலுங்கு (சேடன்) வகுப்பைச் சேர்ந்த மணமகனுக்கு அதே வகுப்பைச் சேர்ந்த மத்திய/மாநில நிரந்தர அரசு வேலையிலுள்ள அழகிய குணமுள்ள பெண் தேவை. (முழு விவரங்களுடன் தொடர்பு கொள்க). பெட்டி எண்: 3957.

• பிரஹசரணம், ஸ்ரீவத்ஸ அனுஷம் 32 வயது, 150 செ.மீ. பி.ஏ. அரசாங்க வேலை ரூ 1000 சம்பாதிக்கும் வரனுக்கு பிரஹசரணம்/வடமாள் 30 வயதிற்குக் கீழ சென்னை அல்லது சென்னைக்கு மாற்றக் கூடிய அரசாங்கம் அல்லது நல்ல கம்பெனியில் ரூ 700க்கு மேல் சம்பாதிக்கும் பெண் தேவை. பெட்டி எண்: 3958.



• முதலியார் வகுப்பைச் சேர்ந்த வடஆற்காடு மாவட்டத்தில் வசிக்கும் எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்த 5' 2'' உயரமுள்ள குடும்பப்பாங்கான அழகிய பெண்ணுக்குத் தகுதியான 34 க்கு மேல் 40 வயதுக்குள் முதலியார் பிள்ளை வகுப்பைச் சேர்ந்த மணமகன் தேவை. ஜாதகம் பயோடேட்டா மற்றும் குடும்ப விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 3959.

• நடுத்தர வசதியுள்ள முதலியார்/பிள்ளை வகுப்பைச் சேர்ந்த பி.காம். வரை படித்துள்ள 23 வயது உயரம் 5¼' சிவப்பு நிறமுள்ள குடும்பப்பாங்கான பெண்ணிற்கு தகுந்த மணமகன் தேவை. பெட்டி எண்: 3960.

• பிரஹசரணம், சங்கிரி கோத்ரம், விசாகம் வயது 30, சென்னை I.C.F. ல் ஸ்டெனோ வேலை மாத சம்பளம் ரூ 1200/— வாங்கும் 5' 3'' உயரம் உள்ள பி.காம் பட்டதாரிக்குமணமகள் தேவை. பெட்டி எண்: 3961.

• வடகலை ஐயங்கார், கௌசிக கோத்திரம், பெண் வயது 32, சுமார் உயரம், பெங்களூரில்வேலை சம்பளம் ஆயிரம் ரூபாய், சொந்த வீடு, பெங்களூர் பக்கமே கர்நாடகாவில் வேலை செய்யும் பையன் தேவை. ஜாதகம் இல்லை. விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 3962.

• எஸ்.எஸ்.எல்.சி. படித்த குடும்பப்பாங்கான 27 வயது நிரம்பிய அஷ்டசஹஸ்ரம்வாதூலகோத்ரம் பெண்ணிற்கு மணமகன் தேவை. (உட்பிரிவுகள் ஏற்றுக் கொள்ளப்படும்). பெண் சத்துணவுத் திட்டத்தின் மேற்பார்வையாளர். எளிய முறையில் திருமணம். தொடர்பு கொள்க: ஆர். ராமசுவாமி ஐயர், திருத்தியமலை போஸ்டு (வழி) புளிவலம், திருச்சி ஜில்லா.

• கவரா நாயுடு மதம் ஆர்.சி. வயது 28, படிப்பு பி.ஈ. B.H.E.L நிறுவனத்தில் இன்ஜினியர். மாதம் 3000 பெறும் அழகுள்ள மணமகனுக்கு பட்டப் படிப்பும் அழகுள்ள சிவப்பு நிறத்தில் 25 வயதுக்குள் நல்ல வசதி உள்ள குடும்பத்தைச் சேர்ந்த மணமகள் தேவை. R.C. மதம் மாற சம்மதம் உள்ள மணமகள் தேவை. பெட்டி எண்: 3963.

• பலிஜா நாயுடு வகுப்பைச் சார்ந்த பட்டதாரி பெண், திருவாதிரை நட்சத்திரம். பணி புரியும் மாத வருமானம் 1300. பெண்ணின் உயரம் 5' 4'' மாநிறம். வயது 33. நல்ல குடும்பத்தில் நிரந்தர பணிபுரியும் மணமகன் தேவை. பெட்டி எண்: 3964.

• பிரஹசரணம் 26 வயது 5' 1" பூராடம், 7ல் செவ்வாய், பி.யு.சி. டைப் பாஸ் பி.காம் போஸ்டலில் படிக்கும் வேலைக்குப் போகாத அழகான பெண்ணிற்கு வாத்ரல காச்யப கோத்ரம் அல்லாத பாங்க்/நல்ல வேலையிலுள்ள வரன் தேவை. ஜாதகத்துடன் குடும்ப விவரங்கள் எழுதவும். பெட்டி எண்: 3965.

• கௌதம கோத்திரம் அனுஷ நட்சத்திரம் 42 வயது சென்னை மாநகராட்சிப் பள்ளியில் S. Grade ஆசிரியை வேலை பார்க்கும் மாதம் ரூ 1380/— சம்பளம் வாங்கும் பெண்ணிற்கு 45 வயதுக்கு மேல் உத்தியோகத்தில் இருக்கும் ஸ்மார்த்த பிராம்மண வரன்கள் தேவை. ஒரு குழந்தை உள்ள தாரமிழந்தவரும் விண்ணப்பிக்கலாம். பெட்டி எண்: 3966.

• பிரஹசரணம், தமிழ் அய்யர், பாரத்வாஜ கோத்திரம், ரேவதி நட்சத்திரம், தனியார் லிமிட்டட் கம்பெனியில் ரூ 800/— சம்பளத்தில் இருக்கும் 36 வயது வரனுக்கு, மாநில/மத்திய அரசிலோ அல்லது தனியார் நிறுவனத்திலோ பணிபுரியும் 24 வயதுக்குள் இதே பிரிவைச் சேர்ந்த பெண் தேவை. அய்யரில் உட்பிரிவுகளும் சம்மதம். வரதக்ஷிணை தேவையில்லை. எளிய திருமணம். ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 3967.

• காஸ்யபம் வடமாள் ஸ்மார்த்த தமிழ் பிராமணன் வட[illegible] நக்ஷத்திரம் 4, உயரம் 5' 2" சிவப்பு நிறம் தனியார் துறையில் சம்பளம் ரூ 400/— மணமகனுக்கு அரசாங்கம், தனியார்த்துறை கம்பெனி லிமிடெட்டிலுள்ள நிரந்தர வேலையிலுள்ள 34/40 வயது பிராமண மணமகள் தேவை. ஜாதியில் எந்த உட்பிரிவும் சம்மதம். குடும்ப விவரத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 3968.

• Alliance invited from financially very well placed ladies, without encumbrances for 2 South Indian born, highly US educated divorcees without encumbrances, US Citizens, professionals in Fortys. Caste, widows, divorcees—no bar. Will be flexible on all factors. Medicos welcome. Reply with full details to Ramkrishna, 12000 SW 35, Ter, Miami, FL 33175 U.S.A.

• Match for Brahacharanam Iyer Harida Gothram Girl good looking slim medium complexioned 29/160 cm Convent educated MA English Teacher. Family well settled. Boys preferably professionally qualified from decent family. Apply to Box No. 3969.

• Parents seek Madras employed/transferable Bride Hindu any caste no dowry for Groom 31, S.S.L.C. backward caste permanently employed Madras, Clerk 900/- tee-totaller, decent family, soft natured, broad outlook pious. Box No. 3970.

• Alliance invited for smart, fair complexioned good looking, kind hearted & home loving SSC passed. Vadama Iyer Girl aged 29/150. Sub-sect no bar. Apply to Box No. 3971.

• Vanniakulakshtriya Boy aged 27, B.Com., I.C.W.A.I.- Inter, Compnay employed Salary Rs. 1700/- seeks alliance from employed/unemployed Brides from middle class famjlies of same caste. Write with all particulars. Box No. 3972.

• Wanted well settled Groom tall, Bachelor below 37 yrs. for Hindu, Tamil, fair, slim B.Sc., Girl 32/165/ Rs. 1800 p.m. Nursing Officer in Defence. No Dowry, Caste no bar. Box No. 3973.

• Alliance for well-settled, Vadamal, Shadamarshna, Mirugaseerisham, Graduate, State Bank employed Boy 26/165/1300, prefers Nationalised Bank/Central Govt. employed Vadamal Brides 20-23, having clear Horoscope and fortunate star may reply to K. Rajaraman, 27 VOC Nagar, Thenpathi-609 111.

• Alliance invited for Bharadwaja, Bharani, Vadamal, goodlooking 27/150 Girl, employed in Private School, Salary 500/- Please furnish details with Horoscope to Box No. 3974.

• Alliance invited for Coimbatore based Hindu Adi-Dravida Arunthathiar Boy 32/170/2200/B.E. (Dis cont.) working as H.G.A. (Admn.) in L.I.C. of India. Decent, simple, early marriage. Caste no bar. Box No. 3975.

• Non Srivatsava Groom for Thengalai Iyengar Matriculate Girl. Age 32 years. Star Visakam. Early decent marriage. Box No. 3976.

• Parents seek suitable Hindu Groom (any Caste) decently employed Madras - Vicinity for Graduate Bride 35 State Govt. permanently Madras 1300/- young looking pious. Domestically trained. Backward Class, cultured family. Box No. 3977.

• Wanted Iyer Bride goodlooking employed, Government Central or State or Banks and domestically well trained, for Brahmin Boy of 31 years (Brahacharanam, Koundinya Gothram, Star Chadayam) in Central Government Service, drawing Rs. 1300/-. Reply with Horoscope and family details to Box No. 3978.

• Wanted a Bride preferably medico for a Tinnavelly Saiva Chettiar Doctor (M.S.) Class I Officer, only son, earning Rs. 4000/- aged 34. Contact Box No. 3979

• Alliance invited from well employed Iyer Boy preferably in North India for Brahacharanam Girl 30, Higher Secondary Stenography 5 ft, presently unemployed. No dowry. Reply Maniam, XVI/3953, Regharpura 29, Karolbagh, New Delhi-110 005.

• Wanted fair complexioned, well placed and educated Girl from respectable Iyer family for Vadama Avittam Star Iyer Boy aged 32 years employed in Gulf for the last 6 years, for marriage to take place in October 86. Contact Box No. 3980.

• Wanted non-Bharadwaja Brahmin decently employed well placed Boy for S.S.L.C. fair, Chithirai 35/5' 3" slim, good looking domestically well trained, Vadama unemployed Girl. Sub-sects no bar. Box No. 3981.

• Wanted Ashtasahasram Iyer Girl for Kaundinya Divorcee 38/170 well employed in Bombay, Salary Rs. 2000/- owning accomodation. Simple registered marriage. Reply Box No. 3982.

• Proposals invited for Non-Bharadwaja Iyer Vadamal Girl slim fair 28 years 5' 1". Star Anusham working in Nationalised Bank as an Officer, preferred around 32 years Bank Officer/

திருமண மலர் பகுதியில் விளம்பரம் செய்ய கட்டணம் ரூ 30/— தொகையை "மங்கையர் மலர்" என்ற பெயருக்கு போஸ்டர் ஆர்டராகவோ அல்லது சென்னையில் உள்ள ஏதாவது ஒரு பாங்கில் மாற்றக் கூடிய டிமாண்ட் டிராப்டாகவோ அனுப்ப வேண்டும். ஒரு விளம்பரத்தில் ஒரு வரனுக்கு 30 வார்த்தைகளுக்குள் விவரங்கள் தரவேண்டும். பதில் அனுப்புபவர்கள் விளம்பரதாரர் பெட்டி எண்..... C/o. மங்கையர் மலர், கிண்டி, சென்னை — 600 032 என்ற விலாசத்துக்கு அனுப்பவும். தனிப்பட்ட கடிதப் போக்குவரத்து கிடையாது.

engineers/C.A.S. Only those who are broad minded need apply. Box No. 3983.

* Alliance invited for Thenkalai Iyengar, Aswini, Srivatsa Gothram fair Graduate, Girl aged 26, employed in Baba Atomic Research Centre, Bombay. Reply to P. Sundararajan, C-1, Indraprastha, Anusakthi Nagar, Bombay-400094

* Alliance invited from Sowrashtra Community professionally well qualified preferably Doctors/Engineers for lady doctor M.B.B.S./29 years/152 c.m. height having private practice. Box No. 3984.

* 42 வயது வேலையிலுள்ள, வாத்திமா, தானுகாயன கோத்ரம், உத்திரம் பெண்ணிற்கு 46—48ல் எந்த உட்பிரிவுமுள்ள நல்ல வேலையிலுள்ள பிராமண வரன் தேவை. மனப் பொருத்தம். எளிய முறை திருமணம். பெட்டி எண்: 3985.

* சொந்தத் தொழில், இந்து நாடார் மணமகன் வயது 34. தாரமிழந்தவர் வசதியுள்ள இவருக்கு அதிக வசதியுள்ள விவாகரத்து, விதவைப் பெண்கள், குறைகள் உள்ள பெண்கள், மட்டும் விண்ணப்பிக்கவும். ஜாதி மதம் எதுவானாலும் பரவாயில்லை. வரதட்சணை வேண்டாம். பெட்டி எண்: 3986.

* கம்மவார்நாயுடு, சென்னையில் இன்ஜினியர், ரூ 2500 சம்பளம் 26 வயது 5' 7'' நல்ல ஆரோக்கியம் உள்ள வரனுக்கு குணமும் குடும்பப்பாங்கும் நிறைந்த மணமகள் தேவை. ஜாதகம், குடும்ப விவரத்துடன் எழுதவும். பெட்டி எண்: 3987.

* தென்கலை அய்யங்கார், கார்த்திகை நட்சத்திரம், ரிஷப ராசி, பாரத்வாஜ கோத்திரம், வயது 25 உயரம் 5' 7'' எலக்ட்ரீசியன், எலட்ரானிக்ஸ் (TV) செவ்வாய் தோஷம், கடவுள் பக்தி கொண்ட ஒழுக்கமான வரனுக்கு செவ்வாய் தோஷம் உள்ள பெண் தேவை. தற்சமயம் ஏதும் வேலை இல்லை. வியாபாரம் செய்ய உதவுபவர்கள் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 3988.

* வடமாள், ஆத்ரேய கோத்ரம், அவிட்ட நட்சத்திரம், 27 வயது நிறைந்த இண்டர் தேறிய சற்று உயரமுள்ள ஏர் இந்தியாவில் மாதம் ரூ 1700 சம்பாதிக்கும் பையனுக்கு பம்பாயில் வேலை பார்க்கும் அல்லது மாற்றம் கிடைக்கக்கூடிய பெண் தேவை. பெட்டி எண்: 3989.

* நல்ல குலத்தைச் சார்ந்த கௌசிக கோத்ரம், சித்திரை நட்சத்திரம் சிவந்த மேனி உடைய 41 வயது தென்கலை ஐயங்கார் வேலையிலிருக்கும் பி.ஏ. பெண்மணிக்கு ஐயங்கார் வரன் தேவை. பெட்டி எண்: 3990.

* "நல்ல வசதி படைத்த, ஆனால் துணை, ஆதரவு என்று யாருமே இல்லாது தனிமையாக இருக்கும் மன நிம்மதியற்ற 50க்கு மேல் வயதுள்ள இந்தியாவின் எந்த பாகத்திலும் வசிக்கும் பிராமண பெண்மணிக்கு, வாழ்க்கைத்துணையும், அளவு கடந்த அன்பும், ஆதரவும் தர விரும்பும் நல்ல பதவியில் இருக்கும் பிராமண நபர் விரும்புகிறார். விவரமான கடிதம், பூரண நம்பிக்கையுடன் எழுதவும். பெட்டி எண்: 3991.



* மத்திய அரசு வேலையில் பங்களூரில் வசிக்கும் (31/165/1500 பி.காம்.) வடமாள், நைத்ருபகாசியப கோத்ரம், பூராடம் நட்சத்திர வரனுக்கு படித்த, லட்சணமான பங்களூரில்/பங்களூருக்கு மாற்றலாகக் கூடிய வேலையில் உள்ள 26 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை. ஜாதகம் மற்ற விவரங்களுடன் அணுகவும். பெட்டி எண்: 3992.

* முதலியார் வகுப்பைச் சேர்ந்த பம்பாய், மத்திய அரசில் பணிபுரியும் மாதம் ரூ 1100/— சம்பளம் வாங்கும் 26 வயது, மாநிறம், 5' 5'' உயரமுள்ள, பி. காம் படித்த பெண்ணிற்கு அதே வகுப்பைச் சேர்ந்த மத்திய/மாநில சர்க்கார் அல்லது நல்ல வேலையில் உள்ள மணமகன் தேவை. பெட்டி எண்: 3993.

* வடமாள் ஐயர் நைத்ருப்காசிப கோத்ரம், சதயம், 29 வயது, 5' 9'' பி. காம் சென்ட்ரல் கவர்ன்மெண்ட் வேலை. fair complexion. அரசாங்க/வங்கியில் வேலை செய்யும் நல்ல குணமுள்ள பெண் தேவை. ஜாதகமுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 3994.

* கம்மவார் நாயக்கர் வயது 29, எஸ்.எஸ்.எல்.சி. ஸ்பின்னிங்வேலை ரேடியோ மெக்கானிக்குக்கு ஜாதி, மத பேதமில்லா மணமகள் தேவை. கெட்ட பழக்கங்கள், கடன் வேறு பிரச்சனைகள் இல்லை. வரதட்சணை வேண்டாம். ஊனமுற்றவர்கள் & விருப்பமுள்ளவர் எழுதவும். பெட்டி எண்: 3995.

* பெண்ணுக்கு வயது 30, கௌண்டின்ய கோத்திரம், வடமாள். வேலைக்குச் செல்லவில்லை. எஸ்.எஸ்.எல்.சி. பாஸ். Medium complexion உயரம் 5' 1'' வரனுக்கு சுமார் 34 முதல் 38 வயது வரையில் உள்ள, நல்ல வேலையில் இருக்கும் ஜாதகங்கள் தேவை. Decent and immediate marriage. பெட்டி எண்: 3996.

* தஞ்சை மாவட்ட சோழிய வெள்ளாளர் அசைவம் பட்டப்படிப்பு சொந்த வியாபாரம், கௌரவமான வசதியுள்ள குடும்பம் இன்கம்டாக்ஸ் கட்டக்கூடிய 25 வயது 5 3/4 அடி உயரம் நல்ல பர்சனலிடி அழகிய தோற்றம் உள்ள பையனுக்கு இதே இனத்தில் படித்த அழகான குடும்பப்பாங்கான பெண் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 3997.

* 31 வயதுள்ள அழகும் நல்ல குணமுள்ள அரசினர் கல்லூரியில் உதவிப் பேராசிரியையாகப் பணியாற்றும் கிறித்துவ மதம் மாறிய யாதவ குலத்தைச் சேர்ந்த பார்வை விழுந்த பெண்ணுக்கு, பி.ஏ. அல்லது எம்.ஏ. படித்த நிலையான வேலையும் பரந்தியாக மனப்பான்மையும் கொண்ட யாதவ குலம் அல்லது வேறு குலத்தைச் சார்ந்த வரதட்சணை வாங்காத கிறித்துவ அல்லது இந்து மதத்தைச் சார்ந்த மணமகன் தேவை. 35—40 வயதுக்குள் இருந்தால் நலம். பெட்டி எண்: 3998.

* வடமாள் ஹரித கோத்ரம், திருவாதிரை வயது 30, ஒல்லியான உயரமான சிவப்பான தோற்றம், தற்காலிக அரசுப் பணி, விரைவில் நிரந்தரமாகலாம். பணம் சீர் எதிர்பார்க்காது படிப்பு, வருமானமுள்ள குடும்பத் தொந்தரவில்லாத சென்னைவாசி தேவை. இரண்டாந்தாரம் பரவாயில்லை. எளிய திருமணம். பெட்டி எண்: 3999.

* கவர நாயுடு பிரபல தொழிலதிபரின் ஒரே குமாரனும், 21 வயது, தாய்வழிப் பாட்டியின் சகல சொத்துக்களுக்கும்கூட ஏக வாரிசுதாரரும் பத்தாவது படித்துத் தொழில் நிர்வகித்து மூவாயிரத்திற்கதிகமான வருமானமுள்ளவருக்கு அதே இனத்தில் சிவப்பாக அழகுள்ள 19 வயதிற்குள் குடும்பப்பாங்கிற்கேற்ப அறுசுவை சமைத்திறனுடன் அடக்கமுள்ள மணப் பெண் தேவை. பெட்டி எண்: 4000.

* பெண் கம்மவார் நாயுடு, வயது 25, எம்.எஸ்ஸி சிவந்த நிறம். சென்னையில் அரசு வேலை ரூ 1200/— இதே ஜாதியில் 32 வயதிற்குள் நல்ல சம்பளம் வாங்

கும் அழகான பட்டதாரி வரன் தேவை. பெட்டி எண்: 4001.

° தஞ்சை மாவட்டம் கார்காத்த சைவ வேளாளர் இனம், 32 வயது, 5' 2'' மாநிறம். அரசு உயர்நிலைப் பள்ளியில் தமிழ் ஆசிரியர் வேலை பார்க்கும் பெண்ணிற்கு அதே இனத்தைச் சேர்ந்த ஆசிரியர் அல்லது நல்ல வேலையில் உள்ள தகுந்த வரன் தேவை. பெட்டி எண்: 4002.

° விஸ்வ கர்மா (அல்லது) விஸ்வ பிராமணர் இனத்தைச் சேர்ந்த சைவம் நடுத்தர வசதியுள்ள உயரம் 5 அடி, பரணி நட்சத்திரம், வயது 25, 8 வது வரை படித்த மாஞ்சிவப்பு நிறமுள்ள குடும்பப்பாங்கான பெண்ணுக்கு அரசாங்க வேலையிலோ (அல்லது) சொந்தமான தொழிலில் உள்ள மணமகன் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். விலாசம்: S. சிவராமன், 188, பாண்டூர், போஸ்ட், திருக்கழுக்குன்றம், செங்கல்பட்டு ஜில்லா 603 109

° பிரஹசரணம், கர்க்க கோத்திரம், சதயம் வயது 33, எஸ்.எஸ்.எல்.சி. டைப்ரைட்டிங் இங்கிலீஷ், தமிழ் ஹையர், டி.டி.சி. கோர்ஸ் பாஸ் செய்துள்ள 7 ல் செவ்வாய் தோஷமுள்ள பெண்ணிற்கு மணமகன் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். எளிய திருமணம். உயரம் 5' 3'' நல்ல நிறம். பெட்டி எண்: 4003

° சென்னை மத்திய அரசு பொது நிறுவனத்தில் பணிபுரியும் 30/DME/150/AD/1600 பெறும் நபர்க்கு எல்லாவகையிலும் 150—155 உயரம் உள்ள குடும்பப் பொறுப்பு ஏற்று திறமையுடன் நிர்வகிக்க நல்ல வசதியும் தோற்றமும் படிப்பும் வேலைபார்க்கும்/பார்க்காத 23—26 வயது உள்ள மணமகள் தேவை. Early marriage. பெட்டி எண்: 4004.

• Alliance solicited for Brahacharanam Bharadwaj Kerala Iyer Groom, Star Kettai, Graduate Central Govt Service, Bombay. 36 years, 175 cms tall. Salary Rs. 1800/- plus Govt. Qrs at Bombay. Employed Girls preferred, unemployed Girls also considered. Box No. 4005.

• Alliance invited from educated/working, fair, good looking Girl for Saiva Vellala Mudaliar, State Govt employed aged 30 earning 1400/-. Height 5'4". Early marriage. Contact Box No. 4006.

• Gazetted Officer Central Govt/Brahacharnam/Aswini/Bharadwaja/Divorcee without encumberances 52/5' 5"/2900 seeks alliance from Girls with good family background. Subsects no bar. Apply to Box No. 4007.

• Alliance invited from well-to-do educated, unemployed, employed very fair, domestically well trained and homely Girl between 18-24 for fair Hindu S.C. (Arunthathiyar) Bank employed, 28 years/165 cms. drawing Rs. 1500/- p.m. Caste no bar. Kindly reply to Box No. 4008.

• Alliance invited from well placed Nair Boys for a Government employed Post Graduate Nair Girl age 28, with good complexion. Work transferable in Tamilnadu. Star Poorattathi. Domestically trained. Box No. 4009

• Sowrashtra Engineer 30/165/3000 requires Bride- Graduate, good personality and family background, preferably from Madras. Send Horoscope and family details to Box No. 4010.

• Alliance invited for Brahacharanam Vihithahavyam SSLC 31 years domestically well trained unemployed Girl. Star Kettai Height 5.2. Decent early marriage Vadamal accepted. Reply with Horoscope and employment details to Box No. 4011.

• Alliance invited for Andhra based Vadama Kashyapa Gothram Girl SSC ANM 27/5' 2" Puradam, temporarily employed. Early simple marriage. Sub-sects no bar. Box No. 4012.

• Alliance invited for Brahacharanam, Kerala Brahmin Iyer Girl age 26, Kasyapa Gothram Thiruvadirai II Padam. 5' 4" Medium colour, B.Com., working in a Private Company in Delhi. Subsect no bar. Apply with Horoscope to Box No. 4013.

• Bracharanam Groom, Graduate, well employed wanted for very fair goodlooking Girl 30/163, Shadamarshanam, Uttiradam, domestically well trained knowing Typing/Shorthand. Reply with Horoscope to Box No. 4014.

• Alliance from employed, Tamil Brahmin Boys for Graudate Brahmin Girl Trivandrum based aged 28/162 cm. employed in Telecommunication (Civil) 'Hastham' star Neidrupakasyapa gothram. Write with Horoscope and Bio Data to Box No. 4015.

• Iyer Girl, 35½ yrs. married in Oct. 1975. Legally divorced within weeks, sober, graceful, non-Matric, expert cook, domestic works well-versed. Broadminded family. Seek Iyer/Iyengar Groom. Widowers/Divorcees also welcome. Presently at Bhopal. Box No. 4016.

• Seeking alliance for a smart Iyer Boy/27/175 cm., Engineer Telco, Jamshedpur with smart slim tall attractive Iyer Girl/22 Hindi speaking, preferably Graduate, brought up in north India. Box No. 4017.

• Wanted tall, slim, fair, graduated Girl for handsome talented treasurer age 28, well reputed Company. Chances of going abroad if desired. Caste and Religion no bar. Dowry adjustable. Box No. 4018.



• Alliance invited age 30-35 from IAS/IPS/IRS/Doctors/Engineers Bank Officers/Lecturers for Saivite Pillai Post Graduate Govt. Lady Doctor. Box No. 4019.

• Wanted decently employed Iyer Groom for Palghat Vadama Kaundinya Girl, Mrugaseersham, 27/160 cm. Post Graduate, good looking, Radio Artist Tirupati Music College, Veena Lecturer. Sub-sect no bar. Box No. 4020.

• Wanted Bride for SC Boy 32 years Degree holder employed in Nationalised Bank. Box No. 4021

• Alliance invited from broadminded, decently employed Graduate youth, for a fair looking Vegetarian Vellala Pillai Graduate Girl aged 33, well versed in domestic management and Music Veena Recitals. Star Anusham. Horoscope essential. Box No. 4022

• Alliance invited from same caste for unemployed Graduate tamil Iyer 25 years old handicapped Girl, well versed in household and other chores. No horoscope. Simple early marriage. Box No. 4023.

• Alliance invited from broad minded well placed professionally qualified Doctor Bridegroom Age 29/30 for Brahacharanam Iyer Haritha Gothram Doctor Girl 25 years Revathi doing her M.D., domestically well trained. Decent marriage. Apply with Horoscope and Bio-Data to Box No. 4024.


• கார்காத்தார் வெள்ளாளர் குலம். தமிழகத்தில் மத்திய அரசு நிறுவனத்தில் பணிபுரியும் பி.ஈ. பட்டதாரிக்கு அதே இனத்தில் படித்த அழகான மணமகள் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 4025.

• அஷ்ட சகஸ்ரம், கௌண்டின்ய கோத்திரம், 34 வயது, உத்திரம், பி.எஸ்ஸி, பி.எட்., டீச்சர், V.K.V. அருணாசலப் பிரதேசம், ரூ 1500/—க்கு மேல் சம்பளம் மற்றும் இதர சலுகைகளும் உள்ள பையனுக்கு, நல்ல குடும்பப்பாங்கான பெண் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். ஜாதகம் மற்றும் முழு விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். கூடிய சீக்கிரம் வேலை தமிழ் நாட்டிற்கு மாற்றலாகி விடும். முகவரி: S. நாகமணி அய்யர், முருகன் குடி, பெண்ணாடம் போஸ்ட், தென்னாற்காடு மாவட்டம் 606 105.

• பலிஜா நாயுடு, 28 வயது, சிவந்த நிறம், நல்ல அழகு, உயரம் 165செ.மீ.மாநில அரசில்அட்டெண்டராக, சம்பளம் ரூ 1100/— (பி.காம் படிக்கும்) வேலையில் இருக்கும் வரனுக்கு, நல்ல குடும்பப்பாங்கான அரசு வேலையிலுள்ள மணமகள் 26 வயதிற்குள் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். பெற்றோர் ஜாதகத்துடன் தொடர்பு கொள்க. பெட்டி எண்: 4026.

• தெலுங்கு பிராமணன் (நியோகி) ஆத்ரேய கோத்ரம் அஸ்வினி 28/5'½/1000/(பி.ஏ.) அரசாங்க நிறுவனத்தில் வேலை பார்க்கும் பையனுக்கு, மாற்றல் பெறக்கூடிய அரசாங்க வேலையிலுள்ள நடுத்தர நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பிராமணப் பெண் வேண்டும். ஆடம்பரமற்ற திருமணம். பெட்டி எண்: 4027.

• வயது 26, நடக்கும் டாக்டர் எம்.பி.பி.எஸ். மூலம் மூன்றாம் பாதம் ஆதி திராவிட வரனுக்கு செவ்வாய் தோஷம் உள்ள 24 வயதுக்குட்பட்ட பெண் டாக்டர் அல்லது 20க்கு உட்பட்ட பட்டதாரி பெண் தேவை. ஜாதகம் அல்லது பிறந்த நேரமும் தேதியும் குறித்து எழுதவும். S. மணியம், C/o. திரு P. சந்தானம், B.P.M., S.B. Colony, தஞ்சாவூர்—613007



• ITI தேர்வு பெற்று சென்னையில் பிரபல தனியார் தொழில் கூடத்தில் மாதம் ஆயிரம் ஊதியத்தில் நிரந்தர பணிபுரியும் 26 வயதுள்ள அகமுடையார் இனத்தைச் சார்ந்தவருக்கு மணமகள் தேவை. மணமகள் சென்னையில் அரசு நிறுவனத்திலோ, தனியார் நிறுவனத்திலோ பணிபுரிபவராக இருக்க வேண்டும். பிற இனத்தவரும்கூட விண்ணப்பிக்கலாம். ஜாதகம், குடும்பம் பற்றிய முழு விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். S. Packirisami, C/o. P. Muhilan, K-72, CBI New Quarters, K.K. Nagar, Madras-600 078.

• கம்மவார் நாயுடு வயது 26, மாதச் சம்பளம் 1200/— பொது நிறுவனமொன்றில் கேஷியராக பணிபுரியும் பி.காம். பட்டதாரிக்கு அதே இனத்தில் மத்திய, மாநில அரசில் அல்லது வங்கியில் பணிபுரியும் பண்பும், குணமும் உள்ள அழகிய பெண் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 4028.

• பாலக்காடு ஐயர் வடமாள் நைத்ருப காஸ்யப கோத்ரம் 26 வயது, பத்தாம் வகுப்பு வரை படித்துள்ள குடும்பப்பாங்கான பெண்ணிற்கு அரசாங்க அல்லது தனியார் துறைகளில் பொறுப்புள்ள வேலையில் இருக்கும் மணமகன் தேவை. மேற்படி வரனின் சகோதரர், வயது 29 பிரசித்தி பெற்ற மல்டி நேஷனல் வர்த்தக நிறுவனத்தில் பொறுப்புள்ள பதவி வகிக்கும் ரூ 2000/— சம்பளம் உள்ள வரனுக்கும் தகுந்த குடும்பப்பாங்கான மணமகள் தேவை. ஜாதகத்துடனும் மற்ற விவரங்களுடனும் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 4029.

• நாடார் எம்.காம். பி.எட். வயது 28 மேனிலை ஆசிரியர் எடுப்பான தோற்றத்துடன் மாநிறமான மணமகனுக்கு வங்கி/அஞ்சலகம்/பள்ளி போன்ற அரசுத் துறையில் பணியாற்றும் அழகிய நற்குணமுள்ள மணமகள் தேவை. இந்து/கிறித்துவ நாடார்கள் விண்ணப்பிக்கலாம். கிறித்துவராயின் பிற பிரிவினரும் விண்ணப்பிக்கலாம். D. பன்னீர்செல்வம், 113, II அண்ணாநகர், திருத்துறைப்பூண்டி, தஞ்சை மாவட்டம்—614 713.

• பிரஹசரணம் ஹரிதகோத்ரம் விசாகம் நட்சத்திரம் 27 வயது கேரளா அய்யர் சிவப்பு நிறம், அழகுள்ள பி.ஏ. படித்த பாட்டு தெரிந்த பெண்ணிற்கு படித்து நல்ல வேலையிலிருக்கும் 34 வயதுக்குட்பட்ட வரன் தேவை. பெண்ணின் உயரம் 5', உட்பிரிவுகள் சம்மதம். விரைவில் திருமணம். பெட்டி எண்: 4030.

• கார்காத்த சைவ வேளாளர் இனத்தைச் சேர்ந்த 21/151செ.மீ. உயரமுள்ள, பி.எஸ்ஸி பட்டம் பெற்றுள்ள, நல்ல குணம், சிவந்த நிறம், பூராட நட்சத்திரம், வசதியுள்ள பெண்ணிற்கு அதே இனத்தைச் சேர்ந்த மணமகன் வயது 28க்குள் இன்ஜினியர், டாக்டர், பாங்க் ஆபீசர், சி.ஏ., எம்.பி.ஏ., மத்திய, மாநில அரசு ஆபீசர் தேவை. ஜாதகக் குறிப்பு, குடும்ப விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 4031.

• இந்து நாடார் வயது 30, பி.ஏ. படிப்பு, அழகான நல்ல உயரமும் சொந்தத் தொழில், சொத்துள்ள ஒரே மகனுக்கு அதே இனத்தைச் சேர்ந்த படித்த அழகுள்ள 25 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை. ஜாதகத்துடன் எழுதவும். பெட்டி எண்: 4032.

• சாத்தாத ஸ்ரீ வைஷ்ணவா (தெலுங்கு) தனியார்துறை இளநிலை ஆசிரியர், வயது 46 (முதல் திருமணம் சட்டப்படி விவாகரத்து செய்யப்பட்டது) வேறு எவ்வித தொந்தரவும் இல்லாத வரனுக்கு, அதே வகுப்பைச் சேர்ந்த அல்லது ஐயர்/ ஐயங்கார் பிராமணர்/ வடகலை/தென்கலை வகுப்பைச் சேர்ந்த கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த நற்குணம் உள்ள, வேலை பார்க்கும்/ வேலை பார்க்காத மணமகள் தேவை. வரனைத் தமது சார்பில்பணிமாற்றம்செய்து அமர்த்திக் கொண்டாலும் நலம். திருவாதிரை/மிதுனம்/மாநிறம். குடும்ப விவரம் பிற விவரங்கள் ஜாதகத்துடன் விண்ணப்பம் செய்யவும். பெட்டி எண்: 4033.

• பூந்தமல்லிமுதலியார்பம்பாய் மத்திய ரயில்வேயில் மாத வருமானம் 1000/— வயது 24, 5' 6'', படிப்பு எஸ்.எஸ்.எல்.சி. மேற்கண்ட வரனுக்குமுதலியார் இனத்தில் எஸ்.எஸ்.எல்.சி. படித்த அழகான பணிபுரியும் அல்லது பணிபுரியாமல் இருந்தாலும் வரவேற்கின்றோம். மணமகள் தேவை. ஜாதகத்துடன் விவரம் எழுதவும். பெட்டி எண்: 4034.

• காசியபகோத்திரம்,வடமாள், ஐயர் பி.ஏ. பி.எட். அரசுப் பள்ளியில் ஆசிரியையாகப் பணிபுரியும் 29 வயதுப் பெண்ணுக்கு நல்ல வேலை, வசதி அல்லது பிஸினஸ் செய்யும் தகுதியுள்ள மணமகன் தேவை. பெட்டி எண்: 4035.

• வெள்ளாள கவுண்டர் (கொங்கு வேளாளர்) கன்னங் கூட்டம் பி. இ. பட்டதாரி, வயது 35, அஸிஸ்டென்ட் இன்ஜினியர், தமிழ்நாடு மின்வாரியத்தில் பணிபுரியும் சம்பளம் 2300/— உயரம் 5' 10'' மாநிறம் உத்திரம் நட்சத்திரம், அழகும் குணமும்

படிப்பும் உள்ள பெண் தேவை. ஜாதகம் மற்றும் குடும்ப விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். P. பெரியசாமி B.E. (TNEB), 41, இராஜ வீதி, செங்கம், வடாற்காடு ஜில்லா. குறைந்த கல்வி கற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

* Bride acomplished well educated tamil Iyer Girl below 26 from good family for Chartered Accountant 29 well-placed Brahacharnam Koundinya. Son of retired Company Executive. Suitability only consideration. Box No. 4036.

* Alliance invited, from well educated, well employed, Vegetarian gentleman for 31 yrs, good-looking, Saiva Vellala Girl, B.A., Pooradam, Sub-sects no bar. Simple decent early marriage. Box No. 4037

* Suitable match for Arcot Mudaliar Girl, M.Sc., (Chem), I.I.T. Delhi 23yrs, 5' medium complexion, pleasant looking, well-read. Father Central Govt. Officer. No encumbrances. No dowry. Decent marriage. Professionals preferred. Box No. 4038.

* Beautiful preferably white complexioned non-Kousika employed or affluent Bride alone 165 cms under 26 for handsome Vadama healthy Keralite Diploma Sales Engineer earning above 1200 rupees Stat Chathayam. Box No. 4039.

* ஸ்ரீவத்ஸ கோத்திரம் வயது 25, 5½ அடி உயரம் மாநிறம் எஸ்.எஸ்.எல்.சி. சென்னையில் உத்தியோகம் தென்கலை அய்யங்கார் நட்சத்திரம் பூரட்டாதி. சம்பளம் ரூ 500 மேற்படி சுமாராக படித்த வேலையில் உள்ள (அ) வேலையில் இல்லாத அழகான பெண் தேவை. வடகலையும் சம்மதம். ஜாதகத்துடன் தொடர்பு கொள்க. பெட்டி எண்: 4040.

* வடமான், வாதூல கோத்ரம், பரணி, பி.ஏ., 33 வயது, உயரம் 168 செ.மீ. தமிழ்நாடு அரசாங்கத்தில் அக்கௌண்டண்ட்டாக சென்னையில் பணிபுரியும் ரூ 1350/– வருமானமுள்ள பையனுக்கு நல்ல குடும்பத்தைச் சேர்ந்த அழகான பெண் தேவை. மணமகன் வங்கி, இன்சூரன்ஸ் அல்லது அரசுத் துறையில் இருப்பது உசிதம். ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். உட்பிரிவு சம்மதம். பெட்டி எண்: 4041.

* அஷ்ட சாஸ்திரம், காசிப கோத்திரம், பூரம் செவ்வாய் தோஷ ஜாதகம் பி.எஸ்ஸி/30/165 கேரள ஐயர் தமிழ்நாடு அரசு சார்ந்துள்ள நிறுவனம் ஒன்றில் 1000/– சம்பாதிக்கும் சென்னையில் சொந்த வீடுள்ள ஒரே மகனுக்கு படித்த வேலைக்குப் போகாத அல்லது வேலைக்குப் போகும் வீட்டு வேலை தெரிந்த தெய்வ பக்தியுள்ள 27 வயதுக்குள் பெண் ஜாதகத்துடன் தொடர்பு கொள்க. உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண்: 4042.

* வட ஆற்காடு மாவட்டம், துளுவ வேளாள முதலியார், நடுத்தரக் குடும்பம். ரேவதி, 26, 150 செ.மீ. DCE சென்னையில் மாநில அரசில் ரூ 900/– ஊதியம் பெறும் பெண்ணிற்கு மணமகனும், இப்பெண்ணின் சகோதரன் உத்திரம், 30, 165 செ.மீ. D.E.E. சென்னையில் மாநில அரசில் ரூ 1000/– ஊதியம் பெறும் பையனுக்கு மணமகளும் தேவை. இருவருக்குமே ஜாதகம் இல்லை. தந்தை 60 வது வயதில் காணாமல் போய்விட்டார். பெண் கொடுத்து பெண் எடுக்கவும் சம்மதம். பெட்டி எண்: 4043

* சென்னையில் மத்திய அரசு வேலை, சம்பளம் ரூ 1800/– வயது 31, பூரட்டாதி நட்சத்திரம், பி.எஸ்ஸி. சொத்துள்ள தாய் மட்டும் உள்ள, மணமகனுக்கு, சென்னையில் அரசாங்க/பாங்க் வேலையுள்ள முதலியார்/பிள்ளையினத்து மணமகள் தேவை. ஏழையாயிருந்தாலும் பரவாயில்லை. வரதட்சிணை தேவையில்லை. ஜாதி பேதமில்லை. பெட்டி எண்: 4044.

* வடமான், பௌரகுத்ஸ கோத்ரம், பூரட்டாதி, பி.எஸ்ஸி படித்த 24 வயது 158 செ.மீ. உயரமுள்ள பெண்ணுக்குப் படித்த நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. பெட்டி எண்: 4045.

* வடமான் பாரத்வாஜ கோத்ரம், பூரம் 33 எஸ்.எஸ்.எல்.சி. படித்த 5' 4'' உயரம் குடும்பப் பாங்கான அழகிய நல்ல நிறம் உள்ள பெண்ணிற்கு அதே பிரிவைச் சார்ந்த நல்ல வேலையில் உள்ள 36–38 வயதில் வரன் தேவை. ஜாதகத்துடன் எழுதவும். பெட்டி எண்: 4046.

* சென்னை பேரிச் செட்டியார், சைவம், D.E.E. வயது 25, பெங்களூரில் மாதம் 2000 ரூபாய் சம்பாதிக்கும் வரனுக்கு அதே இனத்தில் வேலையிலுள்ள/வேலை இல்லாத பெண் தேவை. கொளத்து மகரிஷி கோத்ரம். ஜாதகத்துடன் அணுகவும். பெட்டி எண்: 4047.

* Graduate brahmin Girl around 22/160 from well to-do families for Army Officer 26/172/3,500 Bharadwajam, brahacharanam, Avittam. Horoscopes with 'Sevva dosham' only required. Sub-sects no bar. Box No. 4048.

* Vanniya Chettiar Boy B.Sc., (P.G.) 33/155/1500 employed in Central Govt. Madras. Alliance invited from employed Girl State/Central/Bank/reputed Company. No dowry, early and simple marriage preferred. Apply with Horoscope to Box No. 4049.

* Alliance invited from Bank employed Vadama Iyer Bride from small family for Vadama Engineer, Company Executive Poona based Athreya, Gothram, 37 years, Star Visakam. Reply with Horoscope to Box No. 4050.

* Viswakarma caste alliance invited for widower aged 32, working in Nationalised Bank as Clerk, drawing salary Rs. 1800/-. Having two children. Other Castes/Widows/Divorcees may also apply. Box No. 4051.

* Wanted suitable Iyer Groom for Vadama, Srivatsa Gothram, Thiruvadurai, aged 38, height 5' 1". S.S.L.C. State Govt., employee. Send details with Horoscope to Box No. 4052.

* Alliance sought from well placed handsome Brahacharanam Boys for a Koundinya Punarvasu beautiful, fair slim, affluent Girl, 28/157 Pre-University English, unemployed, home loving. Decent early marriage. Box No. 4053.

* Wanted decently employed non-Bharadwaja Tamil Groom below 32 years for Palghat Vadama Girl, Hastam 24/160, M.Sc., very fair, unemployed domestically trained, Sub-sect no bar. Reply to Box No. 4054.

* Groom for Vadama Barudwaja, fair, good-looking Iyer Girl, 30, 146 cms. Domestically well trained. Send Horoscope and details to Box No. 4055.

Edited, Printed and Published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032. (Phone: 431543). Assistant Editor: Manjula Ramesh.



துர்க்கா பூஜை

ஆ! துர்க்கா வரும் காலமாகி விட்டதோ? ஆனால் இதென்ன 'அம்மா'வின் வழிபாட்டுக்கு இதுதகுந்த காலமல்லவே! இது 'அகால'மான நேரமல்லவா? ஆயினும் இவள் ஹிமவானின் குலமகள்! பொன் வண்ணத்தில், கயல் விழிகளில் கருணை பொங்கி வழிய, எடுப்பான நாசியுடன், பவழம் போன்ற உதடுகளில் புன்னகை தவழ, சர்வாலங்கார பூஷிதையாக, கரிய மேகம் போன்ற கூந்தல் அலை அலையாகக் காற்றில் விரிந்து படரத் தன் குழந்தைகளான விநாயகர், கார்த்திகேயன், லக்ஷ்மி ஸரஸ்வதியுடன் பிறந்தகம் வருகிறாளே. ஆனால் அதிக நாள் தங்க மாட்டாளே!

யா தேவீ ஸர்வ பூதேஷு மாத்ரு ரூபேண
ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை
நமோ நம:

வண்ண, வண்ண விளக்குகளால் ஊரே அலங்கரிக்கப்பட்டு, எங்கும் தோரணமும், பந்தலும், கோலமுமாய், வங்காளம் திருவிழாக் கோலம் பூண்டு இவளை வரவேற்க ஆயத்தமாகி விடுகிறது. புத்தம் புதிய ஆடைகள் அணிந்து மக்கள் கனிந்த உள்ளத்துடன் பண்பும், அன்பும் நிறைந்த பேச்சுடன், ஒருவருக்கொருவர் அன்பைப் பரிமாறிக் கொண்டு நிறைவை அடைகிறார்கள்.

ஆ! துர்க்கா வரும் நேரமாகிவிட்டதே எல்லா இடங்களும் நன்றாக இருக்க வேண்டுமே, சுத்தமாக இருக்க வேண்டுமே என்ற கவலையுடன் அள்ளப்படாத குப்பைகள் அள்ளப்பட்டு, வீடுகள் எல்லாமே துப்புரவு செய்யப்பட்டு, புதுமை மெருகு ஏற்றப்பட்டு, மிக மிக சிரத்தையுடன் மாத்ரீ பூஜாவுக்குத் தயாராகிறார்கள் வங்காளிகள்!

ஷஷ்டியன்று அலங்கார வர்ணப் பந்தலுக்குள் நுழையும் இவளை வரவேற்று வரவேற்புப் பாடல் "ஆகமனி கான்" பாடுகிறார்கள்:

ஓ! அம்மா! நீ வங்காளத்துக்கு வருகிறாய்! தேவி ஹிமாலயத்திலிருந்து பூமிக்கு வருகிறாய்! ஆனால் இங்கு இருக்கப் போவது சில நாட்களே! திருமணமான எங்கள் வீட்டுப் பெண்ணாகிய நீ குழந்தைகளுடன் வருகிறாய்! உன் நாயகன் சிவன் உன்னை விட்டு அதிக நாட்கள் பிரிந்திருக்க மாட்டானே! உன்னைப் பிரியும் நேரத்தில் மனத்தில் எல்லையில்லாத துன்பமும் வேதனையும் பெருகுகிறதே! ஹூம்! மறுபடியும் உன்னைப் பார்க்க வேண்டுமென்றால் இன்னும் ஒரு வருடம் காத்திருக்க வேண்டுமே!

வங்காளிப் பெண்கள் துர்க்காவை வர



வேற்றுப் பாடும் கிராமிய நாடோடிப் பாடல் இது.

இவள் இமயத்திலிருந்து தன் சிங்கவாகனத்திலேறி யானை மீதோ, குதிரை மீதோ, பல்லக்கிலோ அமர்ந்து வருகிறாள். யானை மீது வந்தால் செல்வமும் சுபிட்சமும் பெருகும். குதிரை மீது அமர்ந்து வந்தால் மகாமாரி வரும். ஆனால் இவள் திரும்பிப் போகையில் வந்த வாகனத்திலேயே போக வேண்டும் என்பதில்லை. வேறு வாகனத்திலும் போகலாம்.

தேவி மஹாத்மியத்தில் மார்க்கண்டேய புராணத்தில், 'ரம்பா' என்னும் அசுரன் கடுமையான தவம் செய்து மூவுலகத்தையும் வெல்லக் கூடிய ஒரு மகனைப் பெற்றான். இவனே மகிஷாசுரன். பிற்காலத்தில் இவன் பிரம்மாவைக் குறித்துத் தவம் செய்து எந்த மனிதனாலும் வெல்லப்படாதவனாகத் தான் இருக்க வேண்டும் என்ற வரத்தைப் பெற்றான்.

பின்னர் மிக்க கர்வம் கொண்டவனாக தேவர்களை வென்று தேவலோகத்தைத் தனக்குரியதாக்கிக் கொண்டான். தேவர்கள் பிரம்மாவிடம் முறையிட்டனர். ஆனால் பிரம்மாவோ முன்பே மகிஷாசுரனுக்கு வரம் கொடுத்து விட்டதால் ஒன்றும் செய்ய இயலாதவராகி தேவர்களை அழைத்துக் கொண்டு விஷ்ணுவிடம் செல்கிறார். அவரோ 'அவரவர் தங்கள் மனைவிமார்களுடன் தவம் செய்யுங்கள்' என்று கூறிவிட்டார்.

அப்படிச் செய்த தவத்தின் பயனாக அந்தச் சக்திகளின் கூட்டுஸ்வரூபமாக தேவி தோன்றினாள். இவளே துர்க்கா தேவி!

'துர்க்' என்றால் கோட்டை. கோட்டையை போன்ற பலமும், சக்தியும், அழகும் கொண்டவளாக இருப்பதால் தேவி, 'துர்க்கா' என்று அழைக்கப்பட்டதாகவும் சொல்கின்றனர்.

ஆரியர்களுடைய . வருகைக்குப் பின்னர் இவள் 'ஷரத்' காலத்தில் பூஜிக்கப்பட்டாள்.



சாதாரணமாக தேவியின் பூஜைக்குரிய காலம் வஸந்தருதுவே. உலகத்தில் உள்ள அரசர்கள் பலராலும் பூஜிக்கப்பட்டதால் இவள் 'ராஜ ராஜேஸ்வரி' என்றும் அழைக்கப்படுகிறாள்.

ராமன் ராவணனோடு யுத்தம் ஆரம்பித்து ராவணனைக் கொல்ல முடியாமல் தவிக்கிறான். சீதை இன்னமும் அசோக வனத்திலேயே கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறாள். தேவர்கள் 'மகாலக்ஷ்மி'யான தாய் சீதை வடிக்கும் கண்ணீரைக் கண்டு எல்லையில்லாத் துயரை அடைகின்றனர். ராவணனைக் கொல்ல ஒரே வழி 'துர்க்கா'வின் துணையே.

தேவர்கள் ராமனிடம் தூது அனுப்புகிறார்கள். துர்க்காவை எழுப்பி அவள் சக்தியின் துணை கொண்டு ராவணனைக் கொல்ல யோசனை சொல்கிறார்கள். அவளைக் கூப்பிடக் கூடாத சமயம் இது. ஆனாலும் அவளை எழுப்பித்தான் ஆக வேண்டும். அகாலத்தில் அம்பாளை எழுப்பிக் கூப்பிடுவதே 'அகால போதன்' எனப்படுகிறது.

ராமனுக்குத் தயக்கம். ஷரத் காலத்தில் அம்பிகையை எழுப்புவது வழக்கமல்லவே. இது தேவி பூஜைக்குரிய சமயமல்லவே என்று வாதிடுகிறான். ஆனாலும் உலகிற்காக வேறு வழியில்லாமல் தேவர்கள் சொல்படி புரட்டாசி மாதத்தில் மஹாளய அமாவாசை ஆரம்பித்த ஆறாவது நாள் அநுமனைப் பூஜைக்குரிய சாமான்களைக் கொண்டு வரச் செய்து பூஜையை ஆரம்பிக்கிறான். இப்போதும் இதுவே சம்பிரதாயமாக இருக்கிறது. இன்றைக்கும் ஆறாவது நாளான ஷஷ்டியன்றே அம்பிகையின் திருவுருவம் அலங்காரப் பந்தலுக்குள் கொண்டு வரப்பட்டு பூஜைக்குரிய சாமான்கள் சேகரிக்கப்பட்டு பூஜை ஆரம்பிக்கிறார்கள்.

சப்தமியன்றும், அஷ்டமியன்றும் மிகச் சிரத்தையுடன் பக்தியுடன் ராமன் பூஜை செய்கிறான். அஷ்டமியன்று மாலை சந்தி பூஜையும் செய்கிறான். ஆனால் துர்க்கா ராமன் முன் தோன்றவில்லை. நவமியன்று (ஒன்பதாவது நாள்) நூற்றெட்டு நீலத் தாமரைகளைக் கொண்டு (கிடைப்பதற்கு மிகமிக அரிய மலர்) பூஜை செய்கிறான். 'தேவி தாஹா' என்னும் மிகத் தொலைவிலுள்ள ஓரிடத்திலிருந்து அநுமன் இவைகளைக் கொணர்ந்து கொடுக்கிறான். ஆனாலும் தேவி மனங்குளிர்ந்து ராமன் முன் பிரஸன்னமாகவில்லை. செய்வதறியாது கலங்கிய ராமன் நீலோத்பலம் போன்ற தன் அழகிய கண்களையே அன்னைக்கு அளிக்க நிச்சயம் செய்கிறான்.

ராமனின் பக்தியை மெச்சிய தேவி ராமனுக்கு தன் சக்தியை அளிக்கிறாள். பத்தாவது நாள் 'தசமி'யன்று ராவணன் ராமனால் கொல்லப்படுகின்றான். சீதை விடுதலை பெறுகிறாள். துர்க்கை கைலாசத்துக்குத் திரும்பு

- OSR

கிறாள்.

இன்றும் ராமன் செய்த பூஜை போலவே வங்காளத்தில் ஷஷ்டியன்று 'அகால் போதன்' என்ற அகால பூஜை மாலையில் ஆரம்பித்துச் செய்கிறார்கள். அஷ்டமியன்று சந்தி பூஜையும், 108 தாரரைககளால் நவமியன்று பெரிய பூஜையும் செய்கிறார்கள். தசமியில் துர்க்கையின், ராமனின் வெற்றி எங்கும் குதூகலத்துடன் கொண்டாடப்படுகிறது. வங்காளத்தில் துர்க்கா பூஜாவாகவும், இன்னும்வடக்கேராம்லீலாவாகவும்கொண்டாடுகிறார்கள். அம்பிகை மிகக் கொண்டாட்டங்களுடன் ஹிமாலயத்துக்கு அனுப்பப்படுகிறாள். அதைக் குறிப்பதாக கங்கையில் துர்க்கையின் சிலையைப் போட்டு விடுகிறார்கள்.

முதன் முதலில் இரண்டு கைகளை உடையவளாகவே அறுவடை சமயத்தில் பூஜிக்கப்பட்ட தேவி பின்னர் காலம் செல்லச் செல்ல பல மாறுதல்களோடு தற்போதைய கோலத்தைக் கொண்டுள்ளாள் என்கின்றனர்.

துர்க்கை உமாவாகவும், பார்வதியாகவும், வீட்டுப் பெண்ணாகவும் நினைக்கப்பட்டு எல்லாரும் ஒன்று கூடியிருக்கும் இந்த மகிழ்ச்சியான நேரத்தில் தன் குழந்தைகளான லக்ஷ்மி, ஸரஸ்வதி, விநாயகர், கார்த்திகேயனுடன் பிறந்தகம் வருகிறாள். ஆனால் அவள் கணவன் சிவன் வீட்டுக்கு அவள் சீக்கிரமே திரும்ப வேண்டும். அவளால் நான்கு நாட்களுக்கு மேல் இருக்க முடியாது என்பது ஐதீகம். இதனாலேயே துர்க்கையின் சிலையுடன் லட்சுமி, ஸரஸ்வதி, விநாயகர், கார்த்திகேயன் சிலைகளையும் பந்தலில் வைத்துப் பூஜை செய்கின்றனர்.

பெரிய மரத்தட்டில் வெற்றிலை, பழம், பாக்கு, மஞ்சள், குங்குமம், நெல், பூணூல், சிவப்பு நூல், கண்ணாடி, பருப்பு வகைகள்,, எல்லாம் வைத்து பூஜையின் போது தீபம் காட்டி (ஹாரத்தி) மணியடித்து சங்கம் ஊதி பூஜை செய்கிறார்கள். குறிப்பாக இந்த ஹாரத்தி என்பது சுமங்கலிப் பெண்களே செய்யவேண்டும். மண்பானையில்வைத்திருக்கும் ஜலத்தில் தேவியின் முக தரிசனம் (பிம்பம்)செய்வார்கள். தேவியின்சிலைஉயரத்தில் இருப்பதால் மரத்தட்டை கையில் எடுத்து உயரத்தில் கொண்டு போய் ஹாரத்தி காட்டுவார்கள். முக தரிசனம் செய்யவே இது நடக்கிறது.

தித்திப்புத் தின்பண்டங்களும், நன்றாகக் கழுவித் துண்டங்களாக நறுக்கப்பட்ட பலவிதமான பழங்களும் நைவேத்தியம் செய்யப்பட்ட பின்னரே சமைத்த உணவுகள் நைவேத்தியம் செய்யப்படும். முற்காலத்தில் ஆடு, எருமை போன்றவற்றை பலி கொடுக்கும் வழக்கமிருந்தது. எருமையை பலி கொடுக்கும் போது ஒரே வெட்டில் அது



கொடுக்கப்பட வேண்டும் என்பதற்காக சுத்தமான நெய்யை அதன் மீது நன்றாகத் தடவிப் பின்னர் பலி கொடுத்து வந்தார்கள். ஆனால் தற்போது அந்த வழக்கம் மறைந்து விட்டது.

பொதுவாக இந்தப் பூஜையின் தாத்பரியமே தீமைகள் தொலைந்து நன்மை நிலைபெறுவது என்பதே. நம்மிடம் இருக்கும் பாவங்களையெல்லாம் தொலைத்து நல்லவற்றையெல்லாம் நிலை பெறச் செய்வதே கடமை.

தசமியன்று துர்க்கையின் வெற்றி மிகப் பெரிய அளவில் கொண்டாடப்படும். துர்க்கையின் சிலையின் முன் அலங்காரப் பானையில் இருக்கும் ஜலம் சாந்தி ஜலம் எனப்படும். இதை தசமியன்று துர்க்கையை கங்கையில் போட்ட பிறகு கங்கை ஜலமும் எடுத்துக் கொண்டு மங்களம் வேண்டி சிரஸில் புரோக்ஷணம் செய்து கொள்வார்கள். இந்த ஜலம் பாதங்களில் படக் கூடாது.

இந்த துர்க்கா பூஜையை மிகவும் பிரபலமாக்கியவன் ''ராஜா ஷாஹி''யின் (வடக்கு வங்காளத்திலுள்ளது) அரசன் கங்க்ஷன் என்னும் அரசன். கல்கத்தாவிலேயே கிட்டத்தட்ட ஆயிரம் அழகுப் பந்தல்கள் நிறுவப்பட்டு ஆயிரம் சிலைகள் வைக்கப்படுகின்றன. அது தவிரச் சுற்று வட்டார ஜில்லாக்களில் நகரங்களில், கிராமங்களில் துர்க்கா பூஜா நடைபெறுகிறது.

''தேவிக்கு நமஸ்காரம். மஹாதேவிக்கு நமஸ்காரம். சுபவடிவினளுக்கு நமஸ்காரம். மங்களஸ்வரூபிணிக்கு நமஸ்காரம். சைதன்ய வடிவினளாகவும், விஷ்ணு மாயையாகவும், புத்தி ரூபமாகவும், நித்ரா ரூபமாயும், ஷுதா ரூபமாகவும், சாயா ரூபமாகவும், சக்தி ரூபமாகவும், த்ருஷ்ணா ரூபமாகவும், க்ஷாந்தி ரூபமாகவும், ஜோதி ரூபமாகவும், லஜ்ஜா ரூபமாகவும், சாந்தி ரூபமாகவும், ச்ருத்தா ரூபமாகவும், காந்தி ரூபமாகவும், லக்ஷ்மி ரூபமாகவும், வ்ருத்தி ரூபமாகவும் ஸ்ம்ருதி ரூபமாகவும், தயா ரூபமாகவும், துஷ்டி ரூபமாகவும், மாத்ரு ரூபமாகவும், ப்ராந்தி ரூபமாகவும் எல்லா உயிர்களிடத்தும் வியாபித்து நிற்கும் தேவிக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம்.''

— புவனா நடராஜன்




விஷ்ணுப்ரியே!


''யந்மூலே ஸர்வதீர்த் தானி யந்மத்யே
ஸர்வதேவதா
யத்கரே ஸர்வவேதாச்ச துளஸீம் தாம்
நமாம்யஹம்
நமஸ்துளஸி கல்யாணி நமோ
விஷ்ணுப்ரியே ஸுபே
நமோ மோக்ஷ ப்ரதே தேவி நமஸ்
ஸம்பத்ர தாயிகே!''

துளசிச் செடியை அம்மனாகப் பாவித்து, வணங்கும் பழக்கம் நம் பெண்களிடத்து இருந்து வருவது எல்லோரும் அறிந்த ஒன்றே; அவ்வாறு அனுதினமும் வழிபடும் பெண் மணிகள் — ஒவ்வொரு கிழமைக்கும் ஒவ் வொரு கோலமிட்டு — மேலே கூறிய ஸ்தோத் திரத்தையும் கூறி — பூஜை செய்து வந்தால் நல்ல பலன் கிட்ட வழியுண்டு. ஏழு நாட்க ளுக்கும் ஏழு விதமான கோலங்கள் உண்டு. கோலங்களின் மேல் கால்கள் படாமல் இருப்பது மிக முக்கியம்.


ஞாயிற்றுக்கிழமை




செவ்வாய்க்கிழமை




திங்கட் கிழமை




புதன் கிழமை




வியாழக்கிழமை



சனிக்கிழமை



வெள்ளிக்கிழமை



— திருமதி பாலசுப்ரமணியன்

தேங்காய்ப் பால் முறுக்கு

தேவையான பொருட்கள்:

கோதுமை மாவு — 1 கிலோ.
அரிசி மாவு — ¼ கிலோ.
டால்டா — 150 கிராம்.
எள் — 25 கிராம்.
சீரகம் — 25 கிராம்.
தூள் பெருங்காயம் — 1 டீஸ்பூன்.
சமையல் சோடா — 1 டீஸ்பூன்.
தேங்காய் — 1.
தேவையான அளவு உப்பு.

செய்முறை:

கோதுமை மாவை, சலித்து சுத்தம் செய்து கொள்ளவும். இட்லி குண்டான், அடுப்பில் வைத்து, சிறிதளவு தண்ணீர் ஊற்றி, இட்லி தட்டில் துணிபோட்டு, அதன்மேல்கோதுமைமாவைக்கொட்டி, 15 நிமிடம் நன்கு ஆவியில் வேக வைக்க வேண்டும். ஆவியில் வெந்த கோதுமை மாவை, நன்கு ஆற வைக்கவும். தேங்காயைத் துருவி, ஆட்டுக்கல் லில் போட்டு ஆட்டி, கெட்டியாகப் பால் எடுத்துக் கொள்ளவும். ஒரு வாய கன்ற பாத்திரத்தில் கோதுமை மாவு, அரிசி மாவு, டால்டா, எள், சீரகம், உப்பு, சமையல் சோடா, பெருங்காயம். எல்லாவற்றையும் போட்டு நன்கு கலந்து கொள்ளவும். எடுத்து வைத் துள்ள தேங்காய்ப் பாலை மாவில் ஊற்றி நன்குகப் பிசையவும். முறுக்கு மாவு பதத்திற்குப் பிசைந்து கொள்ளவும். அடுப்பில் இரும்புச் சட்டியை வைத்து, பாமாயிலை ஊற்றவும். எண்ணெய் நன்குகக் காய்ந்ததும், மாவை முறுக்கு அச்சில் போட்டு எண்ணெயில் பிழிய வும். சிவந்தவுடன், மறுபக்கம் திருப்பிப் போட்டு எண்ணெய் வடிய விட்டு, தட்டில் எடுத்து வைக்கவும். இம்முறுக்கு சாப்பிடுவதற்கு மிகவும் சுவையாய் இருக்கும்.

— அ. ஜெனி.

உங்களுக்காகவே



அழகு மிளிரும் அடர்த்தியான கூந்தலுக்கு

நம்பகமான ஒரே கூந்தல் தைலம்

குணா

கூந்தல் தைலம்

தலை மயிர் உதிர்தல், செம்பட்டை நிறம்.
பருவத்திற்கு முன்பு ஏற்படும் பித்த நரைகள் மாறும்.
தினசரி தலைக்குத் தடவி வந்தால் தலை மயிர்
நீண்டு கறுத்து அடர்த்தியாய் வளரும். தலை அரிப்பு
பொடுகு, மண்டையில் சொறிந்தால் செதில் உரிதல்
குணமாகும். பெண்கள் ஆண்கள் அனைவரும்
விரும்பி உபயோகிக்கின்றனர்
1 பாட்டில் விலை ரூ 16-25 V.P.P. உண்டு
தபால் செலவு இல்லை.


தேவைக்கு எழுதவும் **நவசக்தி வைத்தியசாலை**
தபால் பெட்டி எண் 7 சேலம் 636 007


இப்பொழுது கவர்ச்சியான புதிய பேக்கிங்கில் கிடைக்கிறது

எமது தைலம் கிடைக்குமிடங்கள் : 1. சேலம் — ரோசு மெடிக்கல்ஸ் 2. ஆத்தூர் — முத்து மெடிக்கல்ஸ், 3. நாமக்கல் — கஸ்தூரிபா மெடிக்கல்ஸ். 4. ராசிபுரம் — ராசி மெடிக்கல் ஸ்டோர்ஸ், 5. மேட்டூர் — ஜெயலஷ்மி மெடிக்கல்ஸ், 6. திருச்செங்கோடு — சீனிவாசா மெடிக்கல்ஸ், 7. தர்மபுரி — விஜயலஷ்மி மெடிக்கல்ஸ் 8. கிருஷ்ணகிரி — கோபாலகிருஷ்ணா மெடிக்கல்ஸ் 9. ஒசூர் — மூர்த்தி மெடிக்கல்ஸ் 10. பெங்களூர் — பிரசாத் ஸ்டோர்ஸ் K.G. சர்கிள் 11. சென்னை-3 — ஹேமா மெடிக்கல்ஸ் 12. அமிஞ்சிகரை — வேலவன் மெடிக்கல்ஸ் 13. குடியாத்தம் — திருமகள் மெடிக்கல்ஸ் 14. காஞ்சிபுரம் — லஷ்மி மெடிக்கல்ஸ் 15. அரக்கோணம் — அகிலாம்பிகை மெடிக்கல்ஸ் 16. ஆரணி — பாக்கியம் அண்ட் கோ., மருந்துகடை 17. திருவண்ணாமலை — அன்னை மெடிக்கல்ஸ் 18. வேலூர் (NA) — பாரத் மெடிக்கல்ஸ் 19. திருப்பத்தூர் (NA) — லஷ்மி மெடிக்கல்ஸ் 20. விழுப்புரம் — அன்பு மெடிக்கல்ஸ் 21. கள்ளக்குறிச்சி — A. ராஜீ நாட்டு மருந்துக்கடை 22. கும்பகோணம் — செல்வம் மெடிக்கல்ஸ் 23. தஞ்சாவூர் — சிட்டி மெடிக்கல்ஸ் 24. திருச்சி — சண்முகா மெடிக்கல் ஹால் 25. திண்டுக்கல் — தமிழ்நாடு சித்த மருந்துக்கடை 26. பெரியகுளம் — N. லஷ்மணன் மருந்துக்கடை 27. தேனி — ஆண்டாள் மெடிக்கல்ஸ் 28. மதுரை — குமார் மெடிக்கல்ஸ் 29. மதுரை — ஸ்டேட் மெடிக்கல் கார்பரேசன் (24 மணி நேர கடை) 30. ராமநாதபுரம் — பாத்மா மெடிக்கல்ஸ் 31. காரைக்குடி — மலேசியா ஜெனரல் ஸ்டோர்ஸ் 32. விருதுநகர் — S.S.K. மெடிக்கல்ஸ் 33. தூத்துக்குடி - அன்பு மெடிக்கல்ஸ் 34. திருநெல்வேலி — கோமதி மெடிக்கல்ஸ் 35. பாளையங்கோட்டை — ஒலிவா இந்தியன் மெடிக்கல்ஸ் 36. நாகர்கோவில் — S. நல்ல பெருமாள் மருந்துக்கடை 37. தென்காசி — M.R. மெடிக்கல்ஸ் 38. ராஜபாளையம் — அரவிந்த் மெடிக்கல்ஸ் 39. சிவகாசி — சிவகாசி மெடிக்கல்ஸ் 40. கோவில்பட்டி — சாந்தி மெடிக்கல்ஸ் 41. ஸ்ரீ வில்லிபுத்தூர் — பாலாஜி மெடிக்கல்ஸ் 42. உடுமலை — ஜாம் ஜாம் மெடிக்கல்ஸ் 43. பொள்ளாச்சி — ராமநாதன் மெடிக்கல்ஸ் 44. கோவை — காசிநாத் அண்ட் கோ., 45. கோவை — திருமலை மெடிக்கல்ஸ், காந்திபுரம் 46. திருப்பூர் — கீதா மெடிக்கல்ஸ் 47. சிவகங்கை குணா & கோ (கெமிஸ்ட்) 48. கோபி — வாணி பார்மஸி 49. ஈரோடு — ஸ்ரீ ராகவேந்திரசாமி மெடிக்கல்ஸ் 50. திருச்சி ஜங் — கபூர் மெடிக்கல்ஸ் 51. புதுக்கோட்டை — மீனா பார்மஸி 52. திருவாரூர் — அன்னபூர்ணா மெடிக்கல்ஸ் 53. மாயவரம் — ஸ்வாமி மெடிக்கல்ஸ் 54. சிதம்பரம் — ராஜா பார்மஸி 55. விருத்தாசலம் — ஜெயா பார்மஸி 56. சேலம் செவ்வாய்பேட்டை — பிரபாத் மெடிக்கல்ஸ் 57. தொட்டியம் — மீனாஷி மெடிக்கல்ஸ் 58. கிருஷ்ணகிரி - பி. கே. பி. எம். ஜி. மெடிக்கல்ஸ் 59. கரூர் - அண்ணாமலை மெடிக்கல்ஸ் 60. நாமக்கல் — சரஸ்வதி மெடிக்கல் ஹால், 61. காரைக்குடி — சரோஜா ட்ரகஸ் ஸ்டோர்ஸ். 62. பாண்டிச்சேரி — ராஜா மெடிக்கல்ஸ். 63 சென்னை-4 மீனாட்சி மெடிக்கல்ஸ் 64. மதுரை-1 ப்ரவீன் மெடிக்கல்ஸ் 65. நாகை-ரங்கா ஸ்டோர்ஸ் 66. மைலாப்பூர் R.R. பார்மஸி 67. தி. நகர் சுந்தரம் ஸ்டோர்ஸ் (கெமிஸ்ட்) 68. சேலம் — சாமுண்டி சூப்பர் மார்க்கெட் 69. கடலூர் — சிவா மெடிக்கல்ஸ் 70. ஊட்டி — நீலகிரிஸ் டிரக் ஸ்டோர்ஸ் & பார்மஸி 71. தஞ்சாவூர்-1 சிங்காரம் மெடிக்கல்ஸ் மார்ட்

இப்பொழுது எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

எமது நவரத்ன கல்ப லேகியம் சக்திக்கும் வலிமைக்கும் அனைவரும் சாப்பிடத்தக்க சிறந்த டானிக்.
1 புட்டி ரூ 30/– **V.P.P.** உண்டு. தபால் செலவு இலவசம். எமது ஸ்டாக்கிஸ்டுகளிடமும் கிடைக்கும்.





மனைவி இருக்க 'மானேஜ்மெண்ட் கோர்ஸ்' எதற்கு?

ஆளை மேய்ப்பது இன்றைய உலகில் லேசான காரியம் அல்ல. கடமையைச் சரிவர செய்யாமல், உரிமைக்கு மட்டும் போராடும் ஒரு யுகத்தில், திறமையைப் பெருக்குவதும் அவ்வளவு சுலபமல்ல. இதை ஒவ்வொரு கம்பெனியும் உணர்ந்திருக்கிறது! 'மனித ஆற்றல் பெருக்கம்' (Human Resources Development) என்பது இன்றைய தாரக மந்திரம். அதாவது ஒவ்வொரு மனிதனிலும் உள்ளே முடங்கிக் கிடக்கும் திறமையை வெளிக்கொணர்ந்து, அதன் மூலம் போட்டியைச் சமாளித்து('மானேஜ்' செய்து) கம்பெனியையும் முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்ல வேண்டும். இதற்காகவே அத்தனை மானேஜர்களும் 'மானேஜ்மெண்ட் கோர்ஸ்' மூலம் பயிற்சி பெறுகிறார்கள். ஆனால் எல்லோரும் பயனடைகிறார்களா என்பதுதான் கேள்வி. ஏனென்றால் மற்றவர்களின் ஆற்றலைப் பெருக்க வேண்டிய அநேகருக்கு, தங்களிடமே ஆற்றல் இருப்பதில்லை!

(அது சரி, தினமும் புதுப்புது வார்த்தைகளைப் பிரசுரிக்கும் தமிழ்மொழிக்கு 'மானேஜ்மெண்ட் கோர்ஸை'க்கும் ஒரு நல்ல தமிழ்ப் பதம் வேண்டாமா? சமீபத்தில் 'இதழியல்' என்று ஒரு வார்த்தை படித்தேன். ஏதோ பூ விதழ்களைப் பற்றிய கல்வியோ, அல்லது உதடுகளைப்பற்றிய படிப்போ என்று எண்ணினேன். பிறகுதான் தெரிந்தது அது பத்திரிகைகளைப் பற்றிய கோர்ஸ் என்று! அதே போல 'மேனேஜ்' என்றால் 'சமாளி'. ஆகா, பிறந்துவிட்டது ஒரு புது வார்த்தை: 'சமாளியல்!')

'சிடுசிடு' எம்.டி. ஒருநாள் ஏதோ அபூர்வமாக நல்ல 'மூடில்' இருந்தார். நைஸாக அவரிடம் பிரஸ்தாபித்தேன். "சார்! எல்லா கம்பெனிகளும் கல்கத்தா, டில்லி, பம்பாய் என்று மானேஜ்மெண்ட் டிரெயினிங்குக்காக மானேஜர்களை அனுப்புகிறார்கள். படேபடே கம்பெனிகள் லண்டன், பாரிஸ், நியூயார்க் என்று அனுப்புகின்றன. என்னைக் குறைந்தபட்சம் நேபாளம், பூட்டான், பங்களாதேஷ் எங்காவது மானேஜ்மெண்ட் பயிற்சிக்கு அனுப்பக் கூடாதா?" என்றேன்.

"மானேஜ்மெண்ட் பயிற்சியாவது, மண்ணாங்கட்டியாவது" என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார் அவர்.

"சிறிய கூட்டல் கழித்தல்களை, புள்ளி விவரங்களாகப் போட்டுக் குழப்புவதும், சிம்பிள் வார்த்தைகளை பெரிய பெரிய அமர்க்களப் பதங்களாக்கி சிக்கலாக்குவதும் அவர்கள் செய்யும் வேலை. உண்மையான மேனேஜ்மெண்ட் கற்றுக் கொள்ள வேண்டும் என்றால் நம் பெண்டுகளிடம் போய்க் கேட்டால் போதும். பொருள்கள் அபரிமிதமாகக் கிடைத்த காலத்தில், பெரிய குடும்பங்களில் அகப்பட்டுக் கொண்டு அத்தைகளும், அம்மாக்களும், மாமிகளும், பாட்டிகளும் படு ஏழ்மையில் அன்று எப்படி சமாளித்தார்களோ, அதே போல இன்று பணம் இருந்தும் விலைவாசி கட்டுப்படி ஆகாவிட்டால்கூட எப்படியோ இல்லத்தரசிகள் சமா

ளித்துக் கொண்டுதான் செல்கிறார்கள். இதைவிட உயர்ந்த மானேஜ்மெண்ட் எது? எல்லாவற்றையும் போய் இல்லாளிடமே கற்றுக் கொள்'' என்று விரட்டினார் அவர்!

அவர் சொல்வதிலும் உண்மை இருக்கலாம் என்று மனத்தில் பட்டது. பிறகு செய்த ஆராய்ச்சியின் பலன்தான் இக்கட்டுரை.

ஒரு வீட்டில் எத்தனை ஆண்கள் இருந்தாலும், அது வெறும் வீடாகவே இருந்துவிடுமே தவிர, ஒரு குடும்பமாகவோ, குடித்தனமாகவோ, ஆவதில்லை — ஒரு பெண் காலடி எடுத்து வைக்கும்வரை — அவள் வயது என்னவாக இருந்தாலும் சரி, குடும்பத்தில் பிணைப்புக்குக் காரணமாக இருப்பவள் அவளே. இத்தனை தலைமுறை இடைவெளிக்கும், தலைபோகும் பிரச்னைகளுக்கும் மிஞ்சி, குடும்பங்கள் ஏதோ ஒரு மாதிரி பிணைப்புக் கட்டுப்பட்டு இருப்பது அவளால்தான். ஆதலால் அவள் பிணைப்புக்கோர் அடையாளம் (Cohesive factor). அவளால் வீடு என்னும் ஒரு சாதாரண நிறுவனம், குடும்பம் என்னும் 'செயல்படும் நிறுவன'மாக மாறுகிறது. இது மானேஜ்மெண்ட்டின் ஒரு பாடம் அன்றோ?

இனியாளை ஒருநாள் கேட்டேன். ''குடும்பத்தில் சமையலுக்கும், கழுவுவதற்கும் தேவையான பொருள்கள், மருந்துகள், அழகு சாதனங்கள் எல்லாம் ஒவ்வொரு மாதமும், டஜன் கணக்கில் தேவைப்படுகின்றனவே, எப்படி நினைவில் வைத்துக் கொண்டு தட்டுப்படாமல் சமாளிக்கிறாய்? எங்கள் பாக்டரியில் ஸ்டோர் கீப்பர், 'இது இல்லை, அது தீர்ந்து விட்டது' என்று தினமும் முறையிடுகிறார். சப்ளை செய்பவர்களுக்கு டிரங்க்காலும், டெலக்ஸும் தந்தியும் தினமும் பறக்கின்றன'' என்றேன்.

அவள் சொன்னாள்: எல்லா சாமான்களையும் கண்ணாடி அல்லது அது போன்ற கிளியர் பிளாஸ்டிக்/பாலிதீன் டப்பாக்களில் போட்டு வைத்திருக்கிறேன். 'ஸ்டாக் லெவலை'க் கவனித்துக் கொண்டே வருகிறேன். குறிப்பிட்ட லெவலுக்குக் கீழே வந்ததும், மறுபடியும் புதிதாக வாங்கி, அதைக் கீழேயும், பழைய ஸ்டாக்கை மேலேயும் நிரப்பி விடுகிறேன். இதனால் பழைய பொருள் முதலில் செலவழிந்து விடுகிறது.''

இந்த முறையில் சாமான்கள் ஷார்ட் ஆவதில்லை. எங்கள் பாடமும் இதையேதான் கூறுகிறது. நேரடிப் பார்வையின் கணிப்பு மூலம் வேலை செய்வது 'சீப்'பானது. நிச்சயமானதும்கூட, எந்த ரிக்கார்டு, லெட்ஜர் ஸ்டாக் பாலன்ஸும் இதற்கு ஈடாகாது. ஒரு குறிப்பிட்ட நாட்களுக்கு ஒருமுறை இதை ஒழுங்காகச் செய்தால், நெருக்கடிக்கு இடமே இல்லை!

'மனித ஆற்றல் பெருக்கம்' போன்ற பெரிய வெற்று வார்த்தைகளை அவள் அறியாமல் இருக்கலாம். ஆனால் அவள் அதை நடைமுறையில் கையாளும்விதம், பயிற்சி பெற்ற மானேஜர்கள் நாண வேண்டும். ஓர் உதாரணம் தரட்டுமா?

ஒரு ஆண்டு முடிவதற்குள் குழந்தை முதல் அடி எடுத்து வைத்து நடக்க முயல்கிறான். பாலன்ஸ் தவறுகிறது. தாயின் தலைப்பைப் பிடித்துக் கொள்கிறான். தாய் கூறுகிறாள். ''நீ இப்போது பெரி..... யவனாக வளர்ந்து விட்டாய். சொந்தமாக உன்னால் கட்டாயம் நடக்க முடியும். நட''. ''இல்லை, உய்ந்துடுவேன்'' என்கிறான் குழந்தை. ''இல்லை, நீ விழ மாட்டாய். நான் இருக்கிறேன்'' என்று தலைப்பை விலக்கிக் கொண்டு விடுகிறாள். முதல் அடி வெற்றி. கைகொட்டி ஊக்குவிக்கிறாள் அன்னை. அடுத்த அடி தடுமாறுகிறது. ''பரவாயில்லை, முயன்று பார்'' அன்னையின் அன்புக் கட்டளை. மூன்றாவது அடியில் விழுந்து விடுகிறான் குழந்தை. 'ஓ'வென்று அழுகிறான். தாய் அணைத்துத் தூக்குகிறாள். சமாதானம் சொல்கிறாள். ''நீ நன்றாகத்தான் நடந்தாய். இந்தத் தரைதான் குறுக்கே வந்து விட்டது. தரையை நன்றாக அச்சு'' என்று தரையை இரண்டு உதை உதைக்கிறாள். குழந்தைக்கு நம்பிக்கை வளருகிறது. அடுத்த வாரம் கைக்கு அகப்படாமல் ஓடுகிறான்.

ஆனால் இந்த மாதிரி ஒரு நிலைமையை பயிற்சி பெற்ற மானேஜர் எவ்விதம் கையாளுகிறார்? ஜூனியரைக் கூப்பிடுகிறார். ''இதோ பாருங்கள், சாதாரணமாக இவ்வேலையை நான்தான் செய்வது என்றாலும், வேலைப் பளுவின் காரணமாக உங்களிடம் ஒப்படைக்கிறேன். நீங்கள் எப்படிக் கையாளுவீர்களோ, தெரியாது. ஆனால் தயவுசெய்து குழப்பம் மட்டும் செய்யாதீர்கள்'' என்று முதலிலேயே அதைரியப்படுத்திவிடுகிறார். வேலையை ஜூனியர் ஆரம்பித்த பின்பும், இடையிடையில் வந்து எட்டிப் பார்த்துவிட்டு ''ஓ, இப்படிச் செய்கிறீர்களா? இந்தமுறை சரி என்று எனக்குப் படவில்லை. சரி, சரி, ஆரம்பித்தாயிற்று, தொடர்ந்து செய்யுங்கள்'' என்று கூறிவிட்டுப் போகிறார். கடைசியில் எதிர்பார்த்த அளவு வெற்றி கிட்டாவிட்டால், பழிதான் சுமத்துகிறாரே, ''என்னய்யா, இவனெல்லாம் படித்து, எம்.பி.ஏ. பட்டம் பெற்று, பயிற்சியும் பெற்றுக் கிழித்துவிட்டார்கள்'' என்று மற்றவர்களிடமும் பழிக்கிறார்.

அந்த இளம் தாயை அவர் பின்பற்றி இருந்தால், கீழ்கண்ட விஷயங்கள் புலப்பட்

நரம்பு பலவீனத்தால் ஏற்பட்ட தலைவலிக்குச் சூடான தேயிலைக் கஷாயத்தில் இரண்டு எலுமிச்சைப்பழத் துண்டுகளைப் போட்டுக் குடிக்க வலி தீரும்.

— ருக்மணி.

"மெரி"

தங்க கவரிங் நகைகளுக்கு தன்னிகரற்ற பெயர்!

கண்ணைக்கவரும் அழகும், பொலிவும், தரமும், உத்திரவாதமும் உடைய உலகப் புகழ்பெற்ற 22 Ct ''மெரி'' தங்க கவரிங் நகைகளை வாங்கி, அணிந்து மகிழுங்கள்!



நகைகளின் நம்பர்களைக் குறிப்பிட்டு எழுதினால் வி.பி.பி. மூலம் நகைகள் அனுப்பப்படும். வி.பி.பி. சார்ஜ் தனி. இலவச கேட்லாக்கைப் பெற எழுதுங்கள்!

மெரி கோல்டு கவரிங் ஒர்க்ஸ்

தபால்பெட்டி : 1405, 14, ரங்கநாதன் தெரு,
தி. நகர், சென்னை-600017.

டிருக்கும்:

முதலில் நம்பிக்கையை ஊர்ஜிதம் செய்யும் சொற்கள். அடுத்தது முயற்சியைப் பாராட்டும் ஊக்கம். கடைசியில் தோல்வியின்போது பக்கபலம், ஆதாரம். அவர் செய்தது எல்லாமே அவன் செய்ததற்கு நேர் எதிர். வெற்றி எப்படிக் கிட்டும்?

மாறி வரும் சூழ்நிலைக்குத் தக்கபடி தங்களை மாற்றிக் கொள்வது பெண்களுக்கு ஆகி வந்த கலை. 25 வருடங்கள் எங்கேயோ பிறந்து வளர்ந்துவிட்டு, திருமணமான நாளிலிருந்தே கணவனுடன் கலந்து, 'நம் குடும்பம்' என்றும், மற்றவர்களிடம் 'என் வீடு' என்றும் உரிமை கொண்டாடுகிறாள். அடுத்து வரும் கிட்டத்தட்ட 50 ஆண்டுகளுக்கு ஒரு பொறுப்புள்ள தாயாக, குடும்பத் தலைவியாக, மாமியாராக, பாட்டியாக, கொள்ளுப் பாட்டியாக, ஒவ்வொரு ஸ்டேஜிலும், தன் பர்ஸனாலிட்டியை சூழ்நிலைக்குத் தக்கபடி மாற்றிக் கொண்டு ஈடு கொடுக்கிறாள். மானேஜர்களுக்குப் போதிக்கப்படும் Adaptability—உயிர் வாழ வேண்டுமானால் சூழ்நிலைக்குத் தக்கபடி வளைந்து கொடுத்தாக வேண்டும் என்ற நியதிக்கு இதைவிட உதாரணம் வேறு என்ன வேண்டும்?

பையன் , தந்தையைக் கண்டு சிறுவயதில் பயப்படுகிறான். பெரியவன் ஆகி சுயமாக சம்பாதிக்கத் தொடங்கிய பின், அவன் மீது தந்தைக்குள்ள செல்வாக்கு குறைகிறது. ஆனால் தாய்? அவன் மணமாகி, கிரகஸ்தன் ஆனபின்பும், அவள் பிணைப்பிலிருந்தும், பந்தத்திலிருந்தும் விடுபடுவதில்லை. ஏனென்றால் அவன் விஷயத்தில், நலத்தில், அவள் காட்டும் அக்கறை அப்படி. உண்மையான அதிகாரத்துக்கு உரிமையானவர்கள், நிரந்தரமாக, அக்கறை காட்டுபவர்களே. மற்றவர்கள் வெறும் சீட்டுக்கட்டு ராஜாக்களே. இது வீட்டுக்கும் பொருந்தும், கம்பெனிக்கும் பொருந்தும்.

ஜனாதிபதி கென்னடி ஒருமுறை கூறினார்: "வெற்றிக்குப் பல தந்தைகள். அதை எல்லாரும் உரிமை கொண்டாடுவார்கள். தோல்வி ஓர் அனாதை. அதை யாரும் சீண்டுவதில்லை."

ஆனால், அந்த வெற்றி அவ்வளவு சுலபத்தில் கிட்டுவதில்லை. அதற்கு விடாமுயற்சியும், பயிற்சியும் தேவை. அதுவும் போட்டி மலிந்தமானேஜ்மெண்ட்ஃபீல்டில், அதிர்ஷ்டவசமாக இப்பயிற்சியைத் தேடிக் கொண்டு வெளியில் எங்கும் போக வேண்டியதில்லை. சற்றுக் கண் திறந்து பார்த்தால் அறிந்து கொள்ளலாம். வீட்டுக்குள்ளேயே இருக்கும் மனைவிக்கு மிஞ்சிய மானேஜ்மெண்ட் கோர்ஸே கிடையாது என்பதை!

— எஸ். டி. ராகவன்

''ஆண்டுக்கு ஒன்பது நாட்கள் மட்டுமே உங்களைக் காணும் வாய்ப்பினைப் பெற்ற எங்களைக் காண வாருங்களேன்'' என்று பொம்மைப் பட்டாளமே அழைப்பதாக இருந்த அந்தப் புதுமையான நவராத்திரி அழைப்பிதழே எங்கள் மனத்தைக் கவர்ந்தது.


நாங்களும் அந்த பொம்மைப் பட்டாளத்தைக் காண காரைக்குடியில் கற்பகம் வேதராமன் இல்லத்திற்குச் சென்றோம். முன் ஹாலில் கண்ணைக் கவரும் அழகிய கலர்க் கோலங்கள். ஒன்றல்ல இரண்டல்ல; அழித்துவிடக் கூடாதே என நிதானமாகத் தாண்டிச் சென்றோம். கற்பகம் சிரித்த மாத்திரத்தில்தான் அவை அழிகின்ற மாக்கோலங்களல்ல. அழியாத பாசிமணிக் கோலங்களென்று தெரிந்தது. அடுத்த ஹாலுக்குள் நுழைந்தால் அழகான பத்துப் படிகளில் அமைப்பான பொம்மைகள், கடைகளில் விலை கொடுத்து வாங்கிய மண் பொம்மைகள் அல்ல. அனைத்தும் கற்பகம் மாமியின் கைவண்ணத்தால் உருவான புராணக் கதைகள் பரப்பும் கலைப் பொக்கிஷங்கள். சமய ஒருமைப்பாட்டினைக் காட்டும் வகையில் அமைந்த பொம்மைகள் ஒரு படியில். (இந்து சமயக் கோயில், ஏசு நாதர் ஆலயம் — ஏசுநாதர். மசூதி) துருவன் கதை. கண்ணப்ப நாயனார் கதை, காளிங்க நர்த்தனம், கீதை உபதேசம், நாராயணீயம், கஜேந்திர மோக்ஷம் ஆகியவற்றை விளக்கும் பொம்மைகள் அடுத்த சில படிகளில்.

மற்றொரு படியில் ஒரு வீடு — வீட்டில் உபயோகப்படுத்தக்கூடிய மேஜை, நாற்காலி, கூடை நாற்காலிகள், கேஸ் ஸ்டவ், குக்கர் முதலிய பல பொருட்கள், பலவிதமான மிருகங்கள் ஒரு படியில். புகை வண்டி நிலையம் ஒரு படியில். அதனையொட்டிய நவீன நகர்ப்புறம் அடுத்த படியில். அனைத்தும் **பாசிமணிகளாலேயே** பின்னப்பட்டவை.

''யாருக்கெல்லாமோ கலைமாமணி பட்டம் கொடுக்கிறார்கள். இவர்தானே மணியாலேயே கலைகளை உருவாக்கியிருக்கிறார். இவர்தான் நிஜமான கலைமாமணி!'' எனப் பாராட்டலாம் போலிருக்கிறது.

— ராஜி

கலைமா'மணி' இவர் தான்!





பச்சடியோ பச்சடி!



"ஸில்க்" பச்சடி

வெண்டைக்காயை அரைக்கால் இஞ்ச் கனத்தில் 'சுருளான' வடிவில் நறுக்குங்கள். லேசான புளி, உப்பு (லேசாக) மஞ்சள் பொடி போட்டு வேக விடவும். இரண்டு வெண்டைக்காய்களுக்கு ஓர் அச்சு வெல்லம் கணக்கு. போட்டு லேசாக மாவு தூவி இறக்கி விடுங்கள். ஆறியதும் தயிரை விடுங்கள். பச்சடி — ஏ. ஒன். குழந்தைகள் விரும்பி உண்பார்கள்.

தளுக்குப் பச்சடி

சிரமமே இன்றி வெறும் உளுத்தம் பருப்பு மாவில் செய்வது. லேசாக உளுத்தம்பருப்பை பிரட்டி நைசாக அரைத்துக் கொள்ளுங்கள். பச்சையாகவே நீர்விட்டுக் கரைத்து உப்புப் போடவும். தயிர் கெட்டியாக விட்டு பச்சை சிரகம் போட்டு கடுகு வறுத்துப் போடுங்கள். திடீர் விருந்தானால் தளுக்காகச் செய்யலாம். வேலையே இல்லை. பச்சை மாவிலும் செய்யலாம். ருசியாக இருக்கும்.

பஞ்சாப் ஸ்பெஷல்

உருளைக் கிழங்கை வேக வைத்து மசிக்கவும். பொடிப் பொடியாக வெங்காயத்தை நறுக்கவும். பச்சை மிளகாய்; கொத்து மல்லித் தழை, இவற்றை நறுக்கிக் கெட்டித் தயிரில் போடவும். கடுகைத் தாளிக்கவும். கத்தரிக்காயைச் சுடவும் (துப்பாக்கியால் அல்ல! அடுப்பில் போட்டு) புழு இல்லாமல் பார்த்துப் போடவும். (ஜீவ ஹிம்ஸை வேண்டாம்) தோலை நீக்கி உட்புறப் பகுதிகளை எடுத்துப் பாத்திரத்தில் போட்டு மசிக்கவும். தக்காளிப் பழம், பச்சை மிளகாயை மிகச் சிறிய அளவில் துண்டாக்கி இலுப்பச் சட்டியில் கடுகு தாளித்து இதைப் போடவும். கத்தரிக்காயுடன் கலந்து ஆறியபின் கெட்டித் தயிர் விடவும்.

முத்துப் பச்சடி

காயே இல்லாமல் பச்சடி பண்ணலாமா? கடலைமாவை கெட்டியாகக் கரைத்து (உப்பிட மறவாதீர்!) ஜாரிணியில் முத்துக்களாக எண்ணெயில் பொறிக்கவும். கெட்டித் தயிரில் இதைப் போட்டு கடுகு தாளிக்கவும்.

குஜராத் ஸ்பெஷல்

பசலைக் கீரையை அலம்பி வேக விடவும். தயிரைக் கெட்டியாக ஆறியபின் விட்டு பச்சை மிளகாய், உப்பு, (லேசாக) வறுத்த வெந்தயப் பொடி, சீரகம் முழு மிளகாய் வற்றல் ஆகியவற்றை நெய்யில் வறுத்துப் போடவும். பசலைக் கீரைப் பச்சடி உடம்புக்கு வலு கொடுக்கும்.

அவசரப் பச்சடி

அப்பளத்தையும் வற்றலையும் பொறித்துத் தூளாக்கிக் கெட்டித் தயிரில் போட்டு விடலாம். இதற்குத் தாளிப்பே வேண்டாம். (திடீரென்று என் உறவினர் வீட்டுக்குப் போன போது நான் உண்ட 'டேஸ்ட்' பச்சடி. 'கை கொடுத்த பச்சடி' என்றும் சொல்லலாமா?)

இஞ்சிப் பச்சடி

ஒரு துண்டு இஞ்சியுடன் தேங்காய், பச்சை மிளகாய் ஆகியவற்றை சேர்த்து நைசாக அரைத்து, ஒரு ஸ்பூன் சீரகத்தை ஒன்றிரண்டாகத் தட்டிப் போட்டு, உப்பு, தயிர் சேர்க்கவும். ஜீரண சக்திப் பச்சடி ரெடி.

பித்தக் கல்லா?

கவலையே வேண்டாம். பச்சை வாழைத் தண்டை சுருளான வடிவில் நறுக்கி நாரெடுத்து மோரில் போடவும். கறுக்காமல் இருக்கும். பிறகு மிகச் சன்னமாக நறுக்கித் தயிரில் போட்டு கடுகு, பச்சை மிளகாய் தாளிக்கலாம். 2. வேக விட்டும் ஒரு அச்சு வெல்லம் (ஒரு கப் சன்னத் துண்டுகளுக்கு) போட்டும் இறக்கி ஆறியதும் பரிமாறவும். இரண்டு வகையும் நன்றாக இருக்கும். பச்சை பித்தக்கல்லை எடுக்க மருந்து மாதிரி. வாரம் ஒருமுறை உண்டால் மிகவும் நல்லது.

காரட் பச்சடி

பெரிய விந்தையா என்று கேட்கிறீர்களா! துருவி குக்கரில் பரத்தி வேக விடவும். வெந்ததை வெல்லத்துடன் அடுப்பில் மீண்டும் வெல்லம் கரையும் வரை வேக விட்டு ஏலக்காய் போடவும். இதுதான் திருமண ஸ்வீட் பச்சடி. சர்க்கரையும் போடலாம். தனித் தனி ருசியாக இருக்கும்.

சகல சத்துப் பச்சடி

விளாம்பழ ஸீஸன் அல்லவா? விளாம்பழமாக வாங்கி ஓட்டை விட்டு எடுத்து வெல்லத்துடன் பிசைந்து கொஞ்சம் தளர இருக்கும்படி பரிமாறவும். "சகல சத்துப் பச்சடி" இதுதான்.

கதம்பப் பச்சடி

ஆப்பிளைத் தோல் சீவி, காரட் சீவியில் சீவவும். உப்புப் போடவும். காரட், தேங்காய்துருவி, பச்சை மிளகாயைத்துண்டுகளாக்கி வதக்கி, கடுகு தாளித்துப் போடவும். தயிர் விடவும். கதம்பப் பச்சடி இது. தனி ருசியுடன் இருக்கும்.

— சித்ரா

கேக்குகள் பலவிதம்





எந்த உயர்தரக் கேக் செய்வதற்கும் அடிப்படை பட்டர் கேக்தான். இதைச் செய்யக் கற்றுக் கொண்டுவிட்டால், சின்னச் சின்ன மாற்றங்கள் செய்து பல வித்தியாசமான கேக்குகள் செய்யலாம்.

கேக் செய்ய, அடிப்படை விதிகளை முதலில் தெரிந்து கொள்வோம்.

தேவையான உபகரணங்கள்:

1. எக் பீட்டர் கையால் சுற்றுவதோ மின் சாரத்தால் இயங்குவதோ ஒன்று மிகவும் அவசியம்.

2. அடி உருண்டையான ஒரு பாத்திரம் **(bowl)**. கிட்டத்தட்ட 6 கப் தண்ணீர் பிடிக்கக் கூடியது.

3. ஒரு மாவு சல்லடை

4. கேக் 'பேக்' பண்ணுவதற்குத் தேவையான டின்கள் — அடி தட்டையான, எவர் சில்வர் டப்பாவின் அடியை உபயோகிக்கலாம். ஒரு **Patty tin-cup cake** செய்வதற்கு.

5. கால் வைத்த வலைத் தட்டு — கேக்கை ஆற வைக்க.

6. ஒரு பிளாஸ்டிக் தட்டைக் கரண்டி கேக் கலவையை பாத்திரத்திலிருந்து வழித்து டின்னில் கொட்ட இது மிகவும் சௌகரியமாக இருக்கும்.

7. 8 அவுன்ஸ் அளவு கப் ஒன்று.

8. பேக்கிங் ஓவன்

I பட்டர் கேக்

வேண்டிய சாமான்கள்

1 கப் வெண்ணெய் + 1 டீஸ்பூன் நெய்
3/4 கப் சர்க்கரை (பொடித்தது)
4 சொட்டு வெனிலா எஸென்ஸ்
2 முட்டை
2 கப் நல்ல மைதா மாவு
2 டீஸ்பூன் பேகிங் பௌடர் — **Self Raising flour**
சிட்டிகை உப்பு
½ கப் பால்

1. கேக் டின்னை தயார் செய்து கொள்ளலாம்.

2. 350° **F or** 180° **C**க்கு ஓவனை சூடாக்கவும்.

3. வெண்ணெய், சர்க்கரை, வெனிலா எஸென்ஸ், மூன்றையும் பாத்திரத்தில் போட்டு, எக்பீட்டரால் நன்றாக நுரைத்துக் கொண்டு வெளுப்பாக ஆகும்வரை கடையவும்.

4. மற்றொரு கப்பில் உடைத்துக் கலந்த முட்டைகளை கொஞ்சம் கொஞ்சமாக இந்த க்ரீம் மிக்சரில் விட்டு நன்றாகக் கடையவும்.

5. மாவு, பேகிங் பௌடர், உப்பு மூன்றையும் ஒன்றாகப் போட்டு மூன்று முறை சலிக்கவும்.

6. மாவும், பாலுமாக மாற்றி மாற்றி



(மாவில் தொடங்கி மாவில் முடியும்படி) கொஞ்சம் கொஞ்சமாக (நாலு தடவையாக) க்ரீம் மிக்சரில் போட்டு லேசாகக் கலக்கவும். (இந்த நிலையில் அதிக வேகமாகக் கடையக் கூடாது.)

7. எல்லா சாமான்களும் ஒன்றாகக் கலந்த பின் பேகிங் டின்னில் கொட்டவும்.

8. மேலே சமமாகப் பரப்பி உடனே ஓவனில் வைத்து 50—60 நிமிடங்கள் பேக் செய்யவும்.

9. வெந்துவிட்டதா என்று பரிசோதித்த பின் வெளியே எடுத்து டின்னில் சில நிமிடங்கள் ஆறியபின் கேக்கைச் சுற்றி கத்தியால் தளர்த்தி விட்டுவிட்டு வலேத் தட்டில் கவிழ்த்துக் கொட்டி, அடியிலுள்ள பேப்பரை உரிக்கவும்.

10. நன்றாக ஆறிய பின் இஷ்டம் போல் அலங்கரிக்கலாம்.

II சாக்லெட் கேக்

2 டேபிள் ஸ்பூன் கோக்கோ

2 டேபிள் ஸ்பூன் ஜாம்

இதுவும் பட்டர் கேக் போலவேதான். பாலில் கோக்கோவையும் ஜாமையும் கரைத்துக் கலக்க வேண்டும்.

(நல்ல கறுத்த கலரில் வருவதற்கு அதிகப்



படியான கோக்கோ உபயோகிக்கலாம்.)

III ஆரஞ்சு கேக்

ஓர் ஆரஞ்சுப் பழத்தின் தோலை உருளைக் கிழங்கு தோல் சீவும் கருவியால் மெல்லியதாகச் சீவி ½ கப் தண்ணீர் விட்டு பத்து நிமிடங்கள் கொதிக்க விடவும். நீரை வடிய விட்டுவிட்டு, தோலை மெல்லியதாக பொடியாக நறுக்கிக் கொள்ளவும். பட்டர் கேக்கில் வெனிலா எஸென்ஸுக்கு பதிலாக இந்தத்



தோலைப் போடவும். சிறிது ஆரஞ்சு கலர் சேர்க்கவும்.

IV மார்பிள் கேக்

1. பட்டர் கேக் செய்வது போல் எல்லாம் கலந்தபின் மூன்று பாகங்களாகப் பிரிக்கவும். 2. ஒன்றை வெளுப்பாகவே வைத்து விட்டு. இரண்டாவது பாகத்தில் சிறிது சிவப்புக் கலரும், மூன்றாவது பாகத்தில் ஒரு டேபிள் ஸ்பூன் கோக்கோவை ஒரு டேபிள் ஸ்பூன் பாலில் கலந்துவிட்டு. தனித்தனியாக நன்றாகக் கலக்கவும். 3. கேக் டின்னில் மூன்று கலவையையும் லேயர் வடிவத்தில் விட்டு. ஒரு கத்தியை நெட்டுக் குத்தலாக வைத்துக்கொண்டு. இரண்டு மூன்று கோணத்திலிருந்து எட்டு — 8 போல் எழுதவும். இப்படிச் செய்வது, எல்லா வண்ணத்தையும் ஒன்றாகக் கலக்காமல் ஒன்றில் ஒன்று ஊடுருவச் செய்து வண்ணக் கலவையாகச் செய்யும்.

V இரண்டு கலர் கேக்

பட்டர் கேக் கலவையை இரண்டாகப் பிரித்து ஒவ்வொன்றிலும் ஒரு கலர் கலந்து (சிவப்பும், பச்சையும் அல்லது வெள்ளையும் கோக்கோவும் என்று) இரண்டு கேக் டின்களில் விட்டு பேக் பண்ணவும்.

ஆறியபின் இரண்டையும் நடுவில் க்ரீம் வைத்து சேர்க்கவும். (ஒன்றன் மேல் ஒன்று)

VI கப் கேக்

பட்டர் கேக் கலவையை **Patty tins**ல் பேப்பர் கப்பைப் போட்டு 2/3 பாகத்துக்கு மாவைப் போட்டு 'பேக்' பண்ணவும். ஆறிய பின் மேலே 'ஐஸிங்' செய்து அலங்கரிக்கலாம்.

VII காபி முந்திரிப் பருப்பு கேக்

பட்டர் கேக்கில் மாவு பேகிங் பவுடர் சப்புடன் 3 டீஸ்பூன் இன்ஸ்டண்ட் காப்பிப் பவுடரைக் கலந்து சலிக்கவும்.

50 கிராம் முந்திரிப் பருப்பைப் பொடியாக நறுக்கிக் கொண்டு, மாவு பால் எல்லாம் கலந்த பின் போட்டுக் கலக்கவும்.

VIII செர்ரி கேக்

50 கிராம் உலர்ந்த செர்ரி சிறிது மஞ்சள் கலர்.

பட்டர் கேக் கலவையில் சிறிது மஞ்சள் நிறம் கலந்து கடைசியில் 50 கிராம் செர்ரியைச் சின்ன துண்டங்களாக நறுக்கிக் கலக்கவும்.

இந்த கேக்குகளை எல்லாம் சதுர டின்னில் அல்லது நீள ஆழமான டின்னிலும் பேக் பண்ணலாம். பேக் செய்ய வேண்டிய நேரம் கொஞ்சம்கூடக் குறைய ஆகும்.

Whipped Cream

எந்த கேக்கையும் பாதியாக வெட்டி அடி



கே.பி.எஸ் போல...

பார்ப்பதற்கு அமைதியாக இருந்த அந்தப் பெண்மணி மேடையேறி பாட ஆரம்பித்த போது, 'கணீ' ரென்று கே.பி. சுந்தராம்பாள் குரல்! கோவை கமலா என அழைக்கப்படும் இந்தப் பெண்மணி அந்தப் பாட்டிசைத் திலகத்தைப் போல பாடுவதற்குத் தனிமுயற்சி எதுவும் எடுத்ததில்லையாம்!

"சின்ன வயதிலிருந்தே என் குரல் இப்படித்தான் இருக்கு. ஒருமுறை பழநியிலே நான் பாடும்போது கேட்ட திருமதி கே.பி.எஸ் ஆச்சர்யப்பட்டுப்போய் என்னை ஆசீர்வதிக்கவும் செஞ்சாங்க....." என்கிறார்.

பிறந்த ஊர் தஞ்சாவூரானாலும் முதன் முதலில் கோவை கோணியம்மன் கோவிலில் பாட ஆரம்பித்ததால் நன்றி மறவாமல் கோவை கமலா என்று பெயர் வைத்துக் கொண்டிருக்கிறார். சினிமாவிலும் பாடுகிறாராம்.


— பரிமளா தேவி


விஜயதசமி நன்னாளில் ஸ்ரீராம் சிட்ஸ் அளிக்கும் பல புதிய அன்பளிப்புகள் !

அக்டோபர் 12, ஞாயிறு, விஜயதசமி யன்று, புதிய சீட்டு குருப்புகளில் சேரும் அங்கத்தினர்களுக்கு பல புதிய அன்பளிப்பு களை வழங்குகிறோம். 14 வருட அனுபவமும், 60,000 அங்கத்தினர் களும் கொண்ட ஸ்ரீராம் புதிய சீட்டு குருப்புகளை அறிமுகம் செய்கிறது.



புதிய சீட்டு குருப்புகள்	அன்பளிப்புகள் (அக்டோபர் 12ம் தேதி மட்டும்)
ரூ. 200 x 25 மாதங்கள்: ரூ. 5,000	Macmillan Student's Dictionary
ரூ. 250 x 40 மாதங்கள்: ரூ. 10,000	10 கிராம் வெள்ளிப் பதக்கம்
ரூ. 500 x 30 மாதங்கள்: ரூ. 15,000	'TRUPTI' non-stick Fast-Pan Delux
ரூ. 500 x 60 மாதங்கள்: ரூ. 30,000 (Special Group)	'KALI' Copper bottom Stainless Steel Skillet (1 litre)
ரூ. 1000 x 100 மாதங்கள்: ரூ. 1 லட்சம் (Executive Group)	Hot Shot Camera IIOs in a Soft Case
ரூ. 3000 x 100 மாதங்கள்: ரூ. 3 லட்சம் (Business Group)	அரைசவரன் 22 காரட் தங்கப் பதக்கம்





நுழைவுக் கட்டணங்கள் தனி

- **சிறப்பு அம்சம்:**

ரூ. 30,000 வரை உள்ள சீட்டு குருப்புகளில் பணம் எடுப்பதற்கு, நல்ல வருமானம் உள்ள 3 தனி நபர் ஜாமீன் அளித்தால் போதும்.

- **ஒரே ஒரு நாள்!**

இந்த அன்பளிப்புகள் 'விஜயதசமி' அன்று— அக்டோபர் 12, ஞாயிறு காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை மட்டுமே! எல்லா அலுவலகங்களிலும் சேரலாம், அன்பளிப்புகளைப் பெறலாம்.

ஸ்ரீராம் சிட்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்

SHRIRAM CHITS & INVESTMENTS P.LTD
YOUR FINANCIAL FRIEND IN NEED

விண்ணப்பங்களை முன்னதாகவே எமது எல்லா அலுவலகங் களிலும், ரெசிடெண்ட் மேனேஜர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

பதிவு அலுவலகம்: 123, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை-1. போன்: 21401/21402

கிளைகள்:

சென்னை: ● அடையாறு ● அண்ணா நகர் ● மவுண்ட் ரோடு ● மைலாப்பூர் ● தி. நகர்

பெங்களூர்: ● 142, K.H. ரோடு, போன்: 223637 ● 49, மல்லேஸ்வரம் சர்க்கிள்

மைசூர்: 546, சாமராஜா டபிள் ரோடு, போன்: 34766

நெல்லூர்: 5/944, ஸ்டோன் ஹவுஸ் பேட், போன்: 6210

ரெசிடெண்ட் மேனேஜர்கள்:

● கோயம்புத்தூர் ● திருச்சி ● மதுரை ● சேலம் ● பாண்டிச்சேரி ● விசாகப்பட்டினம் ● தூத்துக்குடி ● நாகர்கோயில் ● காஞ்சீபுரம் ● நாகப்பட்டினம் ● புதுக்கோட்டை

ஸ்ரீராம் கைராசி, உங்களது பணராசி !

ADWAVE/SCI/3190 B

பாகத்தின் மேல் நன்றாகக் கெட்டியாகக் கடைந்த க்ரீமைத் தடவி மேல் பாகத்தால் மூடி செய்யலாம். இது தயாரித்த கேக்கின் தரத்தை உயர்த்துவதுடன், சாப்பிடும் பொழுது உலர்ந்து இல்லாமல் மென்மையாக இருக்கும்.

100 கிராம் — க்ரீம் (குளிர வைத்தது)

4 டீஸ்பூன் பொடி சர்க்கரை இவை இரண்டையும் ஒரு சின்ன பாத்திரத்தில் போட்டு. அதை ஐஸ் வைத்த பெரிய பாத்திரத்திற்குள் வைத்து எக்பீட்டரால் நன்றாகக் கடைந்தால் கெட்டியாக ஆகும். (ஐஸ்க்குள் வைப்பதனால் வெண்ணெய் பிரிந்து கொள்ளாது.)

இதை கேக்கின் நடுவில் பூராவுமாக சமமாகத் தடவி மேல் பாகத்தில் மூடி, லேசாக அழுத்திவிடவும்.

கப் கேக்கின் மேலேயும் ஒரு சின்ன பாகத்தை கூர்மையான கத்தியினால் வெட்டி எடுத்துவிட்டு உள்ளே சிறிது க்ரீம் வைத்து மூடலாம்.

ஐஸிங்

எந்த ஒரு சாதாரண கேக்கையும் ரொம்ப ஸ்பெஷலாக மாற்றக் கூடியது ஐஸிங். இதை மேலே மட்டுமோ அல்லது முழுவதும் மூடும்படியாக பக்கங்களிலும் தடவலாம். இதை கேக்குக்குத் தகுந்த மாதிரி, வெவ்வேறு நிறங்களிலும், வாசனைகளிலும் செய்யலாம்.

சாக்லெட் ஐஸிங்

1 கப் ஐஸிங் சர்க்கரை
1 டேபிள் ஸ்பூன் கோக்கோ
1 டீஸ்பூன் வெண்ணெய்
1 டேபிள் ஸ்பூன் சூடான பால்

ஐஸிங் சர்க்கரையையும் கோக்கோவையும் ஒன்றாகப் போட்டு சலித்துக் கொள்ளவும். வெண்ணெயைச் சூடான பாலில் போட்டு இளக்கி அதில் சர்க்கரையைப் போட்டு அடித்துக் கலந்து உடனே கேக்கின் மேல் கொட்டிப் பூசவும். பட்டர் கேக் சாக்லெட் கேக், ஆரஞ்சு கேக் எல்லாவற்றிற்குமே இது நன்றாக இருக்கும்.

வியன்னா ஐஸிங்

இந்த ஐஸிங் எந்த கேக்குக்கும் பொருத்தமாக செய்து கொள்ளலாம். இந்த அளவு கேக்கின் மேல் பாகம், பக்கங்கள் எல்லாவற்றையும் மூட போதுமானது.

100 கிராம் — வெண்ணெய்
2 ½ கப் — ஐஸிங் சர்க்கரை
2 டீஸ்பூன் ஆரஞ்சு ஜூஸ்

வெண்ணெயை நன்றாகக் கடைந்து கொண்டு அத்துடன் ஐஸிங் சர்க்கரையைப்

போட்டு நன்றாக அடித்துக் கலந்த பின் ஆரஞ்சு ஜூஸை விட்டு நன்றாகக் கலந்த பின் கேக்கின் மேல் பூசவும்.

இதில் 4 டேபிள் ஸ்பூன் கோக்கோ அல்லது 2 டேபிள் ஸ்பூன் இமர்க் காப்பிப் பவுடரைச் சேர்த்து சாக்லெட் ஐஸிங் அல்லது காப்பி ஐஸிங் செய்யலாம்.

ஐஸிங் சர்க்கரைக்குப் பதில் வெறும் சர்க்கரையைப் பொடித்து நைஸான மாவு சல்லடையால் சலித்து உபயோகிக்கலாம்.

மேல் அலங்காரம்


கேக்கின் மேலுள்ள ஐஸிங்கின் மேல் உடைத்த பருப்பு, அழகுப்படுத்தப்பட்ட தேங்காய்ப் பற்கள் சீவிய சாக்லெட் போன்றவற்றைத் தூவலாம். சின்னதாக நறுக்கிய உலர்ந்த செர்ரி பழம் டூட்டி ஃப்ரூட்டி துண்டங்கள் சாக்லெட் ஜெம்ஸ் அரிசி பப்பர் மின்ட், உடைத்த ஆரஞ்சு பப்பர்மின்ட் போன்றவற்றாலும் அலங்கரிக்கலாம்.

— ஜெயா வி. ராமன்

நாம் சாப்பிடும் மருந்து நம் உடலில் ஏற்றுக் கொள்வது நாம் அதை எப்பொழுது சாப்பிடுகிறோம் என்பதையும் பொறுத்தது. முழு வயிறு உணவு உண்ட பின் சாப்பிடும் மருந்து பலனளிக்க வெகு நேரம் ஆகும். வயிற்றில் ஏற்கெனவே உள்ள உணவு,மருந்தை உரிந்து கொள்ள தாமதம் செய்யும்.

கடும் வயிற்றுப் போக்காக இருக்கும் பொழுது, சாப்பிடும் மருந்து வயிற்றில் அதிக நேரம் தங்காமல் அதை ஜெரித்துக் கொள்ள நேரமில்லாமல் வெளியேற்றி விடுகிறது. கருத்தடை மாத்திரை உட்கொள்ளும் பெண்கள் இதை கருத்தில் கொள்ள வேண்டும். முழுவதும் ஜெரித்துக் கொள்ளாத பொழுது மாத்திரை பயன் தராது. இந்த நேரத்தில் மற்ற ஒரு கருத்தடை முறையையும் பின்பற்றுவது உசிதம்.

— ஜெயா வி. ராமன்





'பேய்ப்' பேச்சு பேசாதீர்கள்!

குடும்பத் தலைவி (தலைவர்)களுக்கு 'ஹெல்த்' மருத்துவ பத்திரிகை கூறும் ஆலோசனைகள்

1. ஒரு மருத்துவரிடம் சென்று, வீட்டிலிருக்கும் குழந்தைக்கு உள்ள நோயைப் பற்றிக் கூறி மருந்து வாங்கிவர நினைக்காதீர்கள். போன் மூலமும், நோயைக் கூறி மருந்தை கேட்காதீர்கள். நோயாளியை பரிட்சை செய்யாமல் எந்த மருத்துவராலும் மருந்து கொடுக்க முடியாது.

2. மருத்துவரே உங்களது அலர்ஜி ஏற்படுத்தும் மருந்துகளைப் பற்றிக் கேட்பார்; ஆனாலும்கூட உங்களுக்குப் பென்சிலின் போன்ற மருந்துகளால் அலர்ஜி ஏற்படும் என்றால் முன்கூட்டியே தெரியப்படுத்தி விடுங்கள்.

3. குழந்தைகளுக்கு எதிரில் பேய் மற்றும் இதுபோன்ற மூடத்தனமான பேச்சுக்களைப் பேசாதீர்கள். பெற்றோர்களால் பேசப்படும் இந்தப் பேச்சுக்கள் குழந்தைகள் மனநிலையை பாதிக்கும்.

4. வயிற்றுப் போக்கு ஏற்பட்டு மருத்துவம் பார்க்கப்பட்ட பிறகு, இரண்டு, மூன்று நாட்கள் மலம் கழியாமல் போனாலும் பயப்பட வேண்டாம்.

5. காதில் சிறு கல்லோ, விதைகளோ இருக்குமேயானால் எக்காரணத்தைக் கொண்டும் நீங்களாகவே எடுக்க முயலாதீர்கள். உங்களது முயற்சியில் தோல்வி ஏற்பட்டால், காதினுள் அவை புகுந்துவிட்டால் மிகவும் ஆபத்து. உடனே மருத்துவரை அணுகுங்கள்.

6. கூடியவரை குழந்தைகளைக் கூட்டிக் கொண்டு தாயாரே மருத்துவமனைக்குச் செல்லுங்கள். ஒரு தாயைத் தவிர வேறு யாராலும் குழந்தையைப் பற்றிய முழு விவரமும் கூறமுடியாது.

7. முதலில் எடுக்கப்பட்ட எக்ஸ்ரேக்கள், பரிசோதனை விவரங்கள், மாத்திரைச் சீட்டுக்களை மருத்துவரின் பார்வைக்காக ஒழுங்காக அடுக்கி எடுத்துச் செல்லுங்கள்.

8. தலைவலி மாத்திரைகள், இருமல் மருந்துகள், களிம்புகள் இவற்றை மருத்துவரின் ஆலோசனையின்படி எப்போதும் கைவசம் வைத்திருக்க வேண்டும்.

9. உங்கள் நண்பருக்கு வந்துள்ள நோய் உங்களுக்கு வந்திருந்த நோயை ஒத்திருக்கலாம். நோய் ஒத்திருக்கலாமே தவிர உடல்கள் வேறுதான். ஆகவே ஒருவருக்கு அளித்த மருந்துச் சீட்டிலுள்ள மருந்துகள் மற்றொருவருக்கு அளிக்காதீர்கள்.

10. புதிதாக பிறந்த குழந்தையின் தொப்புளை நல்ல துணியினால் மூடி வையுங்கள். தூசி மற்றும் குப்பை விழுந்தால் 'டெட்டனஸ்' தாக்கும் அபாயம் உண்டு.

— லட்சுமி நடராஜன்

வம்புப் பேச்சுக்கு இடமில்லை!

கும்பகோணத்தில்வீட்டுவசதிவாரியத்தில் 132 குடியிருப்புகள் உள்ளன. இதில் வேலைக்குச் செல்லும் சில பெண்களைத் தவிர ஏனையோர் குடும்பப் பொறுப்புக்களை கவனிக்கும் இல்லத்தரசிகளாகவே உள்ளனர். ஒரு வட்டத்துக்குள் வசிக்கும் இவர்களை ஒன்று சேர்த்து, ஒவ்வொரு பெண்ணிடமும் உள்ள திறமையைக் கண்டுபிடித்து, அவர்களை நல்லமுறையில் ஊக்குவித்து, திறமைகளை வெளிக்கொணர்ந்து, அவர்களை ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடச் செய்தால் இந்த நாட்டிற்கு நம்மால் இயன்ற சேவை செய்யலாம் என்பதை உணர்ந்தார் இந்தச் சங்கத்தின் தலைவி திருமதி ஜானகி சுந்தரராமன். இவருடைய முயற்சிகளின் விளைவாகத் தோன்றியதே குத்துவிளக்கைச் சின்னமாகக் கொண்ட பிரியதர்சினி மாதர் சங்கம். நம் மறைந்த பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் இனவெறியர்களால் சுட்டு வீழ்த்தப்பட்ட சில நாட்களில் இச்சங்கம் துவக்கப்பட்டிருப்பதால் அவரது தன்னம்பிக்கையும், துணிவுமே குறிக்கோளாகக் கொண்டு அவரது பெயரையே இச்சங்கம் சூட்டிக் கொண்டது.

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தாரே என்பதற்கு ஏற்ப இச்சங்க அங்கத்தினர்கள் தாங்கள் தினம் சமைக்கும் அரிசியில் ஒரு பிடி அரிசியை எடுத்து வைத்திருந்து அவ்வரிசியை கும்பகோணத்திற்கு அருகில் உள்ள இன்னம்பூர் குழந்தைகள் காப்பகத்திற்கு அளிக்கிறார்கள்.

தொழுநோயாளிகள் சமுதாயத்தில் தீண்டத்தகாதவர்களாகவும், வெறுத்து ஒதுக்கக்கூடியவர்களாகவும் வாழ்கின்றனர். அவர்களும் மனிதர்கள், பரிதாபத்திற்கு உரியவர்கள் என்ற எண்ணம் கொண்ட இச்சங்கம், கும்பகோணத்தில் உள்ள தொழுநோய் மருத்துவமனைக்குச் சென்று அவர்களுக்கு ஆடை அளித்து, நம்மை நேசிக்கவும் இவ்வுலகில் மனிதர்கள் இருக்கின்றனர் என்ற எண்ணத்தை அவர்கள் மனத்தில் விதைத்துவிட்டு வந்தது.

ரேஷன் கடையில் பல குறைபாடுகள் இருந்தன. அதைக் களைவதற்கு இச்சங்கம் முயன்று ஓரளவு அதில் வெற்றியும் கண்டுள்ளது.

காவிரி கரைபுரண்டு ஓடும் குடந்தையில் வசித்தும், நல்ல குடிநீருக்காக இந்த வாரிய இல்லத்தரசிகள் படும் அல்லலைப் பார்த்து இச்சங்கம் குடிநீர்க் குழாய்களை வீட்டு வசதி வாரியத்தில் அமைக்கப் பெரும் முயற்சி செய்து வருகின்றது.

மற்றும் தையல், பாட்டு, ஹிந்தி, ஸ்போர்ட்ஸ் அனைத்தும் இங்கு உண்டு.

இச்சங்க அங்கத்தினர்களிடம் பாராட்டக் கூடிய விஷயம், இவர்கள் அனைவரும் முற்போக்கான எண்ணங்களை உடையவர்கள், மனிதாபிமானம் மிக்கவர்கள். இவர்களிடம் ஏற்றத் தாழ்வுகள் இல்லை. அனைவருமே அரசாங்க அலுவலர்களின் மனைவிகள். அறிவுபூர்வமாகச் சிந்திக்கும் இவர்களிடம் ஒரு சுமுகமான உறவு நிலவுகிறது. மாதத்தில் இரண்டு முறை கூடும் இவர்கள் கூட்டத்தில் வம்புப் பேச்சுக்கே இடமில்லை. இவர்களிடையே காரசாரமான விவாதங்களைக் காணலாம். அவை யாவும் வரதட்சிணைக் கொடுமை, பெண்கள் சுதந்திரம், புத்தகங்க்ளில் வரும் கதாபாத்திரங்களின் அமைப்பு, நாட்டு நடப்பு ஆகிய பொது அறிவைப் பற்றியதே.




சோப்பால் ஒரு மலர்க் கூடை!

தேவையான பொருட்கள்: சோப் ஒன்று, மெல்லிய சாடின் ரிப்பன் 6 மீட்டர், மேலே முத்து வைத்த குண்டூசி 80, ஸ்டாகிங் துணி அல்லது பழைய ஷிஃபான் துணி சிவப்பு மற்றும் பச்சை கலர். பிப்ஸ் என்ற சிறிய முத்துக்கள், பச்சை நிற கிரேப் பேப்பர் மெல்லிய கம்பி ஒரு ரோல்.

முதலில் சோப் மீது அலங்கார பூக்கூடை தயாரிக்க வேண்டும்.

செய்முறை: 1. சோப்பின் மேல் பாகத்தில் 20 பின்களை சம இடைவெளிவிட்டு குத்த வேண்டும். பின் கீழ்பாகத்திலும் சம இடைவெளிவிட்டு 20 பின்களை குத்த வேண்டும். மத்தியில் உள்ள வட்டத்துக்கு மேலேயும் கீழேயும் சம இடைவெளிவிட்டு 20 பின்கள் குத்த வேண்டும். மொத்தமாக 4 வரிசைகள்.


படம் 1



2. இப்பொழுது குண்டூசிகளின் மேல் ரிப்பனைப் படத்தில் காட்டியுள்ளது போல் 1ம் வரிசையிலிருந்து 3ம் வரிசைக்கும் 4ம் வரிசையிலிருந்து 2ம் வரிசைக்கும் சுத்த வேண்டும்.

படம் 2

படம். 2




இப்பொழுது மலர்க் கூடை தயார். பிறகு பூக்கள் செய்து அதில் வைத்து அலங்கரிக்க வேண்டும்.

பூக்கள் செய்யும் முறை: கம்பிகளை எடுத்து 5'' அளவுக்கு 12 கம்பிகள் வெட்டிக் கொள்ள வேண்டும். பின் ஒரு சிறு உருளையில் வைத்து மேல் பாகத்தில் ஒரு வளையம் செய்து கொள்ள வேண்டும்.

இதழ்கள் தயாரிக்க: ஸ்டாகிங் அல்லது பழைய கலர் ஷிஃபான் அல்லது ஆர்கண்டி துணியை வளையத்தை இழுத்துச் சுற்றி ஒரு நூலால் கட்ட வேண்டும்.

இலைகள் தயாரிக்க: பச்சைத் துணியால் இரண்டு வளையங்களில் இழுத்து கட்ட வேண்டும். நமக்கு வேண்டிய உருவில் வளைத்துக் கொள்ளலாம்.

பூ தயாரிக்க: 5 இதழ்களை எடுத்துக் கொண்டு மத்தியில் பிப்ஸ் வைத்து சேர்த்துக் கட்ட வேண்டும். பின் கீழ்ப்பாகத்தில் கம்பி தெரியாமல் இருக்க பச்சை கிரேப் பேப்பரால் சுற்ற வேண்டும். பின் பூக்களையும் இலைகளையும் மலர்க் கூடையின் நடுவில் சொருக வேண்டும். தடிமனான கம்பியை எடுத்து வளைத்து அதன்மேல் ரிப்பன் சுற்றி கைப்பிடியாக வைக்க வேண்டும்.



இப்பொழுது அழகான மலர்க் கூடை தயார்.

பி.குறிப்பு: சோப்பிற்கு பதிலாக தெர்மோகோலில் அந்த உருவத்தில் கட் பண்ணியும் இந்த அலங்காரம் செய்யலாம். சிறியதாக செய்து காரிலும் உபயோகிக்கலாம்.

— சித்ரா பாலசுப்பிரமணியம்

அவன் மறக்கவில்லை!

வெள்ளித் திரையில் காட்சிகள் மின்னிக் கொண்டிருந்தன. திடீரென்று ஒரு சிறுவனின் அலறல் சினிமாவை சுவாரஸ்யமாகப் பார்த்துக் கொண்டிருந்தவர்களின் கவனத்தைத் திருப்பி எரிச்சலடைய வைத்தது.

"ஸ்.... புள்ளையை வெளியே தூக்கிட்டுப் போம்மா" போன்ற சொற்கள் மைதிலியைத் தன் இருக்கையினின்றும் எழச் செய்தன.

"உஷ்.... அழாதேடா ரவி. வீட்டுக்குப் போனதும், உன் பாட்டில் எங்க ஒளிஞ்சிகிட்டிருக்குன்னு பார்த்து, அதுல பாலை ஊத்திக் கொடுத்துடலாம்.... இப்ப சமர்த்தா, இந்த பிஸ்கெட்டைச் சாப்பிடு" என்று சமாதானப் படுத்தியவாறே, அவனைத் தூக்கிக் கொண்டு அரங்கை விட்டு வெளியேறினாள் மைதிலி.

சோதனையாக அன்று அவள் நாத்தனார் சுவர்ணாவும் வேறு தன் பிள்ளை கோபியுடன் படம் பார்க்க வந்திருந்தாள். அவளுக்குத் தன் பிள்ளையைப் பற்றி கர்வம் அதிகம். அதிலும் மைதிலியையும் ரவியையும் சீண்டுவதென்றால் அலாதி பிரியம். அதில் மைதிலி மனம் துவண்ட நாட்கள் அநேகம்.

படம் முடியும் வேளையில், ரவி, தன் இலக்கான பீடிங் பாட்டிலை நினைத்தபடியே தூங்கிப் போய்விட்டான்.

படம் முடிந்து வெளியே வந்த சுவர்ணா, "அப்பாடா, ஒருவழியா தூங்கினானா உன் பிள்ளை? என்ன இருந்தாலும், ஒரு பிள்ளைக்கு இவ்வளவு பிடிவாதம் வேண்டாம்ப்பா. மன்னி, நான் சொல்றேன்னு தப்பா நினைச்சுக்காதே. உனக்கு ரவியை எப்படி வளர்க்கணும்னே தெரியலே. நீ பாட்டுக்கு அவன் கேட்கறதெல்லாம் குடுத்துச் செல்லம் கொடுத்து குட்டிச்சுவராக்கிட்டே."

அடுத்தாற்போல் என் பிள்ளையும் கோபியும்தான் இருக்கான்? நீயே பாரேன்.... ஒரே வயசுதானே இரண்டு பேருக்கும்? இப்படி தத்துபித்துன்னு ஏதாவது கேட்டு அடம் பண்ணினா, நான் சட்டுன்னு அவன் மனசை மாத்த வேறு ஏதாவது காண்பிச்சேன்னாலோ, இல்லே கொடுத்தேன்னாலோ, உடனே தான் மனசுல நினைச்சதை மறந்துட்டு, சமாதானமாயிடுவான். ஆனாலும் இவன் மாதிரி விடாக்கண்டன் இல்லம்மா"

என்று ரவியின் குணத்தைப் பற்றிச் சிலிர்த்தும், கோபியின் குணத்தைச் சிலாகித்தும் பொரிந்து தள்ளினாள்.

மைதிலிக்கு துக்கமும் அவமானமும் மனத்தில் போட்டியிட்டன. சே! இனிமே ஜன்மத்துக்கும் இவளோட ரவியைக் கூட்டிண்டு ஒரு இடத்துக்கும் போகக் கூடாது.

ஊம்! அவ குடுத்து வச்சவ. சமர்த்துப் பிள்ளையைப் பெத்துண்டிருக்கா. என்னைப் போலவா?" கழிவிரக்கத்தினால் கண்கள் பனிக்க, யாரும் பாராவண்ணம், நாசூக்காகக் கைக்குட்டையினால் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

மாதங்கள் மறைந்தன. அன்று ரவியையும் கோபியையும் ஒன்றாகப் பள்ளியில் சேர்த்தார்கள். முதலில் கொஞ்சம் முரண்டு பிடித்தாலும் ரவிக்கு அச்சூழ்நிலை நாளடைவில் பிடித்துப் போய்விட்டது. அவன் தன் 'மிஸ்' கற்றுக் கொடுக்கும் பாடங்களை மிகக் கவனத்துடன் படித்தும், அவற்றை மறக்காம



னும் இருந்தான்.

ஆனால் கோபி....? பாடங்களை மனத்தில் வாங்கிக் கொண்ட வேகத்திலேயே அவற்றை நினைவில் நிறுத்திக் கொள்ள முடியாமல் திணறினான்.

விளைவு..... ரவி வகுப்பில் முதல். கோபியின் படிப்பாற்றலைப் பற்றி அவன் பெற்றோருக்குப் பக்கம் பக்கமாகப் புகார்கள்.

சுவர்ணாவுக்கு இப்பொழுது இரு பிள்ளைகளையும் பற்றி என்னவோ புரிவதைப் போல இருந்தது.





பொம்மைகள் விற்கும் விலையில் புது பொம்மைகள் வாங்க முடியாவிட்டால் பழைய பொம்மைகளுக்கு வாட்டர் கலர் பெயின்ட், பிரஷ்ஷினால் தகுந்த கலரும், கோல்டன் கலரும் அடித்துவிட்டால் புது பொம்மைகளாகிவிடும்.

— ஜெயா

பித்த வெடிப்பு மறைய

ஒரு மஞ்சள் துண்டை உரைக் கல்லில் உரைத்து எடுத்து அதோடு சம அளவில் சுண்ணாம்பு கலந்து குழைத்து படுக்கைக்குப் போகுமுன் வெடிப்புகளின் மேல் கனமாகப் பூசிவிட வேண்டும். இப்படி மூன்று தினங்கள் செய்திட பித்த வெடிப்பு மறையும்.

— புதுவை நித்திலன்



இரும்புப் பாத்திரத்தில் சமைக்கும். இரும்புச் சத்துள்ள உணவில், அதிக இரும்புச் சத்து சேருகிறது. இரும்புப் பாத்திரத்தில் இரண்டு நிமிடம் சமைத்த முட்டையில் இரும்புச் சத்து இரண்டு மடங்காக ஆகிறது.

— ஜெயா வி. ராமன்



பச்சை அல்லது கறுப்புத் திராட்சையின் சாறை நாளொன்றுக்கு ஒரு அவுன்ஸ் வீதம் தொடர்ந்து காலையில் முப்பது நாட்களுக்குச் சாப்பிட்டு வந்தால் மாதவிலக்கு குறிப்பிட்ட நாளில் ஏற்படுவதுடன், இச்சமயத்தில் ஏற்படும் வயிற்று வலியையும் போக்கும்.

— கே. பட்டாபிராமன்

தட்டை மாவில் கடலைப் பருப்பை ஊற வைத்துப் போடுவதற்குப் பதில் பொட்டுக் கடலை அல்லது நிலக்கடலைப் பருப்பைப் போட்டால் தட்டை மணமாகயிருக்கும்.

— ரம்யா



ரவையில் புழு வந்துவிட்டதா? கவலை வேண்டாம். மெல்லிய வெள்ளை நிற துணியில் ரவையைக் கொட்டி பரவலாக வைத்து விடுங்கள். புழுக்கள் துணியில் ஒட்டிக்கொண்டுவிடும். ரவையை மேலாக எடுத்து லேசாக வறுத்து வைக்கவும்.

— காயத்ரி

கோடை காலத்தில் வீட்டை விட்டு வெளியேறுமுன் இரண்டு சொட்டு சந்தன எண்ணெயுடன் சில துளிகள் தண்ணீர் கலந்து உடல் முழுவதும் பூசிக் கொண்டால் சுகந்த மணத்துடன், தொத்து நோய்கள் வருவதையும் தடுக்கலாம்.

— புதுவை நித்திலன்

முறுக்கு மாவில் ஜீரகம் எள்ளுக்குப் பதில் ஓமம் போட்டு கைமுறுக்கு சுற்றினால் குழந்தைகளுக்கு எளிதில் ஜீரணமாகும்.

— ரம்யா

அவியல்





பட்டர்ஃபிளை

100% ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பிரஷர் குக்கர்

சாமர்த்தியமான பெண்மணிகளைக் கவர்வது!


ஏனெனில், இதன் அழகுத் தோற்றம்; துரிதமாக, சிக்கனமாக சமையல் செய்யும் திறன். உங்கள் காஸ் சிலிண்டரும் அதிக நாட்களுக்கு வரும்! இதர பிரஷர் குக்கர்களுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். நீங்களே, பட்டர்ஃபிளையின் மேன்மையை அறிந்து கொள்ளலாம்.



இது மிகவும் பாதுகாப்பானது. 18-கேஜ் கனமுள்ள ஓரே ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் தகட்டில் செய்யப் பட்டது. ஒட்டு கிடையாது. வெல்டிங் கிடையாது. 40 ஆண்டு அனுபவம் பின்னணியில் உள்ளது.

3,5,6,7.5,10,12 லிட்டர் அளவுகளில் கிடைக்கிறது. இதோடு பொருத்தமான பிரஷர்பான்களும் கிடைக்கும்.

கங்காதரம் என்டர்பிரைசஸ்
147, காரப்பாக்கம்,
பழைய மகாபலிபுரம் ரோடு,
சென்னை 600 096.
போன்: 552587, 555127.



GE/2844

ஒப்பற்ற சமையலுக்கு உத்தரவாதம் 10 ஆண்டு!

மனமே கோயிலாக...

விமலா ரமணி

ஜானகியம்மாள் புரண்டு படுத்தாள். தூக்கம் வர மறுத்தது. ஆயிற்று... இன்னும் ஒரு வாரத்தில் நவராத்திரி வருகிறது.

முன்பெல்லாம்... அதாவது இவள் கை ஓங்கி இருந்த காலத்தில், வீட்டில் நவராத்திரி பூஜை திமிலோகப்படும். லலிதா ஸஹஸ்ர நாமம் என்ன, தேவி மகாத்மிய பாராயணம் என்ன, சுந்தர காண்ட பாராயணம் என்ன... வடை, பாயஸம், சுண்டல் வகைகள் என்ன... இப்படி அமர்க்களப்பட்ட வீடு.ஃ இன்று...?

ஜானகி அலுக்காமல் சலிக்காமல் ஒன்பது படி கட்டுவாள். தன் பெண், பிள்ளைகளுக்குச் சரியாக ஓடி ஓடி ஊர் மணலை எல்லாம் அள்ளி வந்து பார்க் கட்டுவாள். பொம்மைகள் வீடு கொள்ளாது. ராமாயண செட், பாகவத செட், கல்யாண ஊர்வலம், வள்ளி முருகன், குறத்தி, வேடன்... ஒவ்வொரு படியிலும் ஒரு கதை இருக்கும்.

மூத்த பிள்ளை சுந்தருக்குப் பெண்கள் மாதிரி நவராத்திரி கொலுவின் மீது கொள்ளை ஆசை. பள்ளிக்கூடத்திலிருந்து வரும்போதே கலர் பேப்பர்களை வாங்கிக் கொண்டு வந்துவிடுவான். பிறகு இவள் அதைத் துண்டு துண்டாக 'கட்' பண்ணிப் போட, இவளும் சுந்தரும் கலர் பேப்பர்கள் ஒட்டுவார்கள். பெண் மல்லிகாவிற்கு இதில் எல்லாம் அவ்வளவாக ஈடுபாடு கிடையாது.

"போம்மா... தினம் தினம் பைத்தியம் மாதிரி அழைக்கப் போகச் சொல்லாதே... போரடிக்கிறது..." — என்பாள்.

"சரிதான் போடி... ஆம்பிளைப் பையன் சுந்தருக்கு இருக்கிற ஆசை கூட உனக்கு இல்லே... எத்தனை ஆசை ஆசையா கொலு வைச்சிருக்கான் பாரு... அவனும் உன்னை மாதிரி ஸ்கூல்லே படிக்கறவன்தானே? இந்தத் தடவை மேட்டூர் டாம் கட்டி இருக்கான் பாரு..." என்றதும் மல்லிகா சிரிப்பாள்.

"இனாகுரேஷனுக்கு வேணா யாராவது மந்திரியை வரச் சொல்லு. போம்மா நீ... உனக்கு அப்படி நேரிலே போய் அழைக்கணும்னு ஆசையா இருந்தா சுந்தருக்கே பொம்பளை வேஷம் போட்டு அழைக்க அனுப்பு... நீதான் தினம் ஒரு வேஷம் போட்டுக்கணும்னு சொல்றியே!"

சுந்தர் சண்டைக்கு வருவான்.

"அம்மா... பேசாம எனக்குக் கல்யாணம் பண்ணி வை... என் பொண்டாட்டியை கொலுவுக்கு அழைக்க அனுப்பறேன்... என்னமோ பெரிசா பீத்திக்கறே..."

"பாத்தியா... இவனுக்கு இப்பவே கல்யாண ஆசை வந்தாச்சு... அதுக்கு இது ஒரு காரணம்... அண்ணா... சுந்தர் அண்ணா... நீ நிறையப் படிச்சு பெரிய உத்தியோகம் பார்க்கணும்னு கனவு காண்றோம்... நீ என்னடான்னா கல்யாண ஆசை பிடிச்சுண்டு அலையறியே..."

வேடிக்கையாக அண்ணன் தங்கை போட்டுக் கொள்ளும் சண்டையைப் பார்த்து ரசிப்பாள் ஜானகி.

ஜானகிக்கு மனத்தை என்னவோ செய்தது. சமையல் அறையை ஒட்டினாற் போல் இருக்கும் டைனிங் ரூமில்தான் அவள் படுத்துக் கொள்வாள். வரவர காட்ரெக்ட் வேறு கண்களை மறைக்க ஆரம்பித்து விட்டது... மெல்ல... மெல்ல தட்டுத் தடுமாறி எழுந்தாள் ஜானகி. பக்கத்து அறைதான் சுந்தரின் பெட்ரூம்.

சுந்தரும் அவன் மனைவி அம்பிகாவும் படுத்திருந்தார்கள். சிறிது சத்தம் கேட்டாலும் அம்பிகா எழுந்து கத்துவாள்! ஜானகி மெல்ல எழுந்து ஸ்டோர் ரூமில் நுழைந்தாள்...

அதோ... அதோ அந்தப் பெரிய மரப் பெட்டியில்தான்... அத்தனை பொம்மைகளையும்... அத்தனை பொம்மைகளையும்... சுந்தருக்குக் கல்யாணமான புதிதில் ஒன்பது படி கொலு பொம்மைகள் இருந்தன. அதன் பின் ஏழு ஆகி, ஐந்தாகி, மூன்றாகி... இந்த வருடம் அம்பிகா கொலு வைப்பாளோ? மாட்டாளோ?

"ஆமாம் கை ஒடிஞ்சு, கால் ஒடிஞ்சு... பெயிண்ட் போன இந்தப் பொம்மைகளை வைச்சுண்டு நவராத்திரி கொலுதான் பாக்கி!" இந்த லக்ஷணத்துக்கு நான் வேற அழைக்கப் போகணுமாம்! விலைவாசி இருக்கிற லக்ஷணத்துலே சாஸ்திரிகளைக் கூப்பிட்டு என்ன ஸஹஸ்ரநாம அர்ச்சனை... போதாக் குறைக்கு என்னையும் மடியா நைவேத்தியம் பண்ணுன்னு பிராணனை வாங்கறது கிழம்... வேணும்னா தான் பண்ணிக்கணும்... இல்லேன்னா சும்மா இருக்கணும்... இதுக்காக

சமையலுக்கெல்லாம் ஆளைக் கூப்பிட்டுச் சமையல் ரூமைப் பாழ் பண்ண முடியுமா என்ன? இப்பத்தான் 'புதுசா' 'ரீமாடல்' பண்ணி இருக்கோம். கிளாஸ் டைல்ஸ் ஒட்டி இருக்கு... புது காஸ் அடுப்பு, க்ரில் அடுப்புன்னு வாங்கி வைச்சிருக்கேன். கண்ட சமையல்காரங்களை உள்ளே விட்டா அத்தனையும் பாழ்! உங்க அம்மாவை இந்த வருஷமாவது தொண தொணக்காம சும்மா இருக்கச் சொல்லுங்கோ... என்ன?''

சுந்தரின் பெட் ரூமில் அவன் காதருகே அம்பிகா கிசுகிசுத்துக் கொண்டிருந்த அதே நேரம்...?

கொலு பெட்டியைத் திறந்து ஒவ்வொரு பொம்மையாக எடுத்துத் தடவிப் பார்த்துக் கொண்டிருக்கிறாள் ஜானகியம்மாள்.

2

காலை நேரம்...

அம்பிகா சமையலில் பிஸியாக இருந்தாள். பேத்தி நித்யா மாண்டிசோரியில் படிக்கிறாள். ஐந்து வயதாகிறது. சுந்தர் அவளைக் கொண்டு போய் 'காரில்' விட்டுவிட்டு வருவான்.

சுந்தர் பேப்பர் படித்துக் கொண்டிருந்தான். மெல்ல மகனிடம் வந்தாள் ஜானகியம்மாள்.

''ஏண்டா சுந்தர்... ஆத்துலே குழந்தை நித்யா இருக்கா... நவராத்திரி வரப் போறதே கொலு வைச்சு... பூஜைக்கெல்லாம் ஏற்பாடு பண்ண வேண்டாமா? இப்போ பிடிச்சே சாஸ்திரிகளுக்கு ஏற்பாடு பண்ணினாத்தானே கிடைப்பார்...''

சுந்தர் நிமிர்ந்தான். ''என்னம்மா இது...? பத்தாம் பசலித்தனமா பேசிண்டு... இந்தக் காலத்துலே யார் கொலு வைச்சு வேஸ்ட் பண்றா... எங்கே டயம்? நீ சொல்றது அந்தக் காலம்... வேணும்னா இப்போ நிறைய பக்தி கேஸட் வந்தாச்சு... வாங்கித் தர்றேன்... அதைக் கேட்டுண்டு நீயே அர்ச்சனை பண்ணிடேன்...''

ஜானகி மகனைப் பார்க்கிறாள்.

பெரிய சுந்தர் சின்ன சுந்தராகிப் பேசுகிறான். ''அம்மா.. பேசாம எனக்குக் கல்யாணம் பண்ணி வை.. என் பெண்டாட்டியை கொலுவுக்கு அழைக்க அனுப்பறேன்...''

சுந்தர் மனத்தில் இவள் போட்ட நேர்மைக் கோடுகள் அழிந்து விட்டனவா? அல்லது அடித்துக் கொண்டு போய்விட்டனவா? ஆமாம்... அப்படித்தான் இருக்க வேண்டும்.. ஏதோ... ஒரு பிரளயம் வந்து எல்லாமே கலந்து போய்... இவள் என்ன அஜந்தா ஓவியமா தீட்டி இருந்தாள், காலத்தால் அழியாமல் இருப்பதற்கு? ஜானகி மெல்லப் பேசினாள்: ''அதில்லே சுந்தர்... வீட்டிலே கொலு பொம்மை இருக்கறச்சே வீட்டை மூளியா வைக்கக் கூடாது... பொம்மையெல்லாம் பொட்டிக்குள்ளே இருந்தா...''

''சாபம் தரும்... என்னை எடுத்து வெளியிலே வைன்னு அழும்! இதுதானே? வருஷா வருஷம் கேட்டுக் கேட்டு போரடிச்சுப் போச்சு...'' —நித்யாவைப் பள்ளிக்குத் தயார் பண்ணி அழைத்து வந்த அம்பிகா எரிந்து விழுந்தாள்.

ஜானகி கஷ்டப்பட்டாள்.

''நான்... நான் எனக்காகச் சொல்லலே... பெண் குழந்தைகள் இருக்கிற வீட்டிலே நாள் கிழமையை முடக்கக் கூடாதுன்னு சொன்னேன்.''

''இதோ பாருங்கோ... இது சயன்ஸ் யுகம்... அவனவன் சந்திரனுக்கும் செவ்வாய்க்கும் ராக்கெட் விட்டுண்டு இருக்கான்... நீங்க என்னடான்னா கதை, புராணம்னு கை ஒடிஞ்ச பொம்மைகளை வைச்சுண்டு கதை பேசிண்டு இருக்கேள். மத்தவாளை சிரமப்படுத்தற பக்தி, பக்தி இல்லே... உங்களுக்கு வேணும்னா நீங்க தனியாப் போய்க் கொலு வையுங்கோ... பஞ்ச பக்ஷ பரமான்னம் பண்ணுங்கோ... நான் வேண்டாங்கலே...''

அம்பிகா கத்தினாள்.

சுந்தர் சுவாரசியமாகப் பேப்பர் படித்துக் கொண்டிருந்தான்! 'இவனா பிள்ளை? இவனையா பத்து மாதம் சுமந்து பெற்றேன்? இவன் கையில் தாரை வார்த்துக் கொடுக்க நான் தவம் இருந்து பெற்றேனா? நான் மருமகளை தாரை வாங்கவில்லே? என் மகனைத் தாரை வார்த்துக் கொடுத்துவிட்டேன்! சயன்ஸ் யுகமாமே! ஆனால் நாமெல்லாம் தரையில்தானே இருக்கிறோம்!

3

தன் கணவன் அனந்தராமன் தன்னிடம் சொன்னதை நினைவுபடுத்திப் பார்த்தாள் ஜானகி. ''பைத்தியம்... புள்ளை புள்ளைன்னு மாய்ஞ்சு போகாதே... அவனுக்குக் கல்யாணம் ஆயாச்சு... உரிமைக்கு ஒத்தி வந்தாச்சு... ஞாபகம் வைச்சுக்கோ...

''என்ன பைத்தியம் மாதிரிப் பேசறேள்... அவனோட உரிமை வேற... என்னோட ஸ்தானம் தாய்... நான் அவனோட உரிமைகள்லே தலையிடாத வரை என்னோட ஸ்தானத்தைப் பத்திக் கவலை இல்லே....''

அனந்தராமனுக்குப் புரிந்தது... இது சாதாரண பைத்தியம் இல்லே! தாய்மைப்



பைத்தியம்! இந்த நோயை முற்றவிட்டால். இவள் நிஜமான பைத்தியமாகி விடுவாள்! அம்பிகா இப்போதைக்கு 'பெட்ரூம்' கதவை மட்டும்தான் சாத்தி இருக்கிறாள்.. இன்னும் என்னென்ன சாத்தப்போகிறாளோ...? ஜானகிக்கு இப்போது சொன்னால் புரியாது..

ஆடி ஓடி வேலை செய்து பழகிய ஜானகியை அம்பிகா கொஞ்சம் கொஞ்சமாக... அழகாக ஒதுக்கினாள்...

"நீங்க ஏம்மா வீணா சிரமப்படறேள்? பேசாம உங்க ரூம்லே இருங்கோ... நான் கையிலே கொண்டு வந்து காப்பி தர்றேன்..."

ஜானகி மகிழ்ந்து போனாள்.

"என் நாட்டுப் பெண் என்னை உட்கார்த்தி வைச்சு உபசாரம் பண்றா..." ஆனால்... கால் ஒடிந்த நொண்டிகளைக் கூட உட்காரத்தான் வைப்பார்களோ?

4

"அப்பா" — என்று தன்னைத் தேடி



வந்த மகனை வியப்புடன் பார்த்தார் அனந்த ராமன்.

காரியமில்லாமல் பேச மாட்டானே! ஏன் வந்திருக்கிறான்?

"இந்த வீடு ரொம்பப் பழைய வீடா இருக்கு..."

அந்தராமன் மெல்லச் சிரித்தார்.

"எனக்கு இது போதும்பா..."

"அதில்லேப்பா... எனக்குக் கல்யாணமாய் அம்பிகாவும் வந்தாச்சு... குழந்தை வேற பொறக்கப் போறது... சைடுலே கொஞ்ச இடம் இருக்கே. அதிலே ஒரு ரூம் போட்டுக்கறேன். அப்புறம் கொஞ்சம் 'ஆத்தை' ரீமாடல் பண்றேன்..." என்றான். பக்கத்தில் உட்கார்ந்தபடி சுலோக புத்தகம் படித்துக் கொண்டிருந்த ஜானகி மகனுக்கு வக்காலத்து வாங்கினாள்.

"ஆமான்னா... பாவம் கொழந்தை ஆசைப் படறான். கட்டிக்கட்டுமே... நமக்கு என்ன நஷ்டம்?" — என்றாள்.

அனந்தராமன் சிரித்துக்கொண்டார் தனக்குள்.

பைத்தியக்காரி.. இவளுக்குத்தான் புள்ளேயோட மனசு தெரியவில்லே... புண்படப் போறது யார் என்பது இப்போது தெரியாது? ஜானகிக்கு இப்போது சொன்னாலும் புரியாது!

வருகிற பென்ஷன் பணம் ஆயிரம் ரூபாய்... சொந்த வீடு... ரிடையர்டு லைப்புக்கு இது போதும் என்று நினைத்திருந்தவருக்கு சுந்தர் மாற்றலாகி இந்த ஊருக்கு வந்த பிறகு தான் கொஞ்சம் கொஞ்சமாக பிரச்னைகள் வர ஆரம்பித்தன.

> வார்த்த தோசைகள் மிஞ்சினால் என்ன செய்வது? எளிய யோசனை. லேசான புளியைக் கரைத்துத் தோசைகளை ஊற விடுங்கள். அளவான புளி ஜலமாக இருக்க வேண்டும். உப்பை லேசாகத் தூவவும். மிளகாய் வற்றல், கறிவேப்பிலை, கடுகு, உளுத்தம் பருப்பு ஆகியவற்றை இலுப்பச்சட்டியில் போட்டு வறுக்கவும். இத்துடன் துண்டு களாக்கப்பட்ட வெங்காயத்தை வதக்கி ஊற வைத்த தோசைகளைப் போட்டு மிருதுவாகக் கிளறவும். புளி உப்புமா மாதிரி சுவை தரும்.
>
> — சித்ரா.

முதலில் சுந்தர் தனக்கு ஒரு பெட்ரூம் போட்டுக் கொண்டான். வழுக்கி விழும் மொஸைக் தரை, கப்போர்ட், பெரிய பெரிய பிரெஞ்ச் விண்டோ... அதற்கு கண்ணாடிக் கதவுகள்... அழகழகான சுவர் பெயிண்டுக்கு ஏற்ற நிறத்தில் வாங்கப்பட்ட அழகழகான கர்ட்டன் துணிகள்...

அகலமான குட்டைக் கால்களுடன் அலங்கார வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்ட உட்டன் காட்... ஒன்பது அங்குலம் உயர முள்ள குஷன் மெத்தைகள்...

ஜானகிக்குப் பெருமை பிடிபடவில்லை.

என் மாட்டுப்பொண் எத்தனை கலை அழகுடன் தன் அறையை வைத்திருக்கிறாள். மெல்ல மெல்ல ஒட்டை சமையல் அறை பளபளா கிளாஸ் டைல்ஸ் போடப்பட்டு, எவர்சில்வர் சிங்குடன் 'ஜிகுஜிகு' என்று கண் சிமிட்டியது. பல இடங்களில் கீறல் விழுந்த பழைய ரெட் ஆக்ஸைட் தரையைப் பெயர்த்துவிட்டு மொஸைக் போட்டு விட்டான் சுந்தர். பூஜை அறை மட்டும் கொஞ்சம் சின்னதாகி விட்டது! வெந்நீர் அறையில் ஹீட்டரும், ஸ்பார்க்டெக்ஸ் டைல்ஸும், ஷவரும் அமர்க்களப்பட்டன. டைனிங் அறையில் பிரிஜ்ஜும், வாட்டர் கூலரும் இடம் பெற்றன. வீட்டுச் சாமான்களில் கிரைண்டர், மிக்ஸி, என்ற புதிய வரவுகள்... ஆட்டுக் கல்லையும், அம்மிக் குழவியையும் தூக்கி அம்பிகா கொல்லையில் போட்டு விட்டாள்! குக்கிங் ரேஞ்ச் வந்த பிறகு ஜானகியைச் சமையல் அறையிலேயே விடவில்லை அம்பிகா.

"இதுலே உங்களுக்குச் சமைக்கத் தெரியாது... இதுலே நிறைய அட்ஜஸ்ட்மெண்ட் இருக்கு... நானே பண்றேன்..."

அடாடா... காப்பி போட்டுக்கணுமானா எங்கிட்டே சொல்லக்கூடாதா? இப்படியா மார்பிள் மேடை எல்லாம் டிகாக்ஷனைக் கொட்டி பாழ் பண்ணுவா?"


"தாத்தம் வேணும்னா எங்கிட்டே கேளுங்கோ... சும்மா சும்மா ஃப்ரிஜ் கதவைத் திறந்து திறந்து பட்டிக்காட்டுத்தனமா சாத்தினா பத்தாயிர ரூபாய் ஃப்ரிஜ் பாழாயிடும்!"

இப்போதுதான் ஜானகிக்குப் புரிந்தது... இங்கு எல்லாமே பாழாகிவிட்டது என்பது புரிந்தது!

"எண்ணெய் தேய்ச்சு குளிக்கறதானா புதுசு பண்ணி இருக்கிற பாத்ரூமிலே குளிக்காதீங்கோ... சீக்காய் எல்லாம் தெறிச்சு டைல்ஸ் எல்லாம் பாழ்! எத்தனை தடவை வேலைக்காரியை விட்டுக் கழுவச் சொல்றது? அவ வேலையை விட்டே நின்னுடுவா... வேணுமானா கார்த்தாலே சீக்கிரமா எழுந்து குழாயடியிலே குளிச்சுக்கோங்கோ...

ஜானகி இதையெல்லாம் அனந்தராமனிடம் சொல்ல விரும்பவில்லை. புள்ளை புள்ளை என்று மாய்ஞ்சு போகாதே என்று ஆரம்


1926 - 1986
நரசுஸ் காபியின்
வைர விழா
வெகுமதிகள்!
• 12 கிலோ நரசுஸ் காபிக்கு எவர்சில்வர் பிளேட்.
• 10 கிலோ நரசுஸ் காபிக்கு எவர்சில்வர் காபி டபரா செட்.
• 5 கிலோ நரசுஸ் காபிக்கு எவர்சில்வர் 'ஆனந்த்' டம்ளர்.
• 1½ கிலோ நரசுஸ் காபிக்கு துணிப்பை.
• 500 கிராம் நரசுஸ் காபிக்கு எவர்சில்வர் ஸ்பூன்.
மொத்தமாகவோ, சில்லரையாகவோ, வாங்கும் நரசுஸ் காபியுடன் கிடைக்கும் வெகுமதிக் கூப்பன்களைப் பெற்று, வெகுமதிகளைப் பெறுங்கள். 29.9.86 முதல் 31.10.86ல் முடியும் விற்பனைக்கே வெகுமதிகள் உரியவை.
REGD NO 58573
100% PURE COFFEE
NARASU'S COFFEE
NARASU'S COFFEE COMPANY
Head Office : SALEM
BRANCHES ALL OVER TAMILNADU
ஜீவனுள்ள ஒரே காபி
நரசுஸ் காபி
நரசுஸ் காபி கம்பெனி
சேலம் 636 007
கிளைகள்: தமிழகம் மற்றும் பாண்டிச்சேரியிலும்.
ADWAVE/NCC/3193


MISS
Bras
நாயுடு ஹால்
மேன்மையான பெண்மைக்கு
நாயுடு ஹால் தரும் பாதுகாப்பு!
Susakads NH 001.86

பத்திலேயே சொன்னவர் அவர். இவள் தான் கேட்காமல் அவசரப்பட்டுவிட்டாள்.'

இப்போது...?

இப்போது...? அனுபவிக்கிறான்!

5

'வரவர அம்பிகா ரொம்பப் பிஸி... சுந்தருக்குப் பெரிய வேலை ஆகி கார் வேறு வாங்கி விட்டான்...

வீட்டில் டீ. வி., வி. சி. ஆர். என்று திமிலோகப்பட்டது...

அம்பிகாவுக்குக் காரில் வெளியே போய் ஷாப்பிங் பண்ணவே நேரம் சரியாக இருந்தது...

நாய்க்கு ரொட்டித் துண்டு வைப்பது போல் டேபிளில் மாமனாருக்கும், மாமியாருக்கும் சாப்பாட்டை ஒரு டிபன் காரியரில் வைத்துவிட்டுச் சமையல் அறையைப் பூட்டிக் கொண்டு வெளியே போய் விடுவாள் அம்பிகா! காப்பி சுட வைத்துக் கொள்ள வேண்டுமானால் ஒரு ஓட்டை ஸ்டவ் வெளியே கிடந்தது. அதில் வீட்டுக்கு விலக்கானவர்களுக்குத் தரும் பாத்திரம் போல ஒரு பாத்திரம். அதில்தான் சுட வைத்துக் கொள்ள வேண்டும்! சுந்தரைச் சந்திக்க யாராவது வந்து விட்டால் ரீமாடல் பண்ணிய ஹாலில்தான் அவர்களைச் சந்திப்பான் சுந்தர். ஒருநாள் —

அங்கு பேப்பர் படித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கும் அப்பாவைப் பார்த்து — "அப்பா... கொஞ்சம் வாசல் வராந்தாவிலே உட்கார்றேளா? ஒரு கான்ஃபிடன்ஷியல் மேட்டர் டிஸ்கஸ் பண்ணணும்... இந்த ஹாலே விட்டா வேற எடம் எங்கே இருக்கு?" — என்றான்.

அம்மாவைக் கொல்லையில் தள்ளி... அப்பாவை வாசலில் தள்ளியாகிவிட்டது!

"ஏய் கிழவி.., எல்லாம் உன்னால் வந்த வினை... அன்னிக்கே அவனை வீட்டுக்குள்ளே அலௌவ் பண்ணி இருக்கக் கூடாது! நீதான் புள்ளை... பாசம்னு சொல்லி இடம் கொடுத்தே... இப்போ என் வீட்டிலே எனக்கு இடமில்லை..." — என்று கோபத்தில் ஒருநாள் கத்திவிட்டார் அனந்தராமன்.

"மெள்ளப் பேசுங்கோ... சுந்தர் உள்ளே படுத்துண்டு இருக்கான்... காது கேட்டுடப் போறது?"

"கேட்கட்டும்... பெரிய தொரை... இவனும் இவன் பெண்டாட்டியும் வீடியோவும், டீ. வி. யும் பார்த்துவிட்டு சிரிச்சுண்டு கூத்தடிப்பா... அதை நாம சகிச்சுக்கணும்... நம்பளை ஒருநாள் சினிமா பாக்க வரேளான்னு கூப்பிட்டிருக்கானா? கர்ட்டன் கூடப் போடாம ஆம்படையான் மடியிலே உன் அருமை நாட்டுப் பெண் படுத்துண்டு டீ.வி. பார்ப்பா. அதை நாம பார்த்தும் பாக்காமலும் இருக்கணும்... தொரை காரை எடுத்துண்டு வெளியே போவார்... நாம் வீட்டைக் காவல் காக்கணும்... அதைத் தொடாதே... இங்கே தொடாதே... இங்கே நிக்காதே... அங்கே நிக்காதே... என்ன நினைச்சுண்டு இருக்கான்? இது என் வீடு... என் சைட்... என்னோட இடம்... இதை விட்டு நான் போக மாட்டேன்... வேணும்னா இவன் போகட்டும்!" என அனந்தராமன் பேச்சை முடித்த போது, சுந்தர் வந்து நின்றான்.

"நாங்க இப்பவே போறோம்பா... வீணா நீங்களும், அம்மாவும் சண்டை போட்டுக்க வேண்டாம்... இந்த வீட்டுக்காக ரெண்டு லட்சரூபாய் செலவழிச்சிருக்கேன்... அதைக் கொடுத்துடுங்கோ... நாங்க போயிடறோம்..."

அனந்தராமன் அசந்து போனார்! என்ன பேச்சு! 'ரூம் கட்டவா? ரீமாடல் பண்ணவா?' — என்று பர்மிஷன் கேட்டவன் இன்று பணம் கேட்கிறான்! பணத் திமிர்! நான் கொடுத்த கல்வித் திமிர்! நான் சிபாரிசு பிடித்து வாங்கித் தந்த உத்தியோகத் திமிர்!

"என்னாலே ரெண்டு லட்சம் தர முடியாது. வேணும்னா புல்டோசர் கொண்டு வந்து வீட்டை இடிச்சு செங்கல்லா, சுண்ணாம்பா, சிமெண்டா எடுத்துண்டு போ... எல்லாத்தையும் தரைமட்டமாக்கிட்டுப் போயிடாதே... எங்களுக்குப் பழைய மாதிரி ஒரு குச்சு வீடு... ஓட்டை வீடு கட்டிக் குடுத்துட்டுப் போ... சீ... நீயும் ஒரு பிள்ளை! நானும் உங்கம்மாவும் இந்த வீட்டிலே என் பென்ஷன்லே ஐந்நூறு ரூபாய்க்குச் சாப்பிட்டுட்டு ஆனந்தமா இருந்தோம். இப்போ ஆயிரம் ரூபாயையும் உங்கிட்டே தந்துட்டு அல்லல் பட்டுண்டு இருக்கேன்..."

வந்த கோபத்தில் அன்றே ஊருக்குக் கிளம்பி விட்டார்... மல்லிகாவிடம் போகப் போவதாகச் சொல்லிவிட்டார்!

"என்னன்னா இது... வந்த கோபத்துலே இப்படி என்னை அம்போன்னு விட்டுட்டுக் கிளம்பிட்டேள்?"

அனந்தராமன் உச்சி முகட்டைப் பார்த்தபடி பேசினார். "நீயும் என்னோட கிளம்பறதானா கிளம்பு. நான் இனிமே ஒரு நிமிஷம் கூட இங்கே இருக்க மாட்டேன்..."

புளி சாதம், எலுமிச்சை சாதம் கிளறும் பொழுது சாதத்தைக் கொட்டி ஆற வைப்போம் இல்லையா! அப்போ முழு நான்கு டேபிள் ஸ்பூன் நல்லெண்ணெய் விட்டு ஆற வைத்தால் சாதம் ஒட்டாமல் பொலபொலப்பாக இருக்கும்.

— திருமதி பலராமன்

''பழகின இடம்னு கஷ்டமில்லே... இங்கே புள்ளே விட்டிலேயே உரிமை இல்லாம இருக்கோம்... மல்லிகா வீடு மாப்பிள்ளே வீடு. அங்கே எது எது எப்படி இருக்குமோ...? தவிர ரெண்டு மாசத்துலே நவராத்திரி வேற வரது... பூஜை புனஸ்காரம் எல்லாம்...'' — ஜானகி தயங்கினாள்.

அனந்தராமனுக்குக் கோபம் வந்தது. ''சரி ஒழி... நீயும் உன் பூஜை புனஸ்காரமும்'' —

அனந்தராமன் அந்தப் பக்கம் போனாரோ இல்லேயோ இந்தப் பக்கம் அம்பிகா பிடித்துக் கொண்டாள். ''உங்கப்பாதான் புத்தி கெட்டுச் சொன்னா கேட்டுண்டு இருக்க வெட்கமா இல்லே? சினிமா பாக்கறேனும், வீடியோ பாக்கறேனும். இவாளேயும் யார் பார்க்க வேண்டாம்னு? சினிமாவுக்குக் கூப்பிட்டா பக்திப் படம்தான் பார்ப்பேங்கிறு உங்கம்மா... அப்புறம் காபரே ஆடற சினிமா படத்தைப் பார்த்துட்டு, 'கர்மம், சீச்சீ, இதை எல்லாம்பார்ப்பாளா?''—என்ன அசிங்கம்... குழந்தையையும் கூட்டி வைச்சுண்டு கெடுக்கறன்னு எனக்குப் பட்டம்! பக்கத்தாத்து மாமியோட வம்பு! முன்னே போனு கடிக்கறு! பின்னடி போனு உதைக்கறு.



கணவனின் துணையும் இல்லாமல், மகனின் அன்பும் இல்லாமல் ஜானகி தனித்து விடப்பட்ட போதுதான் துன்பம் பெரிதாகத் தோன்றியது.

ஆயிற்று.... அனந்தராமன் ஊருக்குப் போய் ஒரு மாதத்திற்கும் மேலாகிவிட்டது!

ஒருவேளே சோறு சாப்பிட்டாள் ஜானகி. அதுவும் இப்போது கோதுமைச் சோறுகிவிட்டது! இரவில் சப்பாத்தி அல்லது கஞ்சி! தடவித் தடவி சாப்பிடுவதைவிட கஞ்சி தேவலே!

அம்பிகா அலுத்துக் கொண்டாள். ''இருக்கிற நாலு பேருக்கு எட்டு தினுசு சமையல். ஒத்தருக்குக் கோதுமைச் சாதம், கஞ்சி காடின்னு பிராணன் போறது.....''

அந்தப் பிராணன் தனக்குப் போய்விட்டால் தேவலே என்று தோன்றியது ஜானகிக்கு!

6

ஜானகி தன் நினைவுகளிலிருந்து மீண்டாள்.

நவராத்திரி வருகிறது. ஒரு வாரத்தில் வருகிறது. அடுத்த வருஷம் உயிரோடு இருக்கிறோமோ, இல்லேயோ, இந்த வருடமாவது பூஜை, நைவேத்தியம் என்று செய்துவிட வேண்டும். அம்பிகாவால் முடியாவிட்டால் ஒரு ஆளேயாவது போட்டுச் செய்ய வேண்டும்.

ஜானகி மெல்ல தன் எண்ணத்தைச் சொன்னது தான் தாமதம்....

அம்பிகா காளியாகக் கத்த ஆரம்பித்து விட்டாள்! இன்றே துர்க்காஷ்டமி வந்து விட்டதா என்ன?

''இந்த எழவெடுத்த விட்டிலே நவராத்திரி கொண்டாட்டம்தான் பாக்கி!''

''அம்பிகா நல்ல வார்த்தை பேசம்மா.''

''ஆமாம்.... எனக்குக் கெட்ட வார்த்தை



தான் பேசத் தெரியும்...''

''அதில்லேம்மா. அப்பா போறச்சே ஆயிரம் ரூபாய்....''

அம்பிகா காளியாகவே உருமாறிவிட்டாள். ''ஆ.... பெரிய ஆயிரம்! உங்களுக்கு எத்தனை மருந்து வாங்கித் தந்திருக்கு! டாக்டருக்கு எத்தனை தண்டம் அழுதிருக்கு! எத்தனை எக்ஸ்ரே எடுத்திருக்கு..... எத்தனை ப்ளட் டெஸ்ட். ஏதாவது கணக்குத் தெரியுமா? உங்க பிள்ளை ஒரு பைத்தியம்.... பண்றதையும் பண்ணிட்டு கெட்ட பேர் வேறே.... பெரிசா ஆயிரம் ரூபாய்த் தந்துட்டாராமே. இங்கே ரெண்டாயிரம் செலவாயிருக்கு. நாங்க கௌரவமா கணக்குச் சொல்லாம பேசாம இருந்தா கணக்குக் கேக்கறேளா? கேளுங்கோ, இன்னும் நீங்க ஆயிரம் ரூபாய் பாக்கித் தரணும்.... சாப்பாட்டுச் செலவு தனி!''

ஜானகி ஒடுங்கியே போனாள்....

'கடவுளே என்னை ஏனிப்படி அனாதை ஆக்கினாய்? ஸ்ரீ மாதா ஸ்ரீ மகாராக்ஞ என்று உன்னைத் தோத்திரங்கள் சொன்ன நாவால் என்னை மனம் நொந்து சாபம் கொடுத்து விடச்செய்யாதே தாயே! உன் நாமாக்களைக் கேட்ட காதுகளுக்கு இப்படிக் கர்ண கடூரமான வாசகங்களைக் கேட்க வேண்டும் என்று தலையெழுத்தா? இந்த வீட்டில் எழவு எடுக்காமல் இருக்க வேண்டும் என்று தானே தினம் தினம் பிரார்த்தனை செய்கிறேன். வேண்டாம் தேவி பூஜை வேண்டாம். என் மனத்தையே ஆலயமாக்கி, என் எண்ணங்களையே பூக்களாக்கி, சிரத்தை எனும் நதியில் குளித்து, பஞ்ச பட்ச பரமான்னங்களை மனத்துள் சமைத்து, ஆத்ம பூஜையில் உன்னை ஆராதிக்கிறேன் தாயே... என் குடும்பத்தை க்ஷேமமாக வைத்திரு. என் குடும்பத்தை க்ஷேமமாக வைத்திரு....'

நவராத்திரி வந்தது. வீட்டில் கொலு வைக்கவில்லை.

அம்பிகாவிற்கும் நித்யாவிற்கும் ஊர்க் கொலு அழைப்புகளுக்குச் செல்லவே நேரம் சரியாக இருந்தது.

டின்னரும், டீப்பார்ட்டியுமாக வெளியே அலைந்து கொண்டிருந்தாள் அம்பிகா. பூஜை விளக்கை ஏற்றக் கூட நேரமில்லை அவளுக்கு.

பாவம் ஜானகி சுத்த பட்டினி கிடந்தாள். முன்பெல்லாம் நவராத்திரி, தினங்களில் ஒரு பொழுது உண்டு இரவு பட்டினி கிடப்பாள். பூஜை பூஜை என்று பூஜை அறையிலேயே இருப்பாள். துர்க்கா அஷ்டமி அன்று உப்பில்லா விரதம், வெறும் பாலையும், எலுமிச்சம் பழ ரசத்தையும் சாப்பிட்டுவிட்டுத் தெம்பாக இருப்பாள்.

அப்படி பழைய மாதிரியே இருக்க வேண்டும் என்கிற இவள் ஆசை.... பழைய மாதிரி பூஜை பண்ண தன்னைவிட மாட்டாள் அம்பிகா. இவள் விரதமிருப்பதைத் தடுக்கமாட்டாளே....! இருந்தாள். சொல்லிச் சொல்லிப் பழக்கப்பட்ட சுலோகங்களைச் சொல்லிக் கொண்டே பட்டினியாகக் கிடந்தாள்.


பூஜை அறையில் அணையா விளக்கேற்றி அதன் முன் தவமிருந்தாள். நல்லவேளை எண்ணெய் செலவு என்று அம்பிகா சண்டைக்கு வரவில்லை. மாமியார் சாப்பிட்டாளா இல்லையா என்றுகூடப் பார்க்க நேரமில்லை அவளுக்கு.... ஜானகியும் பட்டினி! அவள் ஸ்வாமியும் பட்டினி!

அன்று சரஸ்வதி பூஜை —

ஒன்பது நாட்கள் இருந்த பட்டினியில் ஜானகிக்குத் தலை சுற்றியது. வெளியில் காட்டிக் கொள்ளவில்லை.


அந்த லீவு நாளை சிறப்பாகக் கொண்டாட வேண்டி சுந்தர் தன் மனைவியுடன், குழந்தையையும் அழைத்துக் கொண்டு சினிமாவுக்குக் கிளம்பிவிட்டான்.

வீட்டிற்குக் காவல் ஜானகி! ஜானகிக்கு



maurya

எளிமை, திறமை
மௌரியாவின் பெருமை



maurya
வாஷிங் மெஷின்.

சலவை தோறும் பொலிவு

மின்னல் வேக சலவைக்கு

தரமிக்க, இயக்குவதற்கு எளிமையான ரிவர்ஸ்சபில் வாஷிங் மெஷின் மௌரியா. மௌரியா வாஷிங் மெஷின் உங்கள் துணிகளை ஐந்தே நிமிடங்களில் சலவை செய்யும் திறமை கொண்டது. மௌரியாவில் உள்ள ஜப்பானிய டைம்மர் நீங்கள் குறித்த நேரத்தில் மெஷினை தானாகவே ஆஃப் செய்வதால் சலவையின்போது உங்களது கண்காணிப்பு தேவையில்லை. மௌரியாவில் அமைந்துள்ள மோட்டார் இருதிசையிலும் விட்டு விட்டு சுழல்வதால் துணிகள் நன்றாக சலவை செய்யப்படுவதுடன் 30 சதவீதம் மின்சாரமும் 70 சதவீதம் சோப்பு செலவும் மிச்சமாகிறது. தொல்லையின்றி நீரை ஊற்றவும் வெளியேற்றவும் எளிதான கட்டுப்பாடுகளை கொண்டது மௌரியா.

மௌரியா வாஷிங் மெஷினுடன் துணிகளை அயர்ன் செய்ய வசதியாக லாமினெட்டட் பலகை இணைக்கப்பட்டுள்ளது. மேலும்

- துருபிடிக்க இயலாத அலுமினிய வடிவமைப்பு
- மெஷினை எளிதில் நகர்த்தவும் இடம் மாற்றவும் சக்கர உருளைகள்
- தரமிக்க AISI 304 தகுதிபெற்ற ஸ்டியின்லெஸ் ஸ்டீல் டிரம்
- திறமைமிக்க உடனடி சர்வீஸ் வசதிகள்

இவை அனைத்தும் கொண்டது மௌரியா வாஷிங் மெஷின். மௌரியா வாஷிங் மெஷின் இப்பொழுது டிரையருடனும் தனியாகவும் கிடைக்கின்றது. இரண்டில் ஒன்றை உங்கள் வசதிகேற்ப தேர்ந்தெடுங்கள். எவ்வகையிலும் நீங்களே வெற்றி பெற்றவர் ஆவீர்கள்.

இவற்றுக்கு சிகரமாக விற்பனைக்கு பின் சிறப்பான சேவை.

மௌரியா வாஷிங் மெஷின்
இப்பொழுது தரமிக்க ¼ H.P. ராலி உல்ஃப் மோட்டாருடன் கிடைக்கிறது.

கர்நாடகா, ஆந்திரா மற்றும்
தமிழ்நாட்டிற்கு விநியோகஸ்தர்கள்.

திரிப்தா மார்கெட்டிங் பி. லிட்.,

139, பாரதி சாலை (பைக்ராப்ட்ஸ் ரோடு)
சென்னை-600 014 போன் : 88599

பெங்களூர் போன் : 563322 ஹைதராபாத் போன் : 221224.

Adhiti/M 488

என்னமோ பயமாக இருந்தது. சினிமா போகிற மகிழ்வில் இருக்கும் அவர்களிடம் தன் பயத்தைக் காட்ட விரும்பவில்லை. யாராவது ஒரு பையனாவது துணையாக இருந்தால் தேவலை என்று தோன்றியது. இனி இவளுக்கு இவள்தான் துணை....

ஜானகியின் பக்கத்தில் ஒரு செம்பில் தண்ணீர் வைத்திருந்தாள் அம்பிகா. தாகம் மிகும் எடுத்தால் குடிக்க.... இவளுக்கு இப்போது எடுத்திருப்பது சாதாரண தாகமல்ல. மரண தாகம்....

அவர்களை அனுப்பிவிட்டு ஜானகி பூஜை அறைக்கு வந்தாள். தூக படிந்த அம்பாள் சிரிப்பதுபோல் தெரிந்தது படத்தில். ஒரு முழம் பூ கூட இல்லை படத்தில்....

அனுவசியமாக அம்பிகாவின் தலையில் எத்தனை பூச்சுமை!

நவராத்திரியும் அதுவுமாக் ஒரு முழப் பூ படத்திற்குச் சாத்தக் கூடாதோ? ஜானகிக்கு என்று 'போனால் போகிறது' என்று தந்த பூவை. ஜானகி பத்திரமாக வைத்திருந்தாள்.

ஒரு கின்னல்தான்! அதை இந்தப் படத்திற்கு வைக்க வேண்டும். ஜானகி தட்டுத் தடுமாறியபடி படத்தின் அருகே வந்தாள்...

கண் வேறு தெரியவில்லை. ஆணி எங்கே... ஆ.... இங்கேதான் இருக்கும். கையில் தேடித் துழாவிக் கண்டு பிடித்து.... இதோ.... இதோ பூ வின்னலை சார்த்தியபோது.....

அணையா விளக்கு சுடர் விட்டு எரிந்து கொண்டிருந்தது. மல்லிகைப்பூ வின்னல் வைக்கும்போது அது கை தவறிக் கீழே விழுந்தது. ஜானகி துணுக்குற்றாள்.

'தெய்வமே எல்லோரையும் க்ஷேமமாக வைத்திரு. யாருக்கும் எந்தக் குறையும் கூடாது. வேண்டுமானால் என்னை எடுத்துக் கொள். என் பிள்ளை சுந்தர்... அம்பிகா... நித்யா அனைவரும் க்ஷேமமாக இருக்க வேண்டும். நான் ரொம்ப சிரமப்படாமல் உன் பாதார விந்தங்களுக்கு வந்து சேர வேண்டும். வியாதி வெட்கை என்று வந்துவிட்டால் என்னை யாருமே கவனிக்க மாட்டார்கள்! எனக்கு வியாதி வராமல் சுந்தருக்கு அதிகச் செலவில்லாமல் அம்பிகா என்னைத் திட்டாமல் என்னை எடுத்துக் கொள் தாயே. உனக்கு ஆடம்பரமாக இந்த வருடம் பூஜை பண்ண முடியவில்லை. அதற்காக உன் கோபத்தை அம்பிகாவிடம் காட்டிவிடாதே.... அவள் குழந்தை.... அறியாப் பெண். என்னையும் மன்னித்து....! திடீரென்று ஏதோ சுட்டது போல்....?

என்னது அது? தீயா இல்லை ஜோதிப் பிழம்பு....

தேவி பிரத்யக்ஷம் ஆகிவிட்டாளா? இந்த ஒன்பது நாட்கள் நான் பட்டினி கிடந்து நோற்ற நோன்பில் அந்த குண்டலினி சக்தி என்னுள் சுடர் விட ஆரம்பித்துவிட்டதோ... ஜானகிக்கு விவரம் புரிவதற்குள்....

பூஜை விளக்கின் திரியிலிருந்து ஜானகியின் புடைவைத் தலைப்பில் பற்றிக் கொண்ட நெருப்பு திகுதிகுவென்று. கொழுந்துவிட்டெரிய.... ..

''தேவி.... தாயே....'' — என்றபடி மூர்ச்சையாக....

ஊரிலிருந்து திரும்பி வந்த அனந்தராமன், வாசல்கதவுதிறந்துகிடப்பதையும்....உள்ளே ஏதோ பிரகாசமாக எரிவதையும் பார்த்து விட்டு பதறி அடித்துக் கொண்டு உள்ளே வர அங்கே —

அணையா விளக்குகொஞ்சம்கொஞ்சமாக அணைந்து கொண்டிருந்தது!

* * * * * *

சினிமா தியேட்டரில் தன் கணவனின் காதுகளில் நாணம் பொங்க கிசுகிசுத்துக் கொண்டிருந்தாள் அம்பிகா.... சுந்தர் மகிழ்ந்து போனான்.

''அடடே.... அடுத்த ப்ரொடக்ஷனா? வெரிகுட்.... என்ன பேர் வைக்கிறது?''

அவர்கள் ஹோட்டலில் டிபன் சாப்பிட்டு விட்டு பீடா போட்டபடி சிவந்த நாக்குடன் வீடு திரும்பியபோது —

நெருப்பு நாக்கு பட்டுச் சடலமாகிப் போன ஜானகியை வாசல் வராண்டாவில் போட்டபடி அனந்தராமன் காத்திருந்தார்.

சுற்றிலும் கூட்டம்.

''ஹாலைபுதுசாரீமாடல்பண்ணி இருக்கே. எரிஞ்சு போன உங்கம்மாவோட உடம்பை உள்ளே போட்டா ஹாலோட அழகு

பசிக்கும் குழந்தைக்கு ஆகாரம் கொடுக்காமல்இருக்கலாம்—தவறில்லை. அழுத குழந்தையின் வயிற்றில் — அது பசிக்காகத்தான் அழுகிறது என்றெண்ணி — ஆகாரத்தைத் திணிப்பது — நோயின் அஸ்திவாரமான அஜீரணத்தைத் தோற்றுவிக்கும். அழுகையின் தேவையை உணர்ந்து செயல்படுங்கள்.

— கே. பட்டாபிராமன்.

தற்காலத்தில் பெண்கள் காதில் பெரிய கம்மல் அணிவதால் காது துவாரம்பெரிதாகித்தோடுகீழேதொங்குகிறது. மருத்துவரிடம் காட்டி, காதைத் தைத்துக் கொள்கிறார்கள். மீண்டும் தோடு போடும் வரை நடுவில் கல் வைத்த ஒட்டுப் போட்டு (ஸ்டிக்கர்) வைத்து ஒட்டிக் கொண்டால் அழகாக இருக்கும்.

— அனுசூயா.


ஸ்வரூப் சம்பத் சிங்கார் குங்கும
போலி பேக்கை எவ்வாறு கண்டு பிடித்தார்?
எல்லாம் வாங்கியபின் லக்ஷ்மிக்கு சிங்கார் குங்கும் நினைவு வந்தது.
சிங்கார் குங்குமம் ஒன்னு கொடுங்க
பிரபல டி.வி. நட்சத்திரம் மற்றும் சிங்கார் குங்கும மாடல் ஸ்வரூப் சம்பத் அங்கு இருந்தார். திடீரென...
அடடா! இது போலி பேக்.
ஆமா, நான் சிங்கார் தானே கேட்டேன்
பார்க்க இதுவும் சிங்கார் பேக் மாதிரிதான் இருக்கு. கவனமாகப் பார்க்காவிட்டால், ஏமாந்து விடுகிறோம்.
இந்தாங்க போலி பேக். அசல் சிங்கார் வேறு எங்காவது வாங்கிக்கறேன்.
அடுத்தமுறை, சரியான பெயர்- சிங்கார் மற்றும் இதே படம் உள்ளதா என்று பாருங்கள்- என் படம்!
அவர்கள் மற்றொரு கடைக்குச் செல்கின்றனர்.
தேங்க்யூ! ஸ்வரூப்ஜி, சரியான நேரத்துல எச்சரிச்சீங்க. அடுத்தமுறை சரியான 'பேக்' தானா என்று கவனமாகப் பார்ப்பேன்.
ஸ்வரூப் விடை பெற்றுக்கொள்கிறார்...
ஸ்வரூப்ஜீ மறந்தேவிட்டேன்- இந்தா ஆட்டோகிராஃப் ப்ளீஸ்.
சிங்கார்®
சௌபாக்ய குங்குமம்
கவனமாகப் பார்ப்பீர்,
அசலானதை வாங்குவீர்

போயிடப் போறதேன்னு வாச வராண்டா விலே போட்டிருக்கேன். ஆக வேண்டிய காரியத்துக்காக எல்லாரும் காத்திருக்கோம். நீங்க எங்கே போயிருக்கேள்னு தெரியாம தவிச்சுட்டு இருந்தோம்....''

''அப்பா.... அம்மாவுக்கு என்னாச்சு? சூயிசைட்....'' சுந்தர் பதறினான்.

''சீ.... வாயைக் கழுவுடா மடையா. சாகறத்துக்கு முன்னால ஜானகி எங்கூடப் பேசிட்டுத்தான் செத்துப் போனா. அவளோட மூச்சு அடங்கறதுக்குள்ளே பாவி நானாவது பக்கத்துலே இருந்தேனே! கண் தெரியாத வயசான அம்மாவை வீட்டுக்குக் காவல் வைச்சுட்டு குடும்பத்தோட சினிமா பார்க்கப் போரேளோ? பூஜை விளக்கிலே புடைவை தலைப்புப் பட்டு... போகட்டும். அவ தன்னைத் தானே சுத்தி பண்ணிண்டு போயிட்டா! உன்னைப் பத்து மாசம் சுமந்த பாவத்தை எரிச்சுட்டா; இன்னிக்கு சரஸ்வதி பூஜை!

தேவி பூஜை முடிஞ்சு கற்பூர ஹாரத்தி ஆகி..... விஜயதசமி புறப்பாடுக்காக, பாடைக்காக ஜானகி காத்திண்டு இருக்காப்பா. உங்கம்மாவோட ஊர்வலத்துக்கு ஏற்பாடு பண்ணுப்பா.... ஏற்பாடு பண்ணு. கடைசி ஊர்வலம். அவளோட விஜய யாத்திரை!'' அனந்தராமன் அழுகையும் கோபமுமாக வெடிக்கிறார்!

தேனைப் பற்றித் தேனான செய்திகள்!



1. கால் வெதுவெதுப்பான நீரில், வெறும் வயிற்றில் தேன் கலந்து (2 அவுன்ஸ்) குடிப்பதால் மலச்சிக்கல் அறவே நீங்குகிறது.

2. இரவு படுக்கச் செல்லும்முன் பாலுடன் தேன் கலந்து அருந்தினால், ஆழ்ந்த நித்திரை ஏற்படும். இது உடல் புஷ்டியையும் கூட்டுகிறது.

3. காப்பி, டீ அருந்தும் பழக்கத்தைத் தவிர்த்து எலுமிச்சம்பழச்சாற்றுடன் தேன் கலந்து அருந்துவதால் நரம்புச் சம்பந்தமான பல வியாதிகளைத் தவிர்க்கலாம்.

4. அஜீரணக் கோளாறுகளால், பசித்தன்மை இல்லாதவர்கள், இஞ்சி சாற்றுடன் தேன் கலந்து அருந்த நல்ல செரிமானம் ஏற்படும். பித்த வாந்தி, தலைவலியையும் இது நீக்கவல்லது.

5. தீப்புண்களில் மேல் தேன் கொண்டு டிரஸ்ஸிங் செய்வதால் விரைவில் ரணம் மாறி குணம் ஏற்படும்.

6. பாலுடன் தேன் கலந்து அருந்தும் பழக்கத்தைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதால் அல்சர், குடல்புண்கள் இவை மாறி, படிப்படியாக குறைந்து குணமாகிறது.

7. பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு பிரெட்டில் ஜாமிற்குப் பதிலாகத் தேன் தடவித் தருவதால் அவர்களுக்கு வைட்டமின். இரும்புச் சத்துக்களும் கிடைக்க ஏதுவாகிறது.

8. குழந்தைகளுக்கு மருந்துப் பொடிகளைத் தேனில் குழைத்துத் தருவதால், மருந்து கொடுக்கும் சிரமமின்றி எளிதில் புகட்டலாம்.

9. வெற்றிலைச் சாற்றுடன் தேன் கலந்து அருந்துவதால் பாடகர்களுக்கு நல்ல குரல் வளம் ஏற்படும்.

10. தேனில் உள்ள சர்க்கரை சத்து ஏற்கெனவே மெடபொலிஸ் செய்யப்பட்டு, எளிதில் இரத்தத்தில் கலப்பதற்கு ஏதுவானதாக இருப்பதால் குழந்தைகள், முதியவர்கள், விளையாட்டு வீரர்கள் அனைவருக்கும் விரைவில் செரித்துப் பலனளிக்கக் கூடிய சிறந்த உணவாகிறது.

சுத்தமான தேனை அறிய: தேன் கலப்படமற்றதாக இருக்கிறதா என்பதை அறிய ஒரு டம்ளர் தண்ணீரில் ஒரு துளி தேனைவிட அது முத்துப்போல் சிதறாமல் நின்றால் நல்ல தேன். கலப்படம் செய்யப்பட்ட தேன் சிதறி, கலங்கி, தண்ணீரில் பரவ ஆரம்பித்தால் அது சுத்தமான தேனல்ல என்பதை உணரலாம்.

— டாக்டர் கலா கமலாகர் ராவ்

நாற்பது வயது– ஒரு திருப்புமுனையா?







புதிதாக மணமானவர்களும் தெரிந்துகொள்ள லாமே!

குழந்தை பிறந்தது முதல் ஒவ்வொரு வயதிலும், ஒவ்வொரு பருவத்திலும், உடலாலும், உள்ளத்தாலும் வளர்கிறது. இவ்வளர்ச்சிக்கேற்ப நாம் குழந்தை, சிறுமி, வாலிபன், வயோதிகன் என்று பிரிக்கிறோம். ஒருவரின் வளர்ச்சியை ஒரு வரைபடமாக வரைந்தால் (graph) அதில் வாலிப வயதின் தொடக்கம் வரை கோடு உயர்ந்து கொண்டே போய்ப் பிறகு தொடர்ந்து பல ஆண்டுகளுக்கு நீண்ட கிடக்கைக் கோடாகவே இருக்கும். இதுதான் சமீப காலம் வரை நாம் அனைவரும் மனித வளர்ச்சியைப் பற்றிக் கொண்டிருந்த எண்ணம்.

ஆனால் முப்பத்தைந்து வயது மனைவியும் நாற்பது வயது கணவனும் திடீரென்று தங்களுக்குள் சில மாற்றங்களை உணர்கிறார்கள். இது அவரவர் மனநிலை, குடும்ப, சமூக சூழ்நிலையைப் பொறுத்து அமைகிறது. நடு வயதில் தம்பதிகள் மாட்டிக் கொள்ளும் இந்தச் சுழற்காற்றில் சிலரது இல்வாழ்க்கை என்னும் படகு மூழ்கி, மணமுறிவு கூட ஏற்பட்டு விடுகிறது. அதே சமயம் சூறாவளிக் காற்றில் நிலை தடுமாறாத சில தம்பதிகள் முன்பு எப்போதும் இருந்திராத அளவு அன்போடும் ஆதரவோடும் தங்களது இரண்டாவது பகுதி வாழ்க்கையைத் தொடங்குகிறார்கள்.

இதை ஒரு ஆராய்ச்சியாகவே மேற்கொண்டு உலகின் பல பகுதிகளைச் சேர்ந்த

தம்பதிகளைக் கேள்விகள் கேட்டு அவர்களின் அனுபவங்களிலிருந்து பல அரிய, சுவையான உண்மைகளை விளக்குகிறார் கெய்ல் ஷீஹி என்னும் ஆராய்ச்சியாளர்.

அவர் சந்தித்த தம்பதிகளில் பெரும்பாலான ஆண்கள் தங்கள் முதல் பாதி வாழ்க்கையைப் பற்றி விவரிக்கையில் தங்கள் அலுவலக வாழ்க்கையைப் பற்றியே அதிக அளவு குறிப்பிட்டனர். அதே சமயம் பெரும்பாலான பெண்கள் பெற்றோரிடமிருந்து திருமணத்திற்குப் பின் ஏற்பட்ட பிரிவு; கணவன், குழந்தைகள் இவர்களிடம் ஏற்பட்ட பாசப் பிணைப்பு இவைகள் பற்றியே, அதிகமாகக் கூறினர். ஆக பெரும்பாலான ஆண்கள் நாற்பது வயது வரை மனைவி, குடும்பப் பொறுப்பு, பிள்ளை வளர்த்தல் போன்ற விஷயங்களில் ஈடுபாடு காட்டாமல் தங்கள் அலுவலகப் பணிகளில் முழுமையாகத் தம்மை ஈடுபடுத்திக் கொள்கின்றனர்.

முப்பது வயதில் ஒரு மனைவிக்குக் குழந்தைகளை வளர்ப்பதும், சமையல், கடைக்குச் செல்லுதல், குடும்ப வரவு, செலவு நிர்வாகம், கணவனைப் பராமரித்தல், குடும்பத்திலுள்ள முதியவர்களை அனுசரித்துப் பணிவிடை செய்தல் போன்ற பல பொறுப்புக்கள் இருக்கும். இப்பணிகள் அவளுக்கென உள்ள சொந்த நேரத்தைக் கூடக் கபளீகரம் செய்துவிடும். தனக்கென எதுவுமில்லை என்னும் விரக்தி, தன் ஆர்வங்களை, ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாத இயலாமை, ஓயாத வீட்டு வேலை ஏற்படுத்தும் எரிச்சல், இவை அவளிடம் மண்டிக் கிடக்கும்.

அதே சமயம் சுறுசுறுப்பாகக் குறித்த நேரத்தில் சாப்பிட்டு அலுவலகம் சென்று, மாலை வீடு திரும்பி, ஓய்வெடுத்து, புத்தகம் படித்துத் தூங்கி எழும் கணவனது அற்புதமான வாழ்க்கை மீது அவளுக்குப் பொறாமை ஏற்படுகிறது.

''எந்தப் பொறுப்பும் இல்லாமல் 'ஹாயாக' எவ்வளவு நிம்மதியாக இருக்கிறார்?'' என்று ஏக்கப் பெருமூச்சு விடுகிறாள். இன்னும் பத்து ஆண்டுகளில் நிலைமை தலைகீழாக மாறப் போகிறது என்பதை இன்று அவள் அறிவாளா?

முப்பது வயதில் ஒரு ஆண் எப்படி இருக்கிறான்? அவனுடைய வாழ்க்கையில் பொருளாதாரமும், அதன்பின் புகழும் முக்கிய இடம் வகிக்கின்றன. எனவே அலுவலகத்தில் நன்றாக உழைத்துப் பதவி உயர்வு பெற்றுத் தன் பொருளாதாரத்தைப் பெருக்கப் பாடுபடுகிறான். சக ஊழியர்களிடமும், உயர் அதிகாரிகளிடமும் நற்பெயர் எடுக்கும் வேகம் அதிகம். இதனால் அலுவலக நேரத்தைத் தவிரவும் பிறருக்காக உழைக்க அல்லது உதவி செய்ய ஓடுகிறான்.

பணம், புகழ், இவற்றைத் தவிர சாதனை புரியும் உணர்வு உள்ளவர்கள் விஞ்ஞானத்தில் புதிய கண்டுபிடிப்புக்களையோ, வியாபாரத்தில் புதிய உத்திகளையோ சமுதாயத்திற்கு அளிக்கிறார்கள். சிலர் சொந்த வாழ்க்கையில் புதிய தொழில் துவங்கிச் சாதனை புரிகின்றனர்.

ஆனால் இந்த முப்பது வயது மனநிலை எப்படிப் பத்தாண்டுகளுக்குப் பிறகு தலைகீழாக மாறிவிடுகிறது? மனைவி முப்பத்தைந்து வயதை அடையும் போது பிள்ளைகள், பெரியவர்கள் ஆகித் தங்கள் வேலைகளைத் தாங்களே செய்யப் பழகி விடுகிறார்கள். பல ஆண்டுகளாகச் செய்ததால் வீட்டு வேலைகளை விரைவாகச் செய்ய அவளால் முடிகிறது. சாமான்கள் வாங்குவதும், பிற இடங்களுக்குச் செல்வதும் தனது கடமை என்று உணரத் தலைப்படுகிறாள். பெரியவர்கள் பராமரிப்பு கூட அவளுக்கு ஒரு சுமையில்லை. இத்தனை நாள் நேரமே இல்லை என்று புலம்பியவளுக்கு இப்போது நிறைய நேரம்.

இந்தச் சமயத்தில்தான் அவளுக்கு உள்ளே இருந்து இன்னொரு பெண் வெளிப்படுகிறாள். ஆர்வமும், திறமையும் மிக்க அவள் இத்தனை நாள் கிடைக்காத வாய்ப்புகளை வலிய ஏற்படுத்திக் கொள்கிறாள். பெண்ணின் இந்த மற்றொரு அவதாரம் அவளை சாதனைகள் புரியத் தூண்டுகிறது. பாட்டு, தையல், ஓவியம் கற்க முனைகிறாள்.

''திருமணத்திற்கு முன் பார்த்த அதே ஆசிரியர் வேலையை இப்போது செய்தால் என்ன? பாவம் கணவர் மட்டுமே இத்தனை நாட்களாக உழைத்துக் காப்பாற்றி வந்தாரே? என் சம்பாத்தியமும் அவருக்குக் கைகொடுக்கட்டுமே' என்று எண்ணுகிறாள். அல்லது ''வீட்டிலேயே சோப்பு, ஷாம்பூ, கோந்து தயாரித்து விற்றால் என்ன?'' என்று திட்டமிடுகிறாள்.

இத்தனை நாள் குடும்ப வட்டத்திற்குள் சுழன்ற அவளுக்கு இப்போது சமுதாயத்தைப் பற்றிய எண்ணம் முதன் முதலாகத் தோன்ற, மாதர் சங்கம் போன்ற அமைப்பில் சேர்ந்து தன் அறிவையும், உலக அனுபவத்தையும் வளர்த்துக் கொள்வதோடு, தன் எண்ணங்களையும் மனம் விட்டுப் பிறரிடம் பகிர்ந்து கொள்கிறாள். பூஞ்சை மனம்

தூக்கமே வரவில்லையே என்று டாக்டரைத் தேடாதீர்கள். 'கசகசாவைப் பாலில் அரைத்துக் குடியுங்கள். அருமையான தூக்கம் வரும்.

— சித்ரா.

மறைந்து போய் எதற்கும் அசையாத மலை போன்ற உறுதியான மனத்தைப் பெறுகிறாள்.

இதே சமயம் நாற்பது வயதை அடைந்த கணவனின் நிலை என்ன? அவனது மாரத்தான் ஓட்டப்பந்தயம் வெற்றிக் கோட்டைத் தொட்டு விட்டது. அவன் அலுவலகத்தில் எதிர்பார்த்த பதவி உயர்வும், பாராட்டுக்களும், புகழும் அவனுக்குச் சொந்தமாயிற்று. வெறியோடு செயல்பட்ட இலட்சியமும் இன்று சாதனையாக வெளிப்பட்டுவிட்டது. இனி அடுத்து என்ன? அவன் ஏறி வந்த ஏணியில் எல்லாமே பழைய படிகள். உச்சத்தில் நின்று கொண்டு அவன் புதிர் மிகுந்தஎதிர்காலத்தைப்பார்க்கிறான். ஆச்சரியமும், சுவையான சம்பவங்களும், சவால் விடும் சாதனைகளும் இனிமேல் அவனாகவே ஏற்படுத்தினால்தான் உண்டு.

அலுவலகத்திலும், பொது வாழ்விலும் இத்தகைய தேக்கநிலை ஏற்படும்போது அவன் முதல் முதலாக வீட்டை நினைக்கிறான். அன்பு மனைவி, அருமைக் குழந்தைகள் அவன் கண் முன் தோன்றுகிறார்கள். தான் இன்னும் கொஞ்சம் பொறுப்புமிக்க கணவனாக, தந்தையாக இருக்க வேண்டும் என்று தீர்மானிக்கிறான்.

ஆனால் வீட்டில் நடப்பது என்ன? ஒரு தந்தையின் அன்பு ததும்பும் இதயம் குழந்தைகளை நாடும்போது — கனிவான பார்வையும், பேச்சும் அவர்களை வருட ஓடி வரும்போது அவர்கள் குழந்தைப் பருவத்தைக் கடந்து விடுகிறார்கள். தாங்கள் சுயமாக, யார் உதவியும் இன்றி இயங்க வேண்டும் என்னும் இயல்பான பருவ உணர்வு தோன்றும் அவர்களுக்கு. எனவே தந்தையின் திடீர் பரிவும், பாசமும் அவர்களைப் பரவசப்படுத்தவில்லை. தன் அன்பு புறக்கணிக்கப்படுவதைக் கண்டு அவனின் தந்தை மனம் துடிக்கிறது.

இதுவரை நேரமில்லை என்று சதா புலம்பிக் கொண்டிருக்கும் மனைவி இப்போது வேலைக்குப் போகிறாள். ''என்னை என்ன கையாலாகாதவன் என்று எண்ணிவிட்டாளா? இப்போது இவள் வேலைக்குப் போய் குடும்பம் நடத்துமளவிற்கு அப்படி என்ன பணமுடை?'' என்று பொருமுகிறான். அவளுடைய நேரத்தை இனிமேல்தான் எடுத்துக் கொள்ள முடியாதே என்று சவலைக் குழந்தையாக ஏங்குகிறான். ''நான் மனம் சோர்ந்து, சலித்து வரும்போது, என்னைத் தேற்றி, ஆறுதல் சொல்ல வேண்டியவள் இப்படி எனக்கு எதிர் திசையில் என்னைவிட்டு விலகி ஓடுகிறாளே'' என்று எரிச்சல் அடைகிறான். வீட்டிற்கு வேண்டிய பணிகளைப் பகிர்ந்து கொள்ளலாம் என்றால் இத்தனை வருடங்களாக மனைவியே எல்லா வேலைகளையும் செய்து வந்ததால் அதிலும் அவனுக்குப் பங்கு இல்லை. தான் எதற்கும் லாயக்கற்றவன், தன்னை மதித்து அன்பு செலுத்துவோர் யாருமில்லை போன்ற எண்ணங்களை வளர்த்துக் கொண்டு மேலும் சோர்ந்து போகிறான், கணவன்.

முப்பத்தைந்து வயதில் மனைவி புதிய சாதனைகள் புரிவதும் நாற்பது வயதில் கணவன் எல்லாம் முடிந்துவிட்டது என்ற மனநிலையில் மனம் தளர்ந்து போவதுமான இந்த நடுவயதுப் பருவத்தைத் தம்பதிகளின் திருப்புமுனை என்று வழங்கலாம். இந்தத் திருப்புமுனையில்தான் சில தம்பதிகள் மனக்கசப்பை மிகைப்படுத்தி, நிரந்தரமாகப் பிரிகிறார்கள். திறமைசாலிகள் மிக சாமர்த்தியமாக நிலைமையைச் சமாளித்துப் புதிய பயணத்திற்குத் தயாராகிறார்கள்.

பிரச்னை எழாமல் சமாளிப்பது எப்படி?

முதலில் இத்தகைய மாற்றங்கள் நிகழ்வது இயற்கை என்பதைக் கணவன், மனைவி இருவருமே உணர வேண்டும். இத்தனை ஆண்டுகளாக செயல்திறன் மிக்க, பலம் பொருந்திய, உற்சாகம் மிக்க தன் கணவனின் பலவீனமான மறுபக்கத்தை எதிர்நோக்க மனைவி தயாராக வேண்டும். அவரது சோர்வுக்கு அவர் மனநிலையே காரணம் என்பதை உணர்ந்து அவரை உற்சாகப்படுத்தி, மகிழ்வளிக்க வேண்டும். தான் வேலைக்குப் போவது தன் ஆற்றலுக்கு வடிகாலேயன்றி அவரை மட்டம் தட்டுவதற்காக அல்ல என்பதையும், பிள்ளைகள் தாய், தந்தை இருவரையுமே சார்ந்திருக்க விரும்பாத வயதில் இருப்பதால் தன்னிடமும் அதிகமாக சமீப காலத்தில் ஒட்டுவதில்லை என்பதையும் புரிய வைக்க வேண்டும்.

இப்பருவத்தில் கணவனைத் தேற்றாமல் உதாசீனப் படுத்துவதால் நாற்பது வயதில் இரண்டாவது காதலும், வேறு பெண்களிடம் தொடர்பும் ஏற்பட வாய்ப்பு உண்டு. மனைவியின் அன்புக்காக ஏங்கும் கணவனை 'நாற்பது வயதில் ஏதோ ஒன்றின் குணம்' என்று ஏளனம் செய்வது தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று.

— லக்ஷ்மி சங்கர்.

வீட்டுத் தொட்டியில் முளைத்து வந்துள்ள வெங்காயங்களை நட்டுவைத்தால், பார்க்கவும் அழகாக இருக்கும். நீண்ட தளிர் வந்ததும் தளிரை மட்டும் நறுக்கிச் சமைத்துச் சாப்பிடலாம். மறுபடியும் அதில் தளிர் வரும். வெங்காயத் தளிர் உடம்புக்கு மிகவும் நல்லது.

— பி. ஜெயலக்ஷ்மி.



பாம்பினோ, இத்தாலிய தானியங்கி
தொழிற்சாலையில் சுகாதாரத்துடன்
உருவாக்கப்பட்ட அதிசய சேமியா
கையில் ஒட்டாத இந்த பாம்பினோ,
கொழுப்பு கலவாத, புரதச்சத்து
மிக்கது. இப்பொழுது பாம்பினோவைப்
பயன்படுத்தி நாவிற்குச் சுவையூட்டும்
பாயாசம் போன்ற இனிப்புகளையும்,
புளியோதரை போன்ற கார வகை
களையும் சமையுங்கள். சாதாரண
சமையலில் அசாதாரணச் சுவையை
விதவிதமாய் பாம்பினோ எப்படித்
தருகிறது என்பதைக் கண்டறியுங்கள்.
பாம்பினோ அல்வா
செய்முறை: சேமியாவை பொன்னிறமாக
நெய்யில் வறுத்துக் கொள்ளவும்.
பாத்திரத்தில் தண்ணீரைக் கொதிக்க
வைத்து பாம்பினோவை சேர்க்கவும்.
அடுப்பை மெதுவாக எரியவிட்டு தண்ணீர்
நன்றாக சுண்டிய பின் சர்க்கரையை
சேர்த்து 2 நிமிடங்கள் கிளறவும். நன்றாக
நறுக்கிய பிஸ்தா பருப்பு, முந்திரி பருப்பு,
திராட்சைப் பழம் இவற்றை மேலே தூவி
அழகுபடுத்தி சூடாக பரிமாறவும்.
அளவான செலவிலே
அறுவகை சுவைகளை
பாங்கோடு துவங்குவீர்
பாம்பினோ உணவுடன்.
இலவசம்
உங்கள் இலவச செய்முறைக்
குறிப்புகள் அடங்கிய புத்தகத்திற்கு
கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்.
ஜன ஜீவன் ஃபுட்ஸ் பிரைவேட் லிமிடெட்.,
பஷீர்பாக் பாலஸ், பஷீர்பாக்,
ஹைதராபாத்-500 029.
IS:1485
ISI
வர்மிஸெல்லி
இனிப்போ காரமோ ருசிதரும் பாம்பினோ
VERMICELLI
associated


குளிர்ச்சியான மூலிகைத் தைலத்தால்
வளர்ச்சியான கூந்தலைப் பெறவேண்டுமா!
டாம்ப்கால்
கூந்தல் மூலிகைத் தைலம்
Tampcol
HERBAL HAIR TONIC
(இது ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனத்தின் தயாரிப்பு)
DIPR/20305/1397/86-20/NAS

ஹைகூ
சேலைகள்



ஹைகூ...
ஜப்பானிய மொழியிலே கவிதை.
உங்கள் மேனியிலோ,பட்டின் மென்மை உணர்வு!

ஹைகூ...பாம்பே டையிங் புதுப்படைப்பு.
நேர்த்தியான, பட்டுப்போன்ற புதுவகை
க்ரேப் டி ஷீன், ஜாக்கார்ட், ஜ்யார்ஜெட்.
தென்றலென மேனியிலே தவழும்
மென்சுகம், எதுகையும் மோனையும் போல்
...உங்கள் எழிற்கோலமும், இவற்றின்
வண்ண ஜாலமும்.

ஜப்பானிய ஹைகூ கவிவடிவம் பிறப்பித்த
எழிற்கோல துணி வகைகள், பாம்பே
டையிங் படைக்கும் ஹைகூ—உங்கள்
மேனியிலே புதுக்கவிதை!

பட்டுப்போன்ற பாலியெஸ்டர் சேலைகள், படைப்பு.

பாம்பே டையிங்

மில்க்மெய்ட் படைத்திடும்



மாங்கோ ஐஸ்கிரீம்

தேவை:

மாம்பழங்கள்	—	4
மில்க்மெய்ட்	—	1 டின்
2 எலுமிச்சம் பழ ரசம்		
ஜெலட்டின்	—	½ டீஸ்பூன்
பால்	—	1 கோப்பை
கார்ன் மாவு	—	1 டீஸ்பூன்

செய்முறை:

1. பாலை கொதிக்க விட்டு, ¼ கப் தண்ணீரில் மாவு கரைத்து சேர்க்கவும். மில்க்மெய்ட் ஊற்றவும்.
2. மாம்பழங்களை துண்டுகளாக்கி, குழைத்து, பாலும் மில்க்மெய்டும் சேர்க்கவும்.
3. எலுமிச்ச ரசம், ஜெலட்டின் (2 டேபிள் ஸ்பூன் வெதுவெதுப்பான நீரில் கரைத்து) கலந்து ஃப்ரீஸரில் உறைய விடவும்.



சாக்லேட் பர்ஃபி

தேவை:

மில்க்மெய்ட்	—	1 டின்
உடைத்த பருப்புக்கள்	—	100 கிராம்
கோக்கோ பவுடர்	—	½ கோப்பை
வெண்ணெய்	—	50 கிராம்
சர்க்கரை	—	¾ கோப்பை

செய்முறை:

1. கனமான அடியுடைய வாணலியில் மில்க்மெய்ட் ஊற்றி, வெண்ணெய், சர்க்கரை, கோக்கோ பவுடர், பருப்புக்களை சேர்க்கவும்.
2. இளஞ்சூட்டில் வாணலியின் ஓரங்களில் பிடிக்காத வரை கிளறிவிட்டுக் கொண்டே இருக்கவும்.
3. நெய் தடவிய தட்டில் சமமாக ஊற்றி ஆறவிட்டு, சதுர வில்லைகளாகப் போடுங்கள்.



கோகனட் லாடு

தேவை:

தேங்காய் துருவல்—250 கிராம்
மில்க்மெய்ட் —1 டின்

செய்முறை:

1. 50 கிராம் தேங்காய் துருவலை தனியே எடுத்து வைத்துக் கொள்ளவும்.
2. மீதியுள்ள தேங்காய்த் துருவலை மில்க்மெய்டில் கலந்து இளஞ்சூட்டில் வாணலியின் ஓரங்களில் பிடிக்காத வரை வேக விடுங்கள்.
3. ஆறிய பின், கைகளில் நெய் தடவிக் கொண்டு, சின்னச் சின்ன உருண்டைகளாகப் பிடித்து, தேங்காய்த் துருவலில் உருட்டி பரிமாறுங்கள்.



மிக்ஸ்ட் ஃப்ரூட் விப்

தேவை:

ஆப்பிள்	—	1 துண்டுகளாக
வாழைப்பழம்	—	1 "
கொய்யா	—	1 " (விதைகளை நீக்கி)
ஆரஞ்சு	—	1 (தோல் உரித்து)
மில்க்மெய்ட்	—	1 டின்
எலுமிச்சம் பழம்	—	1 (சாறு எடுக்க)

செய்முறை:

1. நறுக்கிய எல்லா பழங்களையும் கலந்து எலுமிச்சம் பழ சாறு சேர்க்கவும்.
2. 2 டேபிள்ஸ்பூன் பழத் துண்டுகளை தனியே எடுத்து வைக்கவும். மற்ற பழங்களை மிக்ஸியில் போட்டு, மில்க்மெய்ட் ஊற்றி, மையாக அரைக்கவும்.
3. எடுத்து வைத்த பழத் துண்டுகளை அதில் போட்டு வில்லெனப் பரிமாறுங்கள்.

வேண்டுமானால், அந்தந்தப் பருவத்தில் கிடைக்கும் உங்களுக்கு பிடித்த ஒரு பழத்தைக் கொண்டும் பழக்கலவை தயாரிக்கலாம்.

பலரகப் பண்டங்கள்.



தால் பாயசம்

தேவை:

கடலைப் பருப்பு அல்லது பாசிப் பருப்பு	— 1 கோப்பை
பால்	— ½ கோப்பை
தேங்காய்ப் பால்	— 1 கோப்பை
தண்ணீர்	— 2 கோப்பை
மில்க்மெய்ட்	— ¾ டின்
நெய்	— 1 டீஸ்பூன்
முந்திரிப் பருப்பு (நொறுங்கல்)	— 2 டேபிள்ஸ்பூன்
ஏலக்காய் பொடி	— 2 டீஸ்பூன்

செய்முறை:

நெய் சூடாக்கி அதில் பருப்பை லேசாக சிவக்கும் வரை வறுக்கவும். 2 கோப்பை தண்ணீர் விட்டு, பாசிப் பருப்பை 5-7 நிமிடங்களுக்கும் கடலைப் பருப்பை 10-15 நிமிடங்களுக்கும் குக்கரில் வேக விடவும். மில்க்மெய்ட், பால் தேங்காய்ப் பால் இவற்றை விட்டு, இளஞ்சூட்டில் 5 நிமிடம் வேக விடவும்.

முந்திரிப் பருப்பை வறுத்து, ஏலப்பொடி யுடன் தூவி பரிமாறுங்கள்.





பிரெட் புட்டிங்

தேவை:

பிரெட் ஸ்லைஸ்	— 8
பால்	— 1 கோப்பை
மில்க்மெய்ட்	— ½ டின்
வெண்ணெய்	— 25 கிராம்
முட்டை (அடித்தது)	— 2
ஜாதிக்காய்	— ஒரு சிட்டிகை

செய்முறை:

1. பிரெட் ஸ்லைஸ்களின் ஓரங்களை வெட்டிவிடுங்கள்
2. இரு புறமும் வெண்ணெய் தடவி, இரண்டு முக்கோண வில்லைகளாக நறுக்கவும்
3. 8" X 8" அலுமினிய பாத்திரத்தில், ஸ்லைஸ்களை அடுக்கவும்.
4. மில்க்மெய்ட், பால், முட்டை, ஜாதிக்காய் இவற்றை ஒன்றாகக் கலந்து வெண்ணெய் தடவிய ஸ்லைஸ்கள் மீது ஊற்றுங்கள்.
5. இதமான சூடு உடைய அவனில் (160°C), 30-40 நிமிடங்களுக்கு, மேல் பக்கம் பழுப்பு நிறமாகும் வரை பேக் செய்யவும்.

எக்லெஸ் கேக்

தேவை:

மாவு	— 2 கோப்பை
வெண்ணெய்/நெய்	— 1¼ கோப்பை
மில்க்மெய்ட்	— 1 டின்
தண்ணீர்	— 1 கோப்பை
வனிலா எஸ்ஸென்ஸ்	— ½ டீஸ்பூன்
உப்பு	— 1 சிட்டிகை
பேக்கிங் பவுடர்	— ¾ டீஸ்பூன்
உடைத்த பருப்புக்கள்	— 1 கோப்பை

செய்முறை:

1. வெண்ணெயை நுரைக்கும் வரை அடித்து, மில்க்மெய்ட், தண்ணீர், உடைத்த பருப்புக்கள் ஆகியவற்றை அத்துடன் சேர்த்து ஒரு வாணலியில் விட்டு கொதிக்க விடவும். அடுப்பிலிருந்து இறக்கி ஆறவிடுங்கள்.
2. மாவு, பேக்கிங் பவுடர், உப்பு கலந்து சலித்து எடுத்துக் கொள்ளவும். இதை கேக் கலவையுடன் சேர்த்து நன்கு அடிக்கவும்.
3. வனிலா எஸ்ஸென்ஸ் சேர்த்து, வெண்ணெய் தடவிய 8" கேக் டின்னில் ஊற்றவும்.
4. 150°C வெப்பத்தில் 1½ மணி நேரம் பேக் செய்யவும்.



கலா கண்ட்

தேவை:

மில்க்மெய்ட்	—	1 டின்
பால்	—	2 கோப்பை
தர்த்ரி (அல்லது தயிர்)	—	½ டீஸ்பூன் (அல்லது 2 டேபிள்ஸ்பூன்)
சர்க்கரை	—	2 டீஸ்பூன்

செய்முறை:

1. பாலை கொதிக்கவிட்டு, தர்த்ரி/தயிர் சேர்த்து திரிய விடுங்கள்.
2. திரிந்த பாலில் மில்க்மெய்ட், சர்க்கரை சேர்த்து, அது வற்றி, வாணலியின் ஓரங்களில் பிடிக்காத வரை தளதளவென்று கொதிக்க விடுங்கள்.
3. அடுப்பிலிருந்து இறக்கி, ஒரு தட்டில் ஊற்றி, ஆறவிட்டு, வில்லை போடுங்கள்.



குல்ஃபி

தேவை:

பால்	—	5 கோப்பை
மில்க்மெய்ட்	—	1 டின்
கார்ன் மாவு	—	2 டேபிள்ஸ்பூன் தலைதட்டி
உடைத்த பாதாம்	—	2 டேபிள்ஸ்பூன் (விரும்பினால்)
ஏலக்காய் பொடி	—	½ டீஸ்பூன்
கேவ்ரா/குங்குமப்பூ	—	வாசனைக்கு

செய்முறை:

1. பாலும் மில்க்மெய்ட்டும் சேர்த்து கொதிக்க விடுங்கள்.
2. கார்ன்மாவுடன் 2 டேபிள்ஸ்பூன் தண்ணீர் விட்டு பிசைந்து, கொதிக்கும் பாலில் கலக்குங்கள். 2-3 நிமிடம் தொடர்ந்து கொதிக்கட்டும்.
3. அடுப்பிலிருந்து இறக்கி, வாசனை சேர்த்து, ஏலப்பொடி, உடைத்த பாதாமை தூவி ஆறவிடுங்கள்.
4. குல்ஃபி பாத்திரங்களில் ஊற்றி, 6-8 மணி நேரம் அல்லது இரவு முழுவதும் உறையட்டும்.




ஸ்டீம்டு மாங்கோ புட்டிங்

தேவை:

தயிர்	—	250 கிராம்
மில்க்மெய்ட்	—	1/2 டின்
மாம்பழம்	—	2
பன்னீர்	—	½ டீஸ்பூன்
பச்சை ஏலம்	—	1 பொடித்தது

செய்முறை:

1. மாம்பழங்களை சாறு எடுத்து, மில்க்மெய்ட், தயிர், பன்னீர், பச்சை ஏலத்துடன் சேர்க்கவும்.
2. லேசாக எண்ணெய் தடவிய பாத்திரத்தில் போட்டு மூடி, 35-40 நிமிடத்துக்கு நீராவியில் வேகட்டும்.
3. அடுப்பில் இருந்து இறக்கி, பாத்திரத்தை ஒரு தட்டு மீது தலைகீழாகக் கவிழ்த்து, லேசாகத் தட்டுங்கள், புட்டிங் வெளியே வந்துவிடும்.
4. குளிர வைத்து பரிமாறுங்கள்.



கீர்

தேவை:

அரிசி	—	100 கிராம்
பால்	—	1 லிட்டர்
மில்க்மெய்ட்	—	1 டின்

உடைத்த பருப்பு/ஏலப்பொடி (விரும்பினால்)

செய்முறை:

1. அரிசியைக் களைந்து, குக்கரில் பாலில் 10 நிமிடம் வேகவிடவும். (அல்லது இளஞ்சூட்டில் அரிசி குழையும் வரை வேகட்டும்)
2. மில்க்மெய்ட் ஊற்றி மேலும் 5-7 நிமிடங்களுக்கு வேகட்டும்.
3. அடுப்பிலிருந்து இறக்கி, பருப்பு, ஏலப்பொடி தூவி பரிமாறுங்கள்.



கோத்ரெஜ் படைத்துள்ள சுகபோகத்தின் சிகரம் : மார்வல் லக்ஷரி சோப்
Marvel
LLOUS PERFUME
செழுமையான
க்ரீம்போன்ற நுரை
மற்றும் மனம் மயக்கும் நறுமண

கைபடாத சேவரிட் சேமியா மணக்குமே உங்கள் கைபட்டதும்!





சேவரிட் சேமியா மிக நவீனமான அயல் நாட்டு இயந்திரங்களால் மிகச் சுகாதாரமான முறையில் கைபடாமல் தயாரிக்கப்படுகிறது.

உயர்தர சம்பா கோதுமை ரவையில் தயாரிக்கப்படும் சேவரிட் சேமியா சத்து நிறைந்தது. குழைந்து போகாதது. சீக்கிரமாகச் சமைக்கக் கூடியது. மேலும், சேவரிட் சேமியாவை வறுக்க வேண்டிய அவசியமில்லை. இது சமைத்த பின்பும் பால்போல் வெண்மையாக இருக்கும்!

சிற்றுண்டிகளானாலும், பாயசம் போன்ற விசேஷ உணவு வகைகளானாலும் சேவரிட் சேமியா உங்கள் சமையலுக்கு ஊட்டமும் சுவையும் கூட்டுகிறது!

ஆகையினால்தான் குடும்பநலன் கருதும் குடும்பத் தலைவிகள் விரும்பி வாங்குவது சேவரிட் சேமியாவே!


Sista's - UIM.482.85.TM.A

முத்தான அம்மா சமைப்பது சத்தான சேவரிட் சேமியா!

Savorit
சேமியா




வளரும் குழந்தைகளுக்கு சுவையான
துணையாக விளங்கும் பால் பிஸ்கட்
BRITANNIA
Milk Bikis
Milk Bikis
சத்துமிகுந்த, சுவையான பிஸ்கட்
பிரிட்டானியா



மதுரை கோட்ஸ் வழங்கும் காம்ப்ளிமென்ட்ஸ் அணிந்து மேலும் நளினமாகத் தோன்றுங்கள்.

உங்கள் அழகை எடுத்துக் காட்ட அடிப்படையானது உங்கள் ப்ளவ்ஸின் கழுத்து அமைப்புதான்.

ப்ளவ்ஸ்களில் புதிய ஸ்டைல்களை முயற்சித்துப் பாருங்கள். அவை உங்கள் தோற்றத்திற்கே புதிய அழகைத் தரும். அவற்றிற்கு ஏற்றாற்போல் உங்கள் நகைகளையும், தலையலங்காரத்தையும் தெரிந்தெடுங்கள்.

உங்கள் புடவைக்கு ஏற்ற ப்ளவ்ஸ் துணி மதுரை கோட்ஸ் வழங்கும் காம்ப்ளி-மென்ட்ஸ்தான். இதன் பழுதற்ற, கோர்த்தியான நெசவும், வண்ணங்களும் வருடக் கணக்கில் நிலைத்திருப்பவை. 2 x 2 ரூபியா காட்டன், பாலியெஸ்டர் மற்றும் பாலியெஸ்டர் இழை கலந்த வகைகளில் இதுவே கச்சிதமான ப்ளவ்ஸ் துணி.

காம்ப்ளிமென்ட்ஸ் என்று கேட்டு வாங்குங்கள். எல்லா முக்கிய துணிக் கடைகளிலும், மேட்சிங் சென்டர்களிலும் கிடைக்கிறது.

Complements

மதுரை கோட்ஸ் வழங்கும்
ப்ளவ்ஸ் துணி,
ஒவ்வொரு புடவைக்கும்
இணையான துணை.

Madura Fabrics
மதுரை கோட்ஸின் ஒரு தரமான தயாரிப்பு.

Rediffusion/MF/4141 g TM


எனது கூந்தலை சுத்தம் செய்து கண்டிஷன் செய்ய...
எனது மேனி நிறம் காத்திட... அங்கமெங்கும் பொங்கும்
எழில் பேணிட... எனதருமை க்ரௌனிங் க்ளோரி!
Dimple Kapadia
Godrej
BEAUTY SOA
for silky ha
கூந்தலுக்கும், மேனி எழிலுக்கும், நிறத்திற்
உதவும் ஒரே அழகு சாதன சோப்!
CHAITRA-BG 35/ IAM


மென்மையான மிருது
வண்ணங்களிலோ,
பளிச்சிடும் பன்னிற
கலவையிலோ, கண்ணைக்-
கவ்வும் அச்சழகுடன்,
ராஜ்கமல் காட்டன் மற்றும்
பாலியெஸ்டர் புடவைகள்
நிகரற்ற கவர்ச்சி
யம்சத்துடன்
மிளிர்கின்றன.



The blend of beauty and elegance!

Cinestar Jayaprada in
Rajkamal Polyester Saree


மங்கையர் மலர்



Just one word for you Beautiful...
new
you
PANTIES
From the makers of TANTEX
A tik Product
Imageads 2331

மங்கையர் மலர்




இலவச
இணைப்பு

ஹெலனா...ஹெலனா...ஹெலனா...







உங்களுக்காகவே பிரத்தியேகமாக
100% விஞ்ஞானரீதியான, பட்டுப் போன்ற
உயர் ரக விஸ்கோஸ் இழைகளைக் கொண்டும்,
அதிக உறிஞ்சும் தன்மையுடைய உயர் ரக
பருத்தியினாலும் தரக் கட்டுப்பாட்டுடன்
தயாரிக்கப்படும் ஒரே நாப்கின்.

உடனடியாகவும், முழுமையாகவும் உறிஞ்சும் தன்மையைக் கொண்ட
உயர் ரக பஞ்சு அடுக்கடுக்காக அமைக்கப்பட்டுள்ளது.

உறிஞ்சும் தன்மையற்ற நீல நிற பருத்தி இழைகளினால்
மூடப்பட்டுள்ள அடிப்பாகம் உள்ளாடைகளை கறை படாமல் பாதுகாக்கிறது
மிருதுவான பின்னப்பட்ட நீண்ட இழை நாப்கின் முழுவதும் மூடப்பட்டிருப்பதால்
நூற்றுக்கு நூறு திருப்தியை அளிக்கிறது

தரத்திலே உயர்வு, விலையிலே மலிவு.

தயாரிப்பாளர்கள் :
சர்காட் இண்டஸ்ட்ரீஸ் பி. லிட்.,
23, புரசவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை-600 007.
போன் : 662004, 661982.



ஒருத்தரைப் போல் ஒருத்தர் நிறம் இருத்தல் இல்லை.

பொருத்தமளிக்க உமக்கென்றே 3வித வண்ணச் சாயல்களில் வருவது லக்மே காலமைன் ஒன்றே.

லக்மே காலமைன் ஒன்றுதான்
மூவித வண்ணச் சாயல்களில்
மோகனமாய் வருகுது:
நேச்சுரல், லைட், கோல்டு, இதில்
உமக்கொன்று சேர்த்தி,
ஒருங்கிணைய நேர்த்தி-எண்ணிலா
வண்ண மேனியரை இனம்பிரித்து
உணருதே லக்மே. இன்மணமுடன்
மேனிமீது இலகுவாய் இழையும்
லக்மே காலமைன் —தனிநிற
உரிமையைத் தருகுது உமக்கு.
பரிட்சார்த்தப் பேக்காகவும்
கிடைக்குது பதம்பார்க்க வசதியாக

நேச்சுரல் —மாநிற மேனியருக்கு	லைட் —சிகப்பு மேனியருக்கு	கோல்டு —கருவண்ண மேனியருக்கு



லக்மே காலமைன்

சரும வண்ணம் எவ்வண்ணம்
சாயலுண்டு அவ் வண்ணம்.

Tm



59 கடை
636001
121 ராஜ வீதி
641001

ஸிக்மா
வாங்கும்
போது
கண்கவர்
வர்ணம்
மட்டுமல்ல,
சிறப்பான
நலங்கள்
எல்லாமே சரிவர
உமதாகும்.

வெளியழகு இருந்துவிட்டால் அது எல்லாமாகி விடாது. வேறுபல தகுதிகள் வேண்டும் நம் வாழ்விலே நிறைவுகாண. வர்ணங்களிலும் அவ்வண்ணமே— பண்புருவம் வேண்டும், குணத்தழகே அழகு, நாம் கொண்டாடும் உள்மதிப்பு.

தக்க வர்ணம் ஒன்றைத் தேர்ந்தெடுப்பது கடினம் அல்ல—அதில் தக்க சாயலையும் கண்டெடுத்துவிடலாம். ஆனால் உள்ளழகை எப்படிப் பெறுவீர்கள்? ஒரு-சீர்த்தன்மை? நயமெருகு? ஆயுள் பலம்? பாதுகாப்பு?

ஸிக்மா பெயிண்ட் வரிசையிலே நிறைவாகப் பெறுகிறீர்கள்—ஓர் அனைத்து குணப் பொக்கிஷம்.

உண்மையிலே, எந்தெந்தத் தேவைக்கும் ஏற்றதொரு பெயிண்டு எங்களிடம் உள்ளது—இல்லங்களுக்கு, அலுவலகங்-களுக்கு, ஏன் கப்பல்களுக்கும் கூட....

ஸிக்மா
பெயிண்ட்ஸ்

பரப்புகளுக்கு
நிறப்பொலிவு சுபவரவு,
மதிப்போங்கும் நயப்பழகு
முழுநிறைவு.

ஸிக்மா பெயிண்ட்ஸ் லிமிடெட்.
ரெஜிஸ்டர்ட் ஆபீஸ் அண்ட் ஃபாக்டரி
ஓல்டு நாகர்தாஸ் ரோடு,
மோக்ரா, அந்தேரி (கிழக்கு),
பம்பாய் 400 069
ஃபோன்: 6045581
தந்தி: 'Sigmapaints' Bombay



REGISTERED No. TN 348 (S) 231
Registered as a Newspaper in Sri Lanka

